# தம்பலகாமம்

## ஊர்ப்பெயர் ஆய்வு

த.ஜீவராஜ்



# தம்பலகாமம்

ஊர்ப்பெயர் ஆய்வு

Dr. த.ஜீவராஜ்
(MBBS, MCGP)

www.geevanathy.com

| | |
|---|---|
| நூல் | தம்பலகாமம் ஊர்ப்பெயர் ஆய்வு |
| ஆசிரியர் | Dr த. ஜீவராஜ் |
| உரிமை | ஆசிரியர் |
| வெளியீடு | திருமதி ஜீவரத்தினம் தங்கராசா<br>சின்னவர்ணமேடு,<br>தம்பலகாமம்.<br>077 891 8725 |
| முதற் பதிப்பு | ஜூலை 2022 |
| பக்கங்கள் | 301 |
| பிரதிகள் | 500 |
| ISBN | 978-955-44132-2-1 |
| விலை | 900.00 |
| அட்டைப்படம் | *திரு.த.ஜனார்த்தன்*<br>J Magic Creations<br>076 639 3615 |
| அச்சுப்பதிப்பு | ஸ்ரீராம் பதிப்பகம்<br>159A, கடல் முக வீதி,<br>*திருகோணமலை.*<br>*0777555738* |


இந்நூலிலுள்ள ஆவணங்களை **www.geevanathy.com**
வலைப்பதிவில் இருந்து இலவசமாக தரவிறக்கிப் பயன்படுத்தலாம்.

நூலாசிரியர்.



வரலாற்றுப் பேராசிரியர் சி. பத்மநாதன்
வேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# நூன்முகம்

இந்நூலின் ஆசிரியர் டாக்டர் ஜீவராஜ் பல ஆண்டுகளாக எமக்கு அறிமுகமானவர். பல்கலைக் கழகத்து மருத்துவக் கல்லூரியில் மேனாட்டு மருத்துவக் கலை பயின்று, பட்டதாரியானபின் பல வருடங்களாகத் திருகோணமலையில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளில் தொழில் புரிந்து வருகிறார்.

தம்பலகாமத்திலே பிறந்த நண்பர் ஜீவராஜ் தனது பிறப்பிடமான ஊரிலும் பொதுவாகத் தமிழர் சமுதாயத்திலும் மிகுந்த ஈடுபாடும்,அபிமானமும் கொண்டவர்.வேகமாக மாறிவரும் சூழ்நிலையில் அவை இரண்டும் சீர்குலைந்து செல்வதை சொந்த வாழ்க்கை அனுபவத்தால் உணர்ந்தவர். தமிழர் வாழும் ஊர்களையும், அவற்றுக்குரிய பண்பாட்டு அடையாளங்களையும் பேணிக்கொள்ளவேண்டும் என்ற ஆர்வத்தை உருவாக்கும் விதமாக எழுதுவதை நோக்கமாகக் கொண்டு பாராட்டுக்குரிய பணிகளைச் செய்கின்றார்.

பல அரிய வரலாற்றுச் சான்றுகளையும், தொல்பொருட் சின்னங்களையும், இலக்கியக் குறிப்புகளையும், நாட்டார் வழக்கான ஐதீகங்களையும் தேடிப்பெற்று புலமை நெறிக் கமையக் கட்டுரைகளை எழுதும் தகைமையினை இளமையிலே இவர் பெற்றுவிட்டமை ஒரு அரிய சாதனையாகும். இவர் எழுதுகின்ற தமிழ் வசனநடை இலகுவானது, தெளிவானது, கவர்ச்சியானது என்றும் சொல்லலாம்.

இந்நூல் தம்பலகாமம் ஊர்ப்பெயர் ஆய்வு பற்றியதாகும். இருபது ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் தம்பலகாமம் வீதி வழியாகப் பிரயாணஞ் செய்ய முடிந்தது. அது மாரிகாலம். வீதியோரமான விசாலமான நிலப்பரப்பிற் செழுமையாக வளர்ந்த நெற்பயிர்கள் கதிர்கள் வீசிய கோலத்திலே செறிந்து காணப்பட்டன. வயல்களில் நீர் நிரம்பியிருந்தது. மாலைப் பொழுது என்பதால் அது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. உடனே வாகனத்தைத் தெருவோரமாக நிறுத்துமாறு சாரதியிடம் கூறினேன். வயல்களுக்கப்பால் மலைவரை உலகத்தின் காட்சி தெரிந்தது. இலங்கைத் தமிழர் வாழுகின்ற ஊர்களிலே தம்பலகாமமே மேலானது என்ற உணர்வோடு இடத்தை விட்டு நீங்கிச் சென்றோம். இந்நூலைப் படிக்கின்ற பொழுது கண்களில் நீர்த்துளிகள் ஏற்படுகின்றன. சம்பூர், திருக்கோயில் என்னும் ஊர்களும் தம்பலகாமம் போன்ற வனப்புடையவை என்பதைப் பின்புதான் அறிந்துகொள்ள முடிந்தது.

ஊர்ப்பெயர் பற்றி ஆசிரியர் கூறும் விளக்கங்கள் மிகவும் பொருத்தமானவை, ஆதாரபூர்வமானவை. கமம் பற்றிய தொல்காப்பியக் குறிப்பினை ஆதாரமாகக் கொண்டமை அவரது ஆளுமையின் சிறப்பாகும். வடமாகாணத்திலே வயல் நிலங்களைக் கமம் என்று சொல்வார்கள். வேளாண்மை செய்வோரைக் கமக்காரன் என்று சொல்வதுண்டு.

மத்தியகாலத்தில் திருகோணமலைப் பிராந்தியத்தில் நான்கு வன்னிப் பிரிவுகள் இருந்தன. அவற்றிலொன்று தம்பலகாம ப்பற்று. அது வன்னியனாரின் ஆட்சிக்குள் அடங்கியது. வன்னியனார் என்போர் குறுநில மன்னர்களாவர். நிர்வாகமும், நீதி பரிபாலனமும் அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்தன. படைகளும் அவர்கள் வசமிருந்தன. குடியானவர்கள் காடுவெட்டி அவற்றிலே பிரயோசனங்களை உண்டுபண்ண விரும்பினால் வன்னியனாரின் அனுமதி பெறவேண்டும். அது சம்பிரதாயபூர்வமானது. செய்கை பண்ணுபவர்களுக்கு நிலங்கள் சொந்தமாகிவிடுவது வழமை.

இப்பொழுது நிலைமை முற்றாக மாறிவிட்டது. வன்னியனாரின் ஆட்சி முறையில்லை. அதற்குப் பதிலான ஜனநாயக முறைப் படியான பிராந்திய சுயாட்சியும் இல்லை. குடியானவர்கள் காடுகளை வெட்டி நிலங்களைச் செய்கை பண்ணவும் முடிய வில்லை. இலங்கை சுதந்திரம் பெற்றதும் ஆட்சியதிகாரங்கள் பெரும்பான்மை இனத்தவர் வசமாகி விட்டன.

தம்பலகாமத்தில் கழனிமலை என்றொரு புராதான இடம் இருக்கிறது. 2,500 ஆண்டுகளாக தமிழர் வாழ்ந்தமைக்கான அடையாளங்கள் அங்கு தெளிவாகத் தெரிகின்றன. இலங்கைத் தமிழர் தங்கள் வரலாற்றை வெளிக்கொணரவேண்டிய காலம் இது. ஆனால் உயர் கல்வி நிலையங்களும், பெருமக்களும் இதனைப் பற்றிச் சிந்திப்பதாகத் தெரியவில்லை. ஆவணச் சுவடிகள் நிலையத்துக்கு எவரும் போவதில்லை. கச்சேரி போன்ற அரசாங்க நிலையங்களிலுள்ள தமிழ் ஆவணங் களையும், தமிழர் பற்றிய ஆவணங்களையும் படித்து அவற்றை வெளிப்படுத்துமாறு, வழிப்படுத்துவோரும் இல்லை. இந்தக் கோணத்திலே பார்க்குமிடத்து எமது சமுதாயம் தோல்வி கண்ட சமூகமாகிவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

இவ்வாறான ஒரு நிலையிலே சிறுதுளி பெரு வெள்ளமாகும் என்பதற்கமைய டாக்டர் ஜீவராஜ் போன்றோரின் முயற்சிகள் மறைந்து போனவற்றை மீட்பதற்கு ஆதாரமாகும். இவருடைய

முயற்சிகள் எல்லாப் பட்டதாரிகளுக்கும் முன்னுதாரணமானவை. இந்நூல் ஆய்வு உணர்வுகளைத் தூண்டவல்ல சிறப்பு நூல். இது சமுதாய உணர்ச்சியுடைய எல்லோரும் கவனமாகப் படிக்க வேண்டிய நூல்.



கலாநிதி. கனகசபாபதி சரவணபவன்

# அணிந்துரை

இரண்டாம் உலகப் போரின் முடிவைத் தொடர்ந்து வரலாற்று எழுத்தியலிலும் மாற்றங்கள் நிகழத் தொடங்கின. போரில் தொடர்புடைய சிற்றூர்கள், பாலங்கள், போர்க் கப்பல்கள், வழிபாட்டுத் தலங்கள் என இதுவரை அதிகம் பேசப்படாமல் இருந்த பல விடயங்கள் வரலாற்று ஆய்வாளர்களின் கவனத்தை திருப்பின. வரலாற்றுத்துறைசாரா ஆர்வலர்களினால் அவர்களைச் சுற்றியுள்ள இடங்கள் மிக அக்க றையோடு கவனிக்கப்பட்டது. இதுவரை பெரு வரலாறு பெற்றிருந்த முக்கியத்துவத்தை நுண் வரலாறு பெறத் தொடங்கியது. நமது பாரம்பரிய வரலாற்றுக் கல்வியானது தேசம் என்ற ஒரு பெரும் நிலப்பரப்பின் ஆட்சியாளர்களது வாழ்க்கையை கால ஒழுங்கு நிரலில் எழுதி வரலாறாகப் போதித்துக் கொண்டி ருக்கின்றது. அது ஒரு தேசத்தின் புற உருவப் படத்திற்கு நிகரானதே தவிர உள்ளடக்க விளக்கங்கள் நிறைந்தவை அல்ல.

கார்ல் மாக்ஸ், ஏங்கிள்ஸ் ஆகியோர் பொருளாதார மாற்றங்களே சமூக வரலாற்றைத் தீர்மானிக்கின்றது என்ற புதிய சிந்தனையை உலகிற்கு முன்

வைத்தார்கள். ஆட்சியாளர்களின் பரம்பரை வரலாறு தேசத்தின் வரலாறு இல்லை என்பதை அறிவியல் நோக்கில் புரிய வைத்தார்கள். இதன் பின்னரேயே வரலாற்றை தீர்மானிப்பதில் மக்கள் கொண்டிருந்த பெரும்பங்கு மீது அதிகம் வெளிச்சம் பரவத் தொடங்கியது. பாரம்பரிய வரலாற்றாய்வாளர்களுக்கு நிகராக சாமானிய வரலாற்று ஆர்வலர்களும் தங்கள் சுற்றுச் சூழலின் முக்கியத்துவங்களை பதிவு செய்யத்தொடங்கி னார்கள். அதுவே நுண் வரலாற்றின் தொடக்கமாகியது.

நுண் வரலாற்றியலில் புவிசார் வரலாற்றுப் பிரிவு குறித்த ஆய்வியல் ஈழத்தில் இன்னும் வளர்ச்சியடையவில்லை. ஒரு குறிப்பிட்ட இடத்தின் பண்பாட்டு வரலாறும், புவியியலும் இணையும் ஆய்வியலை இடப்பெயரியல் (Toponymy) எனக் குறிக்கப்படுகின்றது.

இடப்பெயரியல் ஆய்வுகள் பல சந்தர்ப்பங்களில் ஒரு பிரதேசத்தின் தெளிவற்ற வரலாற்று நிகழ்வுகளை மீட்டெடு த்திருக்கின்றன. பொதுவாக இடப் பெயர்கள் அந்தந்த மண்ணின் பண்பாட்டு வேர்களையும், அங்கே வாழ்ந்த மக்களின் வாழ்வியலையும் இணைக்கும் குறியீடாக உணரப்படும். தம்பலகாமம் ஊர்ப்பெயர் ஆய்வை இலக்கியத்தளத்தில் இருந்தும் மிகையுணர்ச்சி இன்றி ஆதாரங்களை ஜீவா முன் வைத்திருப்பது ஆர்வம் தருகின்றது.

இலங்கையைப் பொறுத்தமட்டில் நுண் வரலாறு அல்லது இடப்பெயரியல் குறித்தோ இதுவரை அதிகம் ஆய்வு செய்யப்படவில்லை. தம்பலகாமம் வேலாயுதம் அவர்கள் தம்பலகாமம் ஆலயம் மற்றும் சமூக வழக்காறுகள் குறித்து எழுதியுள்ள கட்டுரைகள் மிகப் பயனுள்ளவை. அவரைத் தொடர்ந்து வேலாயுதம் தங்கராசா, தங்கராசா ஜீவராஜ் ஆகி யோரின் தேடல்களும்,எழுத்துக்களும் தம்பலகாமம் பற்றின் நுண் வரலாற்றுக்கு மிகப் பெரிய பங்களிக்கின்றன.

வாழுகின்ற மண்ணின் பாரம்பரியத்திற்கும், பரம்பரைக்கும் இடையிலான நெருக்கமான உறவையே முன் குறிப்பிட்ட மூன்று தலைமுறை எழுத்துக்களும் எடுத்துக்காட்டுகின்றன. திருகோணமலை மாவட்டத்தில் தம்பலகாமப்பற்று சிறப்பு தனித்துவமுடையது. ஜீவாவின் ஜீவநதி வலைப்பதிவில் **(geevanathy.com)** உள்ள கழனி மலைக்கல்வெட்டு என்னும் கட்டுரையில் வரும் காடுகள், மலைகள், நீர்நிலைகள், இயற்கை அற்புதங்கள் மட்டுமின்றி வரலாற்றோடு தொடர்புடையது என்பதை தம்பலகாமம் வேலாயுதம் எழுதிய வதனமார் காவியக் கட்டுரையில் வாசகர்கள் அறிவார்கள். அதன் மையமாகத் திகழ்வதுதான் ஆதி கோணேசர் ஆலயம். அதிலிருந்துதான் ஒரு பிரமாண்ட மரபு கிளைவிட்டுக் கிளைவிட்டு அந்த மண்ணிற்கு வரலாற்றுப் பெருமை சேர்த்திருக்கின்றது. அவற்றையெல்லாம் இணைத்து எழுதும்போது கலை, இலக்கியம், வாழ்வியல் அனைத்துக்கும் ஆதிகோணேசர் ஆலயம் ஆணிவேராக இருப்பது அறியவரும்.

சாம்பல்தீவு திரு. தம்பிராசா அவர்களின் கல்வெட்டு தேடும் பணியின் வழியில் ஜீவாவின் பயணங்கள் தொடர்வது ஆறுதல் தருகின்றது. சமகால அரசியல் உண்மை வரலாற்றுக்குத் திரைபோடும் முயற்சியாகவே பார்க்கப்படுகின்றது. இத்தகைய சூழ்நிலையில் ஜீவா போன்றவர்கள் எழுதும் சிற்றூர்களின் வரலாறுகள் உண்மைக்கு மிக நெருக்கமானவை.

இன்றைய சிந்தனைத் தெளிவிற்காக நேற்றைய வரலாறுகளின் உண்மைத் தன்மை வெளிக் கொண்டுவரப்பட வேண்டும். இது இளைய தலைமுறைக்கு செய்யப்படும் மிக முக்கிய ஒரு சமூகக் கடமையாகும். ஜீவநதி இணையத்தளம் வழியாக நண்பர் ஜீவாவின் வரலாற்றுத் தேடல்கள் பண்பாட்டு, வரலாற்றுச் சித்திரமொன்றை தம்பலகாமப் பற்றுக்கு அளிக்கின்றார். தம்பலகாமம் என்ற பெயர் குறித்த ஆய்வு மிகையுணர்ச்சி இல்லாத கல்வி ஒழுங்கில் மிக நேர்த்தியாக அமைந்திருப்பது சிறப்பானது.



திருமதி. அன்னலட்சுமி இராஜதுரை,
ஆசிரியர்,
கலைக்கேசரி (வீரகேசரி).

# வாழ்த்துரை

தம்பலகாமம் தங்கராசா ஜீவராஜ் அவர்கள், தொழில் ரீதியில் நோய் தீர்க்கும் மருத்துவர் ஆயினும், தமிழர்தம் தொன்மைகளைத் தேடி ஆராய்ந்து அதனை உரிய ஆதாரங்களுடன் வெளிப்படுத்திவரும் ஓர் இளம் ஆய்வாளராகவும் விளங்கி வருகின்றார். இந்த வகையில், இவரது இரு வேறுபட்ட ஆளுமைகள் எமக்கு எப்போதும் ஆச்சரியந்தருவதாகவே இருக்கிறது என்பதனைக், குறிப்பிடுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழர் தம் வரலாற்று விடயங்களுக்குச் சிறப்பிடம் வழங்கி, ஆய்வு அறிஞர்களின் அரிய கட்டுரைகளை வெளியிட்டு, நம் தமிழ்ச் சமூகத்தினைச் சிந்திக்க வைக்கும் அரிய பணியினை மேற்கொள்ளும் வீரகேசரி குழுமத்தின் சகோதர இதழான “கலைக்கேசரி” வைத்திய கலாநிதி த. ஜீவராஜ் அவர்களின் ஆய்வுக் கட்டுரைகளையும் கடந்த சில வருடங்களாக பெரும்பாலும் தொடர்ச்சியாக வெளியிட்டு வருவதை வாசகர்கள் அறிவார்கள்.

அவற்றுள் சில இவரது பிறந்த ஊரான தம்பலகாமம் பற்றியதாக அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் தமது ஊர் தொடர்பாக மேலும் ஆர்வத்துடன் ஆராய்ந்து வேண்டிய ஆவணங்கள், சாசன ஆதாரங்கள் மற்றும் சான்றுகளைப் பெற்று "தம்பலகாமம் ஊர்ப்பெயர் ஆய்வு" என்னும் நூலை வெளியிடுகிறார். இது அவரது இரண்டாவது நூலாகும்.

இவ்விளம் ஆய்வாளரின் தமிழர்தம் வரலாற்று ஆய்வு முயற்சிகளும், அவற்றினை நூல்களாக ஆவணப்படுத்தும் முயற்சிகளும், வருங்காலத்தில் சிறப்புற்றுப் பயன்தர வேண்டும் என மனப்பூர்வமாக வாழ்த்துகிறேன்.

25/18 3 ஆம் குறுக்குத் தெரு,
மருதானை வீதி,
ஹெந்தலை,
வத்தளை.



‘மாயன்’ இரா.ஸ்ரீஞானேஸ்வரன்,
பிரதம ஆசிரியர்,
மலைமுரசு.

# வாழ்த்துரை

பணி தொடரவும் சிறக்கவும் வாழ்த்துக்கள்!

வரலாற்றில் வாழ்தல், வரலாற்றைக் கற்றல், வரலாற்றைப் பேசுதல் என எம் வரலாறு தொடர்பான செயற்பாடுகளோடு எம்முன்னே மற்றோர் வரலாற்றுக் கடமையொன்றும் இருக்கின்றது. அத் தலையாய கடமையாதெனில் “எம் வரலாற்றைப் பதிவு செய்வது” என்பதே! எனினும் அக் கடமையை ஆற்ற வேண்டிய கடப்பாடு எமக்கு உண்டு என்பதை நாம் நினைப்பதில்லை என்பதே உண்மை!

“வரலாற்றைப் பதிவு செய்வது” என்பது என்ன? எமது வரலாற்றை ஆதாரங்களுடன் எதிர்காலச் சந்ததியினருக்குக் கொடுத்துவிட்டுச் செல்லுதல் என்பதே அது.

எமது வரலாற்றைக் கல்வெட்டில் பொறித்துப் பதிந்து வைத்துச் சென்ற காலத்தினைப் பல நூறு வருடங்களுக்கு முன் நாம் கண்டிருக்கின்றோம். அக்காலத்தில் ஈழத்தமிழரின் வரலாறானது பெரும்பாலும் சுண்ணக்கற்களிற் பதிந்து வைக்கப்பட்டதால் காலஞ்செல்லச் செல்ல அக்கற்கள் கரைந்து போய் எம் வரலாறும் மண்ணாகிப் போனது என

கலாநிதி முருகர் குணசிங்கம்[(1)] தனது பொத்தகத்தின் முன்னுரையிற் பதிந்துள்ளார். இன்றோ அவ்வாறு அழிந்து போகும் ஆபத்தில்லை. இற்றைக் காலத்தில் எம் வரலாற்றை வலைப்பூக்களிலும், அச்சு வடிவிலும் ஆதாரங்களுடன் பதிந்து வைப்பதும், அவை காலத்தால் அழிக்கப்பட முடியாத எண்ணியல் வடிவங்களில் நாடுகளின் எல்லைகளைத் தாண்டிச் சேமித்து வைக்கப்படுதலும் சாத்தியமாகியுள்ளது. அத்துடன் அவை அழியாப் பதிவுகளாக அடுத்தடுத்த சந்ததிகளுக்குக் கடத்தப்பட்டும் வருகின்றது. இவ்வொவ்வொரு வலைப்பதிவும், புத்தகங்களும் தமிழர் வம்சப் பதிவாக உருவாகும். இதனையே வரலாற்றைப் பதிந்து வைத்துச் செல்லல் என்கிறோம்.

தமிழினத்தின் வரலாற்றைப் பதிந்து வைத்துச் செல்லும் இத்தலையாய கடமையைச் செவ்வனேயாற்றும் வைத்திய கலாநிதி த.ஜீவராஜ் அவர்கள் - வரலாற்றைப் பதிந்து செல்லும் தம்பலகாமப் பரம்பரையின் - மூன்றாவது தலைமுறையைச் சேர்ந்தவர். தனது வலைப்பதிவில்[(2)] திருகோணமலையின் வன்னிபங்களை எமக்காக வரைந்தவர் ஜீவராஜ். இன்றும் காடுகளிலும், குகைகளிலும், மலைகளிலும் அவருடைய வரலாற்றுத் தேடல்கள் முடிவின்றித் தொடர்கின்றன. மலைமுரசு பத்திரிகையில் தொடராக வந்த அவருடைய கட்டுரைகள் சில இன்று ஒருசேரத் "தம்பலகாமம் ஊர்ப்பெயர் ஆய்வு" என நூல் வடிவம் பெற்றுள்ளது. அதனையெண்ணி அவரது காலத்தில் வாழ்பவன் என்ற பெருமையை உணர்கின்றேன்.

அவரது பணி தொடரவும், சிறக்கவும் வாழ்த்துக்கள்....!
நன்றி.

அடிக்குறிப்பு

(1) Tamils in Sri Lanka - A Comprehensive History
- Dr. Murugar Gunasingam, Page 4 Para 2

(2) www.geevanathy.com



திருமதி ஜெ.ஸ்ரீபதி,
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம், தம்பலகாமம்.

# வாழ்த்துரை

### தம்பலகாமப் பெருமைகளின் அறிவியல் ஆய்வு

இன்றைய காலகட்டத்தில் வரலாற்று ஆய்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டாலும் அவை பெரும்பாலும் பிரபல்யமான இடங்களைச் சுற்றியே நடைபெற்று வருகிறது. சிறிய கிராமங்கள் தொடர்பில் ஒருவித புறக்கணிப்புப் போக்கையே காணக்கூடியதாக உள்ளது. இதற்கு இந்தச் சின்னக் கிராமத்தில் அப்படியென்ன பெரிதான வரலாறு இருந்து விடப்போகிறது என்ற ஒருவித அலட்சியப்போக்கும் முக்கியமானதோர் காரணமாக அமைகிறது எனலாம்.

அந்த வகையில் வைத்திய கலாநிதி த. ஜீவராஜ் அவர்களின் "தம்பலகாமம் ஊர்ப்பெயர் ஆய்வு" என்னும் இந்நூல் ஒரு சிறிய ஊரின் பெயர் ஆய்வைப் பெரிதாகச் செய்திருக்கிறது. சிறிய ஊரின் வரலாற்றிலிருந்து தேசத்தினை நோக்கிய பயணம் இப் புத்தகம். தம்பலகாமம் எனது சொந்த ஊர் என்பதற்கு அப்பால் அது பண்டைய காலத்தில் கொண்டிருந்த பெருமைகளின் வரலாற்றுப் பதிவுகளை வாசிக்கையில் ஊருடனான எனது நெருக்கம் இன்னும் அதிகரிப்பது போல் உணர்கிறேன்.

சிறுவயதில் அப்பப்பா தம்பலகாமம் க.வேலாயுதம் அவர்களிடமும், அப்பா கலாபூசணம் வே.தங்கராசாவிடமும் கதை வழியாகக் கேட்டறிந்த தம்பலகாமத்தின் பெருமைகளின் அறிவியல் ஆய்வுரீதியான தொடர்ச்சி இதுவெனலாம். கல்வெட்டு ஆதாரங்களுடனும், பல வரலாற்று ஆவணங்களின் துணையுடனும் வெளிவந்திருக்கும் இந்நூல் தம்பலகாமம் வரலாற்றில் தவிர்க்க முடியாத ஒரு இடத்தினைப் பெறும் என நம்புகின்றேன்.

# முன்னுரை

## வரலாற்றைப் பதிவு செய்தல்

**இ**ன்று எம்மத்தியில் முன்னொருபோதும் இல்லாத அளவு வரலாற்றைப் பதிவு செய்தலின் தேவை அதிகளவில் உணரப்பட்டு வருகிறது. அன்றாடம் நாம் முகம்கொடுக்கும் சமூக, பொருளாதார, அரசியல் நெருக்கடிகளின் ஒரு பகுதியாக எமது அடை யாளங்களைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு வரலாற்று எழுத்தியலில் தோன்றியிருக்கும் ஒருவகைத் தீவிரத்தன்மைக்கும், விழிப்புணர்வுக்கும் காரணமாக அமைகிறது எனலாம்.

ஆழமான வரலாற்றறிவும், தொல்லியல் அனுபவமும் , முறையாகப் பயிற்றுவிக்கப்பட்ட பல்கலைக்கழக ஆய்வு முறைகளில் சிறந்த தேர்ச்சியும் கொண்ட துறைசார் வல்லுனர்கள் பலர் வரலாற்றைப் பதிவு செய்து வருகிறார்கள். இவர்களுக்கு மேலதிகமாக வரலாற்று ஆர்வலர்களின் பங்களிப்புகளுக்கும், எழுத்துகளுக்கும் எமது சமூகம் வழங்கி வரும் வரவேற்பானது அதற்குள்ள தேவையின் வெளிப் பாடாகவே பார்க்கப்படுகிறது.

தெளிவான ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் இன, மத அடிப்படைகளை முன்னிறுத்தி எழுதப்பட்ட "மகாவம்சம்" என்ற குலவரலாறு ஆதிக்கம் செலுத்துகின்ற நாடு இலங்கை. இங்கு தனது இருப்புகளைத் தக்கவைத்துக் கொள்வதற்காக நாளாந்த நெருக்கடிகளைக் கொண்டிருக்கும் ஓர் சமூகத்தை சேர்ந்த வரலாற்று ஆர்வலன் என்ற வகையில் இந்த ஊர்ப்பெயர் ஆய்வினை உங்கள் முன் வைக்கின்றேன்.

"தம்பலகாமம் ஊர்ப்பெயர் ஆய்வு" என்ற இந்த நூல் வரலாற்று எழுத்தியலின் பண்புகளுக்கு அமைவாக ஆவண - ங்கள், சாசன ஆதாரங்கள், இலக்கிய சான்றுகள் என்பவற்றோடு பல முதன்நிலைத் தரவுகளையும், எனது தேடல் அனுபவக்குறிப்புக்களையும், விமர்சனங்களையும் உள்ளடக்கி இருக்கிறது.

இந்நூலுக்கான மூல ஆவணங்கள் பல அதன் முழுமையான வடிவிலேயே இணைக்கப்பட்டுள்ளது. இவற்றில் பல முதன்நிலைத் தரவுகளாக முதன் முறையாக இந்நூல் மூலம் ஆவணப்படுத்தப்படுகிறது. ஊர்ப்பெயர் ஆய்வுக்கான ஆதாரங்களாக அவை கொள்ளப்பட்டாலும் அதனைவிட கிடைத்தற்கரிய பல வரலாற்றுத் தகவல்களை கொண் டிருப்பதனால் முக்கியத்துவம் பெறுகின்றன. இனிவரும் காலங்களில் அவ்வாவணங்கள் பல்வேறு கோணங்களில் பலராலும் ஆய்வுகளுக்குட்படுத்தப்பட வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

எனது இந்த வரலாற்றுப் பதிவுக்குப் பின்னால் அப்பப்பாவின் (தம்பலகாமம்.க.வேலாயுதம்) வலிமையான தூண்டல் இருந்தது. இந்நூலுக்கான முதல் வாசகனாக, விமர்சகனாக மட்டுமல்லாது எனது ஆக்கத்திறனுக்கான உந்துசக்தியாக எனது தந்தையின் (கலாபூசணம் வே.தங்கராசா) துணை தொடர்கிறது.

அறிமுகமான காலத்தில் இருந்து ஒரு மூத்த சகோதரனைப் போல் அன்பு செலுத்தும் திருகோணமலை வரலாற்று ஆய்வாளர் கலாநிதி கனகசபாபதி சரவணபவன் அவர்களின் தொடர்பும், ஆலோசனைகளும் நன்றிக்குரியவை. தங்களது நேரத்தை ஒதுக்கி முழுஈடுபாட்டுடன் இந்நூலினை சிறப்புற திருத்தி செம்மைப்படுத்திய திருமதி சாந்தினி சரவணபவன், கலாநிதி கனகசபாபதி சரவணபவன் தம்பதியினருக்கு நான் என்றும் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெருந்தன்மையோடு அரவணைத்த பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் எமது பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வரலாற்று தேடல்களுக்கு உறுதுணையாக இருந்ததோடு அவற்றினை முறையாக பதிவுசெய்யவும் வழிவகைசெய்தார். வரலாற்றுத் தேடல்களில் கல்வெட்டினை மைப்படி எடுப்பது முதலான பல்வேறு நுட்பங்களை அவரிடம் இருந்து நேரடியாக கற்றுக்கொள்ளும் பாக்கியம் எனக்கு கிடைத்தது பெரும்பேறாகும்.

நீண்ட காலத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்ட தம்பலகாமம் கல்வெட்டினை முழுமையாக வாசித்து உலகிற்கு வெளிப்ப டுத்தி உதவிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் ப. புஸ்பரட்ணம் அவர்களின் பணி என்றும் நன்றியுடன் நினைவுகூறத்தக்கது. அண்மையில் குமரேசன் கடவை கல்வெட்டினைப் படியெடுக்கும் பணியில் அவருடன் இணைந்து செயற்படக் கிடைத்த சந்தர்ப்பம் சிறந்த கள அனுபவமாகும்.

ஜீவநதி வலைப்பதிவில் (www.geevanathy.com) தம்பலகாமம் ஊர்ப்பெயர் ஆய்வு பதிவு செய்யப்பட்ட நாள் முதல் மறுமொழிகளூடாகவும், சமூக வலைத்தளங்களூடாகவும், நேரிலும் உற்சாகமூட்டிய அன்பர்கள், இக்கட்டுரைகளைத் தொடர்ச்சியாக வெளியிட்டு உற்சாகமூட்டிய திருகோண மலையின் பிராந்தியப் பத்திரிகை மலைமுரசின் ஆசிரியர் திரு. இரா. ஸ்ரீஞானேஸ்வரன், Express Newspapers (Ceylon)(pvt)Ltd

நிறுவனத்தின் வெளியீடான கலைக்கேசரியின் ஆசிரியர் திருமதி.அன்னலட்சுமி இராஜதுரை ஆகியோர் வலைப்பதிவில் இருந்து அச்சூடக வாசகப்பரப்புக்குள் எனது பதிவுகளை அறிமுகம் செய்துவைத்தவர்கள் என்பதனை நன்றியுடன் நினைவுகூறுகின்றேன். இவர்களோடு திருகோணமலை வரலாற்றுத்தேடலின் சகபயணியான வைத்தியர் அ.ஸதீஸ் குமார் அவர்களின் தோழமையும் ஒரு வலைப்பதிவரான எனக்கு நூல்வெளியிடும் மனத்தைரியத்தைக் கொடுத் திருக்கிறது எனலாம்.

*2014* இல் ஆரம்பித்த இந்த கடின பயணம் அன்பு மனைவி திருமதி. அருணா, மகன் அனந்தன், மகள் ஆத்யா மற்றும் மாமி திருமதி.கமலாதேவி தருமலிங்கம் துணையுடனும், உடன் பிறந்தவர்களான தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி. ஜெயகௌரி ஸ்ரீபதி, இதய சிகிச்சை நிபுணர் த.ஜெயகாந் குடும்பத்தினர், மைத்துனர் பொறியியலாளர் சமயதாஸ் குடும்பத்தினர் ஆகியோரின் ஒத்துழைப்பினாலும் மன நிறைவோடு நூலுருப் பெற்றிருக்கிறது.

ஆர்வத்துடன் நகர்ந்து செல்லும் வரலாற்றைத் தேடிய எனது பயணத்தின் அச்சுருவாக்கம் எனது தாயார் திருமதி. ஜீவரத்தினம் தங்கராசா அவர்களின் அனுசரணையில் வெளிவருவது குறிப்பிடத்தக்கது. ஒரு நூலின் உள்ள டக்கத்தினை வாசகர் மனதில் பதியவைப்பதில் நூல்வடி வமைப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. அந்தவகையில் என்மனதில் எப்படி நான் கற்பனைபண்ணி வைத்திருந்தேனோ அதேவடிவில் இந்நூலினை அமைத்துத்தந்த ஸ்ரீராம் பதிப்பகத்தின் உரிமையாளர் திரு. ஸ்ரீஞானேஸ்வரனுக்கு எனது மனம் நிறைந்த நன்றிகள். இவற்றுடன் நூல் வடிவமைப்பில் உதவிய திருமதி.கி.தனுஷா, அட்டைப்படத்தினை வடிவமை த்துத் தந்த திரு.த.ஜனார்த்தன் (J Magic Creations), சித்திரம் வரைந்து தந்த வைத்தியர் ரோமன் ஜெபரட்ணம் ஆகியோருக்கு எனது மனம் நிறைந்த நன்றிகள்.

இந்நூலுக்கு உரிய வேளைகளில் ஆலோசனைகள் பல வழங்கிய கலாச்சார உத்தியோகத்தர் திரு.குணபாலா, ஆசிரியர் திரு.சின்னத்தம்பி பிரகாஷ், சமூக செயற்பாட்டாளரும், வரலாற்று ஆர்வலருமான நண்பன் திரு. சத்தியதேவன் மற்றும் திருமதி. வில்வராசா தட்சாயினி சைலஜன் ஆகியோருக்கு எனது மனம் நிறைந்த நன்றிகள். இவற்றோடு நூலிலுள்ள பல கல்வெட்டுக்களை படித்தறிய உதவியவர்கள் விபரத்தினை கட்டுரைகளில் குறிப்பிட்டிருக்கிறேன்.

காலத்திற்குக் காலம் தனது திசைகளை மாற்றிவரும் வரலாற்று எழுத்துக்களில் "நுண்வரலாறு" முக்கியத்துவம் பெறும் இன்றைய காலகட்டத்தில் இவ்வாய்வுநூல் உங்கள் முன்னால் சமர்ப்பிக்கப்படுகிறது. "தம்பலகாமம்" என்னும் ஊர்ப்பெயர் தொடர்பிலான உங்கள் மனப்பதிவுகளில் சிறிய அசைவுகளையேனும் இந்நூல் உருவாக்குமென்றால் அதுவே இப்படைப்பின் வெற்றியாக இருக்கும். தொடர்ந்து பயணிப்போம்.

நட்புடன் ஜீவன்.

Dr.த.ஜீவராஜ்<br>
(MBBS - Jaffna) (MCGP – Colombo)<br>
www.geevanathy.com<br>
19.07.2022.



தம்பலகாமம்.க.வேலாயுதம்

# சமர்ப்பணம்

தம்பலகாமம்.க.வேலாயுதம் திருகோணமலை மாவட்டத்தின் மூத்த எழுத்தாளர், சிறந்த கவிஞர், வீரகேசரிப் பத்திரிகையில் 50 வருடங்களுக்கு மேலாக நிருபராக அனைவரும் பாராட்டும் வகையில் கடமையாற்றியவர். வீரகேசரி, மித்திரன், தினபதி, சிந்தாமணி, சுடர், சுதந்திரன், தினகரன், தினக்குரல், ஆத்மஜோதி, சிவநெறி, குமுதம் பக்தி இதழ் ஆகியவற்றில் தனது கைவண்ணத்தைக் கவிதை, கட்டுரை, சிறுகதை, குறுநாவல், செய்தி மடல் என பலவகைகளில் பதிவு செய்தவர்.

அவர் வீரகேசரி நிருபராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் “தம்பலகாமம்” செய்திகளுக்கு ஒரு தனி மதிப்பு இருந்தது. வெறுமனே செய்திகளை மட்டும் எழுதாமல், கிராமத்தின் அத்தியாவசிய தேவைகளையும், அவற்றை எவ்வாறு தீர்க்கலாம் என்பதற்குரிய வழிவகைகளையும் கட்டுரைகள் மூலமாக தமிழ் கூறும் உலகிற்கு எடுத்துரைத்தவர். தனது கிராமத்தினை பெரிதும் நேசித்த அவர் தனது பெயருடன் கிராமத்தின் பெயரையும் இணைத்துக் கொண்டே எழுதினார். தம்பலகாமம் க.வேலாயுதம் என்ற பெயரே அவருக்குப் பெயரையும் , புகழையும் தந்தது.

தம்பலகாமம் குஞ்சடப்பன்திடலில் 1917 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 17 ஆந் திகதி பிறந்த இவர் ஆர்மோனியம் வாசிப்பதிலும் கைதேர்ந்தவர். வேலுப்பிள்ளை அண்ணாவியார் பழக்கி மேடையேற்றிய “கண்டி மன்னன் ஸ்ரீவிக்கரமசிங்கன்” நாடகத்தில் குமாரகாமியின் தங்கை “ரஞ்சிதபூசணி” யாக திரு.வேலாயுதம் முதன் முதலாக நடித்தார். தொடர்ந்து நளதமயந்தி நாடகத்தில் தமயந்தியாகவும், மயில்ராவணனில் அவன் தங்கை தூரதண்டியாகவும், அண்ணாவிமார் இணைந்து நடாத்திய பவளக்கொடியில் அர்ச்சுனனின் மகனாகவும் நடித்துப் பெரும் புகழ் பெற்றார்.

பாடசாலைக் கல்வியை ஐந்தாம் தரத்துடன் நிறுத்திய இவர் தானாகவே முயன்று வாசிப்பினூடாக தனது கல்வியை வளப்படுத்திக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. அமரர் கலாபூசணம் சித்தி அமரசிங்கம் அவர்களின் ஈழத்து இலக்கியச் சோலை தனது இருபதாவது வெளியீடாக இவர் எழுதிய “ரங்கநாயகியின் காதலன்” என்னும் வரலாற்றுக் குறுநாவலை 2005ஆம் ஆண்டு வெளியிட்டது. தம்பலகாமம் பொற்கேணி கிராம அபிவிருத்திச் சங்கம் இவரது முப்பது கட்டுரைகளைத் தொகுத்து “தமிழ் கேட்க ஆசை” என்ற பெயரில் இதே ஆண்டில் வெளியிட்டது. தம்பலகாமம் சாயி சேவா சங்கம் இவர் எழுதிய “இந்திய ஞானிகளின் ஆன்மிக சிந்தனைகள்” என்ற தத்துவ நூலை 2008ஆம் ஆண்டில் வெளியிட்டது.இவரது இருபத்தியிரண்டு கவிதைகளைத் தொகுத்து “வையமெல்லாம் தமிழோசை வளர்ந்தோங்கும்” என்ற கவிதை நூலினை 2014ஆண்டில் மணிமேகலைப் பிரசுரம் வெளியிட்டது. இத்தகைய சிறந்த கலைஞனை, எழுத்தாளனை 19.05.2009 ஆம் ஆண்டு நாம் இழந்து விட்டோம்.

தமிழையும் தான்பிறந்த மண்ணையும்
உயிரென மதித்துப் போற்றிய அப்பெருமகனாருக்கு
இந்நூல் சமர்ப்பணமாகிறது.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| இயல் 1 கதை - | ஊர்ப்பெயர் ஆய்வோடு ஒரு பயணம் | 24 |
| இயல் 2 அறிமுகம் 1 | தம்பலகாமம் பிரதேசம் | 45 |
| அறிமுகம் 2 | தம்பலகாமம் ஊர் | 55 |
| இயல் 3 | | |
| கல்வெட்டின் கதை - | தம்பலகாமம் கல்வெட்டு | 60 |
| இயல் 4 | ஊர்ப்பெயர் திரிபு | 79 |
| இயல் 5 | | |
| ஊர்ப்பெயர் வரலாறு 1 | தம்பலகாமப்பற்று | 84 |
| ஊர்ப்பெயர் வரலாறு 2 | தம்பலகாமதேசம் | 101 |
| ஊர்ப்பெயர் வரலாறு 3 | தம்பை நகர் | 136 |
| ஊர்ப்பெயர் வரலாறு 4 | “தமனதோட்ட” | 144 |
| ஊர்ப்பெயர் வரலாறு 5 | Tamblegam | 150 |
| ஊர்ப்பெயர் வரலாறு 6 | தம்பலகமம் | 168 |
| ஊர்ப்பெயர் வரலாறு 7 | தாயூர் தம்பலகாமம் | 216 |
| ஊர்ப்பெயர் வரலாறு 8 | தம்பலகமுவ | 226 |
| இயல் 6 ஆய்வு | தம்பலகாமம் ஊர்ப்பெயர் ஆய்வு | 230 |
| இயல் 7 | கல்வெட்டுக்கள், செப்பேடுகளில் காமம் எனும் ஈற்றுப்பெயர் கொண்ட இடப்பெயர்கள் | 265 |
| இயல் 8 முடிவுரை | நூற்பயன் | 276 |

இயல் 9 பின்னிணைப்பு

1. “தம்பலகாமத்தில் ஒரு கல்வெட்டு” - பொலநறுவைக் காலத்துப் படைப்பற்று (மறைந்து போன சிலாசனம்)
பேராசிரியர் சி.பத்மநாதன் 279
2. தம்பலகாமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட அரிய தமிழ்க் கல்வெட்டு -
பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் 292

இயல் I கதை

# ஊர்ப்பெயர் ஆய்வோடு ஒரு பயணம்

எனது வாழ்க்கையில் எப்பொழுதும் நெடுந்தூரப் பயணங்கள் சிந்தனையைத் தூண்டுவதாக அமைந்து விடுவது வழக்கம். திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாண மருத்துவ பீடத்திற்கான வவுனியா ஊடான இருநூற்று நாற்பது கிலோமீற்றர் தூரப்பயணம் ஒவ்வொரு முறையும் எனக்கு ஒரு மறக்க முடியாத நிகழ்வினை மனதில் பதித்துச் சென்றிருக்கிறது. அவ்வாறான பயணம் ஒன்றிலேயே தம்பலகாமம் இடப்பெயர் ஆய்வு நூலுக்கான ஆரம்பப்புள்ளி இடப்பட்டது.

2003 ஆம் ஆண்டின் நடுப்பகுதியது. விடுமுறை முடிந்து மீள பல்கலைக்கழகம் செல்வதற்கான பயணநாள். வீடு பிரிந்து செல்லும் அன்றைய பயணம் பெரும் சலிப்பைத் தருவதாக இருக்கும் என்ற எண்ணமே மனச்சோர்வைத் தந்தது. என்ன செய்வது நெருங்கி வரும் பரீட்சைகள் பற்றிய பயம் பின்னால் இருந்து உந்தித்தள்ள அரைமனதோடு அதிகாலை வேளையிலேயே பயணப்பொதிகளுடன் புறப்பட

ஆயத்தமானேன். விடுமுறையில் படிப்பதற்காக எடுத்து வரப்பட்டிருந்த பக்கம் எதுவும் புரட்டப்படாத பாரம்கூடிய புத்தகங்களின் கனம் கையைப் பதம்பார்த்தது.

திருகோணமலைப் பேருந்து நிலையத்தில் நின்ற யாழ்ப்-பாணத்திற்கான பேருந்து பல்கலைக்கழக மாணவர்களாலும், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்களாலும் மற்றும் சாதாரண பயணிகளாலும் நிறைந்திருந்தது. என்னுடன் சேர்ந்து பயணித்த பலரின் முகங்கள் வீடு பிரிந்த சோகத்தாலும், சோதனைச்சாவடிகள் பற்றிய பயத்தினாலும் இறுகியிருந்தது. சமாதான காலமென்றாலும் பாதைகளில் எதிர்ப்படும் பாதுகாப்புக் கெடுபிடிகள் பயணங்களின் சுவாரசியங்களை விழுங்கி ஏப்பமிட்டுக்கொண்டிருந்த காலமது. அளவுக்கதிகமான பயணிகளுடன் அந்தரித்துக்கொண்டிருந்த பேருந்து நேரக்காப்பாளனின் ஞாபகப்படுத்தலின் பின் மெல்ல தனது பயணத்தினை ஆரம்பித்தது.

சன நெரிசலில் உடல் பிதுங்கிக்கொண்டிருக்க யன்னல் ஊடாக கடந்துபோகும் இடங்களைப் பார்த்தபடியே என் நேரம் கரைந்துகொண்டிருந்தது. உவர்மலை, (இ)லிங்கநகர், அபயபுரச்சந்தி (உப்புவெளிச் சந்தி) என்று கடந்து அனுராதபுரச் சந்தியில் நின்ற பேருந்தில் பலர் ஏறிக்கொண்டார்கள். மகிந்தபுர, கன்னியா, வெல்கம் விகாரை (இராஜராஜப் பெரும்பள்ளி) என்று ஒவ்வொரு இடத்திலும் நின்று பயணிகளை ஏற்றிகொண்டு வந்த பேருந்து பன்குளம் ஊடாக வேகமெடுத்துச் சென்றுகொண்டு இருந்தது. தொடர்ச்சியாக நடந்த இன வன்முறைகளும், இடப்பெயர்வுகளும், குடியேற்றத் திட்டங்களும் எமது வாகனம் கடந்து செல்கின்ற இடப் பெயர்களில் கணிசமான மாற்றங்களை உண்டுபண்ணி இருந்தது.


மொறவெவ (முதலிக்குளம்), மகதிவுல்வெவ (பெரிய விளாங் குளம்), கோமரங்கடவெல (குமரேசன்கடவை), ஹொரவப் பொத்தான (உறவுப்பெற்றாணை) என்று பேருந்து நடத்துனர்

உரத்த குரலில் இடப்பெயரைக் கூவி பயணிகளை இறக்குவதும் ஏற்றுவதுமாக இருந்தார். திருகோணமலையில் இருந்து வவுனியா நோக்கிய தொண்ணூற்றைந்து கிலோமீற்றர் தூரப்பயணம் பெயர் மாறிப்போன ஊர்ப்பெயர்கள் பற்றிய நினைவுகளோடு கரைந்து போனது.

எதிர்ப்படும் சோதனைச் சாவடிகளிலெல்லாம் பயணப்-பொதிகளுடன் ஏறுவதும், இறங்குவதும், அடையாள அட்டைதனை நீட்டியபடி வரிசைகளுக்குள் நெரிபடுவதுமாக இருந்த பயணம் ஓமந்தைச் சோதனைச் சாவடியுடன் ஒரு முடிவுக்கு வந்தது. நீண்டநேர சோதனைகளுக்குப் பின்னர் பயணக்களைப்புடன் திருகோணமலையிலிருந்து நான் வந்திருந்த பேருந்திலிருந்து இறங்கி யாழ்ப்பாணம் கண்டிவீதியில் (A9) முகமாலை நோக்கிப் பயணப்பட ஆயத்தமாக இருந்த பேருந்தில் ஏறி அமர்ந்து கொண்டேன். இனி வரும் மூன்று மணிநேரம் முகமாலைவரை நிம்மதியாகப் பிரயாணிக்கலாம் என்ற எண்ணமே சற்று ஆறுதல் தருவதாக இருந்தது.

பெரும்பாலும் எந்தவூர் சென்றாலும் தனியாகப் பிரயாணிக்க நேர்ந்தால் பேருந்தில் செல்வதையே விருப்பமாகக் கொண்டிருக்கிறேன். அப்படியான பயணங்கள் ஒரு அனுபவம் வாய்ந்த எழுத்தாளனின் பயணக்குறிப்புகளுக்கு இணையான மனப்பதிவுகளை மிக எளிதாக என் மனதில் விதைத்துச் சென்று விடுகிறது என்பதே இத்தேர்வுக்கான காரணமாக இருக்கிறது. வாழ்வில் இவர்களை நாம் மீண்டும் சந்திக்க முடியுமா? என்று தெரியாத மனிதர்களுடனான பயணப் பழக்கங்கள் அலாதி யானவை. எனது இருக்கைக்கு அருகில் யன்னலோரமாக இருந்த சுமார் ஐம்பத்தைந்து வயது மதிக்கத்தக்க பெரியவர் ஒருவர் எனது அன்றைய பயணத்திற்கான சிந்தனையைத் தூண்டிவிட்டார்.

“தம்பி திருகோணமலையா?” என்றபடி சற்று எனது பக்கம் திரும்பி ஒரு நீண்ட உரையாடலுக்கான அடித்தளத்தினைப் போட்டார் அவர்.




சித்திரம்
வைத்தியர் ரோமன் ஜெபரட்ணம்

‘‘ஓம்.திருகோணமலையில் தம்பலகாமம்’’ என்றேன் புன்னகைத்தவாறே நான்.

“என்ன! தம்பலகாமமோ? என்ர தேப்பன் ஒரே சொல்லுவார் தம்பலகாமத்துத் தயிரையும், சோறையும் மறக்கேலாது எண்டு’’ என்றார் உற்சாகமாக.

எப்போதும் முன்பின் அறிமுகமில்லாத ஒருவர் நம்மையோ, நம்மூரையோ அல்லது நம்மைச் சார்ந்தவர்களையோ புகழ்ந்து பேசும்பொழுது ஒருவகை உற்சாகம் நம்மையும் அறியாமல் பற்றிக்கொள்வது வழமையல்லவா? எனக்கும் அப்படித்தான். பயணக்களைப்பெல்லாம் மறைந்து அவருடன் உரை யாடுவதற்கான ஆர்வம் அதிகரித்தது. இருவரும் பரஸ்பரம் குடும்ப விபரங்கள், உள்நாட்டு நடப்புகள், உலக விவகாரங்கள் என்று எங்களை மறந்து கதைத்துக் கொண்டிருந்தோம். சுவாரசியமான உரையாடல்களுக்கு நடுவில் திடீரென ஏதோ ஞாபகம் வந்தவர் போல “தம்பி உங்கட ஊரிண்ட பேர் தம்பலகமமா? இல்ல தம்பலகாமமா?’’ எனக் கேட்டதோடு நின்றுவிடாமல் அவ்வாறு கேட்டத்திற்கான காரணத்தையும் கூறினார். தனது தந்தை தம்பலகாமம் என்று சொல்லு கின்றபோதிலும் தான் வாசித்த பல செய்தித்தாள்களில் “தம்பலகமம்’’ என்றே எழுதப்பட்டிருந்ததால் இந்தச் சந்தேகம் ஏற்பட்டதாக கூறினார். அத்துடன் நின்றுவிடவில்லை. “நல்ல காலம் பாத்தியளே! ஞாபகம் வந்திட்டுது. எண்டைக்-கெண்டாலும் இந்தச் சந்தேகத்தை உங்கட ஊர்க்காரர் யாரிட்ட எண்டாலும் கேட்கோணும் எண்டு இருந்தனான். இண்டைக்கு நீங்க வந்து மாட்டினியள்’’ என்றார்.

பல வருடங்களாக இடப்பெயர் ஆய்வு பற்றி நான் தேடிச் சேகரித்த விடையங்கள் எல்லாவற்றையும் தம்பலகமமா? அல்லது தம்பலகாமமா? என்ற ஒற்றைவரிக் கேள்விக்குள் கேட்டுவிட்டிருந்தார் அவர். அமர்ந்திருந்த பேருந்தின் வேகத்தினைவிட அதிவேகமாக எனது எண்ணங்கள் இடப்பெயர் ஆய்வு பற்றி நான் சேகரித்திருந்த விடயங்களை அசைபோடத்தொடங்கியது.

“என்ன தம்பி ஊர்ப்பெயர கேட்டதும் வீட்டு ஞாபகம் வந்திட்டுதோ? சத்தத்தையே காணல?” என்று அவர் அருகில் இருந்து கேட்டபோதும் அது கிணற்றுக்குள் இருந்து வரும் சத்தம்போல் இருந்தது எனக்கு. ஞாபகச் சுழல்களில் இருந்து விடுதலையாகி ஒரு மெல்லிய புன்முறுவலுடன் பதிலளிக்கத் தொடங்கினேன்.

எனது ஊர்ப்பெயர் சமகாலத்தில் இருவேறு விதமாக பயன்படுத்தப்படுவதை சிறுவயது முதலே பார்த்து வருகிறேன். தம்பலகமமா? இல்லை தம்பலகாமமா? என்ற கேள்வி இன்றுவரை எங்கள் ஊரில் பலரைப் பிரித்து வைத்திருக்கிறது. சிலர் தம்பலகாமம் என்றும் வேறு சிலர் தம்பலகமம் என்றும் முரண்பட்டு எழுதியும், பேசியும் வருகிறார்கள். இவர்களுக்கு நடுவில் எந்தவித ஆர்ப்பாட்டமுமில்லாமல் அரசின் உத்தியோக-பூர்வ ஆவணங்களில் இந்த இடத்தின் பெயர் ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட நீண்டகால நிகழ்ச்சி நிரலின் கீழ் “தம்பலகமுவ” என்று குறிப்பிடப்பட்டு வருவதையும் அவருக்கு விளக்கமாகச் சொன்னேன்.

“ம்ம்................ தம்பலகாமம், தம்பலகமம், தம்பலகமுவ ......... உங்கட ஊரின்ட பெயர் இப்படியே மாறிப்போய்விடுமா?” என்று சந்தேகத்துடன் கேட்டார் அவர். இல்லை அப்படியெல்லாம் நடக்கவே நடக்காது என்று சொல்லத் தைரியம் வரவில்லை எனக்கு. ஏனெனில் நான் அன்று கடந்துவந்த பாதை இதுபோன்ற பல ஊர்ப்பெயர் மாற்றங்களைப் பதிவுசெய்து வைத்திருந்தது.

அனுபவம் தந்த படிப்பினை காரணமாக ஒரு நீண்ட பெருமூச்சுடன் “உங்கட கேள்விக்கு காலந்தான் பதில் சொல்லும்” என்றேன். அவர் என்னை விடுவதாக இல்லை. “தம்பலகாமம் என்ற பெயரில அப்படி என்னதான் பிரச்சனை ?” என்று எங்கள் உரையாடல் களத்தினை ஓய்வெடுக்கவிடாமல் தொடர்ந்தார். “வேறென்ன காமம்தான் பிரச்சனை” என்றேன். புருவங்களைச் சுருக்கிப் புரியாமல் பார்த்தார் அவர். இன்றுள்ள




காமம், கமம், கமுவ ஆகிய வடிவங்களில்
அமைந்திருக்கும் ஊர்ப்பெயர்
புகையிரத நிலையப் பெயரப்பலகை



பலர் காமம் என்பதனை இடத்தின் ஈற்றுப்பெயராக ஏற்றுக்கொள்ள சிரமப்படுகிறார்கள். காமம் என்ற சொல் பாலுணர்வு சம்பந்தமானதாக, அதுவும் பொதுவெளியில் நாகரிகம் கருதி பயன்படுத்தக்கூடாத சொல்லாக மாறிப்போன அவலமே இதற்கெல்லாம் காரணம் என்றேன்.

காமம் என்ற வடிவத்தில் மக்கள் செறிந்து வாழும் ஊர்களைக் குறிக்கும் வழக்கம் இன்று தமிழ்நாட்டில் இல்லையென்பதையும் ஆனால் இலங்கையில் உள்ள பல சிற்றூர்களின் பெயர்களில் அது இன்றும் நிலைத்திருப்பதையும் விளக்கிக் கூறியதோடு இவ்வகையான இடப்பெயர்கள் தனித்துவ அடையாளம் கொண்டவையாகவும், இலங்கைத் தமிழர் வரலாற்றின் தொன்மையை நிலைநாட்டும் உறுதியான சான்றுகளைத் தன்னகத்தே கொண்டவையாகவும் இருப்பதைக் குறிப்பிட்டேன்.

மதியத்துக்குப் பின்னான விரிவுரைகளில் தூக்கக்கலக்கத்துடன் இருக்கும் மருத்துவபீட மாணவனைப் போலிருந்த அவரை உற்சாகப்படுத்தி உரையாடலில் உள்ளிழுக்க விரும்பினேன். அந்த நோக்குடன் உங்களுக்குத் தெரிந்த இலங்கையில் உள்ள காமம் என்ற ஈற்றுப்பெயருடன் முடிவடையும் இடப்-பெயர்களைப் பட்டியலிடுங்கள் பார்க்கலாம் என்றேன். சொன்னதுதான் தாமதம் அவரின் சொந்த ஊரான யாழ்ப்பாணம், முன்னர் வேலை செய்த இடங்களான முல்லைத்தீவு, மன்னார் முதலிய இலங்கையின் பல பிரதேசங்களில் இருக்கும் “காமம்” என்னும் ஈற்றுப்பெயர் கொண்டமைந்த இடப்பெயர்களை பாடசாலைச் சிறுவனின் உற்சாகத்துடன் பட்டியலிடத் தொடங்கினார்.

அந்த இடங்களில் அவர் சந்தித்த மனிதர்கள், சுவாரசியமான சம்பவங்கள், ஆலயங்கள், தலவரலாறு, திருவிழாக்கள், பயண அனுபவங்கள், உறவினர்கள், நண்பர்கள் வீட்டில் நடந்த முக்கிய நிகழ்வுகள் என்று ஒவ்வொரு இடத்தினைப்பற்றியும் மீட்டுப் பார்ப்பதற்கு நிறைய ஞாபகங்கள் அவரிடமிருந்தது. அவர் காட்டிய உற்சாகம் என்னையும் தொற்றிக்கொண்டது.

அவருக்குமட்டுமல்ல எனக்கும் ஆச்சரியமாகத்தான் இருந்தது. கொடிகாமம், வலிகாமம், வீமன்காமம், பனங்காமம், அம்பகாமம், தம்பகாமம், கதிர்காமம், இறக்காமம், சாகாமம், பழுகாமம், உறுகாமம் என்று "காமம்" என்னும் ஈற்றுப்பெயர் கொண்டமைந்த பல இடப்பெயர்கள் இருக்குமென்று நானும் எதிர்பார்த்திருக்கவில்லை. கைவசம் இருந்த சிறிய குறிப்பேட்டில் எனக்குத் தெரிந்திராத பெயர்களைக் குறிப்பெடுத்துக் கொண்டேன். அன்றிருந்த நாட்டு நிலமையில் திருகோணமலையைத் தவிர்த்து ஏனைய பிரதேசங்களுக்கு நான் பயணித்திருக்கவில்லை. ஆனால் இலங்கையில் பல மாவட்டங்களிலும் இருக்கும் "காமம்" என்ற ஈற்றுப்பெயர் கொண்டமைந்த இடங்களைத் தேடித் தொகுத்திருந்தேன். அத்துடன் அவ்வூர்கள் தொடர்பான வரலாற்றுக் குறிப்புகளும் எனது சேகரிப்பில் இருந்தது.

காமம், காமம் என்று ஊர்ப்பெயர்களை இருவரும் உற்சாகமாகச் சொல்லிக்கொண்டு வந்த சந்தோசத்தில் அருகில் இருப்பவர்களை மறந்திருந்தோம். முன்னிருக்கையில் இருந்த வயதான நபரும், எதிர்ப்பக்கத்தில் இருந்த நடுத்தர வயதுப்பெண்மணியும் அடிக்கடி திரும்பி எங்களிருவரையும் முறைத்துப் பார்ப்பதை அப்போதுதான் அவதானித்தேன்.

நல்லவேளையாக முறிகண்டிப் பிள்ளையார் எம்மைக் காப்பாற்றினார். பேருந்து நிறுத்தப்பட்டதும் இருவரும் இறங்கி பிள்ளையாரை வணங்கிவிட்டு மதிய உணவருந்தச் சென்றோம். ஒரு இருபது நிமிட நேர இடைவெளிக்குப் பின் மீண்டும் எமது பயணம் ஆரம்பித்தது. மதியநேர உணவு தந்த மயக்கம் மெல்ல மெல்ல கண்ணைச் செருகுவது போலிருந்தது. அவர் என்னை விடுவதாக இல்லை. நாங்கள் பட்டியலிட்ட ஒவ்வெரு ஊர்ப்பெயரும் எப்படி வந்தது என்று அவர் வினவிக்கொண்டே வந்தார்.

எமது உரையாடல் மிகச்சுவையாகவே அமைந்திருந்தது. ஒவ்வொரு இடப்பெயரையும், எனது தேடல்களையும் அவரது அனுபவங்களையும் கொண்டு அலசினோம். என்னைவிட அவர்தான் மிகுந்த சந்தோசத்திலிருந்தார். இனப்பிரச்சினை தீவிரமடையாத காலத்தில் அவர் இலங்கையின் பெரும்பாலான இடங்களுக்குச் சென்றிருந்தார். அதனால் ஒரு அனுபவப் பெட்டகமே என் அருகிலிருந்து உரையாடிக்கொண்டிருப்பது போல இருந்தது.

பண்டைய இலங்கைத்தமிழர் வரலாறு தந்த போதை மதியச்-சாப்பாட்டின் பின் இருவருக்கும் உருவான நித்திரையை முற்றாக விரட்டிவிட்டிருந்தது. பேருந்து ஆனையிறவுப் பாலத்தினூடாக மிதமான வேகத்தில் போய்க் கொண்டிருந்தது. வீதியின் இருமருங்குகளிலுமிருந்து கடற்பரப்பின் மீதாக வீசிய மெல்லிய ஈரலிப்புடன் கூடிய காற்று ஒரு புத்துணர்வைத்தந்தது. இருக்கையில் அமர்ந்தபடி பலர் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தார்கள். ஒருசிலர் யன்னல் வழியாக உப்பளங்கள் இருந்த வெளியையும் ஆங்காங்கே தெரியும் யுத்தம் தந்த வடுக்க ளையும் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். வழி நெடுகிலும் நாங்கள் இருவரும்தான் உரையாடிக் கொண்டிரு த்தோம்.


தொடர்ந்து கதைத்துக்கொண்டு வந்ததாலோ என்னவோ கொஞ்சம் பசியும் தாகமும் மெல்ல எட்டிப்பார்த்தது. அது அவருக்கும் இருந்திருக்கும் என நினைக்கின்றேன். இருக் கையின் கீழ் இருந்த அவரது பெரிய பயணப் பொதியிலிருந்து சில சிற்றுண்டிப் பொட்டலங்களையும், வீட்டிலிருந்து நிரப்பிக் கொண்டுவந்த தண்ணீர் போத்தல்களையும் எடுத்தார் அவர். எனது வாய் ஊறுவதற்கு முன்பாகவே அவற்றில் சிலதை எனது கைகளில் திணித்துவிட்டு “முறிகண்டியில் உங்களுக்காக வாங்கினேன்” என்று சிரித்த முகத்துடன் கூறினார். எனக்கு த்தான் குற்ற உணர்வாகப்போய்விட்டது. வழக்கம்போல முறி கண்டியில் வெறுங்கையுடன் ஏறியிருந்தேன் நான்.

“எல்லாம் சரிதான் தம்பி. இந்த ஊர்ப்பேரெல்லாம் பழங் காலத்தில இருந்து நம்மட ஊர்ப்பேரா இருக்கெண்டு கேக்க சந்தோசமாகத்தான் இருக்கு. ஆனா உங்கட ஊர்ப்பேர உப்படி இரண்டு விதமா பாவிக்காம இருக்க ஏதும் முயற்சிகள் செய்தனிகளோ?” என்று மீண்டும் உரையாடலை ஆரம்பித்தார் அவர்.

நல்லவேளையாக அப்பப்பா அடிக்கடி கூறிவந்த ஆலய நிகழ்வொன்று ஞாபகத்திற்கு வந்தது. 1980 களில் ஆதிகோண நாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் இடம்பெற்ற வேளை கும்பாபிஷேக மலர் அச்சிடும் போது ஊரின் பெயர் தம்பலகமமா? அல்லது தம்பலகாமமா? என்ற மேற்படி சர்ச்சை எழுந்தது. இதன்போது ஆலய நிர்வாகசபையினர் மறைந்த பண்டிதமணி கணபதிப்பிள்ளை[1] அவர்களின் உதவியினை நாடினர். அவர் வலிகாமம், பனங்காமம், கொடிகாமம், வீமன்காமம் எனும் பெயர்களை மேற்கோள்காட்டி தம்பலகாமம் என அழைப்பதே சரியென நிறுவினார். இந்த நிகழ்வுடன் சம்மந்தப்பட்ட சிலர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் தம்பலகாமம் என்பதே சரியான ஊர்ப்பெயர் வடிவம் என்பதை நிறுவியதற்குச் சாட்சியாக[2] இன்றும் இருக்கிறார்கள். ஆனால் அந்த நிகழ்வு கும்பாபிஷேக மலர் வேலையை முடிவுறச் செய்ததேயொழிய ஊரில் இருந்த ஊர்ப்பெயர் தொடர்பான முரண்பாடுகளில் எந்த மாற்றத்தையும் கொண்டுவரவில்லை என்று அவரிடம் கூறினேன்.

பேருந்து ஆனையிறவு வெளியினைத் தாண்டிப் புதுக்காட்டுச் சந்தி, இயக்கச்சி, பளையூடாக நகர்ந்துகொண்டிருந்தது. உரையாடல் கவனிப்பில் இருந்து விலகி யன்னலுக்கூடாக வெளியே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார் அவர். திடீரென “உதுதான் தம்பி என்ர சீதன வீடு” என்று தனது மனைவியின் வீட்டினைக் காட்டினார். ஆர்வத்துடன் பார்த்தேன். பிரதான பாதைக்கருகாக இருந்தது அந்த இடம். வாகன வேகத்தில் கணநேரக் காட்சியாக மனதில் பெரும் சலனத்தை உருவாக்கிச் சென்றது அது. வளவின் மதில் முழுவதும்


திரு தம்பலகாமம்
அருள்மிகு ஸ்ரீ ஆதிகோணநாயக சுவாமி
தேவஸ்தானம்
மகா கும்பாபிஷேகச்
சிறப்பு மலர்
28-1-1980.


திரு தம்பலகாமம்
ஸ்ரீ ஆதிகோணநாயகர் கோயில்
கும்பாபிஷேக
விழா மலர்
28-1-1980
கௌரவ ஆசிரியர் :
சந்திரசேகரம்பிள்ளை ஜெயச்சந்திரன்

உடைந்து வாசல் பகுதியில் மாத்திரம் ஒரு சிறிய பகுதி மதிலும் அதில் துருப்பிடித்த கதவின் ஒருபாகமும் இருந்தது. வீட்டின் ஒரு பகுதி முற்றாக உடைந்து போயிருந்தது. மறுபகுதி அத்திவாரத்துடன் வெடித்து இரு பகுதியாக பிளந்திருத்தது.

யுத்தமும் சமாதானமும் மாறிமாறி வந்த காலப்பகுதிகளில் இடிந்துபோன வீடுகளும், பாழ்பட்டுப்போன பயிர் நிலங்களும், மனதளவில் மரணித்து உடலால் இயங்கிக்கொண்டிருக்கும் மனிதர்களும், சீர்குலைந்துபோயிருந்த வழமைகளும் சாதாரண மாகிப் போயிருந்தது எங்களுக்கு. இருந்தும் அதுவரை அருகில் இருந்து அளவளாவிக்கொண்டிருந்த நண்பரின் வீட்டைக் கண்ட அந்தக்கணம் இதயம் கனத்துப்போனது. இழப்பின் வலியை கண்களில் சுமந்திருந்த அவருக்கு எப்படி ஆறுதல் சொல்வ தென்று எனக்குத் தெரிந்திருக்கவில்லை. மெல்ல அவரது கையொன்றினைப் இறுகப் பற்றிக் கொண்டேன்.

வேலைவாய்ப்புக்காக, வசதிக்காக, உயர்கல்விக்காக என்று எத்தனையோ காரணங்களுக்காக உலகில் மனிதர்கள் நாளாந்தம் தங்கள் சொந்த வீட்டை விட்டு பிரிந்து செல்கி றார்கள். ஆனால் வன்முறை காரணமாக தம் சொந்த வீட்டை விட்டு வலுக்கட்டாயமாகப் பிரிக்கப்பட்டவர்களின் துயரம் தனியானதாக, தணியாததாக இருக்கிறது. பளையில் இருந்து இடம்பெயர்ந்து சாவகச்சேரியில் வாடகை வீட்டில் மாறிமாறிக் குடியிருக்கும் நண்பரின் நிலையை அவர் என்னிடம் முழுமை யாக விபரிக்கவேண்டிய அவசியம் இருக்கவில்லை. அனுபவி த்ததைப் புரிந்துகொள்வதில் அப்படி என்ன இடர்பாடு இருந்து விடப்போகிறது.

வீடு திருத்த எடுத்த லோன் இன்னும் கட்டி முடியலடா தம்பி ஆனா கடைசியா நடந்த யுத்தத்தில இந்த வீடு இடிஞ்சு போயிற்று என்று அவர் சொல்லிக்கொண்டிருந்தபோது இறுக ப்பற்றி இருந்த கைகளுக்கூடாக இழப்பின்வலியும், ஒருவித இயலாமையும் சேர்ந்து உஸ்ணமாகப் பரவிக்கொண்டு இருந்தது.

முகமாலை வந்ததும் எல்லோரும் அவரவர் பயணப் பொதிகளைத் தூக்கிக்கொண்டு சோதனைச் சாவடி வரிசைகளில் தங்களைத் திணித்துக்கொண்டிருந்தார்கள். நாங் களிருவரும் அவசரப்படாமல் நிதானமாக இறங்கி எதிர்ப்பட்ட எல்லாவிதமான சோதனைகளுக்கும் முகம்கொடுத்து யாழ்ப் பாணம் செல்வதற்குத் தயாராக இருந்த ஒரு சிற்றூந்தில் ஏறி அமர்ந்து கொண்டோம்.

சிற்றூந்து பயணிகளாலும், அவர்களது சத்தங்களாலும் நிறைந் திருந்தது. நாங்கள் இருவரும் அருகருகான இருக்கைகளில் அமைதியாக அமர்ந்திருந்தோம். அவரைப் பார்க்க பாவமாக இருந்தது. நீடித்த மௌனத்திற்குப் பிறகு ஒரு நீண்ட பெருமூச்சு விட்டவாறே பேசத்தொடங்கினார் அவர்.

''கனகாலத்திற்குப் பிறகு நிம்மதியாக பிரயாணம் செய்திருக்கிறன் தம்பி. வவுனியாவில் ஏறின உடனே வீட்டு ஞாபகம் வந்திடும். அந்த வீட்டில கலியாணம் கட்டின புதிசில இருந்து பிள்ளைகள் பெருசா வரும் வரைக்கும் வாழ்ந்த வாழ்க்கையெல்லாம் படம் மாதிரி மனத்தில ஓடும். பிறகு பளையில யன்னனுக்குள்ளால தெரிகிற உந்த உடைஞ்சுபோன வீட்டைப் பாத்ததும் பிறசர் கூடிப்போய் தலையெல்லாம் விறைச்சு மயக்கம் வாற மாதிரி இருக்கும். கதைச்சிட்டே வந்ததால இண்டைக்கு தப்பிற்றன்'' என்றார் அவர். எங்களுடைய இடப்பெயர் ஆய்வு தொடர்பான தொடர்ச்சியான உரையாடல் அவரது எண்ணங்களை பழைய துன்பவியல் நிகழ்வுகளுக்குள் மூழ்க விடாமல் கொஞ்சமேனும் ஆறுதல் படுத்த உதவியிருக்கிறது என்பது புரிந்தது.

பேருந்து கொடிகாமம், மிருசுவில், மீசாலை ஊடாக சாவகச் சேரியை நெருங்கிக் கொண்டிருந்தது. நண்பர் நிதானமாக இறங்குவதற்கு ஆயத்தமாக தனது பயணப் பொதிகளை ஒழுங்குபடுத்தத் தொடங்கினார். நான் அவருக்கு உதவிக் கொண்டிருந்தேன். “உங்கட ஊர்ப்பெயர் வருகிற மாதிரி ஏதும் பழைய கல்வெட்டுக்கள் இல்லையா தம்பி” என்று வினாவினார்

அவர். விடைபெறுகின்ற சமயம் எதிர்மறையாக இல்லை என்று சொல்ல எனக்கு மனம் வரவில்லை. "நம்பிக்கையுடன் தேடிக்கொண்டிருக்கிறோம்" என்றேன் நான். புரிந்ததுபோல் என்னைப் பார்த்துப் புன்னகைத்தார். பேருந்திலிருந்து இறங்கி விட்ட பின்பும் நீண்டநேரம் என்னையே பார்த்துக் கொண்டிருந்தார். அவர் உருவம் மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்த எனக்கு அவர் இறுதியாகக் கேட்ட கேள்வி மட்டும் மனத்தில் தொடர்ந்து எதிரொலித்துக் கொண்டிருந்தது. அந்த நீண்ட பயணம் தனது இறுதிக்கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. நாவற்குழி, கைதடி, அரியாலை ஊடாக பயணித்துக் கொண்டிருந்த என்மனதில் அன்றைய உரையாடல் நிகழ்வுகள் மீளமீள தோன்றி மறைந்து கொண்டிருந்தது.

தொடர்ந்து வந்த இரண்டு ஆண்டுகளில் நேரம் கிடைக்கும் போதெல்லாம் எனது தேடல் தொடர்ந்தது. சோர்வில்லாமல் தேடிக்கொண்டிருந்த எனக்கு தம்பலகாமம் தொடர்பான சாசன ஆதாரம் 2005 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் கிடைத்தது. எனது வாழ்நாளில் அந்தக் காலப்பகுதி அவ்வளவு மகிழ்ச்சிக் குரியதாய் இருக்கவில்லை. எனது தனிப்பட்ட வாழ்வில் மருத்துவபீடத்தின் கனதியான இறுதிக் கட்டச் செயற்பாடுகள் பாரிய மன அழுத்தத்தை உருவாக்கியிருந்த வேளையது. அத்துடன் நானும், என்னுடன் உடன்பிறந்தவர்கள் இருவருமாக ஒரே சமயத்தில் மூன்றுபேர் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று கொண்டிருந்தமையால் வீட்டிலும் பொருளாதார நெருக்கடி நிலவி வந்தது. இவற்றுடன் அதுவரை நாட்டில் நிலவிவந்த சமாதானச் சூழல் மெல்ல மெல்லக் கலையத் தொடங்கி அரசியல் வானில் யுத்த மேகங்கள் சூழ்ந்த ஒரு கொந்தளிப்பான சூழ்நிலை உருவாகி வந்த நாட்கள் அவை.

இத்தனை இடர்பாடுகளுக்கு மத்தியிலும் என் அளவற்ற மகிழ்ச்சிக்கு காரணமாக இருந்தது அந்தக் கட்டுரை. யாழ்ப்பாணத்தின் திருநெல்வேலிச் சந்தியில் நான் வழமையாக தொலைத்தொடர்பு கொள்ளும் நிலையத்தில் உற்சாகத்துடன் அந்த கட்டுரையை மீண்டும், மீண்டும் வாசித்துக் கொண்டிருந்தேன். அக்கட்டுரை இந்து சமய கலாச்சார அலுவல்கள்

திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2005 ஆம் ஆண்டுக்கான புரட்டாதி மாத 'பண்பாடு' என்ற சஞ்சிகையின் முதல் கட்டுரையாக வந்திருந்தது. பொலநறுவைக் காலத்துப் படைப்பற்று (மறைந்து போன சிலாசனம்) என்னும் உப தலைப்புடன் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களால் எழுத ப்பட்ட 'தம்பலகாமத்தில் ஒரு கல்வெட்டு' என்ற அக்கட்டுரை கொழும்பிலுள்ள எனது நண்பர் ஒருவரின் உதவியினால் தொலைநகலாக கிடைக்கப்பெற்றிருந்தது.

பலமுறை வாசித்து மனப்பாடம் ஆகிப்போன அந்தக் கட்டுரை இன்றைக்கு 800 ஆண்டுகளுக்கு முன்னால் தம்பலகாமம் என்ற எங்களது ஊர்ப்பெயரினை கல்வெட்டு ஆதாரத்துடன் ஆவணப்படுத்தி இருந்தது. அத்தோடு நின்றுவிடாமல் தம்பலகாமத்தை தமிழர்களின் வீர பட்டினமாக கொண்டாடி இருந்தது அந்தக் கட்டுரை. தலைகால் புரியாத உற்சாகத்தில் முதலில் அப்பாவிடம் தொலைபேசியில் விபரம் சொன்னேன். உரையாடல் முடிந்த பின் அப்பாவின் சந்தோசமும் என்னுள் தொற்றிக்கொள்ள இன்னும் பலரிடம் கூறி மகிழ வேண்டும் என்ற ஆசை உருவானது. முதலில் ஞாபகத்திற்கு வந்த முகம் எனது A9 பயணவழி நண்பர்தான். ஆனால் அவர் சாவகச்சேரியில் இருந்தார். கடந்த காலங்களில் இருமுறை யாழ் வைத்திய சாலைக்கு சிகிச்சைக்காக வந்தபோது சந்தித்திருக்கிறேன். அவரது வீடு தொடர்பான விபரங்கள் அனைத்தும் விசாரித்து வைத்திருந்தேன். ஆனால் வீட்டில் அவரைச் சந்திப்பதற்கான வாய்ப்பு அமையவில்லை.

இப்போது கால்கள் துறுதுறுத்தது. இருந்தும் அந்தப் பயணத்தில் ஒரு சிக்கலிருந்தது. யாழ்ப்பாணத்தில் அப்போது அங்கொன்றும் இங்கொன்றுமாக துப்பாக்கிச் சத்தங்களும், கைக்குண்டுத் தாக்குதலும் இடம்பெற்றவண்ணமிருந்தன. அதற்காக வீதிகள் எல்லாம் வெறிச்சோடி இருந்தது என்று அர்த்தமில்லை. ஆனால் உயிர் வாழ்தல் தொடர்பில் ஒரு நிச்சயமற்ற தன்மை தோன்றி இருந்தது.

அன்று ஞாயிறுக்கிழமை ஆர்வக்கோளாறில் அகப்படும் யாரிடமாவது போய் 800 வருடத்துக்கு முந்தின கல்வெட்டில் தம்பலகாமம் என்ற பேர் வந்திருக்கிறது என்று கூறினால் இதை ஏண்டா என்னைக் கூப்பிட்டு சொல்லுறாய் என்று விரோதமாகப் பார்ப்பார்கள் என்ற பயம் மனதை உறுத்தியது. வரலாற்றுத் தேடலின் நுணுக்கமான சந்தோசங்களைப் புரிந்துகொண்ட ஒருவருடனேயே அந்த மகிழ்ச்சியை மனநிறைவுடன் பகிர்ந்து கொள்ளமுடியும். எனவே பயம் தடுத்தாலும் அந்தக் கல்வெட்டுத் தந்த பரவசம் எனது A9 பயணவழி நண்பரின் வீட்டை நோக்கி என்னைப் பயணப்பட வைத்தது.

அவசரவேலை கெதியா திரும்பித் தருகின்றேன் என்ற வாக்குறு தியுடன் நண்பனின் உந்துருளியைக் கடன்பெற்று சாவகச்சேரி நோக்கிப் பயணமானேன். வழி நெடுகிலும் கடந்து போனவர்கள் முகங்களிலெல்லாம் யுத்தம் பற்றிய பீதி தெரிந்தது. காவலரண் பாதுகாவலர் ஒவ்வொருவரினதும் கைகளில் இருந்த துப்பாக் கிகள் குண்டு நிரப்பப்பட்டு தயார் நிலையில் இருந்தது. எதிரில் வரும் நபர்களில் எவர் கைக்குண்டை வீசுவார் அல்லது துப்பாக் கியால் சுடுவார் என்பது தெரியாததால் எதிர்ப்படும் எல்லோ ரினதும் நெஞ்சுக்கு குறிவைத்தபடி இருந்தது அவர்களது துப்பாக்கி. ஒவ்வொரு காவலரணையும் நெருங்கும் பொழுதும் தயார் நிலையில் உள்ள துப்பாக்கி நம்மை நோக்கி இருக்கிறது என்ற எண்ணமே நம் நெஞ்சைக் கூசச் செய்யும். காவலரணைக் கடந்த பின்னால் நம் முதுகு கூசும்.

ஒருவாறு காவலரண்களால் நிறைந்திருந்த வீதிகளில் இருந்து விடுபட்டு பரந்த செம்மணி வெளியூடாக பயணம் தொடர்ந்தது. இத்தனை கஷ்டங்களுக்குள்ளும் இப்படியொரு பயணம் தேவையா என்ற பெருங்கேள்வி எனக்குள்ளே எழுந்து மறையா மலில்லை. ஒருவகையில் பார்த்தால் வரலாற்றுத் தேடலும் ஒருவகைப் போதையே. நாம் தேடிச் செல்லும் விடயங்களில் பதிய தகவல்கள் கிடைக்கக் கிடைக்க அது இன்னும் பல புதிய விடயங்களை நோக்கி நம்மை இழுத்துச் செல்லும். சாப்பாடு, தண்ணீர் இல்லாமல் வரலாற்றைத் தேடிச் சென்றவர்களின் விபரங்களைக் கேட்கையில் சுத்தப்

பைத்தியக்காரத்தனமாகத் தென்படும். ஆனால் நாமே வரலாற்றுத் தேடல்கள் தரும் மனக்கிளர்சியையும் ஒருவகை நிறைவையும் அடையும் போதுதான் அதுதரும் போதையைப் புரிந்துகொள்ள முடியம். வரலாற்றின் சுவாரசிய முடிச்-சுக்களைத் தேடி அவிழ்ப்பதும் அதனை ஆர்வமுள்ளோரிடம் பகிர்ந்து சந்தோசிப்பதும் தரும் இன்பம் இணையில்லாதது. வண்டிச் சக்கரத்தினைப்போல எனது எண்ணச் சக்கரமும் இடைவிடாமல் சுழன்றுகொண்டே இருந்தது. இப்படியே எதிர்ப்பட்ட எல்லா கண்டங்களில் இருந்தும் தப்பி சாவகச்சேரியில் உள்ள எனது பயண நண்பரது வீட்டினை நெருங்கி இருந்தேன்.

பத்திரமாக நான் எடுத்துவந்திருந்த தம்பலகாமம் கல்வெட்டு என்ற கட்டுரையினை எடுத்துக் கொண்டு அவரது வீட்டு வளவின் முன் வந்து சேர்ந்தேன். மிக அண்மையில் அந்த வீட்டில் ஒரு துக்ககரமான சம்பவம் நிகழ்ந்ததை அங்கிருந்த வீட்டுச் சூழல் புரியவைத்தன. அத்தனை தூரம் நான் சுமந்துவந்த சந்தோசமெல்லாம் கீழிறங்கி எங்கோ ஓடிவிட்டது போலிருந்தது.

வாசலில் இருந்த கதிரையில் ஒரு பெரியவர் நாளிதல் வாசித்துக் கொண்டிருந்தார். அவரிடம் நண்பரின் பெயரினைக் கூறி அவரது வீடா என்று தயக்கத்துடன் விசாரித்தேன். வாங்க தம்பி என்று வீட்டினுள் அழைத்துச் சென்றார் அவர். மேசையொன்றில் வைத்து விளக்குக் ஏற்றப்பட்டிருந்த படத்தில் இருந்தவரைப் பார்த்த எனக்கு செல்லொன்று தலைக்குள் வெடித்தது போலிருந்தது.

பெரியவரின் குரலுக்கு வீட்டுக்குள் இருந்து பதிலளித்தபடி வெளியில் வந்த பெண்மணி ஒன்றும் புரியாமல் என்னைப் பார்த்தபடி நின்றிருந்தார். எனது ஊகிப்பின் படி அவர் இறந்த நண்பரின் மனைவி. தனக்கும் கணவனுக்கும் சொந்தமில்லாத இந்தப் பெடியன் யாராக இருக்கக்கூடும் என்ற கேள்விக் குறியோடு அவர் நின்றிருக்கக்கூடும். ஊகித்தது சரியாக

இருந்தது. “நீங்க அவருக்கு”.....என்று வினாவினை முடிக்காமல் இழுத்தார் அவர். என்ன வகையில் தெரியும் என்பதனை அறிய கேட்கிறார் என்பது புரிந்தது. பிரயாணங்களில் பழக்கம், நல்ல நண்பர் என்று சொன்னேன்.

இந்த மனிசன் எல்லோருடனும் இப்படித்தான் நல்லா பழகும் என்று தொடங்கி தனது கணவரின் ஞாபகங்களை துக்கம் தொண்டையை அடைக்க கூறிக்கொண்டிருந்தார். இடை யிடையே அவரது கணவர் பளையிலுள்ள வீட்டைத் திருத்து வதற்காக அடிக்கடி போய்வந்ததையும், காணியின் பின் வளவினை துப்பரவாக்கும் போது. மிதிவெடி ஒன்றில் அகப்பட் டதையும். அதனால் அவரது வலதுகால் முழங்காலுக்கு கீழ் அகற்றப்பட்டதையும். நீரழிவு நோயுள்ள அவர் வீட்டு வேலைகளை விரைவாக முடிக்கவேண்டி கால்காயம் தொடர்பில் போதிய கவனம் செலுத்தாததால் நுண்கிருமி இரத்தத்தில் பரவி சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததையும் கூறினார்.

இத்தனையும் மூன்று மாதங்களுக்கு முன் நான் விடுமுறையில் திருமலை சென்றிருந்தபோது நாங்கள் கல்வி கற்றுக்-கொண்டிருந்த யாழ்.போதனா வைத்தியசாலையிலேயே நிகழ்ந் திருந்தது. மனித வாழ்வினை யுத்தம் தனது கோரப்பற்களால் எப்படியெல்லாம் அவலத்துக்குள்ளாக்கி இருக்கிறது என்பத னை நேரடியாக கேட்டுக்கொண்டிருந்தேன்.

கணவரைப் பிரிந்த சோகத்தினைச் சொல்லி அழுது முடித்திருந்த அவரிடமிருந்து விடைபெற்று வாசலுக்கு வந்தேன். கொஞ்சம் நில்லும் தம்பி என்றபடி அவசர அவசரமாக உள்ளே சென்ற அவர் எனது கையில் சிறிய நினைவு மலரைத் திணித்தார். அது நான் தேடிவந்த எனது நண்பரின் 31 ஆம் நாள் நினைவு மலர்.

வாகனத்தில் ஏறும்போது எனது கைகளில் இரண்டு கல்வெட்டுக்கள் இருந்தது ஒன்று நண்பரிடம் காட்டுவதற்காக நான் கொண்டு வந்திருந்த தம்பலகாமம் கல்வெட்டு மற்றையது எனது நண்பரின் கல்வெட்டு. யாழ்ப்பாணத்தில் நினைவு மலரை கல்வெட்டு என்றும் அழைப்பார்கள்.

உசாத்துணை

(1) பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை (1899 - 1986)

யாழ்ப்பாண மாவட்டத்தின் மட்டுவில் என்ற ஊரினைச் சேர்ந்தவர். சைவசமயம், தமிழிலக்கியம், மெய்யியல், தமிழர் பண்பாடு ஆகிய துறைகளின் வளர்ச்சிக்காகப் பணியாற்றியவர். இவர் இத்துறைகளில் ஆற்றிய உரைகளும், எழுதிய கட்டுரைகளும் தொகுக்கப்பட்டு இருபத்துமூன்று நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன.

(2) 2006 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தம்பலகாமம் தொடர்பான பல்வேறு வரலாற்றுக் குறிப்புகளை தனது வாழ்வியல் அனுபவங்களுக்கூடாக வலைப்பதிவில் எழுதி இணையவெளியில் தம்பலகாமத்திற்கு என்று ஒரு இடத்தினை ஏற்படுத்தி இருந்தவர் மலைநாடான் என்ற புனைப்பெயரால் அறியப்படுகின்ற சிவஸ்ரீ நாகேஸ்வரக்குருக்கள் கஜேந்திரசர்மா அவர்கள். இன்றைய நிலையில் எழுத்தாளனாக, பத்திரிகையாளனாகப் பல பரிணா-மங்களை எடுத்திருக்கும் அவர் தம்பலகாமம் இடப்பெயர் தொடர்பில் பண்டிதமணி அவர்கள் வெளியிட்ட கருத்துக்களை இவ்வாறு தனது வலைப் பதிவில் பதிவேற்றி இருந்தார்.

தம்பலகமம் என்பது சரியா? அல்லது தம்பலகாமம் என்பது சரியா? என ஒரு கேள்வி பின்னாட்களில் எழுந்தபோது மறைந்த பண்டிதமனி கணபதிப்பிள்ளை அவர்கள் பனங்காமம், கொடிகாமம், வீமன்காமம் எனும் பெயர்களை மேற்கோள்காட்டி தம்பலகாமம் என அழைப்பதே சரியென நிறுவினார். அதைவிடவும் தம்பலகமம் என பெயர் விளித்துவருங்கால் அது பின்னாட்களில் சிங்கள குடியேற்றவாசிகளால் தம்பலகமுவ அல்லது தம்பலகம எனப் பெயர் மாற்றம் செய்ய இலகுவாக இருக்கும் என்பதையும் குறிப்பிட்டிருந்தார்.

http://maruthanizal.blogspot.com

**இயல் 2 அறிமுகம் 1**

## தம்பலகாமம் பிரதேசம்

சிறுவயதில் தம்பலகாமம் எனது ஊராகவும், என் உலகமாகவும் இருந்தது. வயது ஏற அனுபவமும் வளர புதிய புதிய கேள்விகள் ஊர்ப்பெயர் தொடர்பில் எழத் தொடங்கியது. அருகிலுள்ள பொற்கேணிக்கோ அல்லது தொலைவிலுள்ள பாலம்போட்டாறிற்கோ அவசிய தேவை கருதி செல்லும்போது அங்குள்ளவர்கள் தமது இடப்பெயரை பொற்கேணி-தம்பலகாமம் என்றும் பாலம்போட்டாறு - தம்பலகாமம் என்றும் அடையாளப்படுத்துவதனை அவதானித்து இருக்கிறேன். சிறுவயதில் இந்த விடயம் பெரும் ஆச்சரியம் தருவதாய் இருந்தது. மிகச்சிறிய ஊரான தம்பலகாமத்தின் பெயர் எப்படி இத்தனை பெரிய இடங்களின் பெயராக மாறியது என்பதே அந்த ஆச்சரியத்துக்கான காரணம்.

இந்த ஆச்சரியங்களை எல்லாம் மறந்துபோய் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஓடவேண்டிய ஒருகாலம் வந்தது. யுத்த அவலம் எம்மைக் கணநேரம் ஆறுதல் அடையவிடாமல் தொடர்ந்து துரத்தியது. ஐயனார் கோவில் தீவு, கந்தளாய்த் தீவு, சூரங்கல், மாதிரிக்கிராமம், கச்சகொட்டுத்தீவு, காக்காமுனை,

சமாவைத்த தீவு, பிள்ளைகொல்லி மணல், மண் எடுத்த கிடங்கு, நடுவூற்று, மாகாமம், கண்டக்காடு என்று நீண்டு கங்கைக் கரையோரத்தில் எண்ணற்ற துயரத்தோடு இடப்பெயர்வு நிறைவுக்கு வந்தது. இந்த அவலங்களுக்குள் ஊர்ப்பெயர் தொடர்பில் ஒரு ஆச்சரியம் கிடைத்தது. நாங்கள் அகதிகளாக இடம்பெயர்ந்து சென்ற இந்த ஊர்களெல்லாம் முன்னொரு காலத்தில் தம்பலகாமத்துள் உள்ளடங்கி இருந்தவை என்ற செய்திதான் அது.

நாங்கள் இடம்பெயர்ந்த காலத்தில் சூரங்கல், மாதிரிக்கிராமம், கச்சகொட்டுத்தீவு உள்ளிட்ட மேற்படி கிராமங்கள் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்டவையாக இருந்தது. ஆனால் அப்பிரதேச மக்கள் 1960 களில் அவர்களது வயல் மற்றும் காணி உறுதிப்பத்திரங்களில் தங்களது தாயூராக தம்பலகாமத்தினை குறிப்பிட்டிருப்பதனை காணக்கூடியதாக இருந்தது. பிற்காலங்களில் தொடர்ச்சியாகத் தேடியபோது தம்பலகாமம் கிண்ணியாவை மட்டுமல்ல கந்தளாய்ப் பிரதேசத்தையும் தன்னுள் உள்ளடக்கி இருந்த விபரம் கிடைத்தது.

தம்பலகாமம் தொடர்பான புதிய பல ஆதாரங்கள் கிடைத்தபோது அது என்னை இன்னும் பிரமிப்பின் உச்சிக்குக் கொண்டு சென்றது. இலங்கையினை ஐரோப்பியர் ஆக்கிரமிப்பதற்கு முன்னர் இன்றுள்ள கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவு, கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவு, தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவு ஆகிய மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கி இருந்த மிகப்பெரிய பிராந்தியம் "தம்பலகாமப் பற்று" என்ற தமிழ் வன்னிப் பிரிவாக இருந்திருக்கிறது. இது சுயாட்சி அலகாக இருந்ததோடு ஒல்லாந்தர் இதனை இராட்சியம் என்றே அழைத்திருக்கின்றனர். இவ்வன்னி நிலப்பரப்பினை ஆட்சி செய்த வன்னிபத்தை அவர்கள் தங்களது ஆவணங்களில் அரசன் என்றே குறிப்பிட்டிருக்கிறார்கள்.




தம்பலகாமப் பற்று

(கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவு,
கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவு,
தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவு என்பனவற்றை
உள்ளடக்கிய பிரதேசம்)

இத்தனை தகவல்களும் கிடைத்தபின்னர்தான் விளங்கியது நான் தேடிக்கொண்டிருந்த தம்பலகாமம் சிற்றூராக இருந்து பிராந்தியத்தின் பெயராக வரவில்லை, மாறாக தம்பலகாமப் பற்று என்ற சுயாட்சி அலகாக இருந்து பின்னர் தம்பலகாமம் என்னும் சிற்றூராக சுருங்கி இருக்கிறது என்ற உண்மை.

தம்பலகாமப்பற்று என்ற இராச்சியத்தின் பகுதிகளான கிண்ணியா, கந்தளாய் என்பன இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் தனியான பிரதேச செயலகப் பிரிவுகளாக பிரிந்து சென்ற பின்னர் தம்பலகாமப்பற்று வன்னிப்பிரதேசம் தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவாக சுருங்கிப்போனது. சில தசாப்தங்களுக்கு முன்னர் தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவு அரச நிர்வாகரீதியாக தம்பலகமுவ எனப் பெயர் மாற்றப்பட்டு விட இப்போது தம்பலகாமம் என்ற பெயர் ஒரு சிற்றூரில் மட்டும் ஒட்டிக்கொண்டு இருக்கிறது.

2018 ஆம் ஆண்டுக்கான சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி முன்னர் தம்பலகாமப்பற்று வன்னிப் பிராந்தியத்தில் அடங்கி இருந்த கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவில் 46,850 சிங்களவர்களும், 8,977 முஸ்லீம்களும், 2,119 தமிழர்களும், ஏனையோர் 29 பேருமாக மொத்தம் 57,975 பேர் வசிக்கிறார்கள். அதுபோலவே கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் 77,944 முஸ்லீம்களும், 2,718 தமிழர்களும்,1 சிங்களவரும், ஏனையோர் 4 பேருமாக மொத்தம் 80,781 பேர் வசிக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் இன்றைய சூழ்நிலையில் தமிழ் பிரதேசங்கள் தொடர்பில் நாம் நுட்பமான தகவல் திரட்டுக்களைக் கொண்டிருக்கிறோமா? என்பது கேள்விக்குரியதாகவே இருக்கிறது. அதிலும் குறிப்பாக எல்லைப்புறத் தமிழ்க் கிராமங்கள், குடியேற்றத்திட்டங்களுக்குள் அடங்கிக்கொண்ட தமிழ்க் கிராமங்கள், அரசியல் சமுகப் புறக்கணிப்புக்குள்ளான தமிழ்க் கிராமங்களின் நிலை மிகவும் பரிதாபகரமானது.

இவற்றோடு வரலாற்றுப்புகழ் கொண்ட சில தமிழ்க் கிராமங்களை அவை இன்றுள்ள நிலை பற்றிய பூரண விளக்கமில்லாது பண்டைய புகழ்ச்சியின் அடிப்படையிலேயே பலராலும் நோக்கப்பட்டு வருவதும் கவனிக்கத்தக்கது.

எமது கிராமங்கள் ஒவ்வொன்றினதும் முழுமையான நுண் வரலாற்றுப் பதிவுகளை நாம் கொண்டிருக்கவில்லை என்பதுடன் நமது முன்னோர்கள் அதில் அதிக அக்கறை காட்டவில்லை என நாம் தொடர்ந்து கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். அங்கொன்றும் இங்கொன்றுமாக சில வரலாற்றுப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டாலும் இன்றைய எமது கிராமங்களின் தகவல்களை உடனுக்குடன் பதிவுசெய்யும் பொறிமுறைகளை நாம் இன்னும் முறையாகக் கையா-ளவில்லை என்பது நிதர்சனமான உண்மை.

எமது கிராமங்களின் பாரம்பரியங்கள், பண்டைய வரலாறுகள், வழிபாட்டு முறைகள், சமூகக்கட்டமைப்புக்கள், சடங்குகள் என்பனவற்றிற்கு தமிழ்ச்சமூகம் கொடுக்கும் முக்கியத்து-வத்தினைக் குடித்தொகை, சமூகச் சுட்டிகள், பொருளாதார அடைவு மட்டங்கள் என்பனவற்றிற்கு கடந்த காலங்களில் உரிய அளவில் கொடுக்கவில்லை என்றே தோன்றுகின்றது. அதனால் எமது தமிழ்க் கிராமங்களின் குடித்தொகை, சமூக, பொருளாதார வளர்ச்சிப்போக்கு தொடர்பில் ஒப்பிட்டு ஆராய்வதில் மிகுந்த இடர்பாடுகளை எதிர்நோக்கவேண்டி இருக்கிறது.

தம்பலகாமம் என்ற ஊர்ப்பெயரின் பின்னாலான நமது பயணத்தின் தொடக்கத்தில் இந்தப் பிரதேசத்தின் இன்றைய கள நிலவரங்களில் குறைந்தபட்சம் குடித்தொகை பற்றியாவது உள்ளது உள்ளபடி புரிந்து கொள்வதற்கு கீழ்வரும் தரவுகள் உதவுமென நினைக்கிறேன். இவை தம்பலகாமம் பிரதேச செயலகத்தினால் 2019 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட புள்ளிவிபரங்களை அடிப்படையாகக் கொண்டவையாகும்.


திருகோணமலை மாவட்டத்தின் 244.45 சதுர கிலோமீற்றர் (Sq.km) நிலப் பரப்பளவினை உள்ளடக்கியிருக்கும் புராதனமான தம்பலகாமம் பிரதேசம் 12 கிராமசேவகர் பிரிவுகளில் 48 கிராமங்களை உள்ளடக்கி இருக்கிறது. இங்கு 20,614 (59.34 %) முஸ்லீம்களும் 7,554(21.74 %) சிங்களவர்களும் 6,563( 18.89 % ) தமிழர்களுமாக 34,736 பேர் 2018ஆம் ஆண்டில் வசித்ததாக கணக்கிடப்பட்டுள்ளது.

தம்பலகாமம் பிரதேசக் குடித்தொகை (2018)

| கிராம சேவகர் பிரிவு | சிங்களவர் | தமிழர் | முஸ்லிம் | ஏனையோர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 பாலம்போட்டாறு | 180 | 862 | 89 | | 1131 |
| 2 தம்பலகாமம் | 00 | 1735 | 00 | | 1735 |
| 3 முள்ளிப்பொத்தானை | 2015 | 155 | 4916 | | 7086 |
| 4 கல்மிட்டியா தெற்கு | 2212 | 02 | 837 | | 3051 |
| 5 சிறாச் நகர் | 515 | 00 | 5757 | | 6272 |
| 6 முள்ளிப்பொத்தானை கிழக்கு | 75 | 378 | 1449 | | 1902 |
| 7 முள்ளிப்பொத்தானை வடக்கு | 834 | 00 | 3552 | | 4386 |
| 8 மீரா நகர் | 35 | 267 | 3424 | | 3726 |
| 9 பொற்கேணி | 29 | 1146 | 105 | | 1280 |
| 10 புதுக்குடியிருப்பு | 85 | 1530 | 00 | | 1615 |
| 11 கோவிலடி | 00 | 419 | 00 | | 419 |
| 12 கல்மிட்டியா வடக்கு | 1574 | 69 | 485 | 05 | 2133 |
| மொத்தம் | 7554 | 6563 | 20614 | 05 | 34736 |
| வீதம் | 21.74 | 18.89 | 59.34 | | |

இப்பிரதேசம் மூதூர், சேருவில, திருகோணமலை ஆகிய மூன்று தேர்தல் தொகுதிகளுக்குள் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. இங்குள்ள தம்பலகாமம் பிரதேச சபைக்காக 16 உறுப்பினர்கள் தெரிவாகின்றமை குறிப்பிடத்தக்கது. இங்கு பதிவுசெய்யப்பட்ட 20,743 (2018) வாக்காளர்கள் இருக்கிறார்கள்.

இங்கு சமய ரீதியில் 20,614 பேர் இஸ்லாம் மதத்தையும் 7,554 பேர் பௌத்த மதத்தையும் 5,958 பேர் இந்து மதத்தையும் 610 பேர் கத்தோலிக்க மதத்தையும் பின்பற்றுகின்றனர். இவர்களுக்குரிய வணக்கத் தலங்களாக 21 பள்ளிவாசல்களும் 15 பௌத்த விகாரைகளும் 21 இந்து ஆலயங்களும் 3 றோமன் கத்தோலிக்க ஆலயங்களும் அமைந்திருக்கின்றன.




தம்பலகாமம் பிரதேச கிராமசேவகர் பிரிவுகள்

1 பாலம்போட்டாறு

2 புதுக்குடியிருப்பு

3 பொற்கேணி

4 தம்பலகாமம்

5 கோவிலடி

6 மீரா நகர்

7 சிறாச் நகர்

8 முள்ளிப்பொத்தானை வடக்கு

9 முள்ளிப்பொத்தானை கிழக்கு

10 முள்ளிப்பொத்தானை

11 கல்மிட்டியா தெற்கு

12 கல்மிட்டியா வடக்கு

விவசாயக் கிராமமான தம்பலகாமத்திலுள்ள பெரும்பான்மையான குடும்பங்கள் இன்றுவரை விவசாயத்தினைத் தமது சீவனோபாயத் தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர். இங்குள்ள விவசாய நிலங்கள் கந்தளாய்ப் பெருங்குளத்தின் மூலமும் புலியூத்துக்குளம், கடவானைக்குளம், கல்மிட்டியாவ குளம், நீர்நாவல்மோட்டைக்குளம், உட்பத்துக்குளம், குடாக்கல்மிட்டியாவ குளம், இந்திக்குளம், ஈச்சன்குளம், சமனலக்குளம், அட்டவானைக்குளம், பரவிப்பாஞ்சான் குளம், சேனைவெளிக்குளம் என்னும் சிறிய குளங்கள் மூலமும் நீர்ப்பாசன வசதியைப் பெற்றுக்கொள்கின்றன. நெற் செய்கையினைப் போலவே மேட்டு நிலங்களில் பயிரிடப்படும் சேனைப்பயிர்ச் செய்கையிலும் இங்குள்ள மக்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

விவசாயம் தவிர்த்து அரசசேவை, வணிகம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு, கூலிவேலை, ஏனைய வேலைகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்பவற்றின் மூலம் தமக்கான வருவாயைத் தேடிக்கொள்கின்றனர். தம்பலகாமம் நெல்லுக்கும், எருமைப்பால் மூலம் பெறப்படும் தயிருக்கும் பிரபலமானது என்பது அனைவரும் அறிந்ததே. தற்காலத்தில் தம்பலகாமம் பிரதேச மக்கள் தங்கள் வாழ்வாதாரமாக கொண்டிருக்கிற தொழில் பற்றிய விரிவான விபரம் இணைக்கப்பட்டுள்ளது.

தம்பலகாமம் பிரதேசத்தில் 373 ஆசிரியர்கள் கடமையாற்றும் 28 பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இப் பாடசாகைளில் 7,611 மாணவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். அத்துடன் இங்கு 44 முன்பள்ளிகளில் 1,079 குழந்தைகள் கல்வி கற்பதோடு பல அறநெறிப் பாடசாலைகளும் இயங்கி வருகின்றன.

தம்பலகாமத்தில் உள்ளக வெளியக சிகிச்சைப் பிரிவு, மகப்பேறு விடுதி, நோயாளர் காவு வண்டி வசதி என்பவற்றை உள்ளடக்கிய பிரதேச வைத்தியசாலையும், தேக்கவத்தை (96) , முள்ளிப்பொத்தானை ஆகிய இடங்களில் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களும் மருத்துவ சேவைகளை வழங்கி வருகின்றன. இங்குள்ள மக்களில் 75 வீதமானவர்கள் மின்சார

இணைப்பைப் பெற்றிருக்கிறார்கள். தம்பலகாமம், சிறாச்நகர், முள்ளிப்பொத்தானை, கோவிலடி, கல்மிட்டியாவ ஆகிய கிராமங்களில் உப தபால் நிலையங்கள் இயங்கி வருகின்றன. அரச தனியார் கூட்டுறவுச்சங்கங்கள் ஆறு இப்பிரதேசத்தின் பல பாகங்களிலும் தமது சேவையினை விஸ்தரித்துள்ளன. இவை தவிர 15 விவசாயச் சங்கங்கள், 19 கிராம அபிவிருத்திச் சங்கங்கள், 08 கிராமிய மகளிர் அபிவிருத்திச் சங்கங்கள், 13 விளையாட்டுக்கழகங்கள், 07 இளைஞர் அமைப்புகள் ஆகியன இப்பிரதேசத்தில் திறம்பட செயற்பட்டு வருகின்றன.

## தம்பலகாமம் பிரதேச மக்கள் வாழ்வாதாரமாகக் கொண்டிருக்கும் தொழில் பற்றிய விபரம் 2018

| | கிராம சேவகர் பிரிவு | மொத்த குடும்பங்கள் | விவசாயம் | மீன்பிடி | வர்த்தகம் | கூலித் தொழில் | அரச தொழில் | ஏனையவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பாலம்போட்டாறு | 419 | 87 | 18 | 67 | 109 | 12 | 126 |
| 2 | தம்பலகாமம் | 485 | 226 | 3 | 33 | 116 | 38 | 69 |
| 3 | முள்ளிப்பொத்தானை | 1839 | 985 | 52 | 73 | 136 | 295 | 298 |
| 4 | கல்மிட்டியா தெற்கு | 844 | 102 | 4 | 45 | 224 | 296 | 173 |
| 5 | சிறாச் நகர் | 1872 | 484 | 12 | 250 | 775 | 63 | 288 |
| 6 | முள்ளிப்பொத்தானை கிழக்கு | 573 | 286 | 7 | 135 | 113 | 6 | 26 |
| 7 | முள்ளிப்பொத்தானை வடக்கு | 1277 | 238 | 16 | 157 | 385 | 78 | 403 |
| 8 | மீரா நகர் | 1280 | 302 | 12 | 176 | 359 | 56 | 375 |
| 9 | பொற்கேணி | 389 | 153 | 62 | 40 | 56 | 33 | 45 |
| 10 | புதுக்குடியிருப்பு | 433 | 69 | 00 | 71 | 115 | 40 | 138 |
| 11 | கோவிலடி | 155 | 34 | 1 | 27 | 55 | 17 | 21 |
| 12 | கல்மிட்டியா வடக்கு | 731 | 186 | 12 | 62 | 186 | 175 | 110 |
| | மொத்தம் | 10297 | 3152 | 199 | 1136 | 2629 | 1109 | 2072 |

இயல் 2 அறிமுகம் 2

## தம்பலகாமம் ஊர்

இந்தப்பிரதேசம் பெயர் பெறுவதற்குக் காரணமான தாய்க்கிராமம் தம்பலகாமம். கண்டி நோக்கிய A6 நெடுஞ்சாலையில் இருந்து கிழக்காகப் பிரிந்து செல்லும் தம்பலகாமம் கிண்ணியா வீதியில் நான்கு கிலோமீற்றர் தூரத்தில் அமைந்திருக்கிறது இக் கிராமம்.

பல சிற்றூர்கள் ஒரு சங்கிலித்தொடர்போல பசுமையான வயல் வெளிகளுக்கு நடுவில் இக்கிராமம் அமைந்திருப்பதே ஒரு தனியழகு. கூட்டாம்புளி, சிப்பித்திடல், கள்ளிமேடு, கரைச்சைத்திடல், வர்ணமேடு, குஞ்சடப்பந்திடல், ஐயனார்திடல், நாயன் மார்திடல், மாக்கைத்திடல், நடுப்பிரப்பன்திடல், முள்ளியடி, சின்னவர்ணமேடு என்னும் பன்னிரெண்டு சிற்றூர்களை ஒன்றிணைத்தது தம்பலகாமம் கிராம சேவகர் பிரிவு. அதனுடன் இணைந்த பட்டிமேடு, கோவில்குடியிருப்பு என்னும் இரு சிற்றூர்களை உள்ளடக்கியது கோவிலடி கிராமசேவகர் பிரிவு. இங்கு 2018ஆம் ஆண்டு கணக்கெடுப்புகளின்படி 640 குடும்ப ங்களைச் சேர்ந்த 2,154 தமிழ்மக்கள் வசிக்கிறார்கள்.


| சிற்றூர் | குடித்தொகை | சிற்றூர் | குடித்தொகை |
|---|---|---|---|
| கூட்டாம்புளி | *116* | நாயன்மார்திடல் | *159* |
| சிப்பித்திடல் | *94* | மாக்கைத்திடல் | *239* |
| கள்ளிமேடு | *262* | நடுப்பிரப்பன்திடல் | *246* |
| கரைச்சைத்திடல் | *152* | முள்ளியடி | *146* |
| வர்ணமேடு | *90* | சின்னவர்ணமேடு | *46* |
| குஞ்சடப்பந்திடல் | *97* | கோவில்குடியிருப்பு | *259* |
| ஐயனார்திடல் | *88* | பட்டிமேடு | *160* |

கோவில்குடியிருப்பில் வரலாற்றுப் புகழ்மிக்க ஆதிகோண நாயகர் ஆலயம் அமைந்திருக்கிறது. 64 அடி உயரமான கோபுரத்துடன் கூடிய இவ்வாலயம் இன்றுவரை தனது புராதனமான மரபுகளைப் பேணி பாதுகாத்து வருவது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். கோணேசர் கல்வெட்டுச் சொல்லும் குளக்கோட்டு மன்னன் வகுத்த தொழும்பு முறைகள் இன்றுவரை இங்கே பின்பற்றப்பட்டு வருகிறது. பண்டைய காலங்களில் நிலவிவந்த நிலமானிய முறையின் எச்சங்களாக, தமிழர் வரலாற்றுப் பதிவுகளின் அறுபடாத தொடர்ச்சியாக இன்றும் இது இயங்கிவருகிறது.

ஆகம முறைப்படி நிகழ்த்தப்படும் உருவ வழிபாடுகள், மகுடாகம முறையில் அமைந்த வேள்வி, மடை போன்ற அருவ வழிபாட்டு முறைகள் என இரு வகைப்பட்ட வழிபாட்டினைக் கொண்டமைந்த இவ்வாலயத்தின் வரலாற்றினை காலவரையறைப்படி ஒழுங்குபடுத்தி புறச்சான்றாதாரங்களுடன் விரிவாகப் பதிவு செய்ய வேண்டியது அவசியமானதாகும். அவ்வாறானதொரு வரலாற்று எழுத்தியல் பதிவு ஆன்மீகக் காரணங்களுக்கு அப்பால் இங்கு வாழ்ந்த மக்களின் இருப்பினை ஆதாரப்படுத்தும் ஆவணமாகவும் இருக்குமென்பதில் ஐயமில்லை.

ஆகம வழிபாட்டினைப் போலவே தமிழர்களின் ஆதி வழிபாட்டு முறையான கிராமிய வழிபாடும் இங்கு சிறப்பிடம் பெறுகிறது.

ஈழகேசரி, வெள்ளி விழா மலர்
*1956*



**தம்பலகாமம் கோணேசர் கோவில்**

குரைகடல் சூழ்ந்த கோணமலைச் சிவாலயத்தை ஒல்லாந்தர் தகர்த்துடைத்த பின்னர் அங்குள்ள திருவுருவங்களைத் தம்பலகாமத்திலுள்ள கோணேசர் ஆலயத்தில் வைத்துச் சைவ நன்மக்கள் வழிபடலாயினர். அதே ஆலயம் இன்று புதுச் சோபையுடன் விளங்குகின்றது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்தியாறாம் ஆண்டு
ஈழகேசரி வெள்ளி விழா மலரில் வெளிவந்த
தம்பலகாமம் ஆதி கோணநாயகர் ஆலயப் புகைப்படம்.

கண்ணகி வழிபாடு, வல்லிக்கண்ணன் வழிபாடு, வன்னித்-தெய்வ வழிபாடு, நாயன்மார் வழிபாடு, ஐயனார் வழிபாடு என்று நீண்டு செல்லும் இந்தக் கிராமிய வழிபாட்டு முறைகளுடன் தொடர்புடைய குளக்கட்டுக் காவியம், வதனமார் காவியம், வல்லிக்கண்ணன் காவியம் போன்ற நாட்டார் பாடல்கள் இன்றுவரை ஓலைச்சுவடிகள் மூலமாகவும், வாய்மொழி மூலமாகவும் சந்ததி வழியாக பேணப்பட்டு இங்கு பாடப்பட்டு வருகிறது. ஆதி கோணநாயகர் ஆலயத்துடன் தொடர்புடைய மாகாம வேள்வி, கந்தளாய்க்குளத்து மகாவேள்வி, நாயன்மார்திடல் மடை, ஆலயடிவேள்வி போன்றவற்றோடு நவராத்திரி விழாக்காலங்களில் ஆடப்படும் கும்பம் போன்றவையும் இக்கிராமிய வழக்காறுகளில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவை.

வழிபாட்டு மரபுகளைப் போலவே கலை, இலக்கிய மரபும் நீண்ட பின்னணி உடையதாக காணப்படுகிறது. 17 ஆம் நூற்றா ண்டினைச் சேர்ந்த தம்பலகாமம் வீரக்கோன் முதலியார் அவர்களின் "வெருகல் சித்திரவேலாயுதர் காதல்" உடன் கிடைக்கப்பெறும் கலை, இலக்கிய மரபு 20 ஆம் நூற்றாண்டில் அண்ணாவிமார்களால் வழிநடத்தப்பட்டு இன்றுவரை தொடர்கிறது. கலை, இலக்கியம் போலவே கல்வித்துறையிலும் பண்டிதர்களாக, பேராசிரியர்களாக, பல்துறை விற்பனர்களாக விளங்கியவர்களின் விபரங்களையறியக் கூடியதாக உள்ளது. அதுபோலவே சந்ததி வழியாக ஓலைச்சுவடிகளின் துணையுடன் ஊரைச்சுற்றியிருக்கும் காட்டுப்பகுதிகளில் காணப்படும் மூலிகைச் செடிகளின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டிருந்த சுதேச மருத்துவக்கலையும் முக்கியத்துவம் பெற்றிருந்தது.

பதினெட்டு ஆராய்ச்சியார்களின் உதவியுடன் "வட்டவிதானின்" மேற்பார்வையில் முன்னெடுக்கப்பட்டிருந்த வேளாண்மைச் செய்கை ஊரிலிருந்த நெல் சேமிக்கும் "கொட்டுகளையும்", பட்டறைகளையும் நிரம்பச் செய்த காலம் இன்றில்லை. ஆயினும் இவ்வூர் மக்களின் பிரதான தொழிலாக விவசாயமே இருந்து வருகிறது. விவசாயத்தைப் போலவே சேனைப்பயிர்ச்

செய்கையிலும், கால்நடை வளர்ப்பிலும், எருமைத்தயிர் உற்பத்தியிலும் கிராம மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இயற்கையின் கொடையாக இருந்த பன் (கற்பன், சதுரப்பன்), பிரம்பு போன்ற வளங்கள் பெருமளவில் பயன்படுத்தப்படாமலேயே அருகிப் போய்விட்டன. தம்பலகாமம் குடாக் கடலில் முத்தெடுத்த நிகழ்வும், தம்பலகாமம் காடுகளில் தேன் எடுத்ததும் அரை நூற்றாண்டுகளுக்கு முன்னால் நடந்த வரலாறாகிப் போனது.

1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற இடப்பெயர்வின் போது இக்கிராமத்தில் வாழ்ந்த பலர் திருமலை நகரப்பகுதி நோக்கி குடிபெயர்ந்தனர். சிலர் தமிழகத்துக்கு கடல்வழிமூலம் சென்று தற்போது அகதிமுகாம்களில் தங்கி இருக்கின்றனர். மேலும் பலர் யாழ்ப்பாணம், மன்னார் முதலிய நாட்டின் இதர பாகங்களுக்கு இடம்பெயர்ந்தனர். இவ்வாறு இடம்பெயர்ந்தவர்களைத் தவிர்த்து ஊரின் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் வன்னி நிலப்பரப்பினை நோக்கி குடிபெயர்ந்தார்கள். வன்னியில் குறிப்பாக முல்லைத்தீவு, கைவேலி, வல்லிபுரம், முள்ளியவளை, உடையார்கட்டு என்று பலபாகங்களிலும் தம்பலகாமம் மக்கள் தஞ்சம் புகுந்திருந்தாலும் புதுக் குடியிருப்புப் பகுதியில் அதிகமானோர் இன்றும் வசித்து வருகின்றனர்.

1999 ஆம் ஆண்டில் தம்பலகாமம் மற்றும் கோவிலடி கிராம சேவையாளர் பிரிவுகளில் (1600+521) 2,121 தமிழ் மக்கள் வாழ்ந்ததாக கணக்கிடப்பட்டுள்ளது. சுமார் இருபது ஆண்டுகளின் பின் 2018 ஆம் ஆண்டில் இங்கு 2,154 தமிழ் மக்கள் வசிக்கிறார்கள் என்பது கவனிக்கத்தக்கது.

## தம்பலகாமம் கல்வெட்டு

எனது வரலாற்று ஆர்வத்திற்கு காரணகர்த்தாவாக-விருந்த அப்பப்பா அமரர் தம்பலகாமம் க.வேலாயுதம் அவர்கள் தனது வாழ்நாள் முயற்சியாக இலக்கியங்களில் தம்பலகாமம் தொடர்பில் இருந்த தகவல்களைத் தன்னால் இயன்றவரை தொகுத் திருந்தார். அத்தோடு தம்பலகாமம் தொடர்பான வழமைகள், வாய்மொழி வரலாறுகள், வழிபாடுகள், சடங்கு முறைகள் என்பனவற்றோடு அவர் ஒரு நிருபராகக் கடமையாற்றிய காரணத்தால் தனது சமகாலச் செய்திகளையும் ஆவணப்படுத்தி இருந்தார். தம்பலகாமம் வரலாற்று ஆவணப்படுத்தலில் அவரது பணி அளப்பெரியது.

92 அகவை வரை வாழ்ந்த அவர் தனது சுயநினை வுடன் இருந்த இறுதி ஆண்டுகளில் நான் யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்தேன். அப்போது யாழ்ப்பாணம் தரைவழியாக துண்டிக்கப்பட்டு நாட்டின் தனியான ஒரு பிரதேசமாக இருந்தது. பின்னர் சமாதான காலம் வந்து தரைவழிப்பாதை திறக்கப்பட்ட பின்னரே அவருடன் தம்பலகாமம் வரலாறு தொடர்பில் உரையாடும்

பாக்கியம் வாய்த்தது. அந்தச் சமாதான காலமும் நீண்ட காலம் நிலைத்திருக்கவில்லை. இறுதியில் மிகப்பெரிய யுத்தம் நிகழ்ந்து முடிவுறும் தருவாயில் அவர் உயிர் நீத்திருந்தார். எனினும் அவருடன் வரலாறு தொடர்பில் அளவளாவிய சிறு பொழுதுகளும், அவரது படைப்புகளும் என்மனதில் அணையாத நெருப்பொன்றினை மூட்டிவிட்டுச் சென்றிருப்பதை இப்போது உணர முடிகிறது.


மிகச் சிறிய வயதில் தம்பலகாமம் இடப்பெயர்வுக்கு முன்னால் அவர் வசித்த குஞ்சடப்பன் திடலுக்கு அருகில் இருக்கும் ஐயனார் திடலில் அமைந்திருக்கும் மாவிலங்கடி பிள்ளையார் ஆலயத்தின் விசேட பொங்கல் நிகழ்வொன்றிற்கு அவருடன் சென்றிருந்தேன். ஆலய வளாகத்தில் நீண்டு கிளைபரப்பி இருந்த மாவிலங்கு மரத்தின் அடியில் பெரிய கல்லொன்று இருந்தது. அதில் எழுத்துக்கள் இருப்பதாயும் அதனைப் படித்துச் சொல்லவல்லவர்கள் நம்மூரில் இல்லையென்றும் அப்பப்பா கவலைப்பட்டது இன்றும் ஞாபகத்தில் இருக்கிறது. ஆனால் அன்றைய வயதில் பொங்கல் நிகழ்விலும், பட்டாசு வெடிப்பதிலும் இருந்த ஆர்வத்தினால் பார்ப்பதற்குச் சுவாரசியமில்லாத அந்தக்கல்லின் மேல் எந்தவித ஈர்ப்பும் ஏற்படவில்லை. ஆனால் ஐயனார் திடல் கல்வெட்டுத் தொடர்பில் ஆர்வமேற்பட்டு அதனைத் தேடியலைந்த காலத்தில் அப்பப்பா உயிருடன் இருக்கவில்லை.

தம்பலகாமம் கல்வெட்டு தொடர்பாக அறிந்து கொண்ட பிறகு அக்கல்வெட்டு எங்கிருக்கும் என்று தேடத்தொடங்கிய காலத்தில் ஐயனார் திடல் கல்வெட்டு தொடர்பான ஞாபங்களை சுமார் 20 வருட இடைவெளியின் பின்னர் மீட்டுத் தந்தது பேராசிரியர் செ.குணசிங்கம் அவர்களது “கோணேஸ்வரம்” என்ற ஆய்வு நூல். அந்நூலில் திருகோணமலையின் சோழர் காலக் கல்வெட்டுக்கள் தொடர்பாக அவர் குறிப்பிடும் பொழுது தம்பலகாமத்தில் ஐயனார் திடலில் சோழர் காலக் கல்வெட்டு ஒன்று இருப்பதாக குறிப்பிட்டிருந்தார்.

1972 ஆம் ஆண்டு காலப்பகுதியில் திரு.தம்பிராசா அவர்களது உதவியுடன் பேராசிரியர் செ.குணசிங்கம் அவர்கள் அதனைப் பார்வையிட்டிருக்கிறார். எனினும் தம்பலகாமம் கல்வெட்டு தொடர்பில் முறையான வாசிப்புக்கள் ஏதும் அப்போது நடைபெறவில்லை போல் தெரிகிறது. இதுவொரு துரதிஷ்டவசமான நிகழ்வே. ஏனெனில் திருகோணமலையின் பல கல்வெட்டுக்களை திரு.தம்பிராசா அவர்களின் உதவியுடன் கண்டுபிடித்துத் திருக்கோணேச்சரம் தொடர்பில் பெறுமதி மிக்க ஆய்வுநூலினைத் தந்தவர் பேராசிரியர் செ.குணசிங்கம் அவர்கள். அவர் தனது "இலங்கையில் தமிழ்ச் சாசனவியல் ஆராச்சியின் வளர்ச்சி" என்ற கட்டுரையில் கீழ்வருமாறு பதிவு செய்திருக்கிறார்.

"தமிழ் சாசனங்களைக் கண்டுபிடிப்பதில் ஆர்வம் செலுத்திய பொதுமக்களில் பலரின் கவனத்தை ஈர்த்தவராக விளங்குபவர் சாம்பல்தீவு கிராம சபையின் முன்னாள் தலைவராக இருந்து தற்போது அச்சபையின் ஐந்தாம் வட்டார உறுப்பினராக இருக்கும் தம்பிராசா அவர்களாவார். இவர் இத்துறையில் மேற்கொண்ட முயற்சியின் காரணமாக ஏறத்தாழ ஆறுமாத காலப்பகுதிக்குள் பத்துச் சாசனங்களை கண்டுபிடித்து இக்கட்டுரை ஆசிரியருக்கு (பேராசிரியர் செ.குணசிங்கம்) அவைபற்றி அறிவித்தார்.முன்னர் ஒருபோதும் இல்லா-தளவிற்குக் குறுகிய காலப் பகுதிக்குள் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் பல சாசனங்கள் கண்டுபிடிக்கப்பட்டமை இதுவே முதல் தடவையாகும்"[1] என திருகோணமலை வரலாற்றினை ஆவணப்படுத்துவதில் திரு.தம்பிராசா அவர்கள் கொண்டிருந்த அர்ப்பணிப்பினைப் பாராட்டியிருக்கிறார் பேராசிரியர் செ.குணசிங்கம் அவர்கள்.

திரு.தம்பிராசா அறிவித்த திருகோணமலைக் கல்வெட்டுக்களில் ஏற்கனவே கண்டறியப்பட்டிருந்த மாங்கனாய்க் கல்வெட்டு, பளமோட்டைச் சாசனம், கஜபாகுவின் கந்தளாய்க் கல்வெட்டு, நிஸங்கமல்லனின் கந்தளாய்க் கல்வெட்டு தவிர்த்து திருக்கோணேச்சர முதலாம் இராஜராஜ சோழன் கல்வெட்டு[2], மானாங்கேணி வெள்ளை வில்பபத்திரர் கோவில் கல்வெட்டு[3],




பேராசிரியர்களின் ஆய்வுக்கு உதவும் சாம்பல்தீவு கிராமச்சங்கத் தலைவர் திரு.நா.தம்பிராசா



திரு.நா.தம்பிராசா

வில்லூன்றிக் கந்தசுவாமி கோவில் கல்வெட்டு[4] ஆகிய மூன்று கல்வெட்டுக்கள் தொடர்பில் சமகாலத்தில் பத்திரிகைகளில் பேராசிரியர் செ.குணசிங்கம் அவர்கள் கட்டுரை எழுதி இருக்கின்றமை கவனிக்கத்தக்கது. இவைதவிர விஸ்வநாதர் சிவன்கோவில் கல்வெட்டு, நிலாவெளி பிள்ளையார் கோவில் கல்வெட்டு, மாரியம்மன் கோவில் கல்வெட்டு, கிளிவெட்டி கல்வெட்டு என்பனவற்றின் மைப்பிரதி எடுக்கப்பட்டமை பற்றிக் குறிப்பிடும் அவர் தம்பலகாமம் கல்வெட்டுப் பற்றிக் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்.

“சாசனத்துத் தமிழ் இலங்கை பற்றிக் கவனிக்கையில் வேலுப்பிள்ளை தம்பலகாமத்து வயல் நிலத்துச் சாசனம் பற்றியும் குறிப்பிட்டுள்ளார் (சாசனமும் தமிழும், கண்டி 1971 பக்.339) இச்சாசனத்துக்காக அவர் கொடுத்திருக்கும் அடிக்குறிப்புத் தெளிவற்றதாக இருப்பதனால் (599 - 1930) இச்சாசனம் பற்றிய விபரங்களைப் பெற முயற்சித்தும் அவற்றை என்னால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இதனால் அண்மையில் தம்பிராசாவும் யானும் கண்டுபிடித்த தம்பலகாமம் ஐயனார் திடல் கல்வெட்டும் வேலுப்பிள்ளை குறித்துள்ள தம்பலகாமம் வயற் சாசனமும் ஒன்றா அல்லது வெவ்வேறா னவையா என்பது பற்றித் தற்போதைய நிலையில் எதுவும் கூற முடியாதுள்ளது”[5] என்று முடிகிறது அவரது குறிப்பு.

இந்தத் தகவலைத்தொடர்ந்து தம்பலகாமத்து வயல் நிலத்துச் சாசனம் பற்றிய எனது தேடல்களின் பொழுது இன்றைக்குச் சுமார் 234 ஆண்டுகளுக்கு முந்திய குறிப்பொன்றினைக் காணக்கூடியதாக இருந்தது. அதுவொரு கவலைதரும் நிகழ்வு.

இதுவரை கிடைத்த ஆதாரங்களின் அடிப்படையில் இக்கல்வெட்டினைப் படிப்பதற்கான முதல்முயற்சியாக அதனைக் கொள்ளலாம். 1786.06.13 செவ்வாய்க்கிழமை அன்று அந்நிகழ்வு நடைபெற்றுள்ளது. அக்காலப்பகுதியில் ஆட்சி செய்த ஒல்லாந்து ஆளுநர் Van Senden அவர்கள் தனது தம்பலகாமம் பயணக்குறிப்பில் கீழ்வருமாறு அந்நிகழ்வு பற்றிப் பதிவு செய்திருக்கிறார்.

“நான், நெல்வயலில் நிறுவியிருந்த கல்வெட்டைப் பார்வையிடுவதற்காகச் சென்றிருந்தேன். அதன் காலத்தை மதிப்பிடுவது சாத்தியமற்றதாக இருந்ததோடு, அதில் எழுதப்பட்டிருந்த விடயங்களை வாசித்தறிய அங்கு வாழ்ந்த மக்கள் யாரும் உதவவில்லை.”(6) இவ்வாறானதொரு குற்றச்சாட்டுடன் தம்பலகாமம் கல்வெட்டு பற்றி நமக்குக் கிடைக்கும் முதல் பதிவினை மேற்கொண்டிருக்கிறார் ஒல்லாந்து ஆளுநர் Van Senden. இவர் 25.05.1786 இல் கொட்டியாரப் பற்று மக்களின் உதவியுடன் தனது மொழிபெயர்ப்பாளனினால் வாசிக்கப்பட்ட கங்குவேலிக் கல்வெட்டினை தனது பயணக்குறிப்பில் முழுமையாகப் பதிவு செய்தவர் என்பது கவனிக்கத்தக்கது.

தம்பலகாமம் எனும் ஊரின் பெயரினை ஆவணப்படுத்தும் இக் கல்வெட்டு இன்றைக்கு 800 ஆண்டுகளுக்கு முன்னர் தம்பலகாமத்தின் வயல்பகுதியில் நிறுவப்பட்டது. 234 ஆண்டுகளுக்கு முன்னர் இக் கல்வெட்டினை வாசிப்பதற்கு அன்னிய நாட்டவர் ஒருவர் முயற்சித்த போதும் தம்பலகாமவாசிகளின் ஒத்துழைப்பின்மையால் அது கைகூடாமல் போனது.

இதற்குப்பிறகு 144 ஆண்டுகளின் பின்னர் 1930 ஆம் ஆண்டளவில் பேராசிரியர் பரணவிதான அவர்களினால் இக்கல்வெட்டின் முன்பக்கம் படியெடுக்கப்பட்டு கொழும்பு அருங்காட்சியகத்திற்கு வழங்கப்பட்டது. அங்கு அது வாசித்து வெளிப்படுத்தப்படாமல் சுமார் 73 ஆண்டுகள் இக்கல்வெட்டின் மைப்படி கவனிப்பாரற்றுக் கிடந்தது.


இலங்கையில் சாசனங்களை அறிவியல் ரீதியாக ஆராயும் வழிமுறைகள் 1875 இல் ஆரம்பித்தாலும் தமிழ் கல்வெட்டுக்கள் பற்றிய ஆய்வுகள் இருபதாம் நாற்றாண்டின் முற்பகுதியிலேயே ஆரம்பிக்கப்பட்டது. இதனை இக்காலப்பகுதியில் இலங்கை தொல்பொருள் திணைக்கள ஆணையாளராகக் கடமையாற்றிய திரு. எச்.சி.பி. பெல் அவர்களின் கீழ்வரும் கூற்றில் இருந்து புரிந்துகொள்ளலாம்.

"பழைய சாசனக் குறிப்புகளுடன் தொடர்புபடத்தக்க ஆற்றல் வாய்ந்த தமிழ் அறிஞர் இலங்கையில் வருத்தப்படத்தக்களவிற்கு இல்லாதிருப்பதனால் இலங்கைத் தொல்லியற்துறை இந்தியத் தொல்லியற்துறையினைச் சேர்ந்த கற்றுத் தேர்ந்த சாசனவியலாளர்களின் தயவில் தங்கியிருக்கவேண்டி உள்ளது."[7]

மேற்கூறிய திரு . எச்.சி.பி. பெல் அவர்களின் கூற்றில் இருந்து தம்பலகாமம் கல்வெட்டு மிக நீண்டகாலம் கவனிப்பாரற்றுக் கிடந்தமைக்கான காரணத்தினை புரிந்துகொள்ளலாம்.

2003 ஆம் ஆண்டு தொல்பொருள் திணைக்களத்தின் சாசனவியல் துறைப் பொறுப்பாளர் கலாநிதி. மாலினி டயஸ் அவர்களால் இக்கல்வெட்டின் மைப்படி பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்களிடம் வாசிப்பதற்காக ஒப்படைக்கப் பட்டது.

கல்வெட்டின் மைப்படியை வாசித்த பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் 2005 ஆம் ஆண்டு இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட புரட்டாதி மாத ''பண்பாடு'' என்ற சஞ்சிகையில் முதன்முறையாக "தம்பலகாமத்தில் ஒரு கல்வெட்டு'' என்ற தலைப்பில் பொலநறுவைக் காலத்துப் படைப்பற்று (மறைந்து போன சிலாசனம்) என்னும் உபதலைப்புடன் கல்வெட்டின் வாசகங்களை வெளியிட்டார்.இதன்மூலம் முதன்முறையாகத் தம்பலகாம ஊர் என்று கல்வெட்டு மூலம் இவ் இடப்பெயர் அழைக்கப்பட்டது உறுதிப்படுத்தப்பட்டது. பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் வாசித்த கல்வெட்டின் மைப்படி சுமார் 70 ஆண்டுகாலம் கவனிக்கப்படாமல் இருந்தமையால் சிதைவடைந்திருந்தமை கவனிக்கத்தக்கது. அத்துடன் தம்பலகாமம் கல்வெட்டின் ஒருபக்கம் மட்டுமே மைப்படி எடுக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.



தம்பலகாமம் கல்வெட்டின் மைப்படி
தொல்பொருட் திணைக்களம் *1930*

இதேவேளை 2005 ஆண்டு பண்பாடு சஞ்சிகையில் பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் எழுதி இருந்த கட்டுரையின் இறுதி வாசகங்கள் என் மனத்தில் ஒருவித பேரார்வத்தினை ஏற்படுத்தி இருந்தது. அதுவே பின்னாட்களில் தம்பலகாமம் கல்வெட்டினைத் தேடிப் பயணிப்பதற்கான உத்வேகத்தினைத் தந்தது. பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்களால் எழுதப்பட்டு இன்றும் எனது மனப்பாடமாக இருக்கும் வரிகள் கீழே தரப்பட்டுள்ளது.

“முடிவாகத் துண்டமான தம்பலகாமத்துத் தமிழ்ச்சாசனமும் அதனைப் பற்றிய ஆய்வுகளும் இலங்கை வரலாற்றிலும் தேசிய பாரம்பரிய நோக்கிலும் புதிய பரிமாணங்களை ஏற்படுத்துகின்றது என்பது அழுத்திக் கூற வேண்டியதாகும். அது தம்பலகாம ஊரின் பெயரைக் குறிப்பிடும் முதலாவது தமிழாவணம் என்னும் சிறப்பினைப் பெறுகின்றது. அது அங்கு அமைக்கப்பட்ட “ஜகதப்ப கண்டன் தானம்” என்னும் படைநிலையைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. அது அரசன் ஒருவனின் ஏற்பாட்டினால் உருவானது என்று கருதமுடிகின்றது. தமிழ்மொழி வழக்கிலே ஏற்பட்டிருந்த கன்னடமொழிச் செல்வாக்கினையும் அது பிரதிபலிக்கின்றது. பிரதேச வன்னிமையின் உற்பத்தி பற்றிய ஆய்வுகளை முன்னெடுத்துச் செல்வதற்கான ஆவணமாகவும் அது அமைந்து விடுகின்றது. எனவே இதனைத் தேடிக் கண்டு பிடிப்பது எல்லோரின் கடமையாகும். சிறப்பாக அந்தப் பொறுப்பு தம்பலகாம வாசிகளுக்குரியதாகும்.”[(8)]

இந்தக் காலப்பகுதியில்தான் நான் இலங்கை வரலாற்று நூல்களை வாசிப்பதில் அதிக கவனம் எடுத்திருந்தேன். நூல்களை வாசிக்கத் தொடங்கும் முன்னர் அதன் பின்பகுதியில் உள்ள சுட்டியில் தம்பலகாமம் என்ற சொல் இருக்கிறதா என்று தேடி அது தொடர்பான பக்கத்தினை முதலில் வாசித்து விடுவதனை வழக்கமாகக் கொண்டிருந்தேன்.

அறுநூறு முதல் எண்ணூறு பக்கங்கள்வரை கொண்ட மிகப்பெரிய இலங்கை வரலாற்று நூல்களில் எல்லாம் தம்பலகாமம் தொடர்பில் இரண்டு அல்லது மூன்று வரிகள் கொண்ட தகவல்கள்தான் வரும். இது ஒருவிதத்தில் ஏமாற்றமாக இருந்தபோதிலும் உள்ளுக்குள் ஒரு ஆதங்கத்தை உருவாக்கிச் செல்லும். அத்துடன் ''தம்பலகாமம் கல்வெட்டினைத் தேடிக் கண்டுபிடிப்பது எல்லோரின் கடமையாகும். சிறப்பாக அந்தப்பொறுப்பு தம்பலகாம வாசிகளுக்குரியதாகும்'' என்ற பேராசிரியரின் வரிகள் மனதுக்குள் ஒலித்துக்கொண்டே இருக்கும்.

தொழில் நிமித்தமாகக் கப்பல்துறையிலும், செல்வநாயக-புரத்திலும் வேலைசெய்த காலப்பகுதியில் ஓய்வு நேரங்களில் தம்பலகாமம் வரும்போதெல்லாம் கிடைக்கும் குறுகிய நேர இடைவெளிகளில் ஊரின் ஏதாவது ஒரு தொன்மையை ஜீவநதி வலைப்பதிவிற்காக ஆவணப்படுத்த முயல்வது வழமை. அவ்வேளைகளில் பலமுறை எனது தகப்பனார் கலாபூசணம். வே. தங்கராாசாவுடன் ஐயனார் திடல் ஆலய வளாகத்திற்குச் சென்றிருக்கிறேன். ஆனால் அவை குறுகிய கால அவசரமான பயணங்கள். அதனால் எனது தகவல் திரட்டுக்களும் அத்தனைதூரம் பயனுள்ளவையாக அமையவில்லை.

அன்றைய நாட்களில் ஐயனார் திடல் கல்வெட்டுத் தொடர்பில் எனக்குக்கிடைத்த அதிர்ச்சியான செய்தி அக்கல்வெட்டினைப் புதிய ஆலயம் அமைக்கும்போது ஆலய மண்டபத்தின் அத்திவாரத்தில் வைத்துக் கட்டிவிட்டார்கள் என்பதுதான். இச்செய்தி கல்வெட்டினைப் பாதுகாக்கும் நோக்குடன் போலியாக உருவாக்கப்பட்டது என்பதனை ஆலய நிர்வாக சபைத் தலைவர் திரு.முத்துக்குமார் குணராசா மூலம் பின்னர் அறிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது.

இவ்வாலய வளாகத்தில் முன்னர் ஒருவர் புதையல் எடுத்துப் பணக்காரர் ஆனார் என்பதும், இவ்வாலய வளாகத்தினைச் சுற்றி புதையல் இருக்கக்கூடும் என்பதும், இப்பகுதியில்

உள்ளவர்களின் நம்பிக்கை. எனவே இங்குள்ள கல்வெட்டும் புதையல் தொடர்பானதாகவே இருக்கும் என்பதனால் பலரும் அதன்மீது ஈடுபாடுகாட்டத் தொடங்கியிருந்தமையாலேயே அதனை மறைக்கவேண்டிய தேவை உருவாகி இருந்தது. இதுவே இங்கே உள்ள கசப்பான நடைமுறை உண்மை.

ஒருமுறை திரு.விஜேந்திரனுடன் சிவசக்திபுரத்தில் கல்வெட்டு ஒன்றினைத் தேடி உந்துருளியில் போய்க்கொண்டிருந்தபோது "அண்ணா இந்த வீட்ட வடிவா பாருங்கண்ணா" என்று காதுக்குள் கிசுகிசுத்த திரு.விஜேந்திரன் வீடு மறைந்தபின் கூறிய தகவல் அதிர்ச்சி தருவதாய் இருந்தது.

அந்த வீடு இருந்த வளவில் ஒரு கல்வெட்டு இருந்திருக்கிறது. அது புதையல் பற்றிய செய்தியடங்கிய கல்வெட்டு என்று நம்பிய வீட்டு உரிமையாளர் அதனை தானாகவே வாசித்து புரிந்து கொண்டதன் அடிப்படையில் வளவின் ஒரு இடத்தினை புதையல் உள்ள இடமாக அடையாளம் கண்டிருக்கிறார். பின்னர் வேறுயாரேனும் அக்கல்வெட்டினைப் படித்தால் புதையலுக்குப் போட்டியாகிவிடும் என நினைத்து தனது வீட்டினைப் பெருப்பிப்பதற்காக கட்டிய அத்திவாரத்துக்குள் கல்வெட்டினை உடைத்து அதனுள் போட்டுக் கட்டிவிட்டார்.

நாளாக நாளாக வீட்டின் அத்திவாரத்துக்குள் கல்வெட்டினை வைத்துக்கட்டிய பகுதி வளர்ந்து வந்ததே தவிர அவர் அடையாளங் கண்ட இடங்களில் இருந்து எந்தப் புதையலும் வரவில்லை. கடைசியில் கல்வெட்டுமில்லை, புதையலுமில்லை என்றாகிப் போனது.

இது இவ்வாறிருக்க அன்றைய தினம் நாங்கள் சிவசக்திபுரத்தில் பார்க்கச் சென்ற கல்வெட்டுக்கு அருகில் வசிக்கும் பெண்மணி ஒருவருக்கு நாங்கள் சென்றதற்கு முன்னைய தினம் யாரோ ஒருவர் சாமியாடி உனது வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் கல்வெட்டுகளுக்கு இடையில் புதையல் இருக்கிறது. அது உனக்குச் சேரவேண்டியது என்று கட்டுச் சொல்லி இருக்கிறார்.

மேற்குறித்த விடயம் தெரியாமல் வழக்கம்போல நாங்கள் கல்வெட்டினைக் கழுவி வாசிக்க ஆயத்தம் செய்ததும் அதையறிந்த அந்தப் பெண்மணி நாங்கள் பூசைசெய்து அங்கு புதையல் எடுக்க வந்திருக்கிறோம் என்று நினைத்து வெறிபிடித்தவர்போல் கெட்ட வார்த்தைகளில் திட்டியபடி கத்தியுடன் எங்களைக் குத்துவதற்காக ஓடிவந்தார். வேறுவழியில்லாமல் 'குதிகால் புறடியில் அடிபட' ஓடிவர வேண்டியதாகப் போய்விட்டது. சாமியாடிக் கட்டுச் சொன்னதால் புதையலைப் பூதம் காப்பதுபோலப் பாதுகாத்து வருகிறார் அந்தப் பெண்மணி. நாங்கள் படியெடுத்தது கல்வெட்டு இல்லை நீண்டகாலம் மழைநீர் ஓடியதால் கல்லில் ஏற்பட்ட கோடுகள் என்பதை பின்னர் புரிந்துகொண்டோம். இது ஒரு சுவாரசியமான சோகக் கதை மேற்படி அனுபவங்கள் ஐயனார் திடல் கல்வெட்டு மறைக்கப்பட்டதன் நோக்கத்தைப் புரியவைப்பதாக இருந்தது.

தொழில் நிமித்தம் தம்பலகாமம் வந்த பிற்பாடு தம்பலகாமம் கல்வெட்டு என்ற வேதாளம் மீண்டும் என் தோள்களில் ஏறி தலையைப் பிசையத்தொடங்கியது. சமகாலத்தில் தம்பலகாமம் காட்டுப் பகுதியில் கல்வெட்டுகள் இரண்டு அரைவாசி நீரில் மூழ்கியபடி இருக்கும் தகவலும், படமும் நண்பரான திரு. வைரமுத்து பிரபாகர் மூலம் கிடைக்கப்பெற்றது. அத்தகவல்-களை ஆசிரியர் திரு.சின்னத்தம்பி பிரகாஷ் உடன் பகிர்ந்திருந்தேன். திரு.பிரகாஷ் மூலமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் அவர்களின் தம்பலகாமம் வருகை உறுதி செய்யப்பட்டது.

*22.09.2019* அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் விரிவுரையாளர் திரு.கிரிகரன், தொல்லியல் இறுதி வருட மாணவர்களான திரு.கஜன் மற்றும் திரு.சுதர்சன் ஆகியோருடன் பேராசிரியர் ப. புஷ்பரட்ணம் அவர்கள் கள ஆய்வுக்காக வருகை தந்திருந்தார். முதலில் ஊரின் எல்லைப் புறத்தில் இருக்கும் காட்டிலுள்ள கல்வெட்டினைப் படியெடுக்க அவர்களை நண்பன் பிரபாகர் அழைத்துச் சென்றிருந்தார்.

ஆனால் அக்கல்வெட்டுக்கள் ஆழமான ஆற்றில் புதையுண்டு இருந்ததினால் அவற்றினைப் படியெடுக்கும் முயற்சி பயனளிக்கவில்லை.

அதன்பின்னர் பேராசிரியர். ப. புஷ்பரட்ணம் குழுவினர் ஐயனார் திடல் வந்து சேர்ந்திருந்தனர். இதற்கான உதவிகளை தம்பலகாமம் பிரதேச சபை உறுப்பினர் திரு.விஜயானந்தன் விஜயகுமார், திரு.வைரமுத்து பிரபாகர் ஆகியோர் செய்திரு ந்தனர். மாவிலங்கடி பிள்ளையார் ஆலய நிர்வாக சபைத் தலைவர், திரு.முத்துக்குமார் குணராசா கல்வெட்டு படியெடுப்ப தற்கான முழு ஒத்துழைப்பையும் வழங்கி இருந்தார்.

தம்பலகாமம் கல்வெட்டுத் தொடர்பில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த பேராசிரியர் ப. புஷ்பரட்ணம் அவர்கள் தனது குழுவினரது உதவியுடன் கல்வெட்டின் இருபக்கமும் உள்ள 23 வரிகளையும் படியெடுத்து பேராசிரியர் சுப்பராயலு, முனைவர் இராஜகோபால் ஆகியோரின் உதவியுடன் வாசித்து "தம்பலகாம ஊர்" என்பதனை ஆதாரப்படுத்தி இருந்த தம்பலகாமம் கல் வெட்டினை பத்திரிகை, இணைய வழியாக 29.09.2019[9] அன்று உலகிற்கு வெளிப்படுத்தினார்.

இக்கல்வெட்டு திருகோணமலை உடையாரின் வேண்டுதலுக்கு இணங்க ஜகதப்ப கண்டன் என்ற பெயரில் உருவாக்கப்பட்ட படைப்பிரிவின் அல்லது நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு தம்பலகாமம் ஊரின் அனைத்து வரிகளும் (அனைத்து விநியோகமும்) வழங்கப்பட்ட செய்தியையும், ஆணையையும் சொல்கிறது.

23 வரிகளைக்கொண்ட இக் கல்வெட்டின் பத்தாவது வரி மிகத்தெளிவாக தம்பலகாம ஊ(ர்)[10] என்பதனை ஆதாரப்படுத்தி இருந்தது.

இக்கல்வெட்டுத்தொடர்பில் வெவ்வேறு காலப்பகுதியில் ஆராய்ந்த பேராசிரியர் சி. பத்மநாதன், பேராசிரியர் ப.



தம்பலகாமம் மாவிலங்கடி பிள்ளையார் ஆலயம்









தம்பலகாமஊ

தம்பலகாமம் கல்வெட்டின் இருபக்கத் தோற்றம்





புஷ்பரட்ணம் ஆகியோரின் ஆய்வுக்கட்டுரைகளை அவற்றின் அவசியம் கருதி இந்நூலின் பின்னிணைப்பாக முழுமையாகத் தந்திருக்கிறேன்.

இக்கல்வெட்டின் பத்தாவது வரி இன்றைக்கு சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்னர் தம்பலகாம ஊரைத் தானமாக வழங்கிய செய்தியினைப் பதிவுசெய்கிறது. இங்கு ஊர் என்ற இடப்பெயர்ச் சொல்லின் புராதன வடிவம் கையாளப் பட்டுள்ளது.

“ஊர்தல்” எனும் வினையினால் “ஊர்” என்ற சொல் தோன் றியது. ஊர் என்பது மக்களின் குடியிருப்பினைச் சுட்டும் தொன் மை வடிவமாகும். தொல்காப்பியம் மற்றும் சங்க நூல்களில் “ஊர்” என்ற சொல் பல இடங்களில் கையாளப்பட்டுள்ளது. ஆலத்தூர், ஆவூர், எருக்காட்டூர். ஒக்கூர், கோவூர், பூஞ்சாற்றூர், வேளுர், நீடுர், நாலூர், நல்லூர், வயலூர் என்பன சங்க இலக்கி யங்கள் காட்டும் சோழநாட்டு இடப்பெயர்களுள்[(10)] சிலவாகும்.

தம்பலகாமம் என்ற பெயர்கொண்ட ஊரின் வருவாய் எல்லாம் தானமாக வழங்கிய செய்தியைச் சொல்கின்ற சுமார் ஒருநூற்றாண்டு காலத்துக்கு முன் மறைக்கப்பட்ட அரிய கல்வெட்டு மீண்டும் முழுமையாக மீள்வாசிப்புக்குள்ளானது தம்பலகாமம் ஊர்ப்பெயர் வரலாற்று எழுத்தியலில் ஒரு முக்கிய திருப்புமுனையாகும். இதன் மூலம் சுமார் 234 ஆண்டுகளுக்கு முன்னால் தம்பலகாமவாசிகள் உதவி செய்யாததன் காரணமாக வாசிக்கப்படாமல் போன கல்வெட்டு மீண்டும் பல தம்பலகாமவாசிகளின் கூட்டு ஒத்துழைப்பினால் பேராசிரியர் ப. புஷ்பரட்ணம் மூலம் வெளிப்படுத்தப்பட்ட பூரிப்பான நிகழ்வு நடந்தேறியது.

இதன் பின்னர் பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் வேறு தேவையின் நிமித்தம் திருகோணமலைக்கு வந்திருந்த போது எமது அழைப்பின் பேரில் கலாநிதி. சரவணபவன், திரு. சந்திரசேகரம், திரு. யாழினியன் ஆகியோரின் உதவியுடன் கல்வெட்டினைப் பார்வையிட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தம்பலகாமத்து வயல் நிலத்துச் சாசனம் 1930 ஆம் ஆண்டளவில் பேராசிரியர் பரணவிதான அவர்களினால் படியெடுக்கப்பட்ட பின்னர் அதன் பெறுமதி உணர்ந்த தம்பலகாமவாசிகளால் ஐயனார் திடலில் அமைந்திருக்கும் மாவிலங்கடி பிள்ளையார் ஆலய வளவினுள் கொண்டுவந்து சேர்க்கப்பட்டிருக்கிறது. இதன் பின்னர் இச்சாசனம் ஐயனார் திடல் கல்வெட்டு என்று அழைக்கப்பட்டிருக்கிறது என்பதனை மேற்கூறிய நிகழ்வுகளில் இருந்து அறியக்கூடியதாக உள்ளது.

இலங்கைத் தமிழர் வரலாறு ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் முறையாகப் பதிவு செய்யப்படவில்லை என்ற ஆதங்கம் பலரிடம் இருக்கிறது. தன்னைப் பதிவு செய்து கொள்வதற்காக தம்பலகாமம் கல்வெட்டு கடந்துவந்த 250 வருடகாலப் பயணம் இலங்கைத் தமிழர் வரலாற்று ஆதாரங்களை ஆவணப்படுத்துவதில் உள்ள சிக்கல் நிலையை ஓரளவுக்கேனும் தெளிவுபடுத்தும் என நினைக்கின்றேன்.

யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் தமிழ் மக்களிடையே சமூக,சமய,பொருளாதார,அரசியல் மீளுருவாக்கத்திற்கான செயற்பாடுகள் பல்வேறு வழிமுறைகளில் முன்னெடுக் கப்படுகின்ற போதிலும் தமிழர் வரலாற்று ஆதாரங்களை விஞ்ஞானரீதியான வழிமுறைகளுக்கு ஊடாக உலக நடைமுறைக்கு அமைவாக ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் தொகுப்பதற்கான முயற்சிகள் மிகச்சிறிய அளவில் மேற்கொள்ளப்படுவதாகவே எண்ணத்தோன்றுகின்றது. எதிர்கால சந்ததியினரின் நன்மை கருதி இத்துறையில் ஆர்வமுள்ளோரும், வரலாற்று அறிஞர்களும், சமூக செயற்பாட்டாளர்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

உசாத்துணை


(1) இலங்கையில் தமிழ் சாசனவியல் ஆராச்சியின் வளர்ச்சி - பேராசிரியர் செ.குணசிங்கம் - நான்காவது அனைத்துலகத் தமிழாராச்சி மாநாட்டு நினைவுமலர், 1974 ,பக்கம் 32

(2) திருமலையில் இராஜராஜனின் காலத்தால் முந்திய கல்வெட்டுக்கள் - பேராசிரியர் செ.குணசிங்கம், ஈழநாடு 06.08.1972 ,பக்கம் 5

(3) திருகோணமலை மானாங்கேணி வெள்ளை வில்வத்தடி கோணநாயகர் கோவிலும், அரிய தமிழ்க் கல்வெட்டும். -பேராசிரியர் செ.குணசிங்கம், தினகரன் 02.07.1972, பக்கம் 3

(4) திருகோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி கோவிலில் தமிழ் கல்வெட்டுக்கள் இரண்டு - பேராசிரியர் செ.குணசிங்கம் ,தினகரன் 18.11.1972, பக்கம் 1

(5) கோணேஸ்வரம் - பேராசிரியர் செ.குணசிங்கம், 1973, பக்கம் 75

(6) காலனித்துவ திருகோணமலை - கலாநிதி கனகசபாபதி சரவணபவன், 2010 ,பக்கம் 116

(7) இலங்கையில் தமிழ் சாசனவியல் ஆராச்சியின் வளர்ச்சி - பேராசிரியர் செ.குணசிங்கம் - நான்காவது அனைத்துலகத் தமிழாராச்சி மாநாடு நினைவுமலர், 1974, பக்கம் 30

(8) "தம்பலகாமத்தில் ஒரு கல்வெட்டு" பொலநறுவைக் காலத்துப் படைப்பற்று (மறைந்து போன சிலாசனம் ) புரட்டாதி மாத பண்பாடு சஞ்சிகை - இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம் -பேராசிரியர் சி. பத்மநாதன், 2005, பக்கம் 04

(9) பல ஆண்டுகளுக்குப் பின்னர் வரலாற்று வெளிச்சத்திற்கு வந்திருக்கும் அரிய தமிழ்க்கல்வெட்டு தம்பலகாமத்தில் மீளவும் கண்டுபிடிப்பு - பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் வலம்புரி, *29.09.2019*, பக்கம் *11*

(10) சங்க இலக்கியங்கள் காட்டும் சோழநாட்டு இடப்பெயர்கள் முனைவர் அ. ஜான் பீட்டர், profjohnpeter.blogspot.com

இயல் 4

# ஊர்ப்பெயர் திரிபு

ஊர்ப் பெயர்கள் காலத்துக்குக் காலம் மாற்றமடைந்து வருவதை இடப்பெயர் வரலாறு நெடுகிலும் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. அவ்வாறு ஊர்ப் பெயர்களில் திரிபு வருவதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன.

பிரதேசங்களை வெற்றிகொண்ட அரசர்களினால் ஊர்ப்பெயர்கள் மாற்றியமைக்கப் பட்டிருக்கின்றன. ஆட்சியாளர்களால் அப்பிரதேசம் பிறருக்கு தானமாக வழங்கப்படும் பொழுது அவ்வூரப் பெயர்கள் மாற்றப்பட்டிருக்கிறது. இவை தவிர அங்கு வாழும் மக்களின் சமய, சமூக, அரசியல் காரணங்களாலும் ஊர்ப்பெயர்களில் மாற்றம் இடம்பெறுவதுண்டு. சிலவேளைகளில் அறிஞர்களாலும் ஊர்ப்பெயர்கள் மாற்றப்படுவது உண்டு. ஆட்சியாளர்கள், அறிஞர்களுக்கு அப்பால் சாதாரண மக்களாலும் ஊர்ப்பெயர்கள் மாற்றம் கண்டதை இடப்பெயர் ஆய்வுகளில் நாம் காணக்கூடியதாக உள்ளது.

கிழக்கிலங்கையின் திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள தமிழர்களின் பூர்வீகக் கிராமம்

தம்பலகாமம். வயலும் வயல்சார்ந்த மருத நிலப்பிரதேசம்தான் அதன் சிறப்படையாளம் என்றாலும் அதற்குச் சற்றும் குறைவில்லாத அளவில் கடல், மலை, காடு, குளம் போன்ற அனைத்து வளங்களையும் தன்னகத்தே நிறைவாகக் கொண்டமைந்த இயற்கை எழில் நிறைந்த பூமி தம்பலகாமம்.

மிக நீண்டகாலம் இடம்பெற்று வந்த யுத்த அனர்த்தம், திட்டமிட்ட குடியேற்றங்கள், பாரிய உள்நாட்டு வெளிநாட்டு இடப்பெயர்வுகள், இயற்கை அழிவுகள், படுகொலைகள், வன்செயல்கள் என்று பல்வேறுபட்ட காரணங்களால் மிக அதிகளவில் பாதிக்கப்பட்ட கிராமங்களில் இதுவுமொன்று.

தம்பலகாமம் என்ற ஊரின் பெயர் காலத்துக்குக் காலம் இங்கு மேலாதிக்கம் செலுத்திய ஆட்சியாளர்களாலும், இலக்கிய விற்பனர்களாலும், சாதாரண மக்களாலும் மாற்றப்பட்டதை சுருக்கமாக இங்கு பார்க்கலாம்.

*1.* தம்பலகாமம்

“தம்பலகாமம்” என்ற பெயர் இன்றைக்குச் சுமார் எண்ணூறு வருடங்களுக்கு முன்பாகவே வழக்கில் இருந்துவரும் ஊர்ப்பெயர். இதனைத் “தம்பலகாமம் கல்வெட்டு” ஆதாரப்படுத்துகிறது. *13* ஆம் நூற்றாண்டின் முற்பகுதியினைச் சேர்ந்த இக்கல்வெட்டில் “தம்பலகாம ஊர்” எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

*2.* தம்பலகாமப் பற்று

இலங்கையில் ஐரோப்பியரின் ஆதிக்கம் ஏற்படுவதற்கு முன்னால் இப்பிரதேசத்தில் சுதந்திரச் தமிழ்ச் சிற்றரசாக இயங்கிய வன்னிபங்கள் இப்பிரதேசத்தின் பெயரினை “தம்பலகாமப் பற்று” எனப் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். பின்னர் ஐரோப்பியர் ஆதிக்கத்தின் கீழ் வன்னிபங்களின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டு அவர்கள் நிர்வாகிகளாகச்

செயற்பட்ட காலத்திலும் அப்பெயரையே பாவித்திருக்கின்றார்கள். இலங்கை சுதந்திரமடைந்த காலம் வரை வன்னிபங்களின் முக்கிய ஆவணங்களில் அப்பெயர் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. தம்பலகாமப் பற்று என்பது இன்றைய தம்பலகாமப் பிரதேசத்துடன் கிண்ணியா, ஆலங்கேணி, கந்தளாய் போன்ற இடங்களை உள்ளடக்கிய பரந்த பிரதேசம் என்பது குறிப்பிடத்தக்கது.

3. தமனதோட்ட "Tamanatota"

1658 ஆம் ஆண்டு காலப்பகுதியில் போர்த்துக்கீசர் இலங்கை மீதான ஆதிக்கத்தினை இழந்த வேளையில் கண்டி இராட்சியம் திருகோணமலை மீது தனது மேலாதிக்கத்தினைச் செலுத்தியது. அக்காலப்பகுதியில் கண்டி இராட்சியத்தில் பல மாகாணங்கள் இருந்தன. அவற்றில் ஒன்று "தம்பன் கடவை". தம்பன் கடவையின் துறைமுக நகரமாக தம்பலகாமம் சில காலம் செயற்பட வேண்டி இருந்தது. கடல்வழி வணிகத்திற்கும், போக்குவரத்திற்கும் பயன்படுத்தப்பட்ட திருகோணமலையின் பகுதிகளில் ஒன்றாக தம்பலகாமக் குடாக்கடல் முக்கியத்துவம் பெற்றிருந்தமை இதற்கான காரணமாகும். கண்டி அரசின் மேலாதிக்கம் காரணமாக இப்பகுதி அவர்களால் தமனதோட்ட "Tamanatota" என்று அழைக்கப்பட்டிருக்கிறது.

4. "தம்பை நகர்" , "தம்பலகமம்" , "தம்பலகாம தேசம்"

ஊரின் பெயர் ஆட்சியாளர்களால் மட்டுமல்ல அங்கு வாழ்ந்த அறிஞர்கள், இலக்கியவாதிகள், சமூக அமைப்புகள் என்பனவற்றாலும் மாற்றம் பெறுவதுண்டு. அந்தவகையில் 17 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற இலக்கியங்கள் இவ்வூரின் பெயரினை பின்வருமாறு பதிவு செய்கிறது. திரிகோணாசலப் புராணம் "தம்பை நகர்" என்றும் வெருகல் ஸ்ரீ சித்திர வேலாயுதர் காதல் அதனை "தம்பலகமம்" என்றும் பதிவு செய்திருக்கிறது.

சமகாலத்தில் வன்னிபங்கள் திருகோணமலையினை ஆட்சி செய்த போது திருகோணமலையில் தம்பலகாமப் பற்று, கட்டுக்குளப் பற்று, கொட்டியாரப்பற்று, திருகோணமலைப் பற்று என்ற நான்கு வன்னிப் பிரதேசங்கள் இருந்தன. இவை சுயாட்சி கொண்ட குறுநில மன்னர்களான வன்னிபங்களால் ஆளப்பட்டன. அக்கால வழக்கில் இந்த நான்கு பற்றுக்களும் நான்கு தேசங்களாகக் கருதப்பட்டிருக்கிறது என்பதனை ஆவணங்கள் மூலமாக அறியக்கூடியதாக இருக்கிறது. இந்த வழக்கிற்கு அமைய தம்பலகாமம் "தம்பலகாமதேசம்" என அழைக்கப்பட்டிருக்கிறது.

5. Tamblegam

இதனைத் தொடர்ந்து வந்த ஒல்லாந்தர், பிரித்தானியர் மேலாதிக்கத்தின் போது இப்பிரதேசம் உச்சரிப்பு (ஒலி) பிரச்சனையால் Tamblegam, Tampalagam போன்ற பெயர்களால் ஐரோப்பியரால் அழைக்கப்பட்டிருக்கிறது.

6. தாயூர் தம்பலகாமம்

1917 ஆம் ஆண்டுக்குரிய இறப்புத் தொடர்பான கள்ளிமேட்டுக் கல்வெட்டு "தம்.கள்ளிமேடு" என இறப்பு இடம்பெற்ற இடத்தினைக் குறிக்கின்றது.

தம்பலகாமத்தைச் சேர்ந்த கள்ளிமேடு என்பதனையே இது சுருக்கமாகச் சொல்கின்றது. இதன் மூலம் தம்பலகாமத்தில் இருந்த சிற்றூர்களை அடையாளப்படுத்தும் போது "தம்" என்று அவற்றின் தாயூரான தம்பலகாமத்தை குறிக்கும் வழமை அக்காலத்தில் இருந்ததை இது உறுதிப்படுத்துகிறது.

இக்கல்வெட்டு பொறிக்கப்பட்ட காலப்பகுதியில் எழுதப்பட்ட வீடு, வயல், காணி உறுதிகளிலும், நீதிமன்ற வழக்குகள் தொடர்பான தமிழ் ஆவணங்களிலும் "திரு.தம்.கந்தளாய், திரு.தம்.கிண்ணியா, திரு.தம்.ஆலங்கேணி" போன்ற

சொற்றொடர்களைக் காணலாம். அத்துடன் இன்று வழக்கொழிந்து போய்விட்ட "புறோநோட்டு" என்று அழைக்கப்பட்ட கடன் பத்திரங்களிலும் இவ்வகையிலேயே தம்பலகாமப்பற்றின் கீழிருந்த சிற்றூர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. தம்பலகாமம், கிண்ணியா, ஆலங்கேணி, கந்தளாய் உள்ளடங்கலான தம்பலகாமப் பற்று பிரதேசத்தில் இவ்வழமை தொடர்ச்சியாகப் பின்பற்றப்பட்டு வந்தமையினை ஆவணங்களின் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது.

7. தம்பலகமுவ (Thambalagamuwa)

*2018* ஆம் ஆண்டுக் குடித்தொகை கணக்கெடுப்புகளின்படி *20,614* முஸ்லீம்களும், *7,554* சிங்களவர்களும், *6,563* தமிழர்களுமாக *34,736* பேர் வாழ்கின்ற இப்பிரதேசம் இன்று தம்பலகமுவ (Thambalagamuwa) என்று அழைக்கப்படுகிறது. இப்பெயர் மாற்றம் சில தசாப்தங்களுக்கு முன்னால் செய்யப்பட்டு இன்றுவரை அரச நிர்வாக ஆவணங்களில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இப்பிரதேசத்தில் அடங்கியிருக்கும் பன்னிரெண்டு கிராம சேவையாளர் பிரிவுகளில் ஒரு கிராமத்தில் புராதனமான "தம்பலகாமம்"என்ற பெயர் இன்றும் ஒட்டிக்கொண்டிருக்கிறது. குடித்தொகைக் கணக்கெடுப்பின்படி சுமார் *75* வீதமான தமிழ்பேசும் (தமிழர்கள், முஸ்லீம்கள்) மக்கள் இப்பிரதேசத்தினை தம்பலகமம், தம்பலகாமம் என அழைக்கின்ற சமகாலத்திலேயே அரச நிர்வாக ஆவணங்களில் தம்பலகமுவ (Thambalagamuwa) என்று இப்பிரதேசம் அடையாளப்படுத்தப்படுவது கவனிக்கத்தக்கது.

## தம்பலகாமப் பற்று

இலங்கை ஐரோப்பியரின் காலனித்துவ ஆட்சியின் கீழ் செல்வதற்கு முன்னர் நாட்டின் வட பகுதியில் முழுமையாக வளர்ச்சியடைந்த யாழ்ப்பாணத் தமிழ் இராட்சியமும், அடங்காப்பற்று (இன்றைய வன்னிப் பிரதேசம்), திருகோணமலைப் பிரதேசம், மட்டக்களப்பு தேசம், புத்தளம், சிலாபம் ஆகிய பிரதேசங்களில் சுயாட்சி அதிகாரம் கொண்ட தமிழ் வன்னிபங்களால் ஆளப்பட்ட சிற்றரசுகளும் காணப்பட்டன. இதில் யாழ்ப்பாண இராட்சியம் தவிர்ந்த அனைத்தும் வன்னி அரசுகள் என அழைக்கப்பட்டன.

திருகோணமலைப் பிரதேசத்தினைப் பொறுத்தவரை அது நான்கு வன்னிப் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. திருகோணமலை (நகரப்பகுதி), கட்டுக்குளப் பற்று, கொட்டியாரப் பற்று, தம்பலகாமப் பற்று என்பன அவையாகும். பயிர்ச்செய்கை விருத்தியால் தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற்றிருந்த திருகோணமலையின் நான்கு வன்னிப் பற்றுக்களும் குளக்கோட்டு மன்னன் காலத்தில் சிறப்பிடம் பெற்றிருந்ததோடு ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட நிர்வாக முறைமைகளையும் கொண்டிருந்தது.

வன்னிப்பற்றுக்கள் என்றழைக்கப்பட்ட இப்பிரதேசத்தினை ஆட்சி செய்தவர்களுக்கு வழங்கப்பட்ட பட்டப்பெயர் "வன்னிபம்" என்பதாகும். இது வன்னியனார், வன்னிராசர் போன்ற சொற்களுக்கு இணையானது. வன்னிபங்கள் தமது ஆட்சிப்புலத்தில் சுயாட்சி அதிகாரம் கொண்டிருந்தனர். அவர்கள் அரசர்கள் போல் முடிசூடிக்கொள்ளும் வழக்கத் தினைக் கொண்டிருக்கவில்லை. இவர்களது காலத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களில் அவர்களது ஆட்சியாண்டு குறிக்கப்படுவதில்லை. அத்துடன் அவர்கள் நாணயங்களையும் வெளியிடவில்லை. ஆனால் நிர்வாகம், நீதி பரிபாலனம், வேளாண்மை, வரி, படைப்பலம், ஆலய பரிபாலனம் போன்றவற்றில் ஒரு அரசனுக்குரிய அதிகாரங்களைக் கொண்டிருந்தனர். இதனாலேயே பெரும்பாலான ஒல்லாந்து ஆவணங்கள் வன்னிபங்களை அரசன் என்றும், அவர்களது ஆட்சிப்புலத்தினை "இராட்சியம்" என்றும் குறிப்பிடுகிறது.

சுயாட்சி அலகுகளான இவ்வன்னிப்பற்றுக்களில் சில வெவ்வேறு காலப்பகுதிகளில் யாழ்ப்பாண மற்றும் கண்டி இராட்சியங்களின் மேலாதிக்கத்திற்கு உட்பட்டிருந்தன. இவ்வாறு மேலாதிக்கத்திற்கு உட்பட்டிருந்த வேளைகளில் அவை யானை, தேன், மெழுகு என்பனவற்றை சம்பிரதாயபூர்வமாக இராசதானிகளுக்கு வரியாகச் செலுத்தின. அத்துடன் போர் ஏற்படும் சமயங்களில் அரசனுக்கு ஆதரவாக படை நடவடிக்கைகளில் பங்குகொண்டன. இவற்றோடு உள்நாட்டு கலகங்களை அடக்குவது, வெளிநாடுகளுடனான தொடர்புகள், அரசனுக்கு பின்னான வாரிசை நியமிப்பது முதலான முக்கிய இராட்சிய விடயங்களில் வன்னிபங்களுக்கு கௌரவமான பங்கு கொடுக்கப்பட்டிருப்பதையும் வரலாற்று ஆதாரங்கள் மூலமாக அறியக்கூடியதாக இருக்கிறது. இவற்றோடு 15 ஆம், 16 ஆம் நூற்றாண்டுகளில் ஆட்சி புரிந்த யாழ்ப்பாண இராட்சிய மன்னர்கள்(1) திருகோணமலை வன்னிபங்களோடு மணத்தொடர்புகளைக் கொண்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.


“கோணேசர் கல்வெட்டு” என்னும் நூலில் இந்த நான்கு வன்னிப் பிரிவுகளிலும் ஆட்சிபுரிந்த வெவ்வேறான குலத்து வன்னிபங்களின் பெயர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் திருகோணமலைப் பற்று வன்னிபங்கள் “பூபாலகட்டு” என்னும் இடத்திலுள்ள மாளிகையில் வாழ்ந்தனர். “தனியுண்ணாப் பூபாலன்”என்பது அவர்களது சிறப்புப் பெயர். அவர்களின் முப்பத்திநான்கு (34) பெயர்ப்பட்டியல் கோணேசர் கல்வெட்டில் காணப்படுகிறது. அவற்றோடு மூன்று வன்னிப குலங்களின் விபரங்கள் காணப்படுகின்றன. அவை முறையே மருங்கூர் வன்னிபம், சோழநாட்டு வன்னிபம், காரைநகரால் வந்த வன்னிபம் என்பனவாகும். இவற்றில் பரம்பரை பரம்பரையாக ஆட்சி செய்தவர்களின் பெயர்ப் பட்டியலை கோணேசர் கல்வெட்டு விரிவாகத் தருகிறது. இவற்றில் மருங்கூர் வன்னிபம் முப்பத்தேழுபேரும் (37), சோழநாட்டு வன்னிபம் முப்பத்தொருவரும் (31), காரைநகர் வன்னிபம் நாற்பத்திமூவரும் (43) அடங்குவர். இக்குலங்கள் ஒவ்வொன்றும் கட்டுக்குளப்பற்று, தம்பலகாமப்பற்று, கொட்டியாரப்பற்று என்பவற்றை ஆட்சி புரிந்தனர். (திருகோணமலை வன்னிபங்களின் பட்டியல் அடிக்குறிப்பில் இணைக்கப்பட்டுள்ளது)

பதினாறாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் இடம்பெற்ற படை நடவடிக்கை ஒன்றினை ஒல்லாந்துப் பாதிரியார் Philipus Baldaeus அவர்கள் பதிவு செய்திருக்கிறார். கண்டி அரசனான முதலாம் விமலதர்மசூரியன் (கி.பி 1590 -1604) ஜெயவீர பண்டாரனுக்கு எதிராகப் போர்புரிந்த காலத்தில் கண்டி அரசனுக்கு ஆதரவாக கொட்டியாரப் பற்று வன்னிபம் 7,980 போர் வீரர்களையும், 600 கூலியாட்களையும், 1000 பொதிமாடுகளையும், 30 போர் யானைகளையும், 25 அலியன் யானைகளையும் அனுப்பியிருந்தான் எனக் குறிப்பிடுகிறார்.[(2)] இவ்வாவணப்படுத்தல் மூலம் கொட்டியாரப் பற்று வன்னிபத்திடம் அக்காலத்தில் கணிசமான படைப்பலம் இருந்திருக்குமென ஊகிக்க முடிகிறது. எனவே திருகோணமலையில் இருந்த ஒவ்வொரு வன்னிப்பற்றும் குறிப்பிடத்தக்க அளவு படைப்பலம் உள்ள ஆட்சி அலகாக இருந்தது என்பதனை ஊகித்தறியக் கூடியதாக உள்ளது.

திருகோணமலையில் இருந்த இந்த நான்கு வன்னிப் பற்றுக்களினதும் எல்லைகள் தொடர்பில் நீண்டகாலம் தேடிக்கொண்டிருந்தேன். அதிஷ்டவசமாக இலங்கை குடித்தொகை மதிப்பீட்டுத் திணைக்களம் 1946 இல் வெளியிட்ட குடித்தொகை விபரத்தில் கட்டுக்குளப் பற்று, கொட்டியாபுரப் பற்று, தம்பலகாமப் பற்று, திருகோணமலை (நகரப்பகுதி) என்பன தெளிவான எல்லை விபரங்களோடு பதிவு செய்யப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் அவ்வன்னிப் பற்றுக்களில் 1931 மற்றும் 1946 ஆகிய ஆண்டு காலப்பகுதிகளில் இருந்த குடிசன மதிப்பீடும் விபரமாகத் தரப்பட்டுள்ளது.

தம்பலகாமப்பற்றினை ஆட்சி செய்த பூர்வீக வன்னிபங்கள் பற்றிய தகவல்கள் இன்னும் முழுமையாக அறியப்படவில்லை என்பது இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது. அரசருக்கு இணையாக செயற்பட்டுவந்த வன்னிபம் என்ற ஆட்சி நிலையானது திருகோணமலை ஐரோப்பியர் ஆதிக்கத்தின் கீழ் வந்ததன் பின்னர் அரச பதவி நிலையாக மாற்றம் பெற்றது. அதாவது ஐரோப்பியரால் வன்னிபமாக நியமிக்கப்பட்டவர் குறித்த பிரதேசத்திற்கு வன்னிபமாகச் செயற்பட்டு ஐரோப்பியரின் அரச நிர்வாகச் செயற்பாடுகளுக்கு உதவும் ஒரு நிர்வாகியாக மாற்றப்பட்டார்.அவ்வாறு 1786 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தம்பலகாமப்பற்றிற்கு வன்னிபமாகச் செயற்பட்டவர் தொம் பிறான்சிஸ்கு கனகரட்ணம் முதலியார் என்பவர் ஆவார். இவருக்குப்பின்னர் தம்பலகாமப்பற்று வன்னிபம் தொடர்பில் கிடைக்கும் தகவல் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் கிடைக்கிறது. இக்காலத்தில் 1939 ஆம் ஆண்டில் திரு.A.கனகசிங்கம் என்பவர் வன்னிபமாக கடமையாற்றி உள்ளார்.

தொம் பிறான்சிஸ்கு கனகரட்ணம் முதலியாரின் இயற்பெயர் கனகதண்டிகை கனகரட்ணம் என்பதாகும். இவர் முதலியார் எனும் பட்டம் பெற்றவர். ஐரோப்பியர் காலத்தில் கிறிஸ்தவ மதத்தினைத் தழுவி அரசின் உயர் பதவிகளைப் பெற்றுக்




*திருகோணமலையின் நான்கு வன்னிப் பற்றுக்கள்- 1946*

For administrative purposes, the District had been divided into four Chief Headmen's or D.R.O.'s divisions at the time of the census—Koddiyar Pattu, Tampalakam Pattu, Kaddukulam Pattu, and Trincomalee Town Division. The population of these Divisions in 1946 and 1931 is shown in the following Table :—

TABLE 58—POPULATION OF TRINCOMALEE DISTRICT, BY CHIEF HEADMEN'S OR D. R. O's DIVISIONS, 1946 AND 1931

| Division | Persons 1946 | Persons 1931 | Numerical Increase 1931-1946 | Per Cent. Increase 1931-1946 |
|---|---|---|---|---|
| Koddiyar Pattu | 13.637 | 10.855 | 2,782 | 25-6 |
| Tampalakam Pattu | 16,374 | 10,931 | 5,443 | 49-8 |
| Kaddukulam Pattu | 6,312 | 4,302 | 2,010 | 46-7 |
| Trincomalee Town Division* | 39,603 | 11,404 | 28,199 | 247-3 |

* Includes Trincomalee Urban Council in 1946 and Trincomaloe Local Board in 1931.

*Census of ceylon 1946 - Department of Census and Statistics-Sri Lanka Page -116*

கொள்ளும் வழக்கம் இருந்தது. பதினேழாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் ஒல்லாந்தர் ஆட்சிக்குட்பட்டிருந்த அடங் காப்பற்று வன்னிபங்களின் பெயர் விபரங்கள்[(3)] இதற்குச் சிறந்த உதாரணமாகும். தொம் பிலிப்பு நல்லமாப்பாணர், தொம் கஸ்பாறு இலங்கை நாராயணர் (பனங்காமப் பற்று, பழைய விளாங்குளம், புதுக்குடியிருப்பு) தொம் தியோகு புவிநல்ல மாப்பாணர் (கரிக்கட்டு மூலை, மேல்பத்து) தொம் அம்பலவாணர் (கருநாவல்பத்து) தொம் சேதுகாவல மாப்பாணர் (தென்னமரவாடி) தொம் பெருமையினார் (முள்ளியவளை) ஆகிய வன்னிபங்களின் பெயர் விபரங்கள் நமக்கு மேற்கூறிய விடயத்தினை உறுதிப்படுத்துவதாக அமைகிறது. இவ்விதமே கனகதண்டிகை கனகரட்ணம் முதலியார் கிறித்தவ மதத்தினைத் தழுவி தொம் பிரான்சிஸ்கு கனகரட்ணம் என்ற பெயருடன் 1786களில் தம்பலகாமப் பற்றின் வன்னிபமாக கடமை புரிந்திருக்கிறார் என்று கருதவேண்டி உள்ளது.

இவர் தொடர்பான சிறுகுறிப்பொன்று ஒல்லாந்து ஆளுநரின் திருகோணமலை விஜயத்தின் குறிப்புகளில் இருந்து நமக்குக் கிடைக்கிறது. திருகோணமலை மாவட்ட சுற்றுப்பயணத்தின் போது ஒல்லாந்து ஆளுநர் Fabrice Van Senden அவர்கள் 03.06.1786 சனிக்கிழமை அன்று மூதூரில் இருந்து தம்பலகாமம் வந்திருக்கிறார். [(4)]

மூதூரில் இருந்து கடற்பயணமாக தம்பலகாமத்தின் முள்ளியடித்துறைக்கு வந்திறங்கிய ஒல்லாந்து ஆளுநரை தம்பலகாமப்பற்று வன்னிபமான கனகதண்டிகை கனகரட்ணம் அவர்கள் சம்பிரதாயபூர்வமான விழாக்களோடு வரவேற்று இருக்கிறார். இதன் பின்னர் கோயிற்குடியிருப்பில் இருக்கும் வாடி வீட்டினை அடைந்த ஆளுநர் தனது தம்பலகாமப்பற்று தொடர்பான அரசகடமைகளை நிறைவேற்றும் போது அவருக்கு உறுதுணையாக வன்னிபம் கனகதண்டிகை இருந்ததை ஆளுநரின் சுற்றறிக்கை விபரிக்கிறது.

சமகாலத்தில் வன்னிபம் கனகதண்டிகை கனகரட்ணம் அவர்களின் செயற்பாடுகளில் அதிருப்தி அடைந்த தம்பலகாமத்தைச் சேர்ந்த சுப்பிரமணியன் என்பவர் தலைமையிலான 10 அல்லது 12 பேர் அடங்கிய குழு ஒன்று தம்பலகாமம் வன்னிபத்தையும், ஆளுநரையும் பற்றிப் புகார் செய்யக் கொழும்பு சென்ற விடயமும் ஆளுநரின் சுற்றறிக்கையில் காணப்படுகிறது.

இவருக்குப் பிறகு தம்பலகாமப்பற்று வன்னிபம் தொடர்பில் நமக்குக் கிடைக்கும் தகவல் திரு. A.கனகசிங்கம் தொடர்பானது. இவரும் கனகரட்ணம் அவர்களைப் போல வன்னிபம் எனும் பதவியினை வகித்த நியமன வன்னிபமாவார். 1939 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவர் தம்பலகாமப்பற்று வன்னிபமாக கடமையாற்றி இருக்கிறார்.(5) இவர் தனது பதவிக்காலத்தில் கோயிலடியில் குடும்பத்தினருடன் வசித்திருக்கிறார். இவர் தனது வன்னிபப் பதவிக்கு மேலதிகமாக இங்கு இயக்கிய கிராமிய நீதிமன்றத்தின் நீதிபதியாகவும் செயற்பட்டு இருக்கிறார்.

பிரித்தானியரால் உருவாக்கப்பட்ட இக்கிராமிய நீதிமன்றம் 19.10.1876 இல் தம்பலகாமத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டது.(6) இந்நீதிமன்றம் தம்பலகாமம் ஆதி கோணநாயகர் ஆலயத்திற்கு முன்னால் உள்ள மூர்க்காம்பிகை ஆலயத்தின் பின்னால் உள்ள பெரிய புளியமரத்தடியில் இருந்திருக்கிறது. மிக உயரமான அடித்தளமுள்ள இந்நீதிமன்ற கட்டிடம் இன்று முற்றாக அழிவடைந்துவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

தம்பலகாமப்பற்று ஒரு இராட்சியத்துக்குரிய அந்தஸ்துடன் சுயாட்சி அலகாக தமிழ் குறுநில மன்னர்களான வன்னிபங்களால் பரம்பரை பரம்பரையாக ஆட்சி செய்யப்பட்டது வரலாறு என்ற போதிலும் அவ்வாறு ஆட்சி செய்த வன்னிபங்கள் தொடர்பான கல்வெட்டுக்கள், ஆவணங்கள் இற்றைவரை வெளிப்படுத்தப்படவில்லை என்பது கவலை தரும் செய்தியே. தம்பலகாமத்தின் பல்வேறு

பகுதிகளில் இன்னும் ஆவணப்படுத்தப்படாமல் இருக்கும் கல்வெட்டுக்கள், ஆலயத்தொழும்பாளர்களிடமும், முன்னாட் களில் அரச உயர் பதவி வகித்தோரின் சந்ததியினரிடமும் இன்னும் வெளிப்படுத்தப்படாமல் இருக்கும் புராதன ஆவணங்கள் பொதுமக்களின் பார்வைக்கு வருமிடத்து தம்பலகாமப்பற்றினை சுயாட்சி அதிகாரத்துடன் ஆண்ட வன்னிபங்களின் விபரங்களை வரலாற்றுப் படிமுறைகளுக்கு அமைவாக வரிசைப்படுத்த முடியும்.

திருகோணமலை வன்னிபங்களின் ஆட்சி அதிகாரங்கள் பற்றி தெளிவான தகவல்களைத் தரும் ஐரோப்பிய நிர்வாக ஆவணம் அலெஷாந்தர் ஜோன்ஸ்ரன்[7] ஆவணச் சுவடிகளாகும். *1815* ஆம் ஆண்டு பிரதமநீதியரசர் அலெஷாந்தர் ஜோன்ஸ்ரன் ஒல்லாந்து அரசாங்கம் தமிழர் வாழும் பகுதிகளுக்கென தொகுத்து சட்டமாக்கிய தேசவழமைகளின் பிரதிகளை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி இருந்தார். அவற்றின் பிரதிகள் அலெஷாந்தர் ஜோன்ஸ்ரன் ஆவணச் சுவடிகள் என்ற தொகுப்பாக வெளிவந்தன.

திருகோணமலை வன்னிமைகள் பற்றியும், அங்கிருந்த தேசவழமை பற்றியும் அறிய உதவும் வரலாற்றாதாரங்களாக இவ்வாவணம் விளங்குகின்றது. திருகோணமலை மாவட்ட-த்தைச் சேர்ந்த நான்கு வன்னிமைகளும் இவ்வாவண உருவாக்கத்தில் பங்கு கொண்ட வேளை தங்கள் பகுதிகளில் நடைமுறையில் இருந்த தேசவழமை குறித்து அறிக்கை சமர்ப்பித்திருந்தார்கள். இவ்வாறு எழுதப்பட்ட அறிக்கைகள் சுருக்கமானவை என்றாலும் திருகோணமலை தேசவழமை குறித்த சில முக்கிய அம்சங்களை இவ்வறிக்கைகள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## தம்பலகாமப் பற்றிலுள்ள வழமைகள் தொடர்பில் தம்பலகாமம் தலைமைக்காரர் எழுதிய அறிக்கை *10.04.1815*

### கல்யாணம் பற்றிய வழமைகள்

கல்யாணஞ் செய்ய விரும்புவோர் அதனைப் பற்றி (நாட்டு) வன்னியனாருக்கு அல்லது தங்களிடத்து முதலியார்களுக்கு அறிவித்தல் வேண்டும். அவ்வாறு அவர்களிடம் போகும் போது வெற்றிலை கொண்டு போகுதல் முறையாகும். அவர்கள் முன்னிலையில் மணமகனும், மணமகளும் கல்யாண ஒப்பந்தம் எழுதிக் கொள்ளல் வேண்டும். மணமகன், மணமகள் ஆகியோரில் எவரேனும் ஒருவர் தனது வாக்குறுதியிலே தவறினாற் குற்றப்பணம் கொடுப்பதாகவும் தண்டனைகளை உத்தரிப்பதாகவும் கலியாண ஒப்பந்தத்தில் உத்தரவாதம் செய்தல் வேண்டும். அதற்குப் பின்பு இன பந்துக்களிடம் வெற்றிலையுடன் சென்று அவர்களைக் கல்யாணச் சடங்கிற்கு அழைக்க வேண்டும். பிராமணரை அழைத்து வந்து சுற்றத்தவர் முன்னிலையிற் கல்யாணச் சடங்கினைச் செய்து மணமகளின் கழுத்திலே மணமகன் தாலியினைக் கட்டுதல் வேண்டும். அதன் பின் மணமகளின் பெற்றோர் சீதன உறுதியினை ஓலையில் எழுதிக் கொடுத்தல் வேண்டும்.

### சீதனம்

தாய், தகப்பன் ஆனவர்கள் தாம் சீதனமாகவும் தேடிய தோட்டமாகவும் பெற்றுள்ள தங்க நகை, வெள்ளி நகை, வயல், குளம், தோட்டம், அடிமைகள் முதலான சொத்துக்களைத் தங்கள் பிள்ளைகளுக்குச் சீதனமாகக் கொடுப்பர்.

### சொத்துரிமை

தாய், தகப்பன் ஆனவர்கள் சீதனமாகவும் தேடிய தோட்ட மாகவும் பெற்றுள்ள உடமைகள் பிள்ளைகளுக்குச் சேரும். முதுசமாகக் கிடைத்த பொருட்கள் மருமக்களுக்குச் சேரும்.

பிள்ளைகள் இல்லாதவிடத்து அவை மிக நெருங்கிய உறவினர்களுக்குச் சேரும். அப்படியானவர்களும் இல்லாவிடில் அச்சொத்துக்கள் திருச்சபைக்குக் கொடுக்கப்படும்.

### ஆதனங்கள்

காடுகளைத் திருத்தி நிலத்தைச் செய்கை பண்ண வேண்டுமாயின் அதனைப்பற்றி வன்னியனாருக்கு அல்லது முதலியாருக்கு அறிவித்து அவரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்குப் பின் காடுகளை வெட்டி நெற் காணிகளையும், தோட்டங்களையும் அமைத்து அவற்றை உடைமைகளாக்கிக் கொள்ளலாம். அத்தகைய நிலங்களைப் பிறருக்கு விலைகொண்டு விற்கவோ, ஒற்றியாகக் கொடுக்கவோ முடியும். மேலும் அவற்றை பிள்ளைகளுக்கு சீதனமாகவும் கொடுக்கலாம். நெற்காணிகளிலிருந்தும், தோட்டங்களிலிருந்தும் வரும் வருமானத்திலே 10வீதம் கோணேசர் கோயிலுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

### நன்கொடை

சீதனம், தேடிய தோட்டம், முதுசொம் ஆகியவற்றை எவரேனுமொருவர் நன்கொடையாகக் கொடுக்க விரும்புமிடத்து அதனைப்பற்றி மனைவி, மக்கள், மருமக்கள் அவர்களல்லாத உரிமையாளர், பிறர் ஆகியோருக்கு அறிவித்து அதற்கான அவர்களின் சம்மதத்தினை எழுத்து மூலம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். அவ்விதமாகச் செய்யப் பெறாத நன்கொடை பெறுமதியற்றதாகும்.

### கூலி

எவரேனும் ஒருவர் மனிதனொருவனைக் கூலியாளாகக் கொண்டால் அம்மனிதனுக்கு உணவும் வருடமொன்றிற்கு இரண்டு வேட்டிகளும் கொடுக்க வேண்டும். பொருந்திய காலம் முடிந்ததும் அம்மனிதனுக்கு ஐந்து இறைகால் பணங் கொடுத்தல் வேண்டும். கூலியாள் பன்னிரண்டு மாதகாலத்துக்கு வேலை செய்தல் வேண்டும்.

10.04.1815 ஆம் திகதியிட்ட இந்த அறிக்கை மிகவும் சுருக்கமானது. கலியாணம், சீதனம், சொத்துரிமை, நிலங்களைச் செய்கை பண்ணுதல்,கடனுக்கு வட்டி செலுத்துதல், அடிமைகள், வன்னிபங்களின் அதிகாரம், கோணேசர் கோயிலுக்குரிய உரிமைகள் முதலானவற்றைப் பற்றிய குறிப்புக்களை இந்த ஆவணங்கள் தெளிவாக விபரிக்கின்றன. தம்பலகாமம் வன்னிபங்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த காலப்-பகுதியில் இப்பிரதேசத்தில் இருந்த தேசவழமை பற்றிய வரலாற்றாதாரமாக இவை கொள்ளத்தக்கவை.

உசாத்துணை :


1. வன்னியர் பேராசிரியர் சி. பத்மநாதன் 1970 - பக்கம் 42
2. கோணேசர் கல்வெட்டு சில ஆராய்ச்சிக் குறிப்புக்கள். பேராசிரியர் சி.பத்மநாதன், கோணேசர் கல்வெட்டு பதிப்பாசிரியர் பண்டிதர் இ.வடிவேல் பக்கம் 34, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்- 1993
3. இலங்கைத் தமிழர் தேசவழமைகளும், சமூக வழமைகளும் பேராசிரியர் சி .பத்மநாதன் 2001 - பக்கம் 74
4. காலனித்துவ திருகோணமலை - கலாநிதி கனகசபாபதி சரவணபவன் 2010 - பக்கம் 94
5. இலங்கைத் தமிழர் தேசவழமைகளும், சமூக வழமைகளும் பேராசிரியர் சி .பத்மநாதன் 2001 - பக்கம் 226
6. காலனித்துவ திருகோணமலை - கலாநிதி கனகசபாபதி சரவணபவன் 2010 - பக்கம் 231
7. இலங்கைத் தமிழர் தேசவழமைகளும், சமூக வழமைகளும் பேராசிரியர் சி .பத்மநாதன் 2001 - பக்கம் 201

அடிக்குறிப்பு

## திருகோணமலை வன்னிபங்கள்

கோணேசர் கல்வெட்டில் வருகின்ற உரைநடைப் பகுதியில் நான்கு வம்சங்களைச் சேர்ந்த வன்னிபங்களின் பெயர் பட்டியல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவர்கள் திருகோணமலைப் பிராந்தியத்தின் நான்கு வன்னிமை பிரிவுகளில் தலைவர்களாக விளங்கிய வெவ்வேறு வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்பது புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

இவர்களில் தனியுண்ணாப்பூபாலன் என்ற பட்டப்பெயரை உடைய வன்னிபங்கள் திருகோணமலைப் பற்றுப் பகுதியை ஆட்சி செய்தவர்கள் என்பது கவனிக்கத்தக்கது. இவர்கள் பூபாலக்கட்டு என்னும் இடத்தில் மாளிகை அமைத்து வாழ்ந்து வந்ததை கோணேசர் கல்வெட்டின் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது.

திருகோணமலை வன்னிபங்கள் தொடர்பான பூரணமான வரலாற்று ஆய்வுகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் போது இன்னும் பல அரிய தகவல்கள் கிடைக்கக்கூடியதாக இருக்கும்.

### மதுரை மாநகரால் வந்த வன்னிபம்

1. திகழ்மதிக் குலராமன் தனியுண்ணாப்பூபாலன்
2. திருமலைநாடன் தனியுண்ணாப்பூபாலன்
3. சுந்தரநாத தனியுண்ணாப்பூபாலன்
4. அரசுநிலைதவறாத் தனியுண்ணாப்பூபாலன்
5. தன்தாரதார பிறர்புத்திர தனியுண்ணாப்பூபாலன்
6. மனுநீதிதவறாத தனியுண்ணாப்பூபாலன்
7. மண்டலநாயக தனியுண்ணாப்பூபாலன்
8. பசுபதி தனியுண்ணாப்பூபாலன்

9. இலங்கைகாவல தனியுண்ணாப்பூபாலன்
10. குணதுங்கராம தனியுண்ணாப்பூபாலன்
11. அமராபதி தனியுண்ணாப்பூபாலன்
12. சந்திரநேச தனியுண்ணாப்பூபாலன்
13. புவனேயகாவல தனியுண்ணாப்பூபாலன்
14. குறும்பர்கள்கோன் தனியுண்ணாப்பூபாலன்
15. மாற்றலர் பெருமான் தனியுண்ணாப்பூபாலன்
16. செகதுங்கபோச தனியுண்ணாப்பூபாலன்
17. கயிலாயநேச தனியுண்ணாப்பூபாலன்
18. வெற்றி நாயக தனியுண்ணாப்பூபாலன்
19. தன்னாண்மை குன்றாத் தனியுண்ணாப்பூபாலன்
20. பொன்னவராய தனியுண்ணாப்பூபாலன்
21. உத்தமமொழியான் தனியுண்ணாப்பூபாலன்
22. செல்வநாயக தனியுண்ணாப்பூபாலன்
23. வெற்றி நாயக தனியுண்ணாப்பூபாலன்
24. மருதநாயக தனியுண்ணாப்பூபாலன்
25. முருகநாயக தனியுண்ணாப்பூபாலன்
26. சுப்பிரகாய தனியுண்ணாப்பூபாலன்
27. நல்லநாயக தனியுண்ணாப்பூபாலன்
28. வல்லிகாவல தனியுண்ணாப்பூபாலன்
29. பிள்ளைநாயக தனியுண்ணாப்பூபாலலன்
30. பெரியகாவல தனியுண்ணாப்பூபாலன்
31. சிதம்பரநாயக தனியுண்ணாப்பூபாலன்
32. பரமநாயக தனியுண்ணாப்பூபாலன்
33. கதிரைநாயக தனியுண்ணாப்பூபாலன்
34. சேதுகாவல தனியுண்ணாப்பூபாலன்

### காரைநகரால் வந்த வன்னிபம்

1. செகராசநாத வன்னிபம்
2. குருநாதராம வன்னிபம்
3. உலகாண்ட வன்னிபம்
4. கயிலாய வன்னிபம்
5. கனகராச வன்னிபம்

6. படைகாத்த வன்னிபம்
7. எதிரிகளேறு வன்னிபம்
8. கணபதிராச வன்னிபம்
9. நயத்தருராம வன்னிபம்
10. தருமநெறியான் வன்னிபம்
11. படைவீரங்கண்ட வன்னிபம்
12. மதுரவாசக வன்னிபம்
13. தியாகராச வன்னிபம்
14. கரசைகாவல வன்னிபம்
15. அன்னசத்திர வன்னிபம்
16. வரையாதளிக்கும் வன்னிபம்
17. கதிரைமாமலை வன்னிபம்
18. ஏகாந்த வன்னிபம்
19. ஏரம்ப வன்னிபம்
20. நல்லையினார் வன்னிபம்
21. சொக்கனாயக வன்னிபம்
22. சுந்தரனாத வன்னிபம்
23. பாற்கரர் வன்னிபம்
24. வீரராம வன்னிபம்
25. குணதுங்கராம வன்னிபம்
26. நாகமாமணி வன்னிபம்
27. கயிலாயநாயக வன்னிபம்
28. புவிராம வன்னிபம்
29. சோமநாயக வன்னிபம்
30. உலகநாயக வன்னிபம்
31. சூரியநாயக வன்னிபம்
32. நந்திநாயக வன்னிபம்
33. சந்திரதேவ வன்னிபம்
34. இலட்சுமிநாயக வன்னிபம்
35. இலட்சுமிநாயக வன்னிபம்
36 சந்திரதேவ வன்னிபம்
37. பெற்றிநாயக வன்னிபம்
38. உலகநாயக வன்னிபம்
39. வயிரவநாயக வன்னிபம்

40. அரசுகாவல வன்னிபம்
41. திருமலைப் பெருமாள் வன்னிபம்
42. சிதம்பரநாத வன்னிபம்
43. புட்பநாயக வன்னிபம்

சோழநாட்டால் வந்த வன்னிபம்

1. காராளசிங்க வன்னிபம்
2. தந்தியசிங்க வன்னிபம்
3. மதராசசிங்க வன்னிபம்
4. திருமலைராயசிங்க வன்னிபம்
5. இராமசிங்க வன்னிபம்
6. இலட்சுமணசிங்க வன்னிபம்
7. சந்திரசிங்க வன்னிபம்
8. அடைக்கலங்காத்தசிங்க வன்னிபம்
9. கங்கைகாவலசிங்க வன்னிபம்
10. மருதநாயகசிங்க வன்னிபம்
11. கனகநாயகசிங்க வன்னிபம்
12. இலங்கைகாவலசிங்க வன்னிபம்
13. கயிலாயசிங்க வன்னிபம்
14. குமாரவேல்சிங்க வன்னிபம்
15. திருவம்பலசிங்க வன்னிபம்
16. பரமானந்தசிங்க வன்னிபம்
17. அம்புயபதிசிங்க வன்னிபம்
18. சிவஞானமுத்துச்சிங்க வன்னிபம்
19. சித்தநாயகசிங்க வன்னிபம்
20. நாகமாமணிச்சிங்க வன்னிபம்
21. சிதம்பரநாயகசிங்க வன்னிபம்
22. நல்லநாயகசிங்க வன்னிபம்
23. அருணநாயகசிங்க வன்னிபம்
24. வீரசுந்தரசிங்க வன்னிபம்
25. சொக்கநாயகசிங்க வன்னிபம்
26. தருமநாயகசிங்க வன்னிபம்
27. அத்திநாயகசிங்க வன்னிபம்

28. மூத்தநாயகசிங்க வன்னிபம்
29. பசுபதிநாயகசிங்க வன்னிபம்
30. இராசரத்தினசிங்க வன்னிபம்
31. எதிர்வீரசிங்க வன்னிபம்

மருங்கூர் வன்னிபம்

1. நடராச குமாரசிங்க வன்னிபம்
2. வெற்றிக் குமாரசிங்க வன்னிபம்
3. இராமநாதக் குமாரசிங்க வன்னிபம்
4. இலட்சுமணநாதக் குமாரசிங்க வன்னிபம்
5. நல்லநாயக குமாரசிங்க வன்னிபம்
6. சிங்க வன்னிபம்
7. தில்லைநாதக் குமாரசிங்க வன்னிபம்
8. எல்லைக்காவல குமாரசிங்க வன்னிபம்
9. சாரங்கநாயக குமாரசிங்க வன்னிபம்
10. கங்கைகாவல குமாரசிங்க வன்னிபம்
11. இலங்கைகாவல குமாரசிங்க வன்னிபம்
12. தனிமைநாயக குமாரசிங்க வன்னிபம்
13. சந்திரராய குமாரசிங்க வன்னிபம்
14. கயிலாய குமராசிங்க வன்னிபம்
15. சந்திரராய குமாரசிங்க வன்னிபம்
16. கயிலாய குமராசிங்க வன்னிபம்
17. இரகுநாத குமாரசிங்க வன்னிபம்
18. சுப்பிரகாச குமாரசிங்க வன்னிபம்
19. தனமநாயக குமாரசிங்க வன்னிபம்
20. வேதனாயக குமராசிங்க வன்னிபம்
21. கொற்றவராச குமாரசிங்க வன்னிபம்
22. தண்டுவார்மிண்டக் குமாரசிங்க வன்னிபம்
23. எதிரிநாயகக் குமாரசிங்க வன்னிபம்
24. கோமளராகவ குமாரசிங்க வன்னிபம்
25. திருமலைராய குமாரசிங்க வன்னிபம்
26. அடைக்கலங்காத்த குமாரசிங்க வன்னிபம்
27. படைவீரகண்ட குமாரசிங்க வன்னிபம்

28. அம்புயாபதிக் குமாரசிங்க வன்னிபம்
29. சரவண குமாரசிங்க வன்னிபம்
30. சேதுநாத குமாரசிங்க வன்னிபம்
31. சித்திரமொழிக் குமாரசிங்க வன்னிபம்
32. மனுநேயநாயக குமாரசிங்க வன்னிபம்
33. ஆரியநேய குமாரசிங்க வன்னிபம்
34. சித்திரமொழிக் குமாரசிங்க வன்னிபம்
35. சுந்தரநாய குமாரசிங்க வன்னிபம்
36. திருவுறைநாடன் குமாரசிங்க வன்னிபம்
37. குணரத்தினக் குமாரசிங்க வன்னிபம்

# தம்பலகாம தேசம்

தேசம், நாடு தொடர்பாக பல்வேறுபட்ட விவாதங்கள் பரவலாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தேசம் எனும் கோட்பாடு என்றென்றும் நிரந்தரமாக இருந்தது இல்லை. அது காலத்துக்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக்கொண்டே வந்திருக்கிறது. இத்தகைய சூழலில் அரசியல், புவியியல், பண்பாட்டியல் சார்பாக நாடு, தேசம் என்பனவற்றை நாம் இன்று பிரித்தறிய முயன்று வருகிறோம்.

தேசம் என்பது பெரும்பாலும் ஒரே மொழிமரபு, இனக்குழு, குடிவழக்கு போன்ற ஒன்றித்த இனக்குழுக்கள் வாழும் பகுதிகளைக் குறிக்கிறது. அத்தோடு தொடர்ந்து வரும் வரலாறு, பாரம்பரியமாக வாழ்ந்துவருகின்ற நிலம் போன்ற கூறுகளையும் உள்ளடக்கியதாக இருக்கிறது.

வடமொழிச் சொல்லான தேஷம் என்பதன் தமிழ் வடிவம் “தேஎம்” ஆகும். அதன் திரிபடைந்த வடிவமே இன்று நாம் பயன்படுத்தும் தேசம். வடசொல்லைத் தமிழில் எழுதும்போது வடசொல்லிற்கே உரிய

எழுத்தை நீக்கி விட்டு அவ்விடத்தில் இருமொழிக்கும் பொதுவான எழுத்தைச் சேர்த்து வழங்கவேண்டும் என்பது தொல்காப்பிய எச்சவியல் விதியினால் அறியப்படுகிறது. “வட சொற்கிளவி வடவெழுத்தொரீஇ-எழுத்தொடு புணர்ந்த சொல்லாகுமே” என்கிறது தொல்காப்பியம். தேஷம் என்ற வட சொல்லில் உள்ள ‘ஷ’ வடவெழுத்தாகும். இதை நீக்கி விட்டு அதற்கு மாற்றாக இரு மொழிக்கும் பொதுவான உயிரெழு த்தான எகரத்தைச் சேர்த்து ‘தேஎம்’ என்றெழுத வேண்டு மென்கிறார் தொல்காப்பிய நூற்பாவிற்கு உரை விளக்கம் எழுதிய சேனாவரையர் .

சங்க இலக்கியங்களில் தேஎம் என்ற சொல்லின் பயன்பாடு தொடர்பில் விரிவாக ஆராய்ந்த புலவர் சு. முருகேசன் அவர்கள் “தேசம் வடசொல்லே” என்ற தனது ஆய்வுக் கட்டுரையில் தேசம் என்னும் சொல் பத்துப்பாட்டில் பதினைந்திடங்களிலும், எட்டுத்தொகையில் நாற்பத்திநான்கிடங்களிலும், பதினெண்கீழ்க் கணக்கில் மூன்றிடங்களிலுமாக அறுபத்தியிரண்டிடங்களில் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் குறிப்பிடுகிறார். இவற்றில் முப்பதிடங்களில் திசை, திக்கு, வழி, இடம் என்று இடப்பொருளில் வருவதையும். மூன்றிடங்களில் தேயம் என்று இடையினயகரம் பெற்று அழிவு, கலக்கம் என்னும் பொருளில் வருவதையும் பதிவுசெய்கிறார்.

சங்க இலக்கியங்களில் தேஎம் என்னும் சொல் நாடு என்னும் பொருளில் முப்பத்தியிரண்டிடங்களில் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இவற்றில் ஆறிடங்களில் தன்னாட்சி செல்லாத வேறு பல, அகன்ற இடத்தையுடைய, பணிந்தவருள்ள தேசமென்று வருகிறது. ஒன்பதிடங்களில் பகைவர் தேசமென்றும், ஆறிடங்களில் முன்பின் அறியாத தேசமென்றும் பதினைந்திடங்களில் மொழி வேறாகிய தேசமென்றும், ஓரிடத்தில் வடுகர்தேசமென்றும் வருகிறதென்று புலவர் சு.முருகேசன் அவர்கள் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு சங்க இலக்கியங்களில் தேஎம் என்று வழங்கிவந்த சொல் பின்னர் திரிபடைந்து இன்று நாம் பயன்படுத்தும் தேசம் என்றானது. இன்றைய நிலையில் தேசம் என்பது தமக்கே உரிய புவியியற் பரிமாணங்களைக் கொண்டது. எல்லைகள் குறித்து அடையாளங் காணக்கூடிய நிலப்பகுதிகளைத் தன்னகத்தே கொண்டவை. இவை தனித்துவமான வரலாற்று அனுபவங்களால் உருவான சமுதாய அமைப்பினைப் பிரதிபலிப்பவை. மொழி வழியாகவும், சமூக வழமைகள், பண்பாட்டு அம்சங்கள் என்பவற்றின் வழியாகவும் உருவாகிய பொதுமையினை உணர்ச்சிபூர்வமாகப் பிரதிபலிப்பது தேசம் எனறு அழைக்கப்படுகிறது. தமிழரின் அரசியல் நோக்கில் அமைந்த சிந்தனை வளர்ச்சியின் ஒரு பிரதான கட்டமென பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் தேசம் தொடர்பில் தனது கருத்துக்களைப் பதிவு செய்திருப்பது இங்கு கூர்ந்து கவனிக்கத்தக்கது.

திருகோணமலையைப் பொறுத்தமட்டில் அது நான்கு வன்னிப் பிரிவுகளாக நிர்வாக ரீதியில் இயங்கி வந்ததினை ஐரோப்பியர் ஆவணங்கள் மூலம் அறியமுடிகிறது. இந்நான்கு வன்னிப் பிரிவுகளும் திருக்கோணேச்சரத்துடன் தொடர்புடையவை. திருக்கோணேச்சரம் திருகோணமலைப் பிராந்தியத்தின் நிலவுடமை மீது கொண்டிருந்த அதிகாரத்தினைப் பிரதிபலிப்பவை. இந்நான்கு பிரிவுகளும் பற்றுக்கள், தேசங்கள் என அழைக்கப்பட்டு வந்தது. அவையாவன திருகோணமலைப் பற்று (தேசம்), கட்டுக்குளப் பற்று (தேசம்), கொட்டியாரப் பற்று (தேசம்), தம்பலகாமப் பற்று (தேசம்) என்பனவாகும். இங்கு குறிப்பிடப்படும் சுயாட்சி நிறைந்த இந்நான்கு வன்னிப் பிரிவுகளையும் ஐரோப்பியரின் ஆவணங்கள் “இராட்சியங்கள்” என்றே வரையறுக்கின்றன. இவற்றினை நான்கு வன்னிமைகள் ஆட்சி செய்தனர். இந்நான்கு தேசத்தினதும் அதிகாரமையமாக திருக்கோணேச்சரம் இருந்தது.

திருகோணமலைத் தமிழர்களிடையே தேசம் என்ற சொல் வழங்கப்பட்டது தொடர்பில் நமக்குக் கிடைக்கும் முதல்

ஆவணம் வெருகல் "ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல்" எனும் நூல். தம்பலகாமத்தினைச் சேர்ந்த ஐ.வீரக்கோன் முதலியார் என்பவரால் பதினேழாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் வெருகலில் அமைந்திருக்கும் சித்திரவேலாயுதர் சுவாமி மீது பாடப்பட்ட இந்நூல் கொட்டியாரப்பற்று இருமரபுந்துய்ய இளஞ்சிங்கம் எனும் வன்னிபத்தின் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டிருக்கிறது.

துன்னு மிருமரபுந் துய்யவிளஞ் சிங்கமெனும்
வன்னிமை பொற் பாதம் வணங்கையினீ சொல்லாதை
வன்னிமை தேசத்தார் மகாநாடு தான் கூடி
மின்னுமெழில் மண்டபத்தில் வீற்றிருக்கும் வேளையிலே

எனும் பாடல் வரிகள் தேசத்தார் மகாநாடு பற்றிக் குறிப்பிடுகிறது.

இந்நூல் அரங்கேற்றம் ஒரு பெருவிழாவினை ஒத்த வைபவமாக இருந்தது. இது வெருகல் சித்திரவேலாயுதர் ஆலய மண்டபத்தில் தேசத்தார் சபையோராக இருக்க அரங்கேறியது. இங்கு தேசத்தார் என விழிக்கப்படுவது கொட்டியாரப் பற்று தேசத்தவர் எனக்கருதப்படுகிறது. இங்கு குறிப்பிட வேண்டிய முக்கிய அம்சம் தேசத்தவரால் கூட்டப்பட்ட இக்கூட்டம் மகாநாடு என்று அழைக்கப்பட்டிருக்கிறது. இது வன்னிபத்தின் தலைமையில் நடைபெற்றதையும் இப்பாடல் குறிக்கிறது. 17ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் திருகோணமலைப் பிராந்தியங்களை தேசம் எனக் குறிப்பிடும் சமூக வழக்கினையே இந்நூல் ஆவணப்படுத்தியிருக்கிறது.

மட்டக்களப்பு தேசம், முக்குவதேசம், யாழ்ப்பாண தேசம் எனும் சொற்றொடர்கள் இலங்கையின் வடகிழக்குப் பகுதிகளில் முற்காலங்களில் வழங்கி வந்ததை பண்டைய நூல்களிலும், ஆவணங்கள் மூலமாகவும் அறியமுடிகிறது. இவற்றுடன் கிழக்கிலங்கையின் பல ஆலயங்கள் தேசத்துக்கோயில் என இன்றும் வழங்கி வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது.

வெருகல் சித்திரவேலாயுதர் சுவாமி ஆலயம். திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆலயம், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம் போன்றன தற்போதும் அப்பிரதேச மக்களால் தேசத்துக் கோயிலாக கொண்டாடப்படுவதனை இன்றும் காணலாம்.

தம்பசிட்டி, வியாபாரிமூலையில் கிடைக்கப்பெற்ற ஒல்லாந்து அரச முத்திரையுடன் கூடிய தோம்புகளின் அடிப்படையில் (திருக்கோணேச்சரம் போர்த்துக்கீசரினால் முற்றாக அழிக்கப்பட்டதன் பின்னர்) தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயம் திருகோணமலைப் பற்று, கட்டுக்குளப் பற்று, கொட்டியாரப் பற்று, தம்பலகாமப் பற்று ஆகிய நான்கு பிரதேசத்தினைச் சேர்ந்த முப்பத்து மூன்று (33) ஊரவர்கள் கொண்டாடி மகிழும் கோயிலாக இருந்ததனை அறியக்கூடியதாக இருக்கிறது. எனவே இவ்வாலயம் பழமையில் தேசத்துக் கோயிலாகப் போற்றப்பட்டிருக்கும் என்பதனை புரிந்துகொள்ளமுடியும். எனினும் காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றங்களால் தேசத்துக் கோயில் என்ற வழமை தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயத்தில் இன்று வழக்கொழிந்து போயிருக்கிறது.

மிக அண்மைக்காலத்தில் நீண்ட தேடலின் பின்னர் கிடைக்கப்பெற்ற நான்கு ஆவணங்கள் தேசம் தொடர்பிலான மிக முக்கிய ஆவணப்படுத்தலாக அமைகின்றது. அவை தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயத்துடன் தொடர்புடையவை. அவ்வாலயத்தில் தொன்றுதொட்டு நடைபெற்று வரும் வழமைகளைப் பிரதிபலிப்பவை. ஆதிகோணநாயகர் ஆலயம் பழமையில் தேசத்துக் கோயிலாக விளங்கிவந்ததை ஞாபகமூட்டுபவை.

முதலாவது ஆவணம் இன்றைக்கு சுமார் நூற்று இருபது (120) வருடங்களுக்கு முன்னர் எழுதப்பட்டது. அது தம்பலகாமம் ஆதிகோணநாயகர் கோயில் தொழும்புகள் பற்றி ஒரு நியமன உறுதி முடித்துக் கொடுக்கப்பட்டதைச் சொல்கிறது.

தம்பலகாமம் தொடர்பான வரலாற்றுத் தேடலில் ஈடு-பட்டிருந்தபொழுது எனது முன்னை நாள் ஆங்கில ஆசான் திரு.இந்திரசூரியன் அவர்களிடம் இருந்து இவ்வரிய பொக்கிசம் கிடைக்கப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

"திரு. வேதபுராண காவியங்களின் பிரகாரம் தெக்ஷிண கயிலாய, திருகயிலம்பதியாகிய திருக்கோணமலையில் எழுந்தருளியிருக்கும் எங்கடவுளாகிய சிவபெருமான் கோணைநாயகனை வணங்கி, தற்காலம் திரு.கொட்டியாபுரப் பற்று மேங்காமத்தில் வசிக்கும் இருமரபுந் தூய எதிர்வீரசிங்க நல்ல பூபால வன்னிபமாகிய நான் திரு. தம்பலகமம் கோணைநாயகர் கோவிற் கருமங்களைப்பற்றி பாராபரிப்புத் தத்துவ நியமன உறுதி முடித்துக் கொடுத்த விபரம்[1]" என்று தொடர்கிறது 1893 ஆம் ஆண்டு ஆனி மாதம் 14 ஆம் திகதி எழுதப்பட்ட இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆவணம்.

திருகோணமலையில் இருந்த நான்கு பிராந்தியங்களும் நான்கு தேசங்களாக கருதப்பட்ட அதேவேளை இங்கு பரம்பரை பரம்பரையாக நடைமுறையில் இருந்து வந்த வழமைகள் தேசவழமைகள் அல்லது தேசவழக்கு என கருதப்பட்டதையும் இவ்வாவணம் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயத்தினை பராமரிப்பது தொடர்பில் கட்டளைகளை எழுத முனைந்த வன்னிபம்

"இந்தப்பிரகாரம் நான் பூர்வீகம் தொடக்கம் பாரம்பரியமாக நடந்துவந்த இந்த தேசவழக்கப்படி எனக்குள்ள சொந்த உரித்தைக் கொண்டும் மேற்சொல்லிய கோவில் கூட்டத்தில் எனக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டும்" அக்கட்டளைகளை வழங்குவதாக பதிவுசெய்திருக்கிறார்.

இங்கு குறிப்பிடப்படும் பூர்வீகம் தொடக்கம் பாரம்பரியமாக நடந்து வந்த இந்த தேசவழக்கப்படி எனக்குள்ள சொந்த உரித்து என்பது திருகோணமலையின் நான்கு வன்னிப் பிரிவுகளும் நான்கு தேசங்களாக நிர்வகிக்கப்பட்டதையும், அந்நாங்கு தேசங்களின் அதிபதியாக வன்னிபங்கள் செயற்பட்டதையும்,

இந்நான்கு தேசங்களினதும் சொத்தாக இருந்த இவ்வாலய நடைமுறைகளைப் (தேசவழக்கு) பேணுவதில் அவர்கள் சிறப்பதிகாரம் பெற்றிருந்தமையையும் குறிப்பால் உணர்த்துகிறது. இவற்றோடு இத்தேசங்களில் ஒவ்வொரு விடயங்களும் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதில் தெளிவான ஒழுங்குகள் பின்பற்றப்பட்டன என்பதனை இவ்வாவணத்திலுள்ள பின்வரும் வாக்கியங்கள் நமக்கு உணர்த்துவதாக உள்ளது.

“சொல்லிய கோவிலாதனங்களால் வரும் சகல வருமானங்களாகிய பணம் நெல்லு முதலான சகல இருப்பும் பூர்வீககாலந் தொடக்கமாகத் தேச வழக்கப்படி ஆருடைய பொறுப்பிலிருந்துவந்ததோ அந்தப்பிரகாரம் அவைகளை இருக்கும்படி செய்துவைக்கவும்”

என்று வன்னிபம் குறிப்பிடும் தேசவழக்கம் கோணேசர் கல்வெட்டு என்ற நூல் குறிப்பிடும் வழமைகளை ஞாபகப்படுத்துகிறது. திருக்கோணேச்சரத்தின் பராமரிப்புக்காக உண்டாக்கப்பட்ட நில புலங்கள், கிராமங்கள், ஆங்காங்கே குடியமர்த்தப்பட்ட மக்களின் கடமைகள், கோவிற் தொழும்புகளுக்காக அவர்களுக்கு வழங்கப்பட்ட மானியங்கள், கோவிலுக்குரிய திரவியங்கள், தானியங்கள், எண்ணெய் வகைகள், களஞ்சியப் பொருட்கள் முதலிய சேமிப்புகள் என்பனவற்றைச் செப்பேடுகளாகப் பொறித்து (பெரியவளமைப் பத்ததி) குளக்கோட்டு மன்னனால் வகுக்கப்பட்ட திட்டத்துக்கு அமைய செயற்படுத்தும் பணிகளைக் கனகசுந்தரப் பெருமாள் என்பவர் செய்துவந்ததை கோணேசர் கல்வெட்டு ஆவணப்படுத்துகிறது.

திருக்கோணேச்சரம் முற்றாக அழிக்கப்பட்டு அதன் பின்னால் தம்பலகாமத்தில் ஆதிகோணநாயகர் ஆலயம் உருவாகி அங்கு திருக்கோணேச்சரத்தின் வழமைகள் முறையாகப் பின்பற்றப்பட்டதை பூர்வீககாலந் தொடக்கமாகத் தேச வழக்கப்படி ஆருடைய பொறுப்பிலிருந்துவந்ததோ அந்தப்பிரகாரம் அவைகளை இருக்கும்படி செய்து வைக்கவும் என்ற வரிகள் ஆதாரப்படுத்துகிறது.


தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலய தேசவழமைகள் தொடர்பாக ஆவணப்படுத்தி இருக்கும் இவ்வுயில் திருகோணமலை வரலாற்றுப் பதிவுகளில் பல்வேறு முக்கிய தரவுகளைக் கொண்டிருப்பதனால் அதன் முழுமையான வடிவம் பின்னிணைப்பாக இக்கட்டுரையில் சேர்க்கப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது.

இரண்டாவது ஆவணம் *1928* ஆம் ஆண்டு தை மாதம் எழுதப்பட்டது. தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயத்தில் பரம்பரை பரம்பரையாக தொண்டு செய்யும் தொழும்பாளர்களுள் ஒருவர் தான், செய்து வந்த தொழும்பினை தனது மகனுக்கு பாரம் கொடுப்பது பற்றி தேசத்தவருக்கும் மற்றும் ஆலயத்துடன் தொடர்புடையோருக்கும் அறியத்தரும் கடிதம் இது. அதனைக் கீழே காணலாம்.

1928 ஆம் ஆண்டு தை மாதம் எழுதப்பட்டது.

சிவமயம்.

திருகோணமலையைச் சேர்ந்த தம்பலகமப்பற்றில் தம்பலகமம் கோயிற் குடியிருப்பில் சைவசமய பிரபல்யமாய் விளங்கும் கோணை நாதேஸ்வர சுவாமி கோயிலுக்கு தேவராசாவென்னும் குளக்கோட்டு மகாராசா, கயவாகு மகாராசாவால் எழுதி கல்வெட்டு என வழங்கி வரும் சாசனத்தை 1831 ஆம் ஆ(ஆண்டு) கார்த்திகை மீ(மாதம்) 26 ஆம் தேதி கெசற்றில் பிரசித்தப்படுத்தியிருக்கிறது. அக்கல்வெட்டுச் சாசனத்தில் சொல்லிய பிரகாரமே இருபாகை முதன்மை குருக்கள், தானத்தார், வரிப்பற்றார் என்னும் தொழும்புகாரரும் மற்றும் தொழும்புகாரரும் இதில் சொல்லிய தானத்தார் என்னும் தொழும்பை கோணாமலை வேலுப்பிள்ளை என்பவர் 30 முப்பது வருடகாலமாக பார்த்து எனது தகப்பனார் மரணிக்கு முன்னமே வேலுப்பிள்ளை வயிரமுத்து ஆகிய நானும் 27 இருபத்தேழு வருடம் பார்த்து எனது மகன் கோபாலுபிள்ளை என்பவரை 1928 ம் ஆ(ஆண்டு) தை மீ(மாதம்) துவக்கமாக பார்த்து அதிலுள்ள சுதந்திரங்களையும், அதிலுள்ள வருமானங்களையும் ஏற்றுக்கொள்ளும் பொருட்டு சம்மதித்து ஒப்புவித்துப் போட்டேன் நான் என்பதை நிலமை, தலமை, தேசத்தவர்களுக்கும் மற்றுமுள்ள கொட்டியாபுரம் பற்று, கட்டுக்குளப் பற்றுக்கும், அரசாங்கத்தார் அவர்களுக்கும் அறியத்தருகிறேன்.



வேலுப்பிள்ளை  வயிரமுத்து அவர்களின் கடிதம்
1928 ஆம் ஆண்டு தை மாதம் எழுதப்பட்டது

இ. (இவ்வண்ணம்)

தம்பலகமம்

கள்ளிமேடு காரியப்பர்

வேலுப்பிள்ளை வயிரமுத்து

சாட்சி - வே.கதிரவேலு , க.கோணாமலை

கடிதத்தின் ஆரம்ப வாசகங்கள் திருக்கோணேச்சரம் மீது குளக்கோட்டு மன்னன்,[(2)] இரண்டாம் கஜபாகு மன்னன் ஆகியோரால் செய்யப்பட்ட திருப்பணிகளையும், ஆலய பரிபாலணம் தொடர்பான ஒழுக்க விதிகளை ஞாபகப்படுத்துவதாக அமைந்திருக்கிறது. அத்துடன் கோயில் தொழும்பாளர்களின் உரிமை, கடமை என்பன விபரமாக கோணேசர் கல்வெட்டு[(3)] எனும் நூலில் பதிவு செய்யப்பட்டு இருப்பதையும், அதனை அங்கீகரித்து 1831.11.26 ஆம் திகதி சிலோன் கசெற்றில்[(4)] வெளியிடப்பட்டிருப்பதையும் குறிப்பிடும் வேலுப்பிள்ளை வைரமுத்து அவர்கள் 27 ஆண்டுகளாக தானத்தார் என்ற தொழும்பினை செய்து வந்திருக்கிறார். அவரது மகன் கோபாலுபிள்ளை என்பவரை 1928 ஆம் ஆண்டு முதல் அத்தொழும்பை செய்யும் பணிக்கு நியமிக்கும் அதேவேளை, தானத்தாருக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளையும், வருமானங்களையும் அவருக்கே ஒப்புவித்து அதனை தேசத்தவருக்கு இக்கடிதம் மூலம் அறிவிக்கிறார்.

இங்கு தேசத்தவர் என்று தம்பலகாமப்பற்றைச் சேர்ந்தவர்களையே வயிரமுத்து அவர்கள் குறிப்பிடுவதைக் காணமுடிகிறது. அத்துடன் கொட்டியாபுரப்பற்று, கட்டுக்குளப்பற்று என்பனவற்றைப் பெயர் குறிப்பிடுவதன் மூலம் அவற்றை வெவ்வேறான தேசங்கள் என்பதையே அவர் குறிப்பால் உணர்த்துகிறார் என்று கொள்ளவேண்டி இருக்கிறது.

மூன்றாவது ஆவணம் கந்தளாயில் உள்ள பிள்ளையார் ஆலய சிவராத்திரி விழா ஒழுங்குகள் தொடர்பானது. 11.02.1934 ஆம் ஆண்டு தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயத்திடம் மேளக்

கச்சேரிக்கான ஒழுங்குகள் தொடர்பில் உதவி கேட்பதாக அமைகிறது. இக்கடிதம் சிவராத்திரியினை முன்னிட்டு கந்தளாய் பிள்ளையார் ஆலயத்தில் அபிசேகம் செய்வதற்கு தேசத்தவர் விரும்பியிருப்பதனை தெரிவிக்கின்றது. இது சாதாரண மக்களின் பாவனையில் இயல்பாக இப்பிரதேச மக்களினை தேசத்தவர் என குறிப்பிடும் வழக்கம் நிலவிவந்ததனை ஆதாரப்படுத்துகிறது. அக்கடிதம் கீழ்வருமாறு அமைந்திருக்கிறது.

11.2.34


திரு.தம்பலகமம் ஆதியாகிய கோநேஸ்பர சுவாமிக்குரிய கந்தளாய் பிள்ளையார் கோவிலுக்கு சிவன்ராத்திரி அவிசேகம் தேசத்தவர்கள் செய்ய விரும்பியிருப்பதால் காரியப்பர், வயிராவியார் அவர்கட்கு தாள்மையுடன் அறியத்தருவது எங்களுக்கு ஒரு கூட்டுமேளம் (12ல்) திங்கள் கிளமை அனுப்பி வைக்கும்படி தயவாய் கேட்டுக் கொள்கிறோம்.

கோயில் மனேச்சர் பொ.நடராசா
- பொ. சரவணப்பெருமாளுக்காக

ஊரவர்களுக்காக. மா.இராசையா

இக்கடிதம் மூலம் தேசத்தவர் என்ற ஆவணமாக்கலுக்கு அப்பால் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயம் கந்தளாய்ப் பிள்ளையார் ஆலயம் மீது கொண்டிருந்த உரிமை, கந்தளாய்ப் பிள்ளையார் ஆலயத் திருவிழா நடைமுறைகள் போன்றவை தொடர்பிலும் அறிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது.

தேசம் பற்றிய நான்காவது ஆவணம் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயத்துடன் தொடர்புடைய மகாசபைக் கூட்டம் பற்றியது. இது ஒரு முறைப்பாட்டுக் கடிதம். இது திருகோணமலைப் பிராந்தியத்தில் இருந்த நான்கு தேசங்களை தெளிவாக ஆதாரப்படுத்துகிறது.




கந்தளாய் பிள்ளையார் ஆலய சிவராத்திரி விழா
ஒழுங்குகள் தொடர்பான கடிதம்
*11.02.1934*

மகாமேன்மை தங்கிய திரு.டிஸ்திரிக்கோட்டு நீதிபதி அவர்களுக்குத் தாண்மையாய் திரு.தம்பலகமம் கோணநாயகர் கோயில் பராபரிப்புக்காரரான ஏரம்பு கணபதிப்பிள்ளை ஆகியன நான் தரும் மண்டாட்டப் பிட்டீசமாவது.

ஐயாவே திரு.தம்பலகமம் கோணைநாயகர் கோயில் காரியங்களைக் குறித்து கூட்டங் கூட வேண்டிய காலங்களில் புராதன ஒழுங்கின்படி திரு.தம்பலகமம், திருக்கோணமலை, திரு. கொடியாபுரப்பற்று. திரு. கட்டுக்குளப்பகுதி ஆகிய இந்நான்கு தேசத்தில் உள்ள கோயில் உரிமையாளராகிய நிலமை, தலைமை, தொளும்புகாறர், தேசத்தவர்களால் மகாசபை கூடி கூட்டம் நடப்பிப்பது வழக்கம்.


இதற்கு மாறாய்த் தம்பலகமத்தவர் சிலர் மாத்திரமே கூடி 1934ம் ஆண்டு பங்குனி மாதம் 19ந் திகதி கூடிய கூட்டம் கோயில் புராதன ஏற்பாடுகளுக்குப் பொருத்தமாய் நடைபெறவில்லை என்பதைப் பற்றி தகுந்த சாட்சிகளைக் கொண்டும், சாதனங்களைக் கொண்டும், வாய்மூலமாயும் அத்தாட்சி செய்யக் கூடும்.

இதை நீதிபதியவர்களின் தயவான கவனத்துக்கு அறியத்தருகின்றேன்.

3270ம் - 3271ம் இலக்கம் கொண்ட இரு உறுதி சாதனங்களாலும் 1169 இலக்க டிஸ்ரிக் கோட்டு தீர்ப்பினாலும் இன்னும் வேறு இலங்கைத் தேசாதிபதியால் கிடைக்கப்பட்ட சேட்டுபிக்கற் கொப்பி இத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது.

என்று முடிகிறது இக்கடிதம். இதுவொரு முழுமை பெறாத முறைப்பாட்டுக் கடிதம் என்பதனை வாசிக்கும்போதே நாம் புரிந்து கொள்ள முடியும். இக்கடிதம் பலமுறை திருத்தப்பட்டு பின்னர் ஆங்கில அல்லது தமிழ் மொழியில் நீதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் என்பதை ஊகிக்கலாம்.

முறைப்பாட்டுக்காரரான ஏரம்பு கணபதிப்பிள்ளை தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலய பராமரிப்புக்காரர். ஆலயத்தின்



மகாசபைக் கூட்டம் பற்றிய கடிதம்

*1934*

புராதன நடைமுறைகள் தொடர்பில் நன்கறிந்தவர். அவை தொடர்பான பல ஆலய ஆவணங்கள், உறுதிகள், அரச ஆவணங்கள் என்பனவற்றை தனது சேகரிப்பில் வைத்திருந்தவர். எனவேதான் தனது குற்றச்சாட்டுக்கு ஆதாரமாக மேற்படி ஆவணங்களை ஆலய புராதன நடைமுறைகளை உறுதிப்படுத்தும் பொருட்டு பிற்குறிப்பாக குறிப்பிட்டுள்ளார்.

இக்கடிதத்தின் முக்கிய பகுதி தேசத்தவர் இணைந்து மகாசபை கூடுவது தொடர்பானது. இவ்வாலயத்தில் தொன்றுதொட்டு பின்பற்றப்பட்டுவந்த நடைமுறைக்கு அமைவாக ஆலயம் தொடர்பான முக்கிய முடிவுகளை எடுப்பதற்கு திருகோணமலைப் பிராந்தியத்தில் இருந்த நான்கு தேசத்தவர்கள் மகாசபை கூடுவதை இக்கடிதம் ஆவணப்படுத்துகிறது. அத்துடன் இவ்வாலயம் இந்நான்கு தேசத்தையும் சேர்ந்த நிலைமை, தலைமை, தொழும்பாளர், தேசத்தவர் (பொதுமக்கள்) அனைவருக்கும் உரித்துடையது என்பதையும் இது ஆதாரப்படுத்துகிறது.

இங்கு குறிப்பிடப்படும் தேசத்தவர், மகாசபை என்ற சொற்கள் நம்மை 17 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட ஸ்ரீ சித்திர வேலாயுதர் காதல் நூற்பாவுடன் தொடர்புபடுத்துகிறது. தேசம், தேசத்தவர் என்ற சிந்தனை இப்பிராந்திய மக்களிடையே நீண்டகாலமாக நிலைபெற்றிருந்ததையே இவ்வாவணங்கள் உறுதிப்படுத்துகின்றன.

மேற்கூறிய ஆதாரங்கள் அனைத்தும் பழமையில் திருகோணமலைப் பிராந்தியம் - திருகோணமலைப் பற்று, கட்டுக்குளப் பற்று, கொட்டியாரப் பற்று, தம்பலகாமப் பற்று என்று நான்கு தேசங்களாக வழங்கி வந்ததனை ஆதாரப்படுத்துவதாக அமைந்திருக்கிறது.

தம்பலகாமதேசம், தேசவழமைகள் என்பன பற்றி அறியத்தரும் இவ்வாவணங்கள் எதிர்காலத்தில் பல்வேறு தேவைகளுக்காக பல்வேறு கோணங்களில் ஆராயப்படவேண்டியவை

என்பதனைக் கருத்தில்கொண்டு இங்கு அதன் முழுமையான வடிவத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.


**சங்க இலக்கியங்களில் தேளம் (தேசம்)**


குல்லைக் கண்ணி வடுகர் முனையது
பல்வேற் கட்டி நன்னாட் டும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும்
வழிபடல் சூழ்ந்திசின் அவருடை நாட்டே
- (குறந். *11:5-8*)

தமிழ்கெழு மூவர் காக்கும்
மொழிபெயர் தேஎத்த பன்மலை யிறந்தே
- (அகம். *31:14--15*)


பனிபடு சோலை வேங்கடத் தும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும் நல்குவர்
- (அகம். *211:7--8*)


## அடிக்குறிப்பு - *1*





இருமரபுந் தூய எதிர்வீரசிங்க நல்ல பூபால வன்னிபம்
எழுதிய நியமன உறுதி





## இருமரபுந் தூய எதிர்வீரசிங்க நல்ல பூபால வன்னிபம் எழுதிய நியமன உறுதி

*இல.ஙஉஏ0 (3270)*

*திருவேதபுராண காவியங்களின் பிரகாரம் தெஷிணகையிலாய திருகயிலைப் பதியாகிய திருக்கோணமலையிலெழுந்தருளி-யிருக்கும் எங்கடவுளாகிய சிவபெருமான் கோணைநாயகரை வணங்கி தற்காலம் திரு.கொட்டியாபுரப்பற்று மேங்காமத்தில் வசிக்கும் இருமரபுந்தூய எதிர்வீரசிங்க நல்ல பூபால வன்னிபமாகிய நான் திரு.தம்பலகமம் கோணைநாயகர் கோவிற் கருமங்களைப்பற்றிப் பராபரிப்புத் தத்துவ நியமன உறுதி முடித்துக் கொடுத்த விபரம்.*

*கஅகூங (1893) ம் (ஆண்டு) ஆனி மீ(மாதம்) ரு (5)ந் தீ(திகதி) தம்பலகமம் கோணைநாயகர் கோவினிடமாக அவ்வூர் குடிசனங்களும் திருக்கோணமலைப்பட்டின வாசிகளில் சிலரும் கூடிய கூட்டத்தில் இவ்வுறுதி முடிப்புக்காரனாகிய என்னைச் சபாநாயகராக ஏற்படுத்தி ---- ---- ---- ----- ----- -------------------------------- --------பராபரிப்புக் காரராயிருந்த இருவரில் காலஞ்சென்ற கதிரவேலு ஏரம்பரின்னிடத்துக்கு அவருடைய மகனாகிய ஏரம்பர் கதிரவேலுவைப் பராபரிப்புக்கார---------- கூட்டத்தார் தானே தெரிவு செய்து நியமித்திருக்கிறபடியாலும் இந்தப்பிரகாரம் கூட்டத்தாரால் தெரிவுசெய்து நியமிக்கப்பட்ட பராபரிப்புக்காரன் ஏரம்பு கதிரவேலு என்பவருடன் ஊரவர்களால் முன் தெரிவு செய்யப்பட்டிருக்கிற பராபரிப்புக்காரர் காளியப்பர் ---------*

*இப்பொழுது இவ்வுறுதியினால் சகலரும் அறியும்படி இதன்கீழ் கையொப்பம் வைத்த திரு.கொட்டியாபுரப்பற்று மேங்-காமத்திலிருக்கும் முன்சொன்ன இருமரபுந்தூய எதிர்வீரசிங்க நல்ல பூபால வன்னிபமாகிய நான் திரு.தம்பலகமம் கோணைநாயகர் கோவிலைப்பற்றியும் அக்கோவிலுக்குரிய சகல அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களைப்பற்றியும் அதில் நடக்கவேண்டிய பூசை திருவிழா வேள்விகள் முதலான மற்றும்*

வேதசாரச் சடங்குகளைப்பற்றியும் இதன்கீழ் விபரித்தெழுதப்பட்டிருக்கின்ற காரியங்கள் சகலத்தையும் ஒவ்வொன்றையும் செய்து நிறைவேற்றும் பொருட்டு திரு.தம்பலகமம் நாயன்மார்திடலில் வசிக்கும் முன்சொன்ன ஏரம்பு கதிரவேலுவையும் மேற்படி தம்பலகமம் பட்டிமேட்டில் வசிக்கும் காளியப்பர் சுப்பிரமணியத்தையும் குறித்த கோணைநாயகர் கோவிலின் பராபரிப்புத்தத்துவகாரராக இதனால் பெயர் குறித்தும் நிலைப்படுத்தியும் நியமித்தும் ஏற்படுத்தியும் போட்டேன். இப் பராபரிப்புக்காரர்களுக்கு இவ்வுறுதி வழியாகக் கொடுக்கப்படும் தத்துவங்கள் வருமாறு.

முதலாவது. குறித்த கோணைநாயகர் கோவிலுக்குரியதாக இருக்கிற சகல அசைவற்ற ஆதனங்களைக் குத்தகைக்குக் கொடுக்கவும் அவைகளின் வருமானங்களை அறவிட்டு அவ்வருமானங்களிலிருந்து --------------------- பிரகாரம் கோவில் பூசை திருவிழா முதலியகாரியங்களை ந------------------------------------
----------------------------------------------------------------------------------------------------
----------------------------------------------------------------------------------------------------
----------------------------------------------------------------------------------------------------
---------------- -------------------(மீ)தியாயிருக்கிற அல்லது இனிமேல் வருமதியாக வரக்கூடிய சகல நிலுவைகளையும் கடன்களையும் காரியங்களையும் பொருள்களையும் அறவிடவும் பற்றுச்சீட்டுகள் கொடுக்கவும்.

மூன்றாவது --நிலுவைகளையும் கடன்களையும் காரியங்கள் அல்லது பொருள்களையும் கொடுக்கத் தவறுகின்றவர்களுக்கு விரோதமாக நியாயப் பிரமாண முறைப்படி வழக்குத் துரட்சி பண்ணவும். அவ்வழக்கு அல்லது வழக்குகளுக்குப் புறொக்றர்மாரை அல்லது அற்வகேற்மாரை நியமிக்கவும் குறித்த வழக்குத் தீற்புகளுக்கு விரோதமாக இலங்கைச் சுப்றீம் கோட்டுக்கு அபயநடு அல்லது அப்பீல் கேட்கவும் அந்த அப்பீல்களுக்குத் தேவையான பிணை உறுதிகள் முதலான சகல பத்திரங்களுக்கும் கையொப்பமிடவும்.------------------------

நான்காவது. கந்தளாய்க்குளம் மாகாமம் ஆலடி முதலிய இடங்களில் ------------------------------------------------------------------------------
------------------------------ களையும் கிராமசாந்திகளையும் வழமைப்பிரகாரம் காலத்திற்குக்காலம் ஒழுங்காக நடப்பிக்கவும் சொல்லிய கோவிலாதனங்களால் வரும் சகலவரு மானங்களாகிய பணம் நெல்லு முதலான சகல இருப்பும் பூர்வீககாலந் தொடக்கமாகத் தேச வழக்கப்படி ஆருடைய பொறுப்பிலிருந்துவந்ததோ அந்தப்பிரகாரம் அவைகளை இருக்கும்படி செய்துவைக்கவும்-------------------------------------

ஐந்தாவது. மேற்சொல்லிய பிரகாரம் குறித்த கோவிலில் *1893* வருட ஆனி மீ ருந் தீ கூடிய கூட்டத்தில் நியமித்திருக்கிற பரிசோத--காரர் ஏழு பேர்களும் அல்லது அவர்களுடைய இடத்திற்கு ஊரவர்களால் நியமிக்கப்பட்டு---------------------- களைப்பின் தொடர்ந்து வரும் பரிசோதனைத்--------------------------- ரரெவர்களும் புராதன வழக்கப்படி ---நாயகர் கோவிலுக்கு முதன்மையுரித்துக்-------------களாகிய தம்பலகமம் குருநாட்டாரும்-------------------------------------------------------------------
குளப்பகுதியாரும் கொட்டியாபுரம் சிந்து நாட்டாரும் ஒருங்கு கூடி இதனால் நியமிக்கப்படும் பராபரிப்புக்காரரிடத்தில் குறித்த கோணைநாயகர் கோவில் வருமானங்களைப் பற்றிய வரவு செலவுக் கணக்கை வெளிப்படத்தும்படி கேட்கும் காலம் இவர்க ளெந்த வேளையும் கணக்குச் சொல்லவும் உத்தரவாதம் பண்ணவும் அவர்கள் விதிக்கும் தீர்ப்புக்கு உள்ளாளிகளாக இருக்கவும் வேண்டியது

இந்தப்பிரகாரம் நான் பூர்வீகம் தொடக்கம் பாரம்பரியமாக நடந்துவந்த இந்த தேசவழக்கப்படி எனக்குள்ள சொந்த உரித்தைக் கொண்டும் மேற்சொல்லிய கோவில் கூட்டத்தில் எனக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டும் குறித்த பராபரிப்புக்காரர்களாகிய இவர்களிருவரும் ஒத்தும் தனித்தும் --
---------------------------------------------------------- குறித்த கூட்டத்தின் வரு---- தமானப் பத்திரத்தையுமித்துடனணைத்து இந்தப் பராபரிப்புத் தத்துவ நியமனவுறுதி முடித்துக் கொடுத்ததற்கத்தாட்சியாக

திருக்கோணமலை கொட்டியாபுரம் மேன்காமத்தில் ஆயிரத்தெண்ணூற்று தொண்ணூற்று மூன்றாம் ஆண்டு ஆனி மாதம் பதிநாலாந் திகதி இதிலுமிதைப் போலோ ----விதமான வேறிரண்டு பிரதிகளிலுமிதன்கீழ் கையொப்பங்கள் வைத்திருக்குஞ் சாட்சிகள் கொட்டியாபுரம் மூதூர் தம்பையா முத்துக்குமாரு வன்னிபம் மல்லிகை தீவிலிருப்பவர்களாகிய பத்தினியன் பரிகாரி சிற்றம்பலம் பரிகாரி முருகப்பர் விதானை கணபதிப்பிள்ளை கொட்டியாபுரப்பற்று இ(ஈ)ச்சிலம்பத்தை கதிரவேலு மொந்தப்பிள்ளை கொட்டியாபுரப்பற்று மல்லிகை தீவு சின்னத்தம்பி ஆரியத்தம்பி இவர்கள் முகதா --- லெனதுகையொப்பம் வைத்தேன்.

இ.எ. நல்லபூபாலவன்னிபம்

அடிக்குறிப்பு - *2*

## குளக்கோட்டு மன்னன்

*1928* இல் எழுதப்பட்ட வேலுப்பிள்ளை வைரமுத்து அவர்களின் கடிதத்தில் உள்ளது போலவே இந்நூலில் பிரசுரிக்கப்பட்டுள்ள தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயத்துடன் சம்பந்தப்பட்ட ஆவணங்களில் இரண்டு மன்னர்களின் பெயர்கள் இவ்வாலயத் துடனும், அதன் வழமைகளுடனும் தொடர்புபடுத்தப்படுவதைக் காணக்கூடியதாக இருக்கும்.

குளக்கோட்டு மன்னன், இரண்டாம் கஜபாகு மன்னன் ஆகியோரே அவ்விரு மன்னர்களுமாகும். இவ்விரு மன்னர்களும் வரலாற்றில் நேரடியான தொடர்புகளை திருக்-கோணேச்சரத்துடன் கொண்டிருந்தவர்கள். திருக்கோணேச்சரம் போத்துக்கீசரால் அழிக்கப்பட்டு தம்பலகாமத்தில் ஆலயம் உருவான பின்னால் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயம் திருக்கோணேச்சரத்தின் பிரதியாகவே அனைவராலும் பார்க்கப்பட்டிருக்கிறது. இதனால் திருக்கோணேச்சரத்திற்குரிய அனைத்து பெருமைகளும், அதன் வழமைகளும் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயத்துக்கும் உரித்தானது.

இந்த அடிப்படையிலேயே இவ்விரு மன்னர்களும் திருக்கோணேஸ்வரத்துடன் கொண்டிருந்த தொடர்புகளை நன்றியுடன் ஞாபகப்படுத்தும் வகையில் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலய ஆவணங்களின் குறிக்கப்பட்டு இருக்கிறார்கள். இதுவே பின்னாட்களில் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயத்தினை குளக்கோட்டு மன்னன் கட்டினான் என்று சிலர் பிழையாக வரலாற்றைப் புரிந்து கொள்வதற்கு காரணமாக அமைந்தது.

இரண்டாம் கஜபாகு மன்னன் திருக்கோணச்சரத்துக்கு செய்த பணிகள் தொடர்பான விரிவான விளக்கம் தம்பை நகர் எனும்


கட்டுரையில் தரப்பட்டுள்ளது. எனவே இங்கு குளக்கோட்டன் திருக்கோணச்சரத்துக்கு செய்த பணிகள் தொடர்பில் சற்று விரிவாகப் பார்ப்பது அவசியமாகிறது.

பார்தாங்கு கோயிலும் பொன்மண்டபமும்
கோபுரமும் பரற்குநாட்டி
பேர்தாங்கு மாயனுக்கு மலங்கார
வாலய மொன்றியற்றிமுந்துங்
கார்தாங்கு திருக்குளமும் பாவநாசச்
சுனையுங் கண்டகண்டன்
சீர்தாங்கு குளக்கோட்டனென்னும் சோழ கங்கனை
நம்சிந்தையில் வைப்போம்.

என்று தட்சணகைலாச புராணம் குளக்கோட்டு மன்னனை கவிநயத்துடன் விபரிக்கின்றது. திருக்கோணேச்சரத்தில் விமானம், எழில்மிகு மண்டபம், கோபுரம் என்பனவற்றை உள்ளடக்கிய ஈஸ்வரத்தையும், அழகிய பெருமாள் கோயிலையும், மழை நீரைத் தேக்கும் திருக்குளத்தையும், பாபநாசம் என்னும் சுனையினையும் குளக்கோட்டன் என்று வழங்கப்படுகின்ற சோழகங்கன் அமைத்தான் என இப்பாடல் விவரிக்கிறது.

'குளக்கோட்டன்' என்பது ஒரு சிறப்புப் பெயர். அது குளமும், கோயிலும் அமைத்துப் பிரசித்திபெற்ற மன்னன் என்பதை அடையாளப்படுத்துகிறது. எனவே குளக்கோட்டு மன்னன் என்பது காரணப் பெயராகவே கருதப்படுகிறது. கோயிலும், குளமும் கட்டிப் புகழ்பெற்ற மன்னனின் ஆட்சி முடிந்து பல்வேறு ஆட்சிமாற்றங்கள் இடம்பெற்று நீண்ட காலத்தின் பின்னர் அம்மன்னனின் இயற்பெயர் மறைந்துபோன காலகட்டத்தில் எழுந்த நூல்கள் அம்மன்னனை குளக்கோட்டன் என்னும் காரணப்பெயர் கொண்டழைத்தது என்பதனை புரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

# குளக்கோட்டு மன்னன்



‘தட்சணகைலாச புராணம்’ குறிப்பிடும் குளக்கோட்டு மன்னனுடைய மறு பெயரான “சோழகங்கன்’ என்பது பல்வேறு அரச குலங்களை சேர்ந்தவர்களின் பெயராகவும் விளங்கியது. இப்பெயருடன் தொடர்புபடுத்தி குளக்கோட்டு மன்னனின் காலத்தை கண்டுபிடிப்பதற்கான முயற்சிகளை பல்வேறு வரலாற்று ஆசிரியர்கள் இன்றும் தீவிரமாக மேற்கொண்டு வருகிறார்கள். இவர்களது ஆய்வுக்கான அடித்தளமாக திருகோணமலைக் கோட்டையில் 1945 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற சோட(ழ)கங்கதேவ என்னும் மன்னனுடைய கல்வெட்டு காணப்படுகிறது.

திருக்கோணேச்சர ஆலயத்தினுடைய வரலாற்றையும், வழமைகளையும் ஆதாரப்படுத்தும் இலக்கியங்களான தட்சண கைலாச புராணம், திரிகோணாசல புராணம், கோணேசர் கல்வெட்டு என்பன குளக்கோட்டன் தொடர்பில் மிக விரிவான தகவல்களை தருகிறது. அவற்றில் குளக்கோட்டனுடைய சாதனைகளாக சொல்லப்படும் கோயில், குளம் என்பவற்றின் நிர்மாண, புணருத்தாரணப் பணிகள் சோழர்காலத்து சோழ இலங்கேஸ்வரனின் பணிகளை ஞாபகப்படுத்துவதாக அமைந்திருக்கிறது.

இலங்கையில் சோழர் ஆட்சி ஏறக்குறைய 77 வருடங்கள் நிலைபெற்றிருந்தது. திருகோணமலை மாவட்டம் முழுவதும் கிடைக்கப்பெற்ற கல்வெட்டுக்களில் சோழர்கால கல்வெட்டுகளே அதிகமானதாக இருக்கிறது. சோழர் ஆட்சிக்காலத்தில் ஜனநாதமங்கலம் எனும் பொலநறுவை தலைநகரமாக இருந்தபோதும் சோழர்களின் செல்வாக்கு மிகுந்த பகுதியாக திருகோணமலை மாவட்டம் இருந்தது என்பதனை இக் கல்வெட்டுக்கள் ஆதாரப்படுத்துகின்றன.

இலங்கையை ‘மும்முடிச் சோழ மண்டலம்’ என்னும் பெயர் சூட்டி ஆண்ட சோழ இலங்கேஸ்வரன் தொடர்பான இரண்டு கல்வெட்டுக்கள் திருகோணமலையில் கிடைத்திருப்பதும் மேற்கூறிய கூற்றினை உறுதிப்படுத்துகிறது. முதலாம்

இராஜாதிராஜ மன்னனுடைய மெய்க்கீர்த்தியில் ‘இலங்கையர்க்-கிறைவன்’ என்னும் பட்டம் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் சோழ இளவரசர்களில் ஒருவனை இலங்கையர்க்கிறைவன் என்ற பட்டம் சூட்டி அவனை இலங்கை அரசனாக இராஜாதி ராஜன் முடிசூடினான் என்று கல்வெட்டு ஆதாரம் மூலம் அறிந்துகொள்ளமுடிகிறது. இலங்கையர்க்கிறைவன் என்பது இலங்கேஸ்வரன் என்பதன் மறுவடிவமாகும்.

அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட கி.பி.13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்த கோமரன்கடவலக் கல்வெட்டு பொலன்னறுவையில் சிங்கள மன்னர்களின் ஆட்சி ஏற்பட்டு ஏறத்தாழ 125 ஆண்டுகளின் பின்னரும் திருகோணமலைப் பிராந்தியத்தில் சோழ நிர்வாக முறை இருந்ததை உறுதி செய்கிறது. கல்வெட்டுப் பொறிக்கப்பட்ட காலத்தில் திருகோணமலைப் பிராந்தியத்தில் சோழர் ஆட்சிக்குப் பொறுப்பாக மூன்றாம் குலோத்துங்க சோழனது படைத்தளபதிகளுள் ஒருவனான அல்லது அரச பிரதிநிதியான குலோத்துங்கசோழக் காலிங்கராயன் இருந்துள்ளான் என்ற புதிய செய்தியையும் தருகிறது.

திருக்கோணேச்சரத்துடன் தொடர்புடைய இலக்கியங்கள் சொல்கின்ற வரராமதேவன் என்கின்ற மன்னனுடைய ஆலயப் பணிகள் அதனைத் தொடர்ந்து அவரது மகனான குளக்கோட்டன் செய்த ஆலயம், கந்தளாய் குளம் தொடர்பான பணிகள், ஆலயத்துக்கு வழங்கப்பட்ட நிலம், பொருள் தானங்கள், கோயில் பணிகள் குறைவின்றி நடைபெறுவதற்காக செய்யப்பட்ட ஏற்பாடுகள் என்பன சோழர் ஆட்சி காலத்தோடு தொடர்புபடுத்திப் பார்க்கக் கூடியவை.

இலக்கியங்களில் பாடப்படும் குளக்கோட்டு மன்னன் பற்றிய தகவல்கள் சோழர் காலத்துடன் மட்டும் முற்றுப்பெறவில்லை. அவை அதன் பின்னால் திருகோணமலை மீது ஆதிக்கம் செலுத்திய பாண்டியர் ஆட்சிக்காலத்தில் ஆலய வழமைகளில் ஏற்பட்ட மாற்றங்களையும், இலங்கையில் வல்லரசுகள் வலிமை

குன்றிப்போன காலப்பகுதிகளில் உருவான வன்னிச் சிற்றரசுகள் தொடர்பான விடயங்களையும் உள்ளடக்கி இருக்கிறது. எனவே இலக்கியத் தரவுகளை மட்டும் கொண்டு குளக்கோட்டு மன்னனை வரலாற்று அடிப்படைகளுக்கு அமைவாக ஒரு கால வரையறைக்குட்பட்ட அரசனாக பார்ப்பதில் பலரிடையே குழப்பங்கள் நிலவிவருவதைக் காணலாம்.

திருக்கோணேச்சரத்தின் வரலாற்றில் தவிர்க்கமுடியாத முக்கியமான அரசன் குளக்கோட்டு மன்னன். இதுவரை திருகோணமலையில் வெளிப்படுத்தப்படாத கல்வெட்டுகள், ஆவணங்கள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள் என்பனவற்றை தேடிக்கண்டுபிடித்து முறையாக வெளிப்படுத்துவதன் மூலமே குளக்கோட்டு மன்னனின் வெளிச்சத்திற்கு வராத வரலாற்றுப் பக்கங்களை மக்கள்முன் கொண்டுவரலாம். இதனைச் செய்யவேண்டியது திருக்கோணேச்சர வரலாற்றின் மீது ஆர்வம்கொண்டோர் அனைவரினதும் கட்டாய பணியாகின்றது.

உசாத்துணை

முதலாம் ராஜாதிராஜ சோழன் தனது உறவினர் எழுவரை அரசராக முடிசூட்டி அவர்களுக்கு வானவன், வில்லவன், மீனவன், கங்கன், இலங்கையர்க்கிறைவன், பல்லவன், கன்னகுச்சியர் காவலன் என்னும் பட்டங்களை வழங்கி அவர்களுக்குரிய மண்டலங்கள் மீதான அதிகாரத்தையும் வழங்கினார் என்பது கீழ்வரும் அவருடைய மெய்க்கீர்த்தியில் இருந்து உணரப்படுகிறது.

'தன் சிறிய தாதையுந் திருத்தமையனுங் குறிகோள் தன் இளங்கோக் கிளையு நெறியுணர் தன்திருப் புதல்வர் தம்மையுந் துன்றெழில் வானவன், வில்லவன், மீனவன், கங்கன், இலங்கையர்க்கிறைவன், பொலங்கழற் பல்லவன், கன்னகுச்சியர் காவலனெனப் பொன்னணி சுடர்மணி மகுடஞ் சூட்டிப் படர்புகழ் ஆங்கவர்க் கவர் நாடருளி"

*பேராசிரியர் சி.பத்மநாதன், இலங்கை தமிழ் சாசனங்கள், பக்கம் 94, 2006*

அடிக்குறிப்பு - *3*

## கோணேசர் கல்வெட்டு

"கோணேசர் கல்வெட்டு" என்கின்ற வரலாற்று நூல், திருகோணமலையைச் சேர்ந்த கவிராஜவரோதயன் அவர்களால் 17ஆம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது. இது பாடல்களையும், உரைநடைப் பகுதிகளையும் கொண்டமைந்திருக்கிறது.

அந்த நாட்களில் அரசர்கள் தங்களது திருப்பணிகள், கட்டளைகள் போன்றவற்றை சாசனங்களாகக் குறித்து வைக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். அப்படிப்பட்ட சாசனத்தை ஆதாரமாகக்கொண்டு இலக்கியங்கள் உருவாக்கப்பட்டால் அது "கல்வெட்டு" என அழைக்கப்பட்டது.

திருக்கோணேச்சர ஆலயத்துக்கு திருப்பணிகள் செய்த குளக்கோட்டு மன்னன், ஆலயம் பற்றியும், அதனை நிர்வகிப்பது பற்றியும், கோயிற் தொழும்பாளர்கள் கடமைகள் பற்றிய செய்திகளையும் உள்ளடக்கி "பெரியவளமை பத்ததி" என்னும் செப்பேட்டில் பொறித்து வைத்திருந்தார். அச்சாசன விடையங்களை அடிப்படையாக வைத்து அதைத் தொகுத்தும், விரித்தும் கவிஇராஜவரோதயரால் உருவாக்கப்பட்டதுதான் கோணேசர் கல்வெட்டு.

இந்நூல் மூலம் திருக்கோணேச்சரத்தின் வரலாறு, அரசர்கள் கோணேசர் கோயிலுக்கு வழங்கிய நன்கொடைகள், கோயிற் சேவைகள் பற்றிய ஏற்பாடுகள், கோயிலுக்குரிய உடைமைகள், குடியேற்றம், சமுதாய வழமைகள், வன்னிபங்கள் என்பனவற்றைப் பற்றி நாம் அறியக்கூடியதாக இருக்கிறது.

ஏட்டுப் பிரதிகளை ஆதாரமாகக் கொண்டு வெளியிடப்பெற்ற கோணேசர் கல்வெட்டிலே செய்யுள் நடையிலும் உரைநடையிலும் அமைந்துள்ள இருவேறு பகுதிகளுள்ளன. செய்யுள் நடையிலமைந்த முதலாவது பகுதியிலும் இரு பிரிவுகள் உள்ளன. இவற்றுள் முதலாவது பிரிவு,

கோணேஸ்வரம் தொடர்பாகக் குளக்கோட்டன் புரிந்த திருப்பணிகளைக் கூறுவது. இரண்டாவது பிரிவு, அக்கோயிலுக்குக் கஜபாகுராசன் செய்த திருப்பணிகளைக் கூறுகின்றது.

உரைநடையிலுள்ள இரண்டாவது பகுதியில், கீழ்வரும் *29* தலைப்புக்களின் கீழ் விபரங்கள் அடங்கியுள்ளன: *(1)* மாணிக்கம் வரவு, *(2)* வரிப்பத்தார், *(3)* கலியாணத்துக்குச் செய் தொழும்பு, *(4)* தீமைக்குச் செய்தொழும்பு, *(5)* சூகரவேட்டை, *(6)* குடிமை வரவு, *(7)* கயவாகுராசன் உபயம், *(8)* புவனேக கயவாகு, *(9)* பரராசசேகரன்-செகராசசேகரன் வரவு, *(10)* ஆரியச் சக்சரவர்த்தி வரவு, *(11)* திரவிய இருப்பு, *(12)* சிந்தூர விருப்பு, *(13)* எட்டு இராசாக்கள் கொடுத்த திரவிய இருப்பு, *(14)* சிங்காசனத்துக்கான திரவியம், *(15)* மகாலிங்க இருப்பு *(16)* திருமலையின் கீழ்ப்புதினம், *(17)* திருநாள் *(18)* கழனிமலை, *(19)* திருக்குளங் கட்டினது, *(20)* ஆசாரிமார் வரவு, *(21)* காராளர் வரவு, *(22)* புலவன் வரவு, *(23)* வன்னிபம் வரவு, *(24)* காரைநகரால் வந்த வன்னிபம், *(25)* சோழநாட்டு வன்னிபம், *(26)* மருங்கூர் வன்னிபம், *(27)* கருகுலக்கணக்கு, *(28)* ஆலாத்திப் பெண்கள், *(29)* திருச்சூகர வேட்டைத்தூது.

திருக்கோணேஸ்வரத்தின் வரலாற்றுத் தொன்மைக்கான ஆதாரங்களில் முக்கியமான நூல்களில் ஒன்றான கோணேசர் கல்வெட்டு தொடர்பில் அறிந்துகொண்ட சைமன் காசிச்செட்டி அவர்கள் அந்நூலின் சுருக்கத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து 'சிலோன் கசெற்' எனும் வெளியீட்டில் *1831* ஆம் ஆண்டு பிரசுரித்து உள்ளார். இதனையே வேலுப்பிள்ளை வைரமுத்து அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அடிக்குறிப்பு - *4*

## திருக்கோணேச்சரத்தின் அரிய வரலாற்று ஆவணம்

கள்ளிமேடு வேலுப்பிள்ளை வைரமுத்து அவர்களுடைய கடிதத்தில் கோணேசர் கல்வெட்டு தொடர்பான ஒரு முக்கிய விடயம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. *1831* ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் *26* ஆம் தேதி கோணேசர் கல்வெட்டு CEYLON GAZETTE இல் பிரசுரிக்கப்பட்டுள்ளது என்ற அந்தத் தகவல் எனது கவனத்தை ஈர்த்தது. தற்செயலான ஒரு சந்தர்ப்பத்தில் அந்தப் பிரசுரத்தின் மூல ஆவணத்தைப் பார்க்கும் வாய்ப்பும் அதனைப் பாதுகாப்பாக வைத்திருந்த 'தோம்பர்' என்பவரை அறிந்துகொள்ளக் கூடிய அரிய சந்தர்ப்பமும் கிட்டியது.

அண்மையில் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயத் தொழும்பு முறை தொடர்பான தகவல்களைத் திரட்டும் பொருட்டு எனது தந்தை திரு.வே.தங்கராசா அவர்களின் நெருங்கிய நண்பர் திரு.மனுவல் இந்திரசூரியன் அவர்களின் வீட்டிற்கு சென்றிருந்தோம். ஆலய வழமை தொடர்பில் தேடிச்சென்ற எங்களுக்கு திருக்கோணேச்சரம் தொடர்பான மிக முக்கியமான ஆவணம் ஒன்று கிடைக்கப்பெற்றது அதிர்ச்சி கலந்த மகிழ்ச்சியைத் தந்தது. இந்த ஆவணம் தம்பல-காமத்தைச் சேர்ந்த கோபாலபிள்ளை கதிர்காமத்தம்பி அவர்களின் சேகரிப்பில் இருந்து பின்னர் திரு.மனுவல் இந்திரசூரியன் அவர்களுக்கு கிடைத்திருக்கிறது. கோபா-லபிள்ளை கதிர்காமத்தம்பி அவர்கள் தம்பலகாமத்தில் தோம்பராகக் கடமை புரிந்தவர்.

தோம்பு என்பது இலங்கையில் போத்துக்கீசர் ஆட்சியின் போதும் பின்னர் ஒல்லாந்தர் ஆண்ட காலத்திலும், உருவாக்கப்பட்டுப் புழக்கத்தில் இருந்த நில உடைமைப் பதிவு ஓலையைக் குறிக்கும் சொல்லாகும். அரசாங்கத்துக்கு உரிய

வரியை வசூலிப்பதிலும், குடிமக்களால் அரசாங்கத்துக்காகச் செய்யப்படவேண்டிய ஊழியத்தை செய்விப்பதையும் ஒழுங்கு-படுத்தும் நோக்கிலேயே தோம்புகள் உருவாக்கப்பட்டன.

ஒவ்வொரு ஊர்களுக்கும் தனித்தனியாகத் தோம்புகள் எழுதப்பட்டன. அவ்வூர்களிலுள்ள நிலங்கள் தொடர்பில், நிலத்தின் பெயர், அதன் பரப்பளவு, உரிமையாளர் பெயர், அவர் சாதி, நிலத்தில் அடங்கியுள்ள பயன்தரு மரங்கள், வீடு முதலிய உடைமைகள், அவர்கள் அரசாங்கத்துக்கும், அதிகாரிகளுக்கும் செய்யவேண்டிய கடமைகளும், செலுத்தவேண்டிய வரிகளும், அவர்கள் செய்யவேண்டிய ஊழியம் பற்றிய விபரங்கள் என்பன போன்ற தகவல்கள் அவற்றில் அடங்கியிருந்தன.

தம்பலகாமத்தில் தோம்பர் என்றால் அனைவரும் கோபாலபிள்ளை கதிர்காமத்தம்பி அவர்களின் பெயரையே சொல்கிறார்கள். எனவே அவரிடம் பல்வேறுபட்ட ஆவணங்கள் இருந்திருக்கும் என்பதனை ஊகிக்கக்கூடியதாக உள்ளது. தோம்பரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற ஆவணங்களில் பல முன்னம் இடம்பெற்ற இடப்பெயர்வு, வன்செயல் என்பனவற்றில் அழிந்து போய்விட்டமை தொடர்பில் திரு.மனுவல் இந்திரசூரியன் அவர்கள் தனது கவலைகளைப் பகிர்ந்து கொண்டார்.

*1831* ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் *21* ஆம் திகதி INDIOPHILUS எனக் கையொப்பம் இட்டிருப்பவரால் THE EDITOR OF THE CEYLON GOVERNMENT GAZETTE க்கு இக்கட்டுரை எழுத ப்பட்டிருக்கிறது. எனது தேடல்களின் அடிப்படையில் INDIOPHILUS எனக் கையொப்பம் இட்டிருப்பவரை சைமன் காசிச்செட்டி (Simon Casie Chetty, மார்ச் *21, 1807* - நவம்பர் *5, 1860)* என அனுமானிக்க முடிகிறது.

*19* ஆம் நூற்றாண்டில் இலங்கையில் வாழ்ந்த புகழ் பெற்ற தமிழர்களில் ஒருவரான சைமன் காசிச்செட்டி அவர்கள்

அரசாங்கத்தில் பல உயர் பதவிகளை வகித்தவர். பிரித்தானியர் காலத்தில் இலங்கை நிருவாகச் சேவைக்கு இணைக்கப்பட்ட முதல் இலங்கையரான இவர், இலங்கையில் பிரித்தானிய அரசு பின்னர் வெளியிட்ட “கசெற்” என்னும் செய்தி வெளியீட்டுக்கு முன்னோடியாகக் கருதப்பட்ட “சிலோன் கசற்றியர்” என்னும் வெளியீட்டைச் செய்தவர் என்பது கவனத்தில்கொள்ளத்தக்கது.

கவிராஜவரோதயன் என்பவரால் பாடப்பட்ட கோணேசர் கல்வெட்டு எனும் நூலில் உள்ள விடையங்களை சுருக்கமாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து இலங்கை வரலாற்றை ஆராய முற்படுபவர்களுக்கு ஒரு தூண்டுதலாக அமையும் என்ற நம்பிக்கையுடன் இந்த ஆவணத்தை அவர் உருவாக்கியுள்ளார்.

To,

The Editor of the Ceylon Government Gazette.

Sir,

Among the various monuments of Hindu antiquity found in Ceylon and which induced the late excellent and learned Sir William Jones to express an opinion that this Island was peopled time out of memory by the Hindu race, the Temple which stood at Trincomalie is not to be forgotten. It would have remained to the present day as a venerable relic, had not the misguided religious zeal of the Portuguese razed it to the ground in 1622 to supply materials for one of their fortifications.

Some time ago through the kindness of a friend of mine I was obligingly put in possession of a small manuscript poem composed in Tamil by Kavi Raja Varothayan (a celebrated bard among the ancient inhabitants of Ceylon) which though enveloped in a cloud of fable gives an account of the origin and history of this sacred edifice, I was consequently induced to translate it and have now the pleasure of laying the same before the public for their information.

A King named Manu Niti Kanda Solan who ruled over the country of Solamandalam learning from the Kailasa Puranam the wonders of Thirukkonathamalai and the magnificent state of its inhabitants came over to the place his son Kulakkotu Maharajah who followed him thither afterwards raised the temple, the spire, the pavilion and the sacred cistern in the year 512 of Kaly yug on Monday the 10th day of the month of Vaikasi.

After having built the Temple the King finding that much difficulty was experienced in obtaining rice and other things from Solamandalam for the daily use of the Temple, he meditated on means to obviate it, and accordingly caused lands (to the extent of 2500 avanams) to be converted to the cultivation of Paddy, and a tank to be constructed in the vicinity for the irrigation of the said lands both of which he consecrated to Konaser Swami. He afterwards proceeded to the

village

village of Marakoor in the North on the 24th day of Panguni in the years 12 and brought from thence in a vessel to Thirukkonamalai seven families of the Valala caste whom he settled there assigning to them the Temple and the lands appertaining to the same as a hereditary possession. To these seven families were entrusted the care of the Temple treasury, the regulation of the income and expenditure, the celebration of the festivals and the presentation of silk vestments to the Kings. As more people were required for the service of the Temple, the King went to the village of Karakadoo and by compulsory means brought from thence on the 10th day of Vaikasi (of the year aforesaid) twenty more families whom he likewise settled at the place and appointed for the bathing of the Lingam (Phallus) and to the offering of flowers at his shrine, to sweeping and illuminating the Temple daily, cleaning the sacrificial implements, performing libations of water, husking the paddy and smearing the floor of the Temple with cowdung, singing and playing on musical instruments, spreading cloth at animal sacrifices, hoisting and lowering the flagstaff on solemn days, preparing essence of sandal wood and purifying the ornaments of the Temple. These people were also endowed with lands for their subsistence and five of them dignified with the title of Pandarattar.

As the first seven families who were settled there were brought willingly from their country they received the common name of Tanattar in contra distinction to the twenty families who settled after them who were called Varippattar because they were impressed one out of every ten men in their country.

The King contemplating that there were none to judge these Tanattar and Varippattar in the event of any discension among them, determined to appoint a chief over them. he accordingly proceeded to Madurai and brought from thence a nobleman of the name of Tanivunne Pupalan whom he invested with the title of Wanniya and ordained him Governor of

Thirukkonathamalai

Thirukkonathamalai authorizing him to punish offences by fine, imprisonment in chains or by death according to their extent or magnitude strictly enjoining him to keep his institutions inviolate and to conduct the affairs of the Temple and the ceremonies thereof without omission.

The King further ordered that the citizens of Kadduculam should render their services in the Temple that the citizens of Nilaveli should preside over the celebration of the festivals and supply the Temple with six avanams of paddy also pay the tithes, taxes and customs of their country to the Temple; that the citizens of Cottiyaram should furnish the Temple with betel, plantains, sandal wood, curdled milk, clarified butter, 100 avanams of rice and the seeds of Amenaka, Punnei and Illuppai trees. These latter mentioned seeds should be delivered to the citizens of Trativoe to be made into oil and then again delivered to the Tottiyar of Kevulimune who after entering the quantity into the accounts of the Temple, should pour it into the reservoir where the same was to remain for lighting lamps. There were seven reservoirs built at the outside of the Temple for the reception of oil, they were enclosed with walls which were provided with doors and a person appointed to overlook them called Adikaree.

When the above orders had been given the King next proceeded to regulate the affairs of (the interior apartments of) the Temple. He ordered the servants to illuminate it every day with 1000 lamps lighted with butter and 1000 lamps lighted with oil to be placed both inside and out and to sprinkle the ground with rose water impregnated with musk and sandal wood, he further ordered that they should at stated periods make oblations of rice mixed with milk curd to Supermaniya in 12 silver trays, to Pulleyar in 6 silver trays and to Siva in 64 silver trays and to the rest of the deities in 128 copper trays. Besides these he directed oblations of several thousand balls of rice to be made and a lamp with a thousand camphor

wicks

wicks to be burnt in perfect regularity.

After detailing the foregoing particulars relative to the foundation of the Temple and the institution of its ceremonies Kavi Raja Varothayan proceeds to relate the prophecies delivered by the King with reference to its future magnificence and the revolutions which it would undergo by foreign invasions but they are so incongruous and confounded with fable as is common with Hindu productions that I have omitted the whole of it and resume the translation as follows —

"The King one day after having performed ablution in the sacred pool and made his ablutions and prayers, wearing around his head a wreath of Ottrasha beads, painted his forehead with the holy ashes went round the Court of the Temple holding in his hand a nosegay of flowers and then entered into the sanctum sanctorum. He remained there so long that it roused the suspicions of his courtiers who proceeding inside to look for him found that he had become metamorphosed into a lotus flower at the shrine of the God upon which they made great lamentations.

"This story of the King's transformation into a flower is akin to what is related of the disappearance of Romulus and as like that Prince Kulakottu Maharajah also became counted among the Gods and sacrifices were accordingly made to him by the inhabitants of Thirukonathamalai.

Many years after this metamorphosis of Kulakottu Maharajah a certain King called Gaja Bahu Maharajah made a pilgrimage to Thirukkonathamalai and on his arrival finding that Panpolar who had hitherto ministered in the Temple were dead and none had succeeded them he was plunged in grief and invoked the deity to repair the breach which death had made in the priesthood. While the King was thus engaged in acts of devotion he perceived two Brahmin youths floating on the surface of the ocean with vedas in their hands. As soon as he saw them, greatly


delighted

delighted he arose from his seat, advanced towards them into the sea and seizing them one by each hand brought them to the shore calling them at the same time by the epithet of Irupalar (on the right and left hand as he had held them). He conferred on them the priesthood of the Temple and gave directions to the Wanniya, Tanattar and Varippattar to respect and obey them and also to render their services to them.

Gaja Bahu Maharajah sent for the five tribes of town servants (namely smiths, potters, barbers, washers and pariahs) from Erlamandalam and fixed them at Thirukkonathamalai allotting to them lands and paddy fields for their maintenance.

Afterwards he caused a tank to be built at Cottiyaram in the neighbourhood of the river Mahaweliganga and paddy lands to the extent of 6350 avanams to be improved and groves of Punnei, Illuppai, Amenaka and cocoa trees to be planted thereabouts; he also gave orders that one tenth part of their produce should be appropriated for the service of the Temple. This he performed in order to expiate a sin which he considered in his having once entertained the idea of pulling down the Saiva place of worship and of building one of Buddha in its room. Gaja Bahu Maharajah afterwards called together the citizens of the country and having charged them to preserve the institutions of Kulakottu Maharajah inviolate he dignified the two foreign Brahmins with the title of Raja Guroo or sovereign pontiff and intrusting to them all the jewels and treasures of the Temple returned to his capital Anurajapura where after reigning for a long period he at length entered into the bliss of Siva."

what



What I have translated above though not literal is the substance of the account contained in the manuscript and I humbly hope that it may be of some use as a clue to persons who may make further researches in the antiquities of Ceylon.

I remain
Sir,
your most obedient servant,
Indiophilus

Calpentyn 21st November 1831.

திரு. இந்திரசூரியன் , நூலாசிரியர், கலாபூஷணம் வே.தங்கராசா



**இயல் 5 ஊர்ப்பெயர் வரலாறு 3**

## தம்பை நகர்

தம்பலகாமத்தினை "தம்பை நகர்", "தம்பை ஊர்" எனச் சிறப்பித்துக் கூறும் வழக்கம் பதினேழாம் நூற்றாண்டு முதல் இன்றுவரை நிலைபெற்று இருப்பதை அறியக் கூடியதாக உள்ளது. தம்பை என்ற சொல் இடப்பெயராக நீண்ட காலமாக இலங்கையிலும், தமிழ்நாட்டிலும் வழங்கி வந்திருக்கிறது.

கி.பி 1220 முதல் கி.பி 1354 வரையான காலப்பகுதியில் இலங்கையில் இருந்த இராச்சியங்களில் ஒன்று தம்பதெனிய இராச்சியம். இங்கு அரசாண்ட நான்காம் பராக்கிரமபாகு மன்னன் அவனது கல்வியறிவின் காரணமாக பண்டித பராக்கிரமபாகு என அழைக்க ப்பட்டான். இக் காலத்தில் பல இலக்கியங்கள் உருவாக இம்மன்னன் அனுசரனை வழங்கினான்.

தேனுவரைப் பெருமாள் என்னும் போசராச பண்டிதரால் நான்காம் பாரக்கிரமபாகு பூபன் என்னும் மன்னன் முன்னால் "சரசோதிமாலை" எனும் சோதிட நூல் கி.பி.1309 இல் அரங்கேற்றப்பட்ட இடத்தின் பெயர் தம்பை என்பதாகும். இன்று இந்த இடம் 'தம்ப தெனியா' என அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பருத்தித்துறை போகும் பிரதான வீதியில் தெருமூடிமடம் அமைந்திருக்கிறது. மடத்தின் தூண்களில் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்தவை இவை. தெருமூடிமடத்தின் கட்டுமானத்துக்கு உதவியவர்களின் பெயர்கள் அவர்களது ஊர்ப்பெயரோடு அங்கே பொறிக்கப்பட்டுள்ளது. அதிலுள்ள ஒருவரின் பெயர் ஶ்ரீ மு.சுப்பிரமணியம், அவரது ஊர்ப்பெயர் தம்பை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது பருத்தித்துறையில் இருக்கும் தம்பசிட்டி எனுமோர் ஊரின் பெயராக கருதப்படுகிறது.

இதுபோலவே தமிழகத்தில் பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டையை அடுத்துள்ள வாலிகண்டபுரத்தில் பிரசன்ன வெங்கடேஸ்வரப் பெருமாள் ஆலயம் இருக்கிறது. இங்கு கி.பி.1629 ஆம் ஆண்டளவில் விஜயநகர மன்னர் ஶ்ரீராமதேவமகாராயரின் ஆட்சிகாலத்தில் எழுதப்பட்ட கல்வெட்டொன்று உள்ளது. இக்கல்வெட்டு சேலத்தைச் சேர்ந்த சின்னமநாயக்கரின் மகன் கிருஷ்ணப்ப நாயக்கன் என்பவர் இவ்வாலய வழிபாட்டுக்குச் செய்த தானம் பற்றிச் சொல்கிறது. கிருஷ்ணப்ப நாயக்கர் தம்பை என்ற ஊருக்கு வெங்கடேஸ்வரபுரம் எனப் பெயரிட்டு அவ்வூர் முழுவதையும் இக்கோயிலுக்கு தானமாக வழங்கியதைத் தெரிவிக்கிறது.

இவ்வாறு இலங்கையிலும், தமிழகத்திலும் தம்பை எனும் ஊர்ப்பெயர் இருந்தாலும் தம்பலகாமத்தினை உயர்த்தி சிறப்பித்துக் கூறும் சந்தர்ப்பங்களிலேயே “தம்பை நகர்” “தம்பை ஊர்” போன்ற பெயர்கள் பயன்படுத்தப்பட்டதைக் காணக்கூடியதாக உள்ளது.

பதினேழாம் நூற்றாண்டில் எழுந்த இலக்கியமான வெருகல் ஶ்ரீ சித்திரவேலாயுதர் காதல் ஆசிரியர் தன்னை தம்பலகமத்து வீரக்கோன் முதலி என அறிமுகப்படுத்தும் அவர் இந்நூலின் இறுதிப்பாவில் “தக்கபுகழ் பெற்றிலங்குந் தம்பையூர் வாழியவே”[(1)] (எல்லோராலும் போற்றதக்க புகழினைப் பெற்று

விளங்குகின்ற தம்பையூர் எனப்படும் தம்பலகாமமும் வாழ்வதாக) என்று தான் பிறந்த ஊரினை வாழ்த்தி நூலினை நிறைவு செய்கிறார்.

தம்பையூர் என்று தம்பலகாமம் இந்நூலில் பதிவு செய்யப்பட்டது போல் தம்பை நகர் என்று "திரிகோணாசலப் புராணம்" பதிவு செய்து இருக்கிறது. திருக்கோணஸ்வரத்துடன் தொடர்புடைய பக்தி இலக்கிய மரபினைப் பிரதிபலிக்கும் மூன்று நூல்கள் உள்ளன. கைலாச புராணம், கோணேசர் கல்வெட்டு, திரிகோணாசலப் புராணம் என்பவை அவை. இவற்றுள் திரிகோணாசலப் புராணம் காலாத்தால் பிந்தியது.

திரிகோணாசலப் புராணம் 20 படலங்களையும், 1491 செய்யுள்களையுங் கொண்டமைந்தது. நாயக்கர் கால இலக்கியங்களுடன் ஒப்பிட்டு நோக்கத்தக்க இப்புராணத்தின் ஆசிரியர் பெயரும், எழுதப்பட்ட காலமும் நூலில் குறிப்பிடப் படவில்லை. இதன் இருபதாவது படலம் "தம்பை நகர்ப் படலமாகும்" இப்படலம் தம்பலகாமத்தினைப் பல்வேறு முறைகளில் சிறப்பித்துக் கூறுகிறது.

1. கன்னல் வேலி வரம்பு உடுத்த
   கழனி சூழும் தம்பை நகர் ( கன்னல் - கரும்பு )[2]

2. குறையா வளம் சேர் தம்பை நகர்க்[3]

3. "கரிய குவளை மலர் மேய்ந்து
   கடவாய் குதட்டித் தேன் ஒழுக
   எருமை கிடந்து மூச்சு எறியும்
   எழிலார் தம்பை வள நாட்டின்"
   (குவளை – அல்லி ) [4]

பலநூற்றாண்டுகளுக்கு முன் இக்கிராமத்தின் இயற்கை வளத்தின் குறையாத தன்மையினைப் பதிவுசெய்யும் இந்நூலின் மேற்குறிப்பிட்ட செய்யுளின் காட்சிகளை இன்றும்

நீங்கள் தம்பலகாமத்தில் காணலாம். இன்றும் மதிய நேரத்தில் வீடு திரும்பும் வேளையில் எல்லாம் கடந்துபோகும் வயல்வெளிகளில் இக்காட்சியைக் நான் காண்கின்றேன். வயல் உழுது முடிந்த களைப்புடன் வயல்நிலங்களுக்கு இடையில் கால்வாய்கள் பாயுமிடங்களில் உருவாகி இருக்கும் சிறிய குட்டைகளில் அசைபோட்டபடி எருமைகள் சேற்றுக் குளியலில் ஈடுபடும் காட்சியை காணும் ஒவ்வொரு முறையும் இப்பாடல் நினைவலைகளில் வந்து செல்லும்.

இத்தனை சிறப்பு பொருந்திய இடம்மென்பதால் இந்நூலாசிரியர் தனது வாழ்த்துப்பாவில் “ஊர் வாழி திருத்தம்பை நகரம் வாழி”[5] என்று தம்பலகாமத்தை வாழ்த்திப் பாடி இருக்கிறார். இங்கு “திரு” என்ற அடைமொழி மேன்மை, போற்றுதற்குரியது என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப் பட்டிருப்பது குறிப்பிடதக்கது. அத்தோடு திரு என்பது திருகோணமலையை குறிப்பதாகவும் கருதலாம்.

தம்பை நகர்ப்படலம் தவிர்ந்து மேலும் இரு படலங்களில் தம்பை நகரின் புகழ் குறிப்பிடப்பட்டுள்ளது. கந்தளாய்க் குளத் திருப்பணிகள் தொடர்பான விபரங்களைத் தரும் திரிகோணாசலப் புராணத்தின் பன்னிரண்டாவது படலமான “திருக்குளம் கண்டபடலம்” நீர் நிறை வளம் சேர் தம்பைமா நகரும்[6], பன்னரும் சீர்த் தம்பை நகர்[7] எனத் தம்பலகாமத்தை விபரிக்கிறது. இது போலவே “திருப் பொலிந்திடு தம்பை மாநகர்”[8] என்று நிமித்திக்கப்படலம் உரைக்கின்றது.

திருப் பொலிந்திடு தம்பை
மாநகர்க்கு ஒரு சிறையின்
அருப்பம் உள்ளன குறைத்து
நல்ல அணிபெறத்திருத்தி

ஆயிரத்து முன்னூற்று ஐம்பான்
அமணநெல் விரைத்தும்
சேய மாநிலம் செம்மை
செய்து உயர் திருக்குளநீர்

பாயும் ஆறுகள் பழனங்கள்
பற்பல வகுத்துக்
தூயதாகிய குடிபடை
சூழ்வர அமைத்து

ஆங்கு அவர்க்கு வேண்டிய
பல வளங்களும் அளித்துத்
தேங்கு நீர்ச் செறு எங்கணும்
பயிரிடச் செய்தே
பாங்கர் வாழை மா
தெங்கு பூகம் பலவாதி
ஓங்கும் ஊதியம் உற
நனி மகிழ்வினோடு உஞற்றி

விதி அதாய் அரன் பூசனை
விளங்குறப் புரியும்
முதன்மை கொண்டவர்
ஏனையார் யாவர்க்கும் முறையே
குதிகொள் நீர்ச் செறு
அவரவர்க்கு ஆம் படி கொடுத்திட்டு
அதிக மாநிதி பூண்களும்
அளித்தனன் அரசன்

ஈசன் பூசைக்கும் அதிக
நெல் விளை நிலம் ஈந்து
வாச மென்மலர்ச் சோலை
நந்தவனம் வகுத்துத்
தேசு உலாவு பொன்முதல்
உலோகங்களாற் சிறந்த
பாசனங்கள் மற்று எனவும்
பற்பல படைந்தே.

*என்று திரிகோணாசல புராணம் கஜபாகு மன்னன் செய்த திருப்பணிகள் தொடர்பில் விபரித்துக் கூறுகிறது. இங்கு மன்னனால் தம்பை மாநகரில் முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் தொடர்பில் திரிகோணசல புராணம் மேற்குறிப்பிட்டவாறு பதிவு செய்திருக்கிறது.*

வளம் நிறைந்த தம்பலகாமத்திலே ஒரு பகுதியினைத் திருத்தி 1350 அமணம் விதைப்பு நெல் வயலாக்கி அதனை தேவதானமாக கஜபாகு மன்னன் அமைத்தான். கந்தளாய்க் குளத்தில் இருந்து அதற்கு நீர்ப்பாசனஞ் செய்ததற் பொருட்டு கால்வாய்கள், கண்ணாறுகள் என்பவற்றை அமைத்துக் கொடுத்தான்.

அந்த வயல் நிலத்தைச் சூழக் குடியிருப்புக்களை உருவாக்கிக் குடிகளுக்குத் தேவையான வசதிகளையும் மன்னன் செய்து கொடுத்தான். நன்செய் நிலங்கள் எல்லாவற்றையும் செய்கை பண்ணுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் அவன் செய்தான். வாழை, மா, கமுகு, தென்னை முதலானவற்றைச் செய்கை பண்ணும் தோப்புக்களையும் அங்கு உண்டுபண்ணிக் கொடுத்தான்.

முதன்மைக்கும் கோயிலிற் தொழும்புகள் புரிவோருக்கும் ஏற்றவாறு வயல்நிலங்களைக் கொடுத்து அவற்றோடு வேறு பொருட்களையும் கஜபாகு மன்னன் வழங்கினான் என்று திரிகோணசல புராணத்தின் மேற்கூறிய பாடல்பகுதி கஜபாகு மன்னன் தம்பை மாநகரில் செய்த பணிகளைப் பதிவு செய்கிறது.

இங்கு குறிப்பிடப்படும் 'அமணம்' என்ற சொல் இருபதினாயிரங் கொட்டைப் பாக்குகளுக்குச் சமனானது எனப் பொருள் கொள்ளலாம். எனவே கஜபாகு மன்னன் தம்பை மாநகரின் ஒரு பகுதியைத் திருத்தி 1350 அமணம் விதை நெல் பயன்படுத்த வேண்டிய வயல் தரையாக அவற்றை மாற்றினான் எனக் கொள்ளலாம்.

போர்த்துக்கீசர் ஆட்சியில் திருகோணமலையின் தம்பலகாமப் பற்றில் 10,000 அமணம் நெல் இருபோக விதைப்புகளுக்காகப் பயன்படுத்தப்பட்டதை அவர்களது ஆவணங்கள் ஆதாரப்படுத்துகின்றன(9). இங்கு குறிப்பிடப்படும் கஜபாகு மன்னனது ஆட்சிக் காலத்திற்கு சுமார் 500 ஆண்டுகள் பிந்தியது போர்த்துக்கீசரின் ஆக்கிரமிப்பு என்பதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே கஜபாகு மன்னன் 1350 அமணம்

நெல் வயலாக்கி அதனை தேவதானமாக திருக்கோணேச்சரத்துக்கு வழங்கினான் என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவே அமைகிறது.

நெல்வயல்கள் மட்டுமல்லாது அவற்றுக்கு நீர்ப்பாச்சுகின்ற கந்தளாய்க் குளக்கால்வாய்கள், மக்கள் குடியிருப்புகள், தோப்புக்கள் என்பன கஜபாகு மன்னனால் புணரமைக்கப்பட்டதை திரிகோணாசல புராணம் விரிவாகப் பதிவு செய்கின்றது.

இன்றைய தம்பலகாமம் கள்ளி மேட்டிலுள்ள ஆலயடிப் பத்தினி அம்மன் வேள்வி வளாகம் கஜபாகு மன்னனால் வழங்கப்பட்ட கொடை என வாய்மொழி வரலாறுகள் சொல்வதினை மேற்கூறிய திரிகோணசால பாடல் வரிகளுடன் ஒப்பிட்டு நோக்குகையில் அவை பொருத்தமானவையாகத் தோன்றுகின்றது.

பராக்கிரமபாகு மன்னனிடம் பெலநறுவையை இழந்த கஜபாகு மன்னன் அவனுடன் உடன்படிக்கை செய்து கொண்டு கந்தளாயில் அரண்மனை அமைத்து சுகமாக வாழ்ந்தான் என்பதனை மகாவம்சம் கூறுகிறது. எனவே தம்பைமாநகர் மீது கஜபாகு மன்னன் அதிக செல்வாக்கு செலுத்தியதற்கு இதுவும் ஒரு காரணமெனலாம்.

பதினேழாம் நூற்றாண்டில் எழுந்த இலக்கிய நூல்களினை ஆதாரமாக கொண்டு தம்பை நகர், தம்பையூர், தம்பைமாநகர், திருத்தம்பை நகர் போன்ற சொற்கள் தம்பலகாமத்தை சிறப்பித்துக் கூறும் தருணங்களில் பயன்படுத்தப்பட்டவை என அறியக் கூடியதாக உள்ளது. இன்றும் கவிதைகளிலும், வாழ்த்துப்பாக்களிலும் தம்பைநகர் என்ற பதம் தம்பலகாமத்தைக் குறிக்கப் பயன்படுவதைக் காணலாம்.

உசாத்துணை


(1) வெருகல் ஸ்ரீ சித்தரவேலாயுதர் காதல், பக்கம் 158, இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், 2000

(2) திரிகோணாசால புராணம், பக்கம் 361, செய்யுள் 37, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 1997

(3) மேலது பக்கம் 361 செய்யுள் 38

(4) மேலது பக்கம் 364 செய்யுள் 47

(5) மேலது பக்கம் 364 செய்யுள் 50

(6) மேலது பக்கம் 230 செய்யுள் 68

(7) மேலது பக்கம் 237 செய்யுள் 97

(8) மேலது பக்கம் 343 செய்யுள் 16

(9)காலனித்துவ திருகோணமலை, பக்கம் 27, கலாநிதி கனகசபாபதி சரவணபவன், 2010

## தமனதோட்ட TAMANATOTA

இணையத்தில் இலங்கையின் புராதன சிங்கள இடப்பெயர்களும் அவற்றின் தமிழ் வடிவங்களும் என்ற ஆய்வுத் தொகுப்பினைப் பார்த்துக் கொண்டிருந்த போது தம்பலகாமம் தமனதோட்ட என்ற சிங்களப் பெயரினால் அழைக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணமுடிந்தது.

Traditional Sinhala place names in Sri Lanka and their Tamilized forms. (http://dh-web.org) - Tampalakamam (Sirigonakanda [Trincomalee]) TAMANATOTA, TAMPALAGAMA, TAMBALAGAMUWA - Meaning. In Tamil "kamam" has no immediate meaning, (Hist. Emerson Tennent: Tambalagamuwa ), see P. Arunachalam, "Sketches of Ceylon History", reg. "Tamanatota" This was the port of the then province of "Tamankaduwa".

தம்பலகாமம் தொடர்பான பல தகவல்களைத் தேடிக் களைத்துப் போயிருந்த காலமது. தமனதோட்ட என்ற இந்தப் புதிய தகவல் மீண்டும் எனது தேடல்களில் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தி இருந்தது. இலங்கையைப் பொறுத்தவரை பெரும்பாலான வரலாற்று ஆய்வுகள்

இன, மத, மொழி அடிப்படைகளை முன்னிறுத்தியே மேற்கொள்ளப்படுகின்றன என்பதனை இதுவரை காலமான எனது வாசிப்பனுபவங்கள் கற்றுத்தந்திருக்கிறது. இலங்கைக்கான ஒரு பொதுவான வரலாற்றை கட்டியெழுப்புவதற்குப் பாரிய தடையாக இருப்பதும் இந்த சிந்தனைதான்.

இலங்கையின் புராதன சிங்கள இடப்பெயர்களும் அவற்றின் தமிழ் வடிவங்களும் என்ற அந்த ஆய்வானது தம்பலகாமம் தமனதோட்ட என்ற சிங்கள இடப்பெயரின் தமிழ் வடிவம் அதிலுள்ள காமம் இடப்பெயர் சார்ந்த எந்த பொருளையும் கொண்டிருக்கவில்லை என்று மிக இலகுவாக தம்பலகாமம் என்ற புராதனமான பெயரினை கடந்துபோயிருந்தது. அதுபோலவே தமனதோட்ட என்ற இடப்பெயரினையும் மேலோட்டமாக கடந்து செல்ல மனம் விரும்பவில்லை. எனவே தமனதோட்ட தொடர்பில் கொஞ்சம் விரிவாகத் தேடிப் பார்க்கலாம் என ஆசைப்பட்டேன்.

தமனதோட்ட தொடர்பான எனது தேடல்களின் போது பல ஆய்வுக் கட்டுரைகளைப் படிக்க நேர்ந்தது. அவற்றின் சாராம்சம் ஒரு பெரும் குற்றச்சாட்டாக இருந்தது. பழமையில் தமனதோட்ட என்று இருந்த பிரதேசத்தினை போர்த்துக்கீசரின் ஆக்கிரமிப்பின் பின்னர் தமிழர்கள் குடியேறி தம்பலகாமம் என பெயர்மாற்றிக் கொண்டார்கள் என்பதே அக்குற்றச்சாட்டின் சாராம்சமாக இருந்தது. இது வடகிழக்குப் பிரதேசங்களில் இருந்த சிங்கள குடியிருப்புகள் சோழராட்சியின் பின் தமிழ் பிரதேசங்களாக மாற்றப்பட்டதோடு அப்பிரதேசப் பெயர்களும் மாற்றப்பட்டன என்ற வாதத்தினைப் போன்றதொரு குற்றச்சாட்டாகும்.

இலங்கையில் இருந்து போர்த்துக்கீசரின் ஆட்சி அதிகாரம் 1658 இல் முற்றாக அகற்றப்பட்டது. இதற்கு சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்னதான "தம்பலகாமம் கல்வெட்டு" இவ்வூர்ப் பெயரினையும் அங்கிருந்த தமிழ்க் குடியிருப்பு தொடர்பான விபரங்களையும் பதிவு செய்திருப்பதனால்

இக்குற்றச்சாட்டினை இலகுவில் கடந்துவிட முடிகிறது. எனினும் தம்பலகாமம் தமனதோட்ட என அழைக்கப்பட்டதன் பின்னணி பற்றி பூரணமாக அறிந்து கொள்வதன் மூலமாகவே இக்குற்றச்சாட்டின் பின்னணியில் உள்ள அரசியலைப் புரிந்து கொள்ள முடியும்.

தமனதோட்ட என்றதும் எனக்கு நினைவுக்கு வந்த பெயர் ஊராத்துறையாகும். யாழ்ப்பாணத்தில் இருக்கும் ஊர்-காவல்துறை என்ற தீவின் பண்டைய பெயர் ஊராத்-துறையாகும். ஊராத்துறை என்னும் பெயர் வடிவம் மிகவும் புராதனமானதென்று கொள்ள முடிகின்றது என்று பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் கருதுகிறார். ஊர் என்னுஞ் சொல்லுடன் கிழமைப் பொருள் வேற்றுமை விகுதியான ஆ என்பதைக் கூட்டி அதனுடன் துறை என்ற சொல்லைச் சேர்க்கும்போது ஊராத்துறை(1) என்ற இடப்பெயர் கிடைக்கும். அது ஊர்களின் துறை, ஊர்களுக்கு இடையிலான துறை, பேரூராகிய பட்டிணத்துக்குரிய துறை போன்றவற்றினைக் குறிக்கப் பயன்பட்டிருக்கிறது.

ஊராத்துறையினை 13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுந்த சிங்கள நூலான பூஜாவலிய “ஊறாதோட்ட” என்று பதிவு செய்கிறது. இது பென்தோட்ட, அம்பலாந்தோட்ட, ஹம்பாந்தோட்ட போன்ற சிங்களப் பெயர் வடிவங்களை ஒத்தது.

துறை என்ற தமிழ்ச் சொல்லினை சிங்களத்தில் மொழி பெயர்க்கும் போது தோட்ட என்றாகிவிடுகிறது. இந்தப் பெயர்களின் அடிப்படையில் நோக்குமிடத்து தமனதோட்ட என்ற பெயர் தம்பலகாமம் ஒரு துறைமுகமாகப் பயன்படுத்தப்பட்ட காலத்தில் வழங்கப்பட்ட பெயர் என்பதனைப் புரிந்துகொள்ள முடியும்.

தம்பலகாமம் துறைமுகமாக பயன்படுத்தப்பட்ட காலப் பகுதியின் அரசியல் நிலவரங்களை தெளிவாகப் புரிந்து கொள்வதன் மூலமாகவே தமனதோட்ட என்ற பெயருக்கான முழுமையான விளக்கத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

தம்பலகாமத்திற்கு தமனதோட்ட என்ற பெயர் வழங்கப்பட்ட காலப்பகுதி கண்டி அரசன் இரண்டாம் இராஜசிங்கனின் ஆட்சியின் இறுதிப்பகுதியாகும். 15ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் (கி.பி. 1469) இலங்கையின் மத்திய பகுதியில் உருவாகி கி.பி 1815 வரை நிலைத்திருந்த அரசு கண்டி இராச்சியமாகும். கண்டி இராட்சியத்தின் குறிப்பிடத்தக்க மன்னர்களில் ஒருவர் இரண்டாம் இராஜசிங்கன். இவரது ஆட்சி கி.பி. 1635 முதல் கி.பி.1687 வரை சுமார் 50 ஆண்டு காலம் நீடித்திருந்தது. தனது வாழ்நாள் முழுவதும் ஐரோப்பியரின் காலனித்துவ ஆதிக்கத்துக்கு எதிராகப் போர் புரிந்த மன்னனான இரண்டாம் இராஜசிங்கன் கிழக்கிலங்கை வரலாற்றிலும் குறிப்பிடத்தக்கதொரு இடத்தினைப் பெற்றி ருக்கிறான்.

இம்மன்னன் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயத்தினை நிர்மாணிக்கப் பொருளுதவி வழங்கியமை, வெருகல் சித்திரவேலாயுத சுவாமி கோயிலுக்கு நிலங்களைத் தானமாக வழங்கியமை போன்ற விடயங்களை இலக்கியங்கள் மூலமாக அறியக் கூடியதாக உள்ளது. இவை இரண்டாம் இராஜசிங்கன் காலத்தில் திருகோணமலை மீது கண்டி இராச்சியம் கொண்டிருந்த செல்வாக்கை எடுத்துக் காட்டுவதாக அமைகிறது.

இக்காலமளவில் கண்டி இராட்சியம் நேரடியாகப் பயன்-படுத்திய துறைமுகங்களாக திருகோணமலை, கொட்டியாரம் என்பன இருந்தன. கண்டி இராட்சியத்தின் ஒரு பகுதியாக இருந்த தம்பன் கடவைப் பிரதேசம் பயன்படுத்திய துறைமுகமாக தம்பலகாமம் இருந்தது. தம்பன் கடவைப் பிரதேசத்தின் துறைமுகமாகப் பயன்பட்ட காலத்திலேயே தம்பலகாமம் அதன்மீது மேலாதிக்கம் செலுத்தியவர்களால்

தமனதோட்ட என்றழைக்கப்பட்டிருக்கிறது. இங்கு தோட்ட என்பது துறைமுகத்தினைக் குறிப்பதை முதலிலேயே பார்த்திருந்தோம். தமன என்பது தம்பன் கடவையை (சிங்களத்தில் தாமன்கடவ) குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதனைப் புரிந்து கொள்ளலாம்.

அரச நிர்வாக ரீதியில் இப்பிரதேசம் தமனதோட்ட என்று அழைக்கப்பட்டாலும் இங்கு சமகாலத்தில் எழுந்த இலக்கியங்கள் இதனை தம்பலகமம், தம்பைநகர் என்று குறிப்பிட்டிருப்பதை நாம் இங்கு கருத்தில் கொள்ளவேண்டும். ஏனெனில் ஸ்ரீ சித்திரவேலாயுத காதல், திரிகோணாசல புராணம் என்பன இக்காலப்பகுதியினைச் சேர்ந்தவையாகும். எனவே ஊர்மக்களின் பயன்பாட்டிலும் அப்பெயர்களே வழக்கில் இருந்திருக்கும் என்பதனை ஊகிக்கலாம்.

தம்பலகாமம் தமனதோட்ட என்று அழைக்கப்பட்டதனைப் பதிவு செய்திருப்பவர் ஒல்லாந்து வரலாற்று ஆசிரியர் Francois Valentyn அவர்கள். இவர் ஒல்லாந்து அமைச்சராகவும், சிலகாலம் இராணுவத் தளபதியாகவும் பணியாற்றியவர். ஒரு முறையேனும் இலங்கைக்கு வந்திராத இவர் டச்சு ஆவணங்களின் மூலப் பிரதிகளின் துணையுடனேயே இலங்கை பற்றிய விபரங்களை தனது 'Old and New East India' என்ற நூலில் பதிவு செய்திருந்தார். இக்காலப்பகுதியில் டச்சுக்காரர்கள் தம்பலகாமத்தினை Tamblegam என்று அழைத்தார்கள். Thamblegam என்ற பெயர் டச்சுக்காரர்களைத் தொடர்ந்து ஆங்கிலேயேர் ஆட்சியிலும் நிலைத்திருந்தது.

தம்பலகாமம் தமனதோட்ட என்று அழைக்கப்பட்டதாக Francois Valentyn பதிவு செய்திருப்பதனை Sir. பொன் அருணாச்சலம் அவர்கள் தனது நூலான SKETCHES OF CEYLON HISTORY என்ற நூலில் குறிப்பிட்டிருந்தார்[(2)]. இதுவே 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிகளில் எழுதப்பட்ட சில சிங்கள இடப்பெயர் ஆய்வுகளில் Sir. பொன் அருணாச்சலம் அவர்களின் கூற்றினை அடிப்படையாக வைத்து தம்பல-

காமத்தின் பண்டைய பெயர் தமனதோட்ட என்று மேற்கோள்காட்டுவதற்கு காரணமாக அமைந்தது.

தம்பலகாமம் என்று இவ்வூரின் பெயர் குறிப்பிடும் கல்வெட்டு 13ஆம் நூற்றாண்டின் முற்பகுதிக்குரியது என்பதும் தமனதோட்ட என்ற பெயர் நிலவிய காலப்பகுதி 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என்பதும் இக்காலப்பகுதியில் எழுந்த தமிழ் பக்தி இலக்கியங்கள் இவ்வூரின் பெயரினை தம்பலகமம், தம்பைநகர், தம்பையூர் என குறிப்பிடுவதும் நினைவில் கொள்ளவேண்டிய விடயங்களாகின்றன.

உசாத்துணை


1. இலங்கை தமிழ்ச் சாசனங்கள் பேராசிரியர் சி.பத்மநாதன், பக்கம் 343, இந்த சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 2006
2. Sketches of Ceylon History, Page 08, Sir Pon.Arunachalam, 2002

**இயல் 5 ஊர்ப்பெயர் வரலாறு 5**

# TAMBLEGAM

என் சொந்த இடம் திருகோணமலை என்ற போதிலும் மருத்துவக் கற்கை நெறிக்காக நீண்டகாலம் யாழ்ப்பாணத்திலும், மிகக் குறுகியகாலம் மருத்துவப் பயிற்சி நெறிக்காக மட்டக்களப்பிலும் வாழும் வாய்ப்பு வாய்த்திருந்தது. எனக்கு இந்த மூன்று இடங்களின் இடப்பெயர் மீதும் அதிக கவனம் ஈர்க்கக் காரணம் ஒன்றிருந்தது. அது அவ்விடப் பெயர்களின் ஆங்கில வடிவம் கொண்டிருந்த மேலாண்மை தொடர்பானது. உதாரணமாக திருகோணமலையினை Thirukonamalai என்று பயன்படுத்தாமல் Trincomalee என்றும், யாழ்ப்பாணத்தினை Yalpanam என்று பயன்படுத்தாமல் Jaffna என்றும், மட்டக்களப்பினை Mattakalappu என்று பயன்படுத்தாமல் Batticaloa என்றும் பயன்படுத்தும் முறை தொடர்பான தேடலே இப்பெயர்கள் மீது ஆர்வம் ஏற்படக் காரணமாக இருந்தது.

காலனித்துவ ஆட்சியாளர்களின் இடப்பெயர் உச்சரிப்பில் இருந்த இடர்பாடுகளால் அவர்கள் இவ்விடங்களை Trincomalee, Jaffna, Batticaloa என்று பயன்படுத்தினார்கள் என்பது நாம் அனைவரும்

அறிந்ததே. அவ்வாறே காலனித்துவக் காலத்தில் வாழ்ந்த சுதேச மக்களில் பலரும் அரசதேவைகளின் பொருட்டு அவ்வாறே பயன்படுத்தி இருப்பார்கள் என்பதும் புரிந்து கொள்ளக் கூடியதொன்றே. எனினும் இன்றும் மனதினை உருட்டிக் கொண்டிருக்கும் ஒரு கேள்வி என்னவென்றால் காலனித்துவ ஆட்சியாளர்களின் கடைசியான ஆதிக்க சக்தியான ஆங்கிலேயரும் இந்நாட்டினை விட்டு வெளியேறிய பின்னர் இம் மூன்று மாவட்டங்களையும் பெரும்பான்மையாக பிரதிநிதித்துவப்படுத்திய மக்கள் தமிழ் மக்கள். இவர்கள் நாடு சுதந்திரம் அடைந்ததின் பின்னால் ஏலவே மாற்றப்பட்டிருந்த தங்களது பிராந்தியங்களின் பெயரினை மீண்டும் வரலாற்றுடன் தொடர்புடைய புராதனமான பெயர்களான Thirukonamalai, Yalpanam, Mattakalappu என்பனவற்றை மீளப்பயன்படுத்த ஏதேனும் முயற்சிகள் மேற்கொண்டார்களா? என்பதே இன்றுவரை என்முன் விடைகாண முடியாத கேள்வியாக தொக்கி நிற்கிறது.

Trincomalee, Jaffna, Batticaloa போன்றதோர் பெயர் மாற்றம் தம்பலகாமத்திற்கும் நிகழ்ந்திருக்கிறது. காலனித்துவ ஆட்சிக் காலத்தில் இவ்வூரின் பெயர் Tamblegam என்றே அழைக்கப்பட்டு வந்திருக்கிறது. அதிஷ்ட்டவசமாக Tamblegam என்ற பெயர் மீது தம்பலகாமவாசிகள் அதிக ஆர்வம் காட்டவில்லை போல் உள்ளது. காலனித்துவ ஆட்சிக்காலத்தில் உருவான இலக்கியங்கள், ஆவணங்கள் என்பன இவ்வூரினை தம்பை நகர், தம்பையூர், தம்பலகாமப் பற்று, தம்பலகாம தேசம், தம்பலகாமம், தம்பலகமம் என்று பதிவுசெய்கிற அதேவேளை காலனித்துவ ஆட்சிக்காலத்தின் பின்னரும் இம்மக்களிடையே தம்பலகாமம், தம்பலகமம் போன்ற பெயர்களே நிலைத்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

காலனித்துவ ஆட்சிக்காலத்தில் தம்பலகாமத்தின் முக்கியத்துவத்தினை அறிய Thampalakamam என்று தேடிச் சலித்துப்போயிருந்த வேளைதான் அப்பாவிடம் இருந்து ஒரு முக்கியமான தகவல் கிடைத்தது. பாலம்போட்டாற்றிற்கு





அருகில் Tamblegam என்று தம்பலகாமத்தின் பெயரினை பிழையாக எழுதிய கல் ஒன்று இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்ட செய்தியே அது. அக்காலப்பகுதியில் பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகமாக இருந்ததால் பின்னர் ஆவணப்படுத்தலாம் என்று கவனக்குறைவாக இருந்துவிட்டேன். பின்னொருநாளில் ஆர்வத்துடன் புகைப்படக்கருவியுடன் குறித்த இடத்திற்குப் போனபோதுதான் மிகப்பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. அந்தக் குறித்த எல்லைக்கல்லில் இருந்த எழுத்துக்கள் யாவும் சீமேந்தினால் பூசி மறைக்கப்பட்டிருந்தது. இன்றுவரை அக்கல்லில் இருந்த எழுத்துக்களை உறுதிப்படுத்த முடியவில்லை என்பது மிகப்பெரிய வருத்தமே. இருந்தும் Tamblegam என்று தம்பலகாமத்தின் பெயரினை எழுதும் வழக்கம் ஏதும் இருந்திருக்குமா என்ற தேடலுக்கு இச்சம்பவம் வழிவகுத்தது. இதன்மூலமே காலனித்துவ ஆட்சிக்காலத்து தம்பலகாமம் தொடர்பான பல தகவல்களைத் திரட்ட முடிந்தது.

இன்றைய நிலையில் காலனித்துவ ஆட்சிக்காலத்தில் தம்பலகாமம் கொண்டிருந்த சிறப்பிடங்களைப் தேட வேண்டுமாக இருந்தால் Tamblegam Oyster / Pearl, Tamblegam Lake / Bay, Tamblegam Hindoo Pagoda, Tamblegam Map என்று தேடினாலேயே அவற்றைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். இவை ஒவ்வொன்றும் இன்றும் இவ்வூரின் பெருமைகளை நமக்கு உணர்த்துவதாக அமைந்திருப்பதனால் அவற்றினை சற்று விரிவாகப் பார்ப்பது அவசியமாகிறது.

## Tamblegam Map (1793)

தம்பலகாமத்தின் வரைபடம் ஒல்லாந்தர் காலத்தில் *1793* ஆம் ஆண்டு Struys (Surveyor) and Fornbauer (Engineer)[1] ஆகியோரால் வரையப்பட்டிருக்கிறது. எனினும் அவ்வரைபு இதுவரை எமது பார்வைக்குக் கிட்டவில்லை. ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் விவசாயத்தினை மேம்படுத்தி அதனூடாக வரும் வருவாயினை அதிகரிக்கும் நோக்குடன் கந்தளாய், வெண்டரசன் ஆகிய குளங்களினைப் புணரமைக்கும் பணி மேற்கொள்ளப்

பட்டிருக்கிறது. அதன் ஒரு பகுதியாகவே தம்பலகாமத்தின் வரைபடம் வரையப்பட்டிருக்கிறது. இங்கு குறிப்பிடத்தக்க விடயம் யாதெனில் வரைபடம் வரையப்பட்ட இடத்தின் பெயர் Map of Tamblegam எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேற்கூறிய Map of Tamblegam தேடிக் கண்டுபிடிக்கப்படுமாயின் அது தம்பலகாமம் வரலாற்று ஆவணங்களில் முக்கிய இடத்தினைப் பெறும்.

## A pen and black ink drawing (1824) Village of Tamblegam District of Trincomalee

*14.8* cm உயரமும் *21.8* cm அகலமும் உள்ள சித்திரம் ஒன்று பிரித்தானிய அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப் பட்டிருக்கின்றது. காட்டில் வேட்டையாடிய பின்னர் அதனை சமையல்செய்வதை இச்சித்திரம் விபரிக்கிறது. தம்பலகாமத்திற்கு அருகில் இருக்கும் காடொன்றில் வைத்து வரையப்பட்டிருக்கும் இச் சித்திரம் ஒரு பெரிய மரத்தின் கீழ் வேலையாள் ஒருவர் சமையல் வேலைகளில் ஈடுபட அருகில் வேட்டைக்கு பயன்படுத்தப்படும் துப்பாக்கி முதலான பொருட்கள் காணப்படுவதனை பிரதிபலிக்கிறது. இச்சித்திரம் பிரித்தானிய அருங்காட்சியகத்தில் உள்ள ஆசியப் பகுதியில் *1997.1109.0.146*[(2)] இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. 14.01.1824 ஆம் திகதியில் வரையப்பட்ட இச்சித்திரம் திருகோணமலை மாவட்டத்திலுள்ள தம்பலகாமம் (Tamblegam) பிரதேசத்துக்கு உட்பட்ட ஒரு சிங்களக் கிராமத்தில் இச்சித்திரம் வரையப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஒல்லாந்து ஆளுநர் Van Senden அவர்களின் தம்பலகாமப்பற்றுக்கான விஜயத்தின் போது அவர் 11.06.1786 அன்று கண்டி இராட்சியத்துக்கு மிக அருகில் இருந்த ஒரு சிறிய சிங்களக் குடியிருப்புக்கு தான் சென்றதை பதிவு செய்து இருக்கிறார். இந்த விஜயத்தின் போது அம்மக்களுடன் உரையாடிய அவர் அக்கிராம வாசிகள் தமிழர்கள் நரமாமிசம் உண்ணும் பழக்கம் உடையவர்கள் என்ற நம்பிக்கை

கொண்டிருந்ததாக ஆவணப்படுத்தி இருக்கிறார்.[(3)] மேற்கூறிய தகவல் *1786* ஆண்டு காலப்பகுதியில் தம்பலகாமப்பற்றின் கண்டி இராட்சியத்துக்கு அண்மித்த பகுதியில் ஒரு சிறிய சிங்களக் கிராமம் இருந்ததையும், தம்பலகாமத்தில் இருந்த தமிழ்க் குடிகளுடன் தொடர்புகள் எதனையும் அவர்கள் கொண்டிருக்கவில்லை என்பதனையும் அறியத்தருகிறது. *1786* இல் தம்பலகாமத்தின் கண்டி இராட்சிய எல்லைதனில் இருந்த சிங்களக் கிராமத்தின் தொடர்ச்சியினை ஆதாரப்படுத்துவதாக *1824* ஆண்டுக்குரிய இச்சித்திரம் அமைந்திருக்கின்றது குறிப்பிடத்தக்கது.

## Tamblegam Hindoo Pagoda (1786)

தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயம் காலனித்துவ ஆட்சியாளர்களின் பயணக்குறிப்புகளில் Tamblegam Pagoda என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்று நமக்குக் கிடைக்கும் Tamblegam Pagoda தொடர்பான பல்வேறு தகவல்களில் ஒல்லாந்து ஆளநர் Van Senden அவர்களின் குறிப்பு அதிக முக்கியத்துவம் பெறுவதாக அமைகிறது.

ஒல்லாந்து ஆளுநர் Van Senden அவர்கள் *07.06.1786* புதன்கிழமை அன்று Tamblegam Pagoda (தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயம்) இற்கு விஜயம் செய்துள்ளார். அவர் பதிவு செய்திருக்கும் குறிப்பு இவ்வாலய மேலதிக ஆய்வுகளுக்கு அவசியமானவை என்ற வகையில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. ஆளுநரின் ஆலய தரிசனம் தொடர்பான தமிழ் மொழிபெயர்ப்பு இவ்வாறு அமைகிறது.

“கிழக்கில் இருந்து மேற்காக அமைக்கப்பட்டுள்ள தம்பலகாமத்தில் உள்ள புகழ் வாய்ந்த ஆலயத்திற்கு நான் மாலையில் சென்றேன். பிரதம பிராமணக் குருக்கள் இன்னும் சிலருடன் சேர்ந்து என்னை வரவேற்க வந்தார். அவர் எனக்கு சம்பிரதாய பூர்வமாக வழங்கப்படும் அன்பளிப்பான தேசிக்காயும் பூக்களும் வழங்கினார். நான் அவரிடம் கீர்த்தி மிக்க இரண்டு விக்கிரஙகளையும் காட்டுமாறு கேட்டேன். அதில்

ஒன்று போர்த்துக்கீசர் வருகையின் போது ஆயிரங்கால் மண்டபக் கோயிலில் (திருக்கோணேச்சரம்) இருந்து பாதுகாப்பாக எடுத்து வரப்பட்டதாகும். பல சிரமங்களின் பின்னர் என் வேண்டுதலின் பின்னர் என் பரிசுப் பொருட்களைப் பெறச் சம்மதித்தார். என்னை ஆலய மண்டபத்திற்கு அப்பால் நெருங்க அனுமதிக்கப்படவில்லை. ஆலயத்தில் நன்றாக ஒளி அலங்காரம் செய்யப்பட்டிருந்ததால் எனது தொலைநோக்கியின் உதவியுடன் ஒருவகைப் பலிபீடத்தில் அமர்ந்தவாறு காட்சியளிக்கும் விக்கிரகங்களை ஒருவாறு பார்க்க முடிந்தது. அவை துணியினால் போர்க்கப்பட்டு முகம் மாத்திரம் பார்க்கக் கூடியதாக இருந்தது. முற்பக்கத்தில் கோணேசரைப் போன்றும் அவருடைய இடப்பக்கத்தில் சாய்வான நிலையில் ஈஸ்வரி அம்மன் அமர்ந்திருந்தார்.(4)

என மிக விரிவாக ஆலய புராதன விக்கிரகங்கள் தொடர்பான அவரது வர்ணனை பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இன்றைக்குச் சுமார் 230 வருடங்களுக்கு முன்னர் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலய புராதன விக்கிரகங்கள் தொடர்பாகக் கிடைக்கும் நம்பகமான தகவல் இது என்ற வகையில் இவ்வாவணம் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

மேற்குறித்த விக்கிரகங்கள் திருக்கோணேச்சரம் போர்த்து-க்கீசரினால் அழிக்கப்பட்ட போது பாதுகாப்பாக தம்பலகாமம் கொண்டுவரப்பட்டவை என்பதும் இவ்விரு விக்கிரகங்களும் பலிபீடம் போன்ற அமைப்பில் அமர்ந்த நிலையில் வார்க்கப்பட்ட விக்கிரகங்கள் என்பதும் கூர்ந்து கவனிக்-கத்தக்கது. இங்கு குறிப்பிடப்படும் அமர்ந்த நிலையில் வார்க்கப்பட்ட விக்கிரகங்கள் சிவனின் உமாமகேசுவர மூர்த்தமா? என்ற ஐயப்பாடு மனதில் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயம் நிர்மாணிக்கப்பட்ட ஆண்டு இதுவரை சரிவர அறியப்படவில்லை என்ற போதிலும் ஒல்லாந்து ஆளுநரின் விஜயம் இவ்வாலயம் கட்டப்பட்டு சுமார் ஒரு நூற்றாண்டு காலப்பகுதியை அண்மித்ததாக நிகழ்ந்திருக்கிறது. எனவே ஆளுநரின் பதிவு தம்பலகாமம் ஆதி

கோணநாயகர் ஆலய புராதான விக்கிரகங்கள் தொடர்பில் கிடைக்கும் நம்பகரமான முதல் தகவலாகிறது. இக்காரணத் தினால் மிகுந்த ஆவலுடன் ஒல்லாந்து ஆளுநரின் அறிக்கை யின் மூல ஆவணத்தை தேட வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டது.

குளக்கோட்டு மன்னன் திருப்பணி செய்த திருக்கோணேச் சரத்தை போர்த்துக்கீசர் இடித்தழித்த பின்னர் அங்கிருந்து மறைவாக சில விக்கிரகங்களை ஆலயத் தொழும்பாளர்கள் தம்பலகாமம் கொண்டுவந்தனர். அவற்றில் அமர்ந்த நிலையில் வார்க்கப்பட்ட விக்கிரகத்தினையே அப்போதைய ஆலயப் பிரதம குருவாக இருந்தவர் ஆளுநருக்கு காட்டி இருக்கிறார் என்பதனை ஆவ்வாவணம் கீழ்வருமாறு பதிவு செய்கிறது.

ஒல்லாந்து ஆளுநரின் அறிக்கை

1. Twee beelden in zittende postuur (two statues in sitting posture) இரு விக்கிரகங்கள் அமர்ந்த நிலையில்

2. Ccin it front was het beeld van den koning koneesen en aan zyne linker zeyde in een oblique linie dat van isowerie amen (in the front was the image of the king koneses and on its left side in an oblique line that of isowerie ammen his wife) முற்பக்கத்தில் கோணேசரைப் போன்றும் அவருடைய இடப்பக்கத்தில் சாய்வான நிலையில் ஈஸ்வரி அம்மன்

எனத் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளமை கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது.

ஒல்லாந்து ஆளுநர் தொலைநோக்கியூடாகப் பார்த்த விக்கிரகங்கள் உமாமகேசுவர மூர்த்தமாக இருந்தால் அவை இப்போது எங்கே என்ற கேள்வி எழும். தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலய வரலாற்றில் பல களவுச் சம்பவங்களும் வன்முறைகாலங்களில் சூறையாடல் சம்பவங்களும் நிகழ்ந்திருப்பதால் இந்தப் புராதன

விக்கிரகங்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றிய உறுதியான தகவல்கள் ஏதும் இதுவரை திரட்டப்படவில்லை.

இத்தகவல் எதிர்காலத்தில் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலய வரலாற்றோடு மட்டுமல்லாது திருக்கோணேஸ்வர ஆலய வரலாற்றிலும் நாம் தேடிக் கண்டறிய வேண்டிய பல வரலாற்றுப் புதிர்களுக்கு அடிப்படையான தகவலாக அமைகின்றது.


## Tamblegam Oyster / Pearl

தம்பலகாமம் குடாக்கடலை பாற்கடல் என்றழைக்கும் வழக்கம் முன்னர் இருந்திருக்கிறது. பிரித்தானியர் காலத்தில் முத்துக்குளிக்கும் பிரதேசமாக இருந்த இக்கடல் பிரித்தானியருக்கு அதிக வருவாயினை ஈட்டித் தந்திருக்கிறது. தம்பலகாம குடாவினைச் சுற்றி உள்ள சிப்பித் திடல், முத்துநகர், கப்பல்துறை என்றிருக்கும் ஊர்ப்பெயர்களும் அவ்வூர் கடற்கரைகளில் குவிந்து கிடக்கும் சிப்பிகளுமே இன்று முத்துக் குளிப்பு நடந்தமைக்கு ஆதாரமாக எஞ்சி இருக்கின்றன. முறையற்ற விதத்தில் முத்துக்குளிப்பு இடம்பெற்றதனால் தம்பலகாம குடாக்கடலில் இருந்த முத்துவளம் இன்று அற்றுப்போயுள்ளது. தம்பலகாம குடாக்கடலில் கிடைக்கும் முத்துக்கள் தொடர்பான விரிவான அறிக்கையொன்றினை திரு. E.H.KELAART (Trincomalie , 3rd October,1857.) TAMBLEGAM PEARL OYSTER FISHERY என்ற தலைப்பில் வெளியிட்டிருக்கிறார். இந்த ஆவணம் இணையவெளியில் இலவசமாகப் பார்க்கக்கூடியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

தம்பலகாமம் குடாக்கடலில் கிடைக்கும் சிப்பிகள் பற்றிய முழுமையான விபரிப்பு அவை பூரணமாக முதிர்வடைவதற்கு முன்பாக எடுக்கப்படுகின்றமை தொடர்பான விபரம் மற்றும் இதனால் அரசுக்கு ஏற்படும் வருவாய் இழப்பு என்பன பற்றி ஆராய்கிறது இந்த ஆவணம். இவற்றோடு தம்பலகாமம் குடாக்கடலில் முத்துக்குளிப்பு மூலம் கிடைக்கும் வருவா




தம்பலகாமம் குடாக்கடலும், முள்ளியடித்துறையும்



*By Edward Frederick Kelaart*
*1819-1860*
*Royal College of Surgeons of England*
*Publication date 1857*

REPORT
ON THE
TAMBLEGAM PEARL OYSTER FISHERY.

The Oyster found in the Tamblegam lake, and from which Pearls are obtained, is the *Placuna placenta*, "Vitre Chinoise" of some French writers, and the "Window Oyster" of English travellers in China,—the shells, from their semi-transparency, being used for windows. The *Placuna* belongs to the same family of Conchiferous Molluscs as the edible Oysters of Europe and of this country. It has no resemblance (except slightly in the animal structure) to the shells

**REPORT**
**TAMBLEGAM PEARL OYSTER FISHERY**

யினைப் பெருக்குவது தொடர்பான ஆலோசனைகளையும் இவ்வறிக்கை தருகிறது. இவ்வாவணம் தயாரிக்கப்பட்டபோது தம்பலகாமத்தின் தலைமைக்காரராக இருந்தவரை Tamblegam Wanniah / Modaliar என்றழைக்கிறது. முத்து உற்பத்தி சிறப்புற அமைவதில் தம்பலகாம வன்னிபத்தின் மேற்பார்வை அவசியம் என்பதனையும் அது வலியுறுத்துகிறது.

## Tamblegam bay

தம்பலகாமம் குடாக்கடல் பண்டைய துறைமுகங்களில் ஒன்றாக இருந்தது. அது துறைமுகமாகச் செயற்பட்டது தொடர்பில் ஐரோப்பியர் காலத்து பதிவுகளே அதிகளவில் கிடைக்கின்றன. தம்பலகாமம் குடாக்கடலின் கப்பல்துறைக் கிராமப்பகுதியில் முன்னர் துறைமுகம் ஒன்று இருந்ததற்கான அழிபாடுகள் காணக் கிடைத்ததாக 1970 களில் கப்பல்துறைக்காட்டில் வேட்டையாடச் சென்றவர்கள் மூலமாக அறியக்கூடியதாக இருக்கிறது. சிப்பித்திடல், முள்ளியடிப் பகுதிகள் எதிர்-காலத்தில் களஆய்வு செய்யப்படுமாக இருந்தால் மேலும் பல விடயங்கள் வெளிவரக்கூடும்.

திருகோணமலை மாவட்ட ஒல்லாந்து ஆளுநர் Jacques Fabrice van Senden அவர்களின் திருகோணமலை மாவட்ட சுற்றுப்பயண அறிக்கையில் (15.05.1786 - 21.06.1786) முள்ளியடித் துறை பற்றிக் குறிப்பிடப்படுகிறது. ஆளுநரின் தம்பலகாமப்பற்று விஜயத்தின் போது மூதூரில் இருந்து கடல்வழியாக வந்த அவரை தம்பலகாமப்பற்று வன்னிபம் கனகதண்டிகை கனகரட்ணம் முதலியார் 03.06.1786 அன்று முள்ளியடியில் வைத்து வரவேற்றதாக குறிப்பிருக்கிறது. எனவே அக்காலப்பகுதியில் முள்ளியடி ஒரு துறையாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதனைப் புரிந்துகொள்ளலாம். அதுபோலவே 1804 இல் கண்டிப் படையெடுப்பில் தோல்வியைத் தழுவிய பிரித்தானியப் படையணி நூற்று அறுபதிற்கும் (160) மேற்பட்ட படைவீரர்களை இழந்து பின்-வாங்கி வந்தபோது தம்பலகாமத்தில் இருந்து திருகோணமலை

நகரை அடைய இந்தத் துறையினைப் பயன்படுத்தியதை அவர்களது ஆவணங்கள் உறுதிப்படுத்துகிறது.[5]

பிரித்தானியரால் இலங்கையின் கரையோரப்பகுதிகள் கைப்பற்றப்பட்டமையால் இலங்கையின் மத்திய பகுதியில் விசாலமாகப் பரந்திருந்த கண்டி இராட்சியம் தனது வெளிநாட்டு அரசியல் மற்றும் வர்த்தகத் தொடர்புகளுக்கு மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டது. இதனால் பிரித்தானியாவிடம் இருந்து கரையோர துறைமுகங்களைப் பெற்றுக்கொள்வதில் அதிக அக்கறை கொண்டிருந்தது.

இதன் ஒரு பகுதியாக *1799* ஆண்டு Tamblegam bay உள்ளிட்ட திருகோணமலைத் துறைமுகப் பகுதிகளைப் பெற்றுக்கொள்ள கண்டி அரசு முயற்சித்தது. எனினும் இந்தக் கோரிக்கையை பிரித்தானியா மறுத்துவிட்டது. முயற்சியைக் கைவிடாத கண்டி அரசு *1812* இல் தாம் பிணைக்கைதியாக கைப்பற்றி வைத்திருந்த Major Davie என்பரை விடுவிப்பதற்கு துறைமுகப் பகுதிகள் தம்மிடம் ஒப்படைக்கப்படவேண்டும் என நிபந்தனை விதித்தது.[6] இதற்கும் பிரித்தானியா இணக்கம் தெரிவிக்க வில்லை. இதனால் கண்டி அரசால் Tamblegam bay உள்ளிட்ட திருகோணமலைத் துறைமுகப் பகுதிகளை மீளப்பெற முடியாமல் போனது. பிரித்தானியர் காலத்தில் Tamblegam bay (தம்பலகாமம் குடாக்கடல்) கொண்டிருந்த முக்கியத்து வத்தினைப் புரிந்துகொள்ள மேலுள்ள சம்பவம் மிக உறுது ணையாக இருக்கிறது.

## வீரக்குட்டிக் கங்காணத்தின் நியமன ஆவணம்


TRINCOMALEE DISTRICT
I, Robert Boyed commissioner of revenue by virtue of powers to that effect granted to me by his Excellency the governor do hereby nominate and appoint Veerakuddy Adappan Vallaippan to be kali kankanam of Tamblegam until further orders. All inferior Headman and others under you in the above situation are hereby ordered and directed to acknowledge you the said veerakuddy Adappan Kaliappan as kali kankanam of Tamblegam.

Given under my hand at Colombo this 27th day of October 1813.
Sgd. Robert Boyd.
Governor's office

*பிரித்தானிய ஆளுநர் அலுவலகத்தினால் 1813.10.27 ஆம் திகதி திரு. வீரக்குட்டி அடப்பன் அவர்கள்* Tamblegam *இன் காளிக் கங்காணமாக நியமிக்கப்பட்டதை இக்கடிதம் ஆவணப்படுத்தி இருக்கிறது.*

தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயத் தொழும்பு முறையில் சிற்றரசர்களாக இருந்த வன்னிபங்கள் தலைமை வகித்த காலம் நிறைவடைந்த பின்னர் 'கங்காணம்' என்ற தொழும்பு முறை புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது போல் தெரிகிறது. ஏனெனில் திருக்கோணேச்சர ஆலய தொழும்பு முறை பற்றி விரிவான விபரங்களைத் தருகின்ற கோணேசர் கல்வெட்டு கங்காணம் என்ற தொழும்பு முறை பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

மேற்படி வீரக்குட்டிக் கங்காணத்தின் நியமன ஆவணத்துக்கு அமைய ஏலவே தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயத்தில் அடப்பன் என்னும் தொழும்பு முறையினை மேற்கொண்டு வந்தவர் Tamblegam என்று ஆங்கிலேயரால் அழைக்கப்பட்ட தம்பலகாமத்தின் காளிக்கங்காணமாக நியமிக்கப்பட்டதுடன்




Trincomalee District

I, Robert Bcuved Commissioner of Revenue by virtue of Powers to that effect granted to me by His Excellency the Governor do hereby nominate and appoint Veerakuddy Adappan Vallaiappan to be Kali Kankanam of Tamboligam until further orders. All inferior Headman and others under you in the above situation are hereby ordered and directed to acknowledge you the said Veerakuddy Adappan Kaliappan as Kali Kankanam of Tambbligam .

Given under my hand at Celombo this 27th day of October 1813.

Sgd. Robert Boyd.

Governor's Office.



I ... Commissioner of Revenue by Virtue of Powers to that effect granted to me by His Excellency the Governor do hereby nominate and appoint ... to be ... untill further orders. All Inferior Headmen and others under you in the above situation are hereby ordered and directed to acknowledge you the said ... as ...

Given under my Hand at ... this ... day of ...

வீரக்குட்டிக் கங்காணத்தின் நியமன ஆவணம்

அவருக்கு கீழுள்ள அனைத்து அடுத்த நிலைத் தலைவர்களும், ஏனைய பணியாளர்களும் இந்த நியமனத்துக்கு அமைய செயற்படவேண்டுமென கட்டளையிடப்பட்டிருப்பதையும் காண-முடிகிறது.

ஆரம்ப நாட்களில் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலய தொழும்பு முறைகளில் காளிக்கங்காணம், நீலிக்கங்காணம் எனும் இரு பிரிவினர் செயற்பட்டுவந்ததை வாய்மொழி வரலா றுகள் ஊடாக அறிய முடிகின்றபோதும் காளி, நீலிக் கங்காண ங்களுக்கு இடையேயான தொழும்பு முறை வேறு பாட்டினைப் புரிந்துகொள்வதற்கு ஏதுவான மேலதிக தகவல்கள் ஏதும் இதுவரை கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நியமன ஆவணம் மூலம் ஆலயத் தொழும்பு முறையானது சமகாலத்தில் ஊர் நிர்வாக விடயங்களைக் கையாளும் பதவி நிலையாக இருந்திருக்கிறது என்பதனையும் அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

இதுவரை நாம் பார்த்து வந்த ஆவணங்கள் ஐரோப்பியர் காலத்தில் தம்பலகாமம் எனும் ஊர் Tamblegam[(7)] என அவர்களால் அழைக்கப்பட்டது என்பதனை ஆதாரப்-படுத்துவதோடு தம்பலகாமம் தொடர்பான மிக முக்கியமான பல வரலாற்றுத் தகவல்களையும் தன்னகத்தே கொண்ட-வையாக இருக்கின்றன.

Tamblegam தொடர்பில் விரிவான தேடல்கள் எதிர்காலத்தில் செய்யப்படுமாக இருந்தால் இதுவரை எம்மால் அறிந்து கொள்ள முடியாதிருந்த தம்பலகாமம் வரலாற்றின் இருண்டை பக்கங்கள் பலவற்றிற்கு வெளிச்சம் கிடைக்கும் என்பது நம்பிக்கை தரும் உண்மையாகும்.

உசாத்துணை

(1) The History of Trincomalee during Portuguese and Dutch rule Written by Marco Ramerini. Page 28

After the conquest of the new agricultural territories at the outskirts of Trincomalee the Dutch intended to restore the old tanks of Kantalai and Vendarasen Kulam to be anew able to develop the agricultural potentialities of the district. Also for this purpose a map of the province of Tamblegam was drawn in 1793 by the surveyor Struys and the engineer Fornbauer. The latter was the last Dutch commander of Trincomalee.

Brohier "Land, maps and surveys", pp. 135-136; Brohier "Links between Sri Lanka and The Netherlands", p. 128.

(2) Cookin for a Shooting party in the jungle – near Tamblegam – District of Trincomalle – 1824
Object type - drawing
Museum number 1997,1109,0.146
Title (object) Cookin for a Shooting party in the jungle – near Tamblegam – District of Trincomalle – 1824

Description
A pen and black ink drawing with grey wash of a cooking scene near a large tree, servants squat near a fire with steaming cooking pots on it, round about are various pieces of hunting and picnic equipment: guns, powder flask, bottles, tea kettle, lota. Inscribed and dated. On the reverse is a well-finished drawing in the same medium of a set of roadside houses with peaked plank roofs and a dormer in European style, in the distance a wide arbor with ships and in the middle ground a sari-clad (?) woman with a basket on her head. At the front of one of the houses a woman sits beside a table covered with goods (a shop?, bazaar?). Behind the houses is a palm tree. Probably a view part of Grande Riviere, Mauritius .

Producer name Drawn by: George Russell Dartnell
Inscription Language English

Inscription Content  Cooking for an Elephant shooting party in the jungle near the Cingalese Village of Tamblegam – District of Trincomalle – Ceylon – 14 Jan. 1824

(3) காலனித்துவ திருகோணமலை - கலாநிதி கனகசபாபதி சரவணபவன், *2010*, பக்கம் *116*

(4) மேலது *106*

*(5)* மேலது *217*

(6) The Sinhala King and British envoys by KAMALIKA PIERIS http://island.lk/ August 12.2014.7:49 pm

Udarata was also very anxious to get access to the sea and kept asking for a seaport. In 1799.they asked back the 'seashore around Trincomalee' including Tamblegam bay. saying Boyd had promised this. Britain refused saying that they had conquered it. Udarata was persistent and these requests continued. As late as 1812, Udarata was still trying to get the British possessions back. Major Davie, kept as a hostage, would be released, they said, but 'the coastal districts must be surrendered'. Governor Brownrigg wrote back firmly that there would be no return of territory. Udarata never got the 'coastal districts' back.

The writings of Colvin R de Silva. K.M. de Silva. S.Tammita Delgoda. D.A Kotelawele. P.E. Pieris. M. Roberts. A Schrikker. T. Vimalananda and Upali C Wickremeratne were used for this essay.

(7) A) We left Trincomalee. Accompanied by MR.Marshall and MR.Blakeney and arrived at Tamblegam at noon. The greater part of the road was through very thicle jungle. Except where it skirts the bay of tamblegam but on approaching the village bearing that name, the country puts on a cultivated apperarance.

The country round Tamblegam is open, considerably populous, and extremely favourable for the cultivation of rice the vallies being of a rich soil and plentifully supplied with water from the lake of candelye. There is a hindoo pagoda at Tamblegam of considerable antiquity and note. And a tolerable rest house for travellest.

A Description of Ceylon: Volume 2  James Cordiner , 1807,   page128

B) Leaving Trincomalee, the next stage to southward is Tamblegam. Distant 151/4 miles. The road is sandy and bordered with jungle, but upon nearing the village the country appears fertile and well cultivated and the view of the bay is magnificent.

Kandelle Lake supples water for irrigating the paddee fields. These either wear the verdant appearance of field of young wheat or golden richness of that grain at maturity as the season may be commencing or advanced and nothing can be more grateful to the eye in this climate than a field of young paddee sugar  cane or maize.

Tamblegam has a good rest house but is without a postholder the roads being seldom frequented by Europeans may speculation and capital yet give it a different appearance. Every road throughout the island be bordered with cultivated grounds and verdant pastures, and covered with the busy transporters of produce to ports of export.There is a hindoo temple here, but it is scarcely worth a visit.

Ceylon and Its Capabilites,  page 245, By John-W. Bennett, 1923

# தம்பலகமம்

இவ்வூர்ப் பெயரினை கமம் என்ற ஈற்றுப் பெயர் கொண்டு அழைக்கும், எழுதும் வழக்கம் பற்றிய பதிவுகளை 17 ஆம் நூற்றாண்டு முதல் காணக்-கூடியதாக உள்ளது. அக்காலகட்டத்தில் இருந்து கிடைக்கப்பெறும் இலக்கியங்கள், ஆலய நடை முறைகள் தொடர்பான பத்திரங்கள், காணி உறுதிகள் இவ்வூர் தம்பலகமம் என அழைக்கப்-படுவதை ஆதாரப்படுத்துகிறது.

கமம் என்ற சொல் விவசாயத்தை, வேளாண்மையைக் குறிக்கப் பயன்படுகிறது. எனவே விவசாயத்துடன் தொடர்புடைய இவ்வூரினைத் தம்பலகமம் என அழைப்பதே சரியென இன்றும் பலர் கருதுகிறார்கள். இலங்கையின் மன்னார் உயிலங்குளம் பகுதியில் புதுக்கமம் (கிராம உத்தியோகத்தர் பிரிவு இல MN91) என்ற ஊர் இருக்கிறது. அதேபோன்று பெரிய நெகமம் (ஆங்கிலம்: Periya Negamam) இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் அமைந்துள்ள கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டத்தில் இருக்கும் ஒரு பேரூராட்சி ஆகும். இவை தவிர கிளிநொச்சியில் பன்னங்கண்டி

பகுதியில் சிவாபசுபதி கமம், சரஸ்வதி கமம் போன்ற இடப்பெயர்கள் காணப்படுகின்றன. இவை தனியாருக்குச் சொந்தமான காணிகளில் யுத்தத்தின் பின்னரான மக்களின் குடியமர்வில் உருவானவை என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் காமம் என்ற ஈற்றுப் பெயர் கொண்ட இடப்பெயர்போல இலங்கை முழுவதும் இவை பரந்து காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

முன் முடிவுகளுடன் வரலாற்றை அணுகுவது தவறு என்பதற்கு நானே ஒரு நல்ல உதாரணமாக இருக்கின்றேன். சிறுவயது முதலே தம்பலகமம் என்பதே எனது ஊர்ப்பெயர் என்பதில் மிகத்தீவிரமாக இருந்தேன். ஞாபகப்படுத்திப் பார்க்கும் போது சிறுவயதிலும், யுத்த இடப்பெயர்வினால் திருகோணமலை நகரப்பகுதியில் குடியேறிக் கல்வி கற்ற காலத்திலும் தம்பலகமம் என்றே எனது ஊர்ப்பெயரினை எழுதியும், சொல்லியும் வந்துள்ளேன். விவசாயக் கிராமமான எனதூரை “கமம்” என்று அழைப்பதில் உள்ள பொருத்தப்பாட்டை விட “காமம்” என்ற ஈற்றுப் பெயரால் ஊரை அழைப்பதில் இருந்த தயக்கம், நேரடியாகச் சொன்னால் கூச்சமே தம்பலகமம் என விடாப்பிடியாக ஊரின் பெயரினை உச்சரிக்கக் காரணமாக அமைந்தது.

எனது ஊர்ப்பெயர் ஆய்வின் தொடக்க காலத்தில் நான் தேடிச் சேகரித்தவையெல்லாம் “தம்பலகமம்” என்பதற்கான ஆதாரங்களைத்தான். 2005 இல் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களின் தம்பலகாமம் கல்வெட்டு என்ற ஆவணத்தினைக் காணும் வரை இந்நிலை தொடர்ந்தது. எனினும் “தம்பலகமம்” என்பதற்கு ஆதாரமாகத் தேடியெடுத்த ஆவணங்கள் எல்லாம் வெறுமனே ஊர்ப்பெயர் ஆதாரமாக மட்டுமல்லாது இவ்வூரின் வரலாற்றைப் பற்றிய மிக நுணுக்கமான தரவுகளைக் கொண்டிருப்பதனால் அவற்றினை விரிவாகப் பார்த்தல் அவசியமாகிறது.

தம்பலகமம் எனும் பெயர் தொடர்பில் முதன் முதலாகக் கிடைக்கும் வரலாற்று ஆதாரம் ஒரு இலக்கியப் படைப்பாகும். அது வீரக்கோன் முதலியார் என்பவரால் படைக்கப்பட்ட ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல் என்னும் செய்யுள் வடிவில் அமைந்த இலக்கியமாகும். 420 ஈரடிக் கண்ணிகளைக் கொண்டு அமைக் கப்பட்டிருக்கும் இவ் இலக்கியம் பதினேழாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் உருவாக்கப்பட்டதாகும். இது அக்காலத்தில் பிரபலமாக இருந்த உலா இலக்கியம், தூது இலக்கியம், குறவஞ்சி இலக்கியம், காதல் இலக்கியம் எனும் நான்கு சிற்றி லக்கிய வகைகளை உள்ளடக்கி எழுதப்பட்டதாகும்.

இதனை முதன்முதலில் சென்னையில் 1906 ஆம் ஆண்டு அச்சுருவாக்கம் செய்தவர் திருகோணமலையின் பல வரலாற்று மூலங்களை ஆவணப்படுத்திய வே.அகிலேசபிள்ளை அவர் கள். வே.அகிலேசபிள்ளை அவர்களின் குறிப்பின்படி இது 1686 இல் எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது.

கொட்டியாரப்பற்றில் மிக உயர்ந்த கோபுரங்களை உடைய தென் வெருகலம்பதியில் உள்ள மணிமண்டபத்தில் தேசத்தவர் கூடியிருக்க கொட்டியார தேசத்தின் அதிபதியான இரு மரபும் துய்ய இளஞ்சிங்க வன்னிபத்தின் முன்னிலையில் இந்நூல் அரங்கேற்றப்பட்டதாக நூலாசிரியர் பதிவுசெய்திருக்கிறார்.

பம்பிறிதங் கண்டளை நீர் பாயும்வள மிகுந்த
தம்பலகமத்திற் கையுறு வேளாண் மரபில்

ஐயம்பெருமானருந்தவத்தில் வந்துதித்தோன்
செய்ய சித்திரவேலன் பொற் சீரடியையேந்திடுவேன்

செப்பரிய வாய்மைசெறி வீரக்கோன் - முதலி
ஒப்புவமையில்லா வெளிபரவு வேலவன்மேற்[1]

என்று நூலாசிரியரான ஐ.வீரக்கோன் முதலியார் அவர்கள் தனது ஊரின் பெயரினை தம்பலகமம் எனக் குறிப்பிட்டிருப்பது

உ

கணபதி துணை

# வெருகல்
# சித்திர வேலாயுதர்
# காதல்

இஃது

தம்பலகமம்

ம-ள-ள- ஸ்ரீ. ஐ. வீரக்கோன் முதலியாரவர்கள்

இயற்ற

திரிகோணமலை

ஸ்ரீலஸ்ரீ ந. கதிர்காமத்தம்பி அவர்கள்

கேட்டுக் கொண்டபடி

மேற்படியூர்

புலவர் வே. அகிலேசபிள்ளையால்

பரிசோதித்தது

சென்னை

ரிப்பன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது

1906.

கவனத்தில் கொள்ளத்தக்கது. தம்பலகமம் என்னும் பெயரினை ஆதாரப்படுத்தும் இன்றைக்கு 330 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஆவணம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து தம்பலகமம் எனும் ஊர்ப்பெயர் தொடர்பில் கிடைக்கும் ஆவணம் தோம்புப் பதிவுகளாகும்.

### தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலய தோம்புப் பதிவு

பண்டைய காலம் முதல் ஆதிகோணநாயகர் ஆலய தொழும்பு முறை விபரங்கள், ஆலயத்துக்குச் சொந்தமான வயல் நிலங்கள், கால்நடைகள் உட்பட்ட அசையும் அசையாச் சொத்துக்கள் பற்றிய விபரங்கள் ஓலைச்சுவடிகளில் எழுதிப் பாதுகாக்கப்பட்டு வந்திருக்கிறது. போர்த்துக்கீசர் காலத்தில் அவர்கள் மேற்கொண்ட கலையழிவு செயற்பாடுகளுக்குப் பயந்து அவை வெளிப்படுத்தப்படவில்லை. பின்னர் ஒல்லாந்தர் காலத்தில் அவை தோம்புப் பதிவுகளாக உருவாக்கப்பட்டு முத்திரை குத்திப் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு ஆவணப்படுத்தப்பட்ட விபரங்கள் அனைத்தும் ஆங்கிலேயர் காலத்தில் முறையாகப் பதியப்பட்டு கோவில் புத்தகங்களாக (Temple Register) கச்சேரிகளில் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறன.

இவ்வகையான ஆவணங்களில் சில வடமராட்சியில் உள்ள தம்பசிட்டி, வியாபாரிமூலையில் உள்ள அமரர் சொக்க-நாதம்பிள்ளை அவர்களின் வீட்டில் இருந்திருக்கின்றன. இதனைப்பார்த்து ஆராய்ந்த பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா அவர்கள் தோம்புப் பதிவுகள் வெளிப்படுத்தும் கோயிற்சொத்துடமை வடகிழக்கிலங்கை கோயிற் குடி-யிருப்புக்களின் பிரதான தளமாக ‘தம்பலகாமம் ஆதி-கோணநாதேஸ்வரம்’ என்ற ஆய்வுக் கட்டுரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆய்விதழில் (தொகுதி XVI மாசி 2016, இதழ்1) வெளியிட்டு இருந்தார். மேற்கூறிய தோம்பு-ப்பதிவு கீழ்வருமாறு ஆரம்பிக்கிறது.

திருக்கோணாமலையைச் சேர்ந்த தம்பலகமம் கோயிற் குடியிருப்பில் சைவ சமய பிரபல்யமாய் விளங்கும் கோணநாதஸ்வர சுவாமி கோயிலுக்கு சூரிய, சந்திர வம்சத்திலே சிரேட்டமாகிய சூரிய குலத்து மனுநீதிச் சோழமகராசன் மரபிலுதித்த கஜவாகுமகராசாவின் தெக்ஷண கைலாயம் கோணநாதஸ்வர சுவாமி கோவிலுக்கு ....

என்ற முகப்புரையுடன் ஆரம்பிக்கும் ஆவணம் இவ்வூரின் பெயரினை "தம்பலகமம்"எனக்குறிப்பிடுது கவனத்திற்குரியது. அத்துடன் ஊர்ப்பெயருக்கு மேலதிகமாகத் ஆதிகோணநாயகர் ஆலயத்துடன் தொடர்புடைய பல்வேறு முக்கிய நடை-முறைகளையும் ஆவணப்படுத்தி இருக்கிறது. அவை வருமாறு.

1. கோயில் தொழும்பு முறை பற்றியும் (தோம்பு – அ)

2. ஆதிகோணநாயகர் ஆலயத்திற்குச் சொந்தமானதாக இருந்த கங்குவேலிச்சிவன் கோவில், வெருகல் சித்திர வேலாயுத சுவாமிகோயில், கந்தளாய் பிள்ளையார் கோவில் என்பவற்றின் அசையும் அசையாசொத்துக்கள், கோவில் பூசை, திருவிழா, கிராமசாந்திப்பூசை, வேள்வி என்பன பற்றியும் (தோம்பு - ஆ)

3. தொழும்பாளர்களின் கடமைகள், தொழும்பாளர் குற்றம் செய்தால் அதற்கான தண்டனைகள் தொடர்பிலும் (தோம்பு - இ)

4. ஆலய முதன்மையான இராசகுலகுருக்கு ஆலய உற்சவ காலங்களில் உதவிக்காக வரும் பூசகர், குருமார்கள், சாதகாசாரியார், அலங்கிரு தாசாரியார், போதகாசிரியார் தொடர்பிலும் (தோம்பு - ஈ)

5. கோயில் ஆதனங்களுக்குரிய நீர்ப்பாய்ச்சல் தொடர்பிலும் (தோம்பு - ஊ)

6. தொழும்பாளர்களிடையே பிணக்கு வந்தாலோ அல்லது தொழும்பாளர் ஒருவர் இறந்தாலோ ஆலய வேலைகளை தொடர்ச்சியாக செய்வதற்கான வழிமுறைகள் தொடர்பிலும் (தோம்பு - ஊ)

7. ஆதிகோணநாயகர் ஆலய வருவாய்களையும், கோயிலுக்குரிய சாதனங்கள், உறுதிகள், சொத்துக்கள், நேர்த்திக்கடனாக வரும் பொருட்கள் என்பவற்றைப் பாதுகாப்பாக வைத்திருக்கும் "இருப்பு வீடுகள்" தொடர்பிலும் (தோம்பு - எ,ஏ))

8. ஆலய வரவு செலவுக் கணக்கு தொடர்பிலும் (தோம்பு - ஐ)

9. ஆலயத்துக்குச் சொந்தமான வயல் நிலங்களின் முழுமையான விபரங்கள்,அவற்றின் எல்லைகள், ஆலயத்துக்குச் சொந்தமான பட்டிகளில் வளர்க்கப்பட்டுவந்த மாடுகளின் பெயர், இனம், குறியீடு என்பன தொடர்பிலும் மிக விரிவாகப் பதிவு செய்திருக்கிறது.

இந்தோம்புப் பதிவு எழுதப்பட்ட காலப்பகுதியில் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலய கடமைகளை திறம்பட நடத்துவதற்காக 33 ஊர்களைச் சேர்ந்த 33 பராபரிப்புக்காரர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள் என்பதும், இவ்வாலயத்திற்கு உரித்தாக ஏறத்தாழ 6600 ஏக்கர் நெல் வயல் நிலமும் 181 தர 215 பாகம் பரப்புடைய தென்னந்தோட்டமும் ஆதனமாக இருந்தது என்பதையும் இந்தத் தோம்பு ஆவணப்படுத்தி இருக்கிறது.

தோம்புப் பதிவினைத் தொடர்ந்து தம்பலகமம் எனும் ஊர்ப்பெயரினை திருக்கோணாசல வைபவம் பதிவுசெய்து இருக்கிறது. இவ்வூர் தொடர்பிலான பல்வேறு தகவல்கள் திருக்கோணாசல வைபவம் எனும் நூலின் மூலம் நமக்குக் கிடைக்கிறது.

*1889 ஆம் ஆண்டளவில் திருகோணமலை திரு. வே.அகிலேசபிள்ளை அவர்களால் எழுதப்பட்டு 1950 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட திருக்கோணாசல வைபவம் எனும் இந்நூல் திருக்கோணேச்சரம் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டதன் பின்னர் தம்பலகாமத்தில் ஆதிகோணநாயகர் ஆலயம் உருவான வரலாற்றினை "தம்பலகமச் சரித்திரம்" எனும் அத்தியாயம் மூலம் விபரிக்கிறது. இவருடைய குறிப்புகளில் இருந்து இந்நூல் எழுதப்பட்ட காலப்பகுதியில் இவ்வூரினை தம்பலகமம் என அழைக்கும் வழக்கம் இருந்ததனை அறிந்து கொள்ளலாம்.*

*தம்பலகாமம் எனும் ஊர்ப்பெயரினை ஆதாரப்படுத்தும் ஆவணங்களைத் தேடி அலைந்த எனக்கு இந்நூல் ஒரு அரிய பொக்கிசமாகத் தெரிகிறது. திரு. வே. அகிலேசபிள்ளை அவர்கள் தஷ்ணகைலாய புராணம், திரிகோணாசால புராணம், திருக்கரசைப் புராணம், கம்பசாத்திரம், பெரியவளமைப் பத்ததி, கோணேசர் கல்வெட்டு போன்ற நூல்களைக் கற்றுணர்ந்து அதனைப் பலரும் அறியவேண்டும் என்ற ஆவலில் உரைநடையாக திருக்கோணாசல வைபவம் என்ற நூலாக்கித் தந்திருக்கிறார்.*

*ஆதிகோணநாயகர் ஆலயம் தொடர்பில் அவர் தரும் தகவல்கள் முக்கியமானவை. எனவே இந்நூலில் தம்பலகாமம் பற்றி பதிவுசெய்யப்பட்டுள்ள பகுதிகளை அந்நூலில் உள்ளவாறே இங்கு பதிவது அவசியமாகிறது.*

### தம்பலகமச் சரித்திரம்

அப்படியே கோணநாயகருக்கு நித்திய நைமித்திகங்கள் குறைவு வராமல் நடந்துவருங் காலத்தில் பறங்கிக் கலக முண்டானது. அப்போது இருபாகை முதன்மையும் மற்றுஞ் சகலரும் குளக்கோட்டு மகாராசா முன் செப்பேட்டில் எழுதிவைத்திருக்கும் பிரகாரம் கோணநாயகர் முதலாக மற்றும் எழுந்தருளிநாயகர் சகலரையும் திருவாபரணங்களிற் சிலவற்றையும், தூப தீபம் முதலிய மற்றுஞ் சாமான்களையும் எடுத்துக்

கொண்டுபோய்க் கழனிமலையில் வைத்துப் பூசை செய்து வந்தார்கள். அப்போது கண்டியிலிருந்து அரசு செய்த இராசசிங்கன் என்பவனுக்கு கோணநாயகர் ஒரு பிராமண வடிவமாகச் சொப்பனத்தில் தோன்றி நாமும் தேவியும் இப்போது கழனி மலையிலிருக்கின்றோம். நாம் எழுந்தருளியிருப்பதற்குத் தம்பலகமத்தில் ஓர் ஆலயத்தைக் கட்டி முடிப்பாயாக என்று சொல்லி மறைந்தருளினார். உடனே அரசன் விழித்து இந்த வசனங்களை நம்மிடம் வந்து சொல்லியவர் கோணநாயகர் தானென்று தீர்மானித்து வேண்டிய திரவியங்களை விடுத்து தன்னிடம் கணக்கப்பிள்ளையாக விருந்த இப்றாம் முகாந்திரம் என்னும் தம்பன்கடவைச் சோனகனொருவரை முதலாளியாக வைத்து இற்றைக்கு ஏறக்குறைய இருநூற்றைம்பது வருடங்களுக்கு முன் தம்பலகமத்தில் தற்காலமிருக்கும் கோயிலைக் கட்டி முடித்து கோணநாயகரையும் தேவியையும் மற்றுந் தேவர்களையும் கழனி மலையிலிருந்து எழுந்தருளப் பண்ணிக் கொண்டு போய்த் தம்பலகமத்தில் தான் முடிப்பித்த ஆலயத்தில் வைத்து, பிரதிக்ஷ்டைசெய்து நித்திய நைமித்திகங்களெல்லாம் முன்போல நடக்கும்படி திட்டம் பண்ணி இருபாகை முதன்மை, கனகசுந்தரப் பெருமாள், சித்திர வித்தாரப் புலவன், தானத்தார், வரிப்பத்தார் முதலிய சகலரையும் நோக்கி ஆதியில் குளக்கோட்டு மகாராசா உங்களுக்குக் கற்பித்தபடி கோணநாயகருக்கு நித்திய நைமித்திகங்களை நடத்திவர வேண்டுமென்று கட்டளை செய்து கண்டி நகருக்குப் போய்ச் சத்துருக்களை வெற்றி கொண்டு இராச்சியபரிபாலனஞ் செய்திருந்தான்.

பறங்கிக்காரர் திருக்கோணாசலத்துக்கு வந்து குளக்கோட்டு மகாராசனாற் கட்டப்பட்ட கோயிலையும் ஆயிரங்கால் மண்டபம் முதலியவைகளையும் இடித்து பாவநாசக் குளத்தையும் மூடி பின்பு கோயில் முதலியவற்றிலிருந்த சாதிக் கருங்கற்களை எடுத்துத் தற்காலமிருக்கும் கோட்டையைக் கட்டி முடித்து திருக்கோணாசல நகரை அரசு செய்தார்கள். அக்காலத்திற் திருக்கோணாசலத்துக்குப் போய் பூசை செய்யப்படாதென்று நிட்டூரமான கட்டளை செய்தார்கள். தற்காலமிருக்கும் கோட்டையின் வாசலுக்குக் கதவு நிலையில் வைக்கப்பட்டிருக்கும் கல்லில் முன்னங் குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியைப் பின்னர் பறங்கி பிரிப்பான் என்னும் பாட்டு வெட்டப்பட்டிருக்கின்றது. மற்ற இரண்டு வரிகளும் அதிகம் விளக்கமில்லாமல் அழிந்திருக்கின்றன(2).

இவ்வாறு முடிகிறது தம்பலகமம் என்று ஊர்ப்பெயரினை ஆவணப் படுத்தியிருக்கின்ற முதற் பகுதி. மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் பல தகவல்கள் தொடர்பில் மிகச்சிறிய விளக்கங்களைப் பார்த்துவிட்டு அடுத்த ஆவணத்தினைப் பதிவது பொருந்தமானதாக இருக்கும் என நினைக்கிறேன்.

இப்பகுதியில் ஆதிகோணநாயகர் ஆலயம் கண்டி அரசன் இரண்டாம் இராஜசிங்கனால் கட்டப்பட்டது என்பதனைப் பதிவு செய்கின்றார் திரு.வே.அகிலேசபிள்ளை அவர்கள். இது திருகோணாசலப்புரணம், கோணேசர் கல்வெட்டு என்பன-வற்றில் இருந்து அவர் பெற்றுக் கொண்ட தகவல்களை அடிப்படையாகக்கொண்டது.

இரண்டாம் இராஜசிங்க மன்னன் இலங்கை வரலாற்றில் ஐரோப்பியரின் ஆதிக்கத்திற்கு எதிராக தொடர்ச்சியாகப் போர் புரிந்த ஒரு மன்னன். அவன் ஐரோப்பியரின் கிழக்குக் கரையோரத்து ஆக்கிரமிப்பினை மட்டுப்படுத்தவும் கண்டி அரசின் வர்த்தக நோக்கத்திற்கான துறைமுகங்களில் ஒன்றாக திருகோணமலையைப் பயன்படுத்தவும் திருகோணமலையைக் கைப்பற்றி அங்கு ஆட்சி செய்த வன்னிபங்கள் மீது மேலாண்மை செலுத்தி இருக்கின்றான். இக்காலப்பகுதியில் ஐரோப்பியர்களுக்கு எதிராகச் செயற்படுவதற்கு ஏதுவாக வன்னிபங்களுடன் செய்து கொண்ட ஒரு நல்லெண்ண முயற்சியாகவே இவ்வாலய நிர்மாணத்தினைக் கருதவேண்டி இருக்கிறது. அத்துடன் கண்டி அரசில் அக்காலப்பகுதியில் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியிருந்த நாயக்கர் கால கலைப்பாணியிலேயே இவ்வாலயம் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வு இலங்கை வரலாற்று அடிப்படையில் மிக முக்கியமானதொரு நிகழ்வு. இரண்டாம் இராஜசிங்கன் என்ற சிங்கள மன்னனின் நிதி உதவி தம்பன்கடவையைச் சேர்ந்த இஸ்லாமியரான இப்றாகிம் முகாந்திரம் என்பவருக்கூடாக வழங்கப்பட்டு தம்பலகாமத்தில் உள்ள சைவ ஆலயமான

ஆதிகோணநாயகர் ஆலயம் அமைக்கப்பட்ட வரலாறு இலங்கையில் பல்லினப் பண்பாடு சாத்தியமாக இருந்த தருணமொன்றின் சாட்சியாக நம் முன் இருக்கிறது.

குறிப்பிட்ட பிராந்தியத்தில் பன்மைப் பண்பாடுகளைப் பின்பற்றுகின்ற மக்கள் வாழ்வதோடு, அவர்களிடையே அரசியல், சமூக, சமய, பொருளாதார ரீதியில் பரஸ்பர புரிந்துணர்வு பேணப்படுதல் பல்லினப்பண்பாடாக அடையாளம் காணப்படுகின்றது. மேற்கூறிய ஆலய நிர்மாண நிகழ்வின் பின்னணியில் ஐரோப்பியரின் காலனித்துவத்துக்கு எதிரான அரசியல் பின்னணி இருந்ததை மறுக்கமுடியாது என்றாலும் இலங்கை வாழ் இனங்களுக்கிடையில் நிலவிய பன்மைத்து வத்தையும், இணங்கிவாழ்தலையும் ஆதாரப் படுத்தும் ஒரு நிகழ்வாக இது அமைந்திருக்கிறது.

இலங்கையில் நிலவிவரும் இனப்பிரச்சனை தொடர்பாக உலக அரங்கில் வலுவாக ஆராயப்பட்டுவரும் காலப்பகுதி இது. பாரதூரமான இழப்புகளுக்கும் மிக நீண்டகால இடை-வெளிகளுக்கும் பிறகு இப்பிரச்சனையின் இன்றைய கள யதார்த்தங்களை விளங்கிக்கொள்ள பலரும் ஆர்வம்காட்டி வருகிறார்கள். இந்நூலில் விபரிக்கப்படும் கிராமம் எனது சொந்த ஊர் என்பதற்கப்பால் மேற்குறிப்பிட்ட பிரச்சனையின் சிக்கல்தன்மையை விளங்கிக்கொள்ளக் கூடிய பொருத்தமான மிகச்சிறிய அலகாக இருக்கும் என நான் நினைக்கிறேன். இருந்தும் இந்நூலின் நோக்கத்தினைக் கருத்திற் கொண்டு ஊர்ப்பெயர் ஆய்வுடன் மட்டுமே நகர்ந்து செல்கிறது இக்கட்டுரை.

தம்பலகமச் சரித்திரம் என்று திரு.வே. அகிலேசப்பிள்ளை அவர்கள் பதிவு செய்துள்ள குறிப்பில் அடுத்து வருவது ஆதிகோணநாயகர் ஆலயம் கட்டப்பட்ட ஆண்டு தொடர்பானது. 1889 ஆம் ஆண்டில் நிறைவு செய்த திருக்கோணாசல வைபவம் எனும் தனது நூலில் இன்றைக்கு 250 ஆண்டுகளுக்கு முன் இவ்வாலயம் கட்டப்பட்டது என்று பக்தி மணங்கமிழ அவர்

ஆலய நிர்மாண நிகழ்வினைக் குறிப்பிடுகிறார். அவரது கருத்துக்கு அமைய ஆதிகோணநாயகர் ஆலயத்தின் தோற்றக்காலம் 1639 இனை அண்மித்ததாகிறது. இவ்விபரங்கள் ஆதிகோணநாயகர் ஆலய வரலாற்றுத் தேடல்களுக்கு அவசியமானவை என்பது கவனிக்கத்தக்கது.

திரு.வே. அகிலேசப்பிள்ளை அவர்களின் திருக்கோணாசல வைபவம் தரும் தம்பலகமம் தொடர்புடைய இரண்டாவது குறிப்பு நளச்சக்கரவர்த்தி சரித்திரம் எனும் பகுதியில் கிடைக்கிறது.

### நளச்சக்கரவர்த்தி சரித்திரம்

நிடத நாட்டில் இருந்து அரசு செய்த நளச்சக்கரவர்த்தி திருக்-கோணாசலத்தின் பெருமைகளைக் கேள்வியுற்று பாவநாச தீர்த்தத்தில் வந்து மூழ்கி கோணைநாயகரையுந் தேவியையும் தரிசனஞ் செய்து விலைமதித்தற்கரிய மரகத ரத்தினம் பதித்த ஒரு முக்கோணப் பதக்கமுஞ் சாத்தி இன்னுமனேக திரவியங்களும் அறைமுதலில் இருப்பாக வைத்து செப்பேட்டிலும் கருகுலக்கணக்கிலும் பதிப்பித்து பின்பு கோணை நாயகரிடம் விடைபெற்றுக் கொண்டு நிடததேசத்துக்குப் போனார்.

நளச்சக்கரவர்த்தி கொடுத்த முக்கோணப் பதக்கம் 1854 இல் தம்பலகமம் கோணைநாயகர் கோயிலில் இருந்து பின்பு களவு போய்விட்டது. அப்பதக்கத்தின் பிறபக்கத்தில் நளச் சக்கரவர்த்தி உபயமெனப் பெயர் வெட்டப்பட்டிருந்தது(3).

இவ்வாறு நளச்சக்கரவர்த்தி சரித்திரம் என்ற பகுதியில் விலைமதிப்பற்ற மரகத ரத்தினம் பதித்த ஒரு முக்கோணப் பதக்கத்தை திருக்கோணேச்சரத்திற்குக் காணிக்கை ஆக்கியதைப் பதிவு செய்திருக்கிறார். இதனைத் தொடர்ந்து வரும் குறிப்பு முக்கியமானது. ஏனெனில் 1854 இல் களவுபோன பதக்கம் ஒன்றைப்பற்றி திரு.வே. அகிலேசபிள்ளை அவர்கள் 1889 இல் ஆவணப்படுத்துகிறார். இங்கு குறிக்கப்படும் நளச்சக்கரவர்த்தியினை மகாபாரதத்தில் வரும் கிளைக்

கதையொன்றின் நாயகனோடு தொடர்புபடுத்திக் குழப்பிக் கொள்ளாமல் இக்கூற்றின் வரலாற்று அடிப்படையினை எதிர்காலத்தில் விரிவாக ஆராய வேண்டியது அவசியமானதாகும். அத்துடன் குறித்த நளச்சக்கரவர்த்தி திருக்கோணேச்சரத்துக்கு வழங்கிய பொன்களஞ்சு 89,211 பொன்நகை களஞ்சு 2,948 என திருக்கோணேச்சர நிதி ஏடான பெரிய வளமைப் பத்ததியில் பதியப்பட்டிருப்பது கனகசுந்தரப் பெருமாளின் வாக்குமூலமாக கோணேசர் கல்வெட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றமை கருத்திற் கொள்ளத்தக்கது.

தம்பலகாமம் தொடர்பான அடுத்த குறிப்பு ஆதிகோணநாயகர் ஆலய நடைமுறைகள் தொடர்பானது. அக்குறிப்பு வன்னிபம் தொடர்பிலும், தொழும்பாளர்கள் தொடர்பிலும் சில முக்கிய விடயங்களை நமக்கு அறியத்தருகிறது. திருக்கோணாசல வைபவத்தின் தற்காலச் சரித்திரம் எனும் பகுதியில் வன்னிபங்கள், ஆலயத்தொழும்புமுறை தொடர்பில் கீழ் வருமாறு பதிவு செய்திருக்கிறார்.

தம்பலகமத்தில் இருக்கும் கோணநாயகர் கோயிலில் இப்போதும் நித்திய நைமித்தியங்களும், திருவிழா முதலியவைகளும் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. பறங்கிக் கலகத்திற்கு சில காலத்தின் முன் வன்னிமைகள் சந்ததியற்றுப் போனபடியால் அவ்வம்சத்தைச் சேர்ந்த பெண்கள் சிலர் திருகோணநகரை அரசு செய்து வந்து பின்பு பறங்கி கலகத்துடன் பெண்ணடிகளும் அற்றுப் போய்விட்டன. ஆதலால் இப்போது ஆட்சியாளரால் தம்பலகமத்திற்கு நியமிக்கப்படும் வன்னிமைகளே கோணநாயகர் கோயில் பராபரிப்பையும் நடத்திவருகிறார்கள். கனகசுந்தரப்பெருமாள், சித்திரவித்தாரப் புலவன்,தானத்தார்,வரிப்பத்தார் இவர்களின் சந்ததியார்கள் இப்போதும் குளக்கோட்டு மகாராசாவினால் தங்கள் முன்னோர்களுக்கு முற்காலத்தில் கொடுக்கப்பட்ட விளைநிலம் முதலியவைகளின் வருமானங்களைப் பெற்று சீவனம் செய்துகொண்டு குளக்கோட்டு மகாராசா தங்கள் தங்களுக்கு நியமித்த பிரகாரம் கோணநாயகரின் தொழும்புகளைச் செய்து வருகிறார்கள்.[4]

தம்பலகாமப்பற்றினை ஆட்சி செய்த பூர்வீக வன்னிபங்கள் (தமிழ்ச் சிற்றரசர்கள்) கோணேசர் ஆலய பராபரிப்பினை மேற்கொண்டு வந்ததை இவ்வாவணம் உறுதிப்படுத்துகிறது. இவ்விபரங்கள் ஆதிகோணநாயகர் ஆலய நடைமுறைகள் தொடர்பில் முக்கியமானதொரு ஆவணம் என்பதோடு இங்கு குறிப்பிடப்படும் ஒரு விடயம் மிகவும் எனது கவனத்தினை ஈர்த்தது. வன்னிபங்களின் ஆட்சியின் முடிவில் இவ்-வம்சத்தினைச் சேர்ந்த பெண்கள் சிலர் வன்னிபங்களாக ஆட்சி புரிந்தார்கள் என்பதுதான் அது.

திருகோணமலையில் வன்னிபங்கள் தொடர்புடைய பல கல்வெட்டுக்கள், ஆலய நடைமுறைகள் தொடர்புடைய பத்திரங்கள் காணப்படுகின்ற போதிலும் குறுகிய காலம் ஆட்சி புரிந்த பெண் வன்னிபங்கள் தொடர்புடைய ஆவணங்கள் அரிதாகவே கிடைக்கின்றன. அதிஷ்டவசமாக தம்பலகாமத்தில் உள்ள சிற்றூர் ஒன்றின் பெயர் வன்னிச்சியார் திடல் என்று அமைந்திருக்கிறது. எதிர்காலத்தில் இங்குள்ள இடப்பெயர்கள் தொடர்பில் ஆய்வில் ஈடுபடுவோர் வன்னிச்சியார் திடலுக்கும் பெண் வன்னிபங்களுக்கும் இடையிலான தொடர்புகளை கூர்ந்து ஆராய வேண்டியது மிக அவசியமானது என்றே கருதத்தோன்றுகிறது. முல்லைத்தீவில் தண்ணீர்ஊற்று கணுக்கேணியில் வன்னிச்சியார் தெரு என்ற பெயரில் வீதி ஒன்று இருப்பது குறிப்பிடத்தக்கது.[5]

## தொழும்பு முறை

வன்னிபங்களுக்கு அடுத்ததாக ஆலயத் தொழும்பு முறைபற்றிய விபரங்களை இந்நூல் தருகிறது. குளக்கோட்டு மன்னன் காலத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட வழிமுறைகளின்படி ஆலயக் காரியங்கள் அனைத்தும் சந்ததி வழியாக பல்வேறுபட்ட தொழும்பாளர் குடும்பங்களால் முறைப்படி செய்யப்பட்டு வருவதனை இது குறிக்கிறது. அத்துடன்

இவ்வாறு ஆலயத் தொழும்பு புரிபவர்களுக்கு வாழ்வாதாரமாக வயல் நிலங்கள் மானியமாக வழங்கப்பட்ட செய்தியையும் இந்நூல் ஆதாரப்படுத்துகிறது.

திரு.வே.அகிலேசபிள்ளை அவர்களின் திருக்கோணாசல வைபவம் தரும் தம்பலகாமம் தொடர்புடைய நான்காவது குறிப்பு 'பெரியவளமைப் பத்ததி' தொடர்பிலானது.

திருக்கோணேச்சரத்தின் திரவிய இருப்பினைப் பதிவு செய்து பாதுகாக்கும் கனகசுந்தப்பெருமாளின் வம்சத்தவர்கள் திருக்கோணாசல நகரிலும், கட்டுக்குளப் பகுதியில் குச்சவெளியென்னுங் கிராமத்திலும், கொட்டியாரப் பகுதியில் சம்பூர், கிளிவெட்டி எனும் இடங்களிலும் தற்காலத்தில் இருக்கின்றார்கள். இதில் குச்சவெளிப்பகுதியில் இருப்பவர்கள்தான் தம்பலகமம் கோணநாயகர் கோயில் முன்னீடு செலுத்தி வருகிறார்கள். பெரியவளமைப் பத்ததி என்னுஞ் செப்பேடும் அவர்கள் வசத்தில்தான் இருக்கிறது என்று முடிகிறது அக்குறிப்பு.[6]

### பெரியவளமைப் பத்ததி

திருக்கோணேச்சரத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் பற்றிய முழுமையான விபரம் 'பெரியவளமைப்பத்ததி' எனும் செப்பேட்டில் உடனுக்குடன் பதியப்படும் வழக்கம் இருந்திருக்கிறது. அப்பணியினைச் செய்யும் பொறுப்பு கனகசுந்தரப் பெருமாள் எனும் பட்டம் பெற்றவர்களின் வம்சத்தவரிடம் இருந்த விபரங்களைத் தருகிறது இக்குறிப்பு.

இற்றைக்குச் சுமார் 130 வருடங்களுக்கு முன்னர் பெரிய வளமைப்பத்ததி குச்சவெளிப்பகுதியில் இருந்த கனகசுந்தப் பெருமாளின் வம்சத்தவர்களிடம் இருந்தது பற்றி திரு.வே. அகிலேசபிள்ளை அவர்கள் ஆவணப்படுத்தி இருக்கிறபோதும் அச்செப்பேடுகளின் செய்திகள் நமது இன்றைய தலை முறையினருக்கு கிடைக்கவில்லை என்பது பேரிழப்பே.

திரு.வே. அகிலேசப்பிள்ளை அவர்களின் திருக்கோணாசல வைபவம் தரும் மேலே நாம் பார்த்த குறிப்புகளில் இருந்து இந்நூல் எழுதப்பட்ட காலப்பகுதியில் இவ்வூரினை தம்பலகமம் என அழைக்கும் வழக்கம் இருந்ததனை அறிந்துகொள்ளக் கூடியதாக இருப்பதோடு தம்பலகாமம் தொடர்பான பல்வேறு அரிய வரலாற்றுத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கிறது. மேலும் நாம் இன்னும் தேடிச் சேகரிக்கவேண்டிய பல அரிய தகவல்கள் தொடர்பிலும் ஆர்வத்தினை ஏற்படுத்துவதாகவும் இருக்கிறது.

### இருமரபுந் தூய எதிர்வீரசிங்க நல்ல பூபால வன்னிபத்தின் உயில்

1889 ஆம் ஆண்டில் திரு.வே. அகிலேசபிள்ளை அவர்களின் ஆவணப்படுத்தலின் பின்னர் தம்பலகமம் என இவ்வூரினைக் குறிப்பிடும் ஆவணம் 1893 இல் எழுதப்பட்ட இருமரபுந் தூய எதிர்வீரசிங்க நல்ல பூபால வன்னிபம் அவர்கள் எழுதிய நியமன உறுதியாகும். ஆதிகோணநாயகர் ஆலயத் தொழும்பு, ஆலய அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்கள் பற்றியும். ஆலய த்தில் நடக்கவேண்டிய பூசை ஒழுங்குகள், திரு விழாக்கள், சடங்குகள் பற்றியும் எழுதப்பட்ட உயில் இதுவாகும். இதனை எழுதியவர் திருகோணமலை கொட்டியாரப்பற்றில் உள்ள மேன்காமத்தில் வசித்த இருமரபுந் தூய எதிர்வீரசிங்க நல்ல பூபால வன்னிபம் என்பவர். இவர் உறுதியின் ஆரம்பப் பகுதியில் தற்காலம் திரு.கொட்டியாபுரப் பற்று மேங்காமத்தில் வசிக்கும் இருமரபுந் தூய எதிர்வீரசிங்க நல்ல பூபால வன்னிபமாகிய நான் திரு. தம்பலகமம் கோணைநாயகர் கோவிற் கருமங்களைப்பற்றி பாராபரிப்புத் தத்துவ நியமன உறுதி முடித்துக் கொடுந்த விபரம் என்று குறிப்பிடுகிறார். இங்கு திருகோணமலையில் இருக்கும் காமம் என்ற ஈற்றுப் பெயர் கொண்டமைந்த இரு ஊர்களின் பெயர் பதிவுசெய்யப்பட்டுள்ளது. தம்பலகாமம், மேன்காமம் எனும் அவ்விரு ஊர்களும் முறையே தம்பலகமம், மேங்காமம் எனக் குறிப்பிடப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. இவ்வுயில் பற்றிய மேலதிக விபரங்கள் இந்நூலின் தம்பலகாம தேசம் எனும் கட்டுரையில் முழுமையாக இணைக்கப்பட்டுள்ளது.

## ஆதிகோணநாயகர் மாகாசபை கூட்டம்

*1893* ஆம் ஆண்டில் எழுதப்பட்ட வன்னிபத்தின் உயிலுக்கு அடுத்ததாக தம்பலகமம் என்ற ஊர்ப்பெயர் தொடர்பில் கிடைக்கும் ஆவணம் *1919* ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஆதிகோணநாயகர் மாகாசபை கூட்டம் தொடர்புடையது. ஆதிகோணநாயகர் ஆலயக் கருமங்கள் தொடர்பாக கூட்டப்பட்ட ஒரு மகாசபைக் கூட்டம் பற்றிய அறிவித்தல் இதுவாகும். இங்கு இவ்வூரின் பெயர் திரு. தம்பலகமம் எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்துடன் இம்மாகாசபைக் கூட்டம் பற்றிய விடயங்கள் தேச வழக்கப்படி தம்பலகாமம், திருகோணமலை, கட்டுக்குளப்பற்று, கொட்டியாரப்பற்று ஆகியவற்றிற்கு அறிவிக்கப்பட்டிருப்பதை அறியத்தருகிறது. இப்பத்திரம் பின்னர் *20.9.1919* இல் அ. குலசேகரம்பிள்ளை அவர்களால் சரியான பிரதி (True copy) என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் அவரின் பதவி நிலை இங்கு குறிப்பிடப்படவில்லை. அவ்வறிவித்தல் கடிதத்தின் முழுமையான வடிவம் கீழே தரப்பட்டுள்ளது.

பிரசித்தம்

திரு தம்பலகமம் ஆதியாகிய கோணநாயகர் கோயில் பராபரிப்புக்காரரில். ஒருவராகிய எரம்பு கதிரவேலு காலஞ்சென்றமையாலும், கோயில் காரியங்களை வழுவின்றி நடத்துதற்கு அவருடைய இடத்திற்கு இன்னொரு பராபரிப்பை நியமிக்க வேண்டியதனாலும், இன்னும் கோயிலுக்காகவேண்டிய அவசிய திருத்தங்கள் செய்ய வேண்டி-யிருப்பதனாலும் 1919ம் ஆண்டு மாசிமாதம் 19ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலமே பத்துமணிக்குத் தம்.கோணநாயகர் கோவிலில் ஒர்மகாசபை கூடப்படும். அத்தருணம் கோயில் நன்மையை விரும்பிய சைவ சமைய அவிமானிகள் சகலரும் சமுகந்தந்து என்பிரானின் கருமங்களை இனிது முடிக்குமாறு வேண்டுகின்றோம்.

## பி ர சி த் த ம்.

திரு தம்பலகமம் ஆதியான கோணநாயகர் கோயில் பராபரிப்புக்காரரில், ஒருவராகிய ஏரம்பு கதிரவேலு காலஞ்சென்றமையாலும், கோயில் காரியங்களை வழுவின்றி நடத்துதற்கு அவருடைய இடத்திற்கு இன்னொரு பராபரிப்பை நியமிக்க வேண்டியதனாலும், இன்னும் கோயிலுக்காகவேண்டிய அவசியதிருத்தங்கள் செய்ய வேண்டியிருப்பதனாலும் 1919ம் ஆன் மாசிமாதம் 19ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலமே பத்துமணிக்குத்தம் கோணநாயகர் கோவிலில் ஓர்மகாசபை கூடப்படும். அத்தருணம் கோயில் நன்மையை விரும்பிய சைவ சமைய அபிமானிகள் சகலரும் சமுகந்தந்து எம்பிரானின் கருமங்களை இனிது முடிக்குமாறு வேண்டுகின்றேம்.

கையொப்பம்.
கோ.. கதிர்காமத்தம்பி.
பராபரிப்பு.

1. வே. வைரமுத்து
காரியப்பர். நானாத்தார்
2. கு. முருகப்பர்
வைராவியார். வரிப்பத்து
3. கா. வை. கனகசபை.
அடப்பன். [illegible]

சரியானபிரதி.
அ. குலசேகரம்பிள்ளை.,
20/9/19.

இதைப்போலொத்த இன்னும் மூன்று பிரதிகள் கோட்டியாபுரப்பகுதி, கட்டுக்குளப்பகுதி, திருகோணமலைப்பகுதிக்கும் அனுப்பப்பட்டது. எல்லாப்பிரதிகளிலும் நொத்தீஸ்கண்டதற்கு பலபேராலும் கைச்சாத்திடப்பட்டிருக்கிறது.

அ. குலசேகரம்பிள்ளை.
20/9/19

### கூட்டத்துக்கு வந்தவர்களின் பெயர்.

1. சு. முத்துக்குமாருவன்னியம்.
2. அ. குலசேகரம்பிள்ளை.
3. நா. அப்பாத்துரை ஐயர். முதன்மை
4. சு. கன்னமுத்து குருக்கள்.
5. கா. கோணமலை.
6. க. வேலுப்பிள்ளை.
7. ஏ. கணபதிப்பிள்ளை.
8. ச. அகிலேசு.
9. வே. வைரமுத்து நானாத்தார் காரியப்பர்
10. வே. பொன்னையா.
11. கா. சுப்பிரமணியம்.
12. வே. கனகசபை.
13. க. பத்தினியர்.
14. சு. முருகப்பர். வரிப்பத்து வைராவி
15. க. கோணமலை.
16. வே. கோணமலை.
17. வே. சோமசுந்தரம்.
18. ஆ. வேலுப்பிள்ளை.
19. மா. கதிர்காமத்தம்பி.
20. ஏ. கதிரவேலு.
21. சி. காளியப்பு.
22. கோ. கந்தப்பு.
23. கா. கனகசபை.
24. ச. கதிர்கமமத்தம்பி.
25. க. ஆறுமுகம்
26. க. பத்தினியன்
27. க. கதிரமலை
28. கா. இராமு
29. இ. சின்னத்தம்பி
30. கந்தர்
31. ப. வேலாயுதம்
32. மு. கந்தையா
33. வே. நல்லதம்பி
34. ச. தம்பிமுத்து
35. க. ஏரம்பு
36. அ. கதிராமு
37. கோ. காளியப்பு
38. ஆ. கர்த்தமுத்து
39. பெ. கனகசபை
40. க. நாகமுத்து
41. ஆ. காத்தமுத்து
42. த. செல்லத்தம்பி
43. க. மாசிலாமணி
44. க. செல்லன்
45. வ. கந்தையா
46. சி. வல்லிபுரம்
47. வே. பத்தினியன்
48. கா. இராமநாதபிள்ளை
49. கா. அம்பலவாணி
50. க. சின்னத்தம்பி
51. மு. பெரியதம்பி
52. வே. கதிர்காமத்தம்பி
53. க. பளனியப்பர்
54. அ. இராசகோன்
55. பொ. சரவணப்பெருமாள்
56. க. கதிர்காமத்தம்பி
57. வா. வேலுப்பிள்ளை
58. த. வீரக்குட்டி
59. வ. முத்துக்குமாரு
60. க. காளியப்பு
61. க. ஆறுமுகம்
62. ஐ. கந்தையா
63. க. சரவணமுத்து
64. க. ஐயாத்துரை
65. சு. முருகேசு
66. க. கந்தையா

கையொப்பம்
கோ.கதிர்காமத்தம்பி
பராபரிப்பு

1. வே.வைரமுத்து (காரியப்பர், தானத்தார். )
2. கு.முருகப்பர் (வைராவியார், வரிப்பத்து)
3. கா.வை.கனகசபை (அடப்பன்,மீகாமன் )

சரியரனபிரதி
அ.குலசேகரம்பிள்ளை
20/9/19

இதைப்போலொத்த இன்னும் மூன்று பிரதிகள் கொட்டியாபுரப்பகுதி, கட்டுக்குளப்பகுதி, திருகோணமலைப் பகுதிக்கும் அனுப்பப்பட்டது. எல்லாப்பிரதிகளிலும் நொத்தீஸ் கண்டதற்கு பலபேராலும் கைசாத்-திடப்பட்டிருக்கிறது.

கூட்டத்துக்கு வந்தவர்களின் பெயர்

1. க.முத்துக்குமாரு (வன்னிபம்)
2. அ.குலசேகரம்பிள்ளை
3. நா.அப்பாத்துரை ஐயர் (முதன்மை)
4. சு.கண்ணமுத்துக்குருக்கள்
5. கா.கோணாமலை
6. க.வேலுப்பிள்ளை
7. எ.கணபதிப்பிள்ளை
8. ச.அகிலேசு
9. வே.வைரமுத்து (தானத்தார், காரியப்பர்)
10. வே.பொன்னையா
11. கா.சுப்பிரமணியம்
12. வே.கனகசபை
13. க.பத்தினியர்
14. சு.முரகப்பர் (வரிபத்து, வைராவி)
15. க.கோணாமலை
16. வே.கோணாமலை
17. வே.சோமசுந்தரம்
18. ஆ.வேலுப்பிள்ளை
19. மா.கதிர்காமத்தம்பி

20. எ.கதிர்வேலு
21. சி.காளியப்பு
22. கோ.கந்தப்பு
23. கா.கனகசபை
24. ச.கதிர்காமத்தம்பி
25. க.ஆறுமுகம்
26. க.பத்தினியன்
27. க.கதிரமலை
28. கா.இராமு
29. இ.சின்னத்தம்பி
30. கந்தர்
31. ப.வேலாயுதம்
32. மு.கந்தையா
33. வே.நல்லதம்பி
34. ச.தம்பிமுத்து
35. க.ஏரம்பு
36. அ.கதிராமு
37. கோ.காளியப்பு
38. ஆ.கர்த்தமுத்து
39. பெ.கனகசபை
40. க.நாகமுத்து
41. ஆ.காத்தமுத்து
42. த.செல்லத்தம்பி
43. க.மாசிலாமணி
44. க.செல்வன்
45. வ.கந்தையா
46. சி.வல்லிபுரம்
47. வே.பத்தினியன்
48. கா.இராமநாதபிள்ளை
49. கா.அம்பலவாணி
50. க.சின்னத்தம்பி
51. மு.பெரியதம்பி
52. வே.கதிர்காமத்தம்பி
53. க.பளனியப்பர்
54. அ.இராசகோன்
55. பொ.சரவணப்பெருமாள்

56. க.கதிர்காமத்தம்பி
57. வா.வேலுப்பிள்ளை
58. த.வீரக்குட்டி
59. வ.முத்துக்குமாரு
60. க.காளியப்பு
61. க.ஆறுமுகம்
62. ஐ.கந்தையா
63. க.சரவணமுத்து
64. க.ஜயாத்துரை
65. சு.முருகேசு
66. ஐ.கந்தையா

தம்பலகமம் என்ற ஊர்ப்பெயர் ஆவணப்படுத்தலுக்கு மேலதிகமாக இப்பத்திரத்தில் காலை என்பது காலமே (ஞாயிற்றுக்கிழமை காலமே பத்து மணிக்கு) என்று பேச்சுத் தமிழில் பாவிக்கப்பட்டிருப்பதையும், Notice என்ற ஆங்கில ப்பதம் நொத்தீஸ் என நேரடியாக தமிழில் பயன்படுத்தப் பட்டிருப்பதையும் சுவாரசியத்துடன் கவனிக்கலாம். அத்துடன் இங்கு பதிவு செய்யப்பட்டிருக்கும் பராபரிப்பு, காரியப்பர், தானத்தார், வைராவியார், வரிப்பத்து, அடப்பன், மீகாமன் போன்ற பதவி நிலைப் பெயர்கள் வருங்காலங்களில் மிக விரிவாக ஆராயப்பட வேண்டிய வையாக உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

*1919* ஆம் ஆண்டு பதிவுசெய்யப்பட்ட இப்பத்திரத்துக்கு அடுத்ததாக நமக்குக் கிடைக்கும் ஆவணம் வேலுப்பிள்ளை வயிரமுத்து அவர்களின் கடிதம். இக்கடிதம் *1928* இல் எழுதப்பட்டது. ஆதிகோணநாயகர் ஆலயத்தில் பரம்பரை பரம்பரையாக தொண்டு செய்யும் தொழும்பாளரான வேலு ப்பிள்ளை வயிரமுத்து அவர்கள் தான் செய்து வந்த தொழும் பினை தனது மகனுக்கு பாரம் கொடுப்பது பற்றி தேசத்த வருக்கும் மற்றும் ஆலயத்துடன் தொடர்புடைய அனைவருக்கும் அறியத்தரும் கடிதம். இக்கடிதம் திருகோண மலையைச் சேர்ந்த தம்பலகமப்பற்றில் தம்பலகமம் கோயிற் குடியிருப்பில் சைவசமய பிரபல்யமாய் விளங்கும் கோணைநா

தேஸ்வர சுவாமி கோயிலுக்கு என்று ஆரம்பிக்கிறது. இங்கு இவ்வூரின் பெயர் தம்பலகமப்பற்றில் உள்ள தம்பலகமம் என்றே குறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.இக்கடிதத்தின் முழுமை யான வடிவம் இந்நூலின் தம்பலகாம தேசம் எனும் கட்டுரை யில் இணைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

## நாயன்மார் திடல் வேள்வி தொடர்பான ஆவணம்

*1928* ஆம் ஆண்டில் வேலுப்பிள்ளை வயிரமுத்து அவர்களின் கடிதத்தில் தம்பலகமம் என்று குறிக்கப்பட்டிருந்ததற்கு அடுத்ததாக நமக்குக் கிடைக்கும் ஆவணம் நாயன்மார் திடல் வேள்வி தொடர்பான ஆவணம். இவ்வாவணம் *1945* இல் எழுதப்பட்டிருக்கிறது.

திருத். தம். கோணனாதேசுபர சுவாமி திரு. அருளை நடத்தி வருவதற்காக குளக்கோட்டு மகராசா கயவாகு மகாராசாவாலும் கொண்டுவரப்பட்ட எங்கள் நிலமை தலமை ஆகிய கங்காணம்

க) சுப்புறுமணியம் அடப்பன்

வ) அருணாச்சலம் அடப்பன்

கா) கனகசபை காரியப்பர்


வ) கோபாலுப்பிள்ளை வயிராவி

மு) கோணாமலையும் கோயில் மனேச்சர்களையும்


கந்தளாய் வேள்வி கள்ளிமேடு பத்தினி அம்மன் கோயில் மாகாமம் மூர்க்க மாதா கோயில் தம்பலகமம் நாயன்மாதிடல் நாயன்மார் வேள்வி செய்யும் அத்தலங்களை நடத்தி வருகின்றபடியால் அத்தொளும்பில் ஆசாரி அபிஷேகம் செய்யப்பட்ட ஒருவரை நாயன்மார் திடலில் மடை வைப்பதற்காக ஒருவரை நியமித்து தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.


(1945 ஆண்டு மாசி மாதம் 10 திகதி)

ஆதிகோணநாயகர் ஆலய வழிபாட்டு முறைகளில் வழமையான சிவாலயங்களில் நடைபெறும் சிவாகம கிரிகைகள் போலவே வெளிச்சுற்று வேள்வி வழிபாட்டு முறைகளும் சமனான முக்கியத்துவம் பெறுபவை. *1945* ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடைமுறையில் இருந்த வேள்விகள் பற்றிக்



நாயன்மார் திடல் வேள்வி தொடர்பான ஆவணம்





நாயன்மார் திடல் வேள்வி தொடர்பான ஆவணம்

குறிப்பிடும் இக்கடிதம் நாயன்மார்திடல் வேள்வி நடத்துவதற்கு மடைவைப்பதற்காக ஆசாரி அபிஷேகம் செய்யப்பட்ட தொழும்பாளர் ஒருவரை நியமித்துத் தரும்படி ஆதி-கோணநாயகர் ஆலய தொழும்பாளர்களை வேண்டி நிற்கிறது.

1945 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவ்வூர் 'தம்பலகமம்' என்று அழைக்கப்பட்டதை ஆவணப்படுத்தும் இக்கடிதம் குளக்கோட்டு, கயவாகு மன்னர்கள் தொடர்பில் தரும் தகவல்கள் திரிகோணாசல புராணம், கோணேசர் கல்வெட்டு போன்ற இலக்கியங்கள் வழி அறியப்பட்ட தகவல்களை ஞாபகப் படுத்துபவை.

குளக்கோட்டு மன்னன் காலத்தில் திருக்கோணேச்சர ஆலய பரிபாலணம் சிற்றரசர்களான வன்னிபங்களை தலைமைக்-காரர்களாகக் கொண்டிருந்தது. ஐரோப்பியர் ஆக்கிரமிப்பின் பிற்பகுதிகளில் வன்னிபங்கள் முறை வழக்கற்றுப் போக ஆலய தொழும்பு முறையினைப் பரிபாலிக்கும் பொறுப்பு நிலமை, தலைமை எனும் பதவி மூலம் நிர்வகிக்கப்பட்டதை இவ்வாவணம் உறுதிப்படுத்துகிறது. அத்தோடு 1945 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிலமை தலைமையாக கங்காணம் செயற்பட்டதனை இது ஆதாரப்படுத்துகிறது.

மேற்படி ஆவணத்தில் கையொப்பம் வைத்திருக்கும் 1945ஆம் ஆண்டில் தம்பலகாமத்தில் வசித்த சுமார் நூற்றுக்கும் அதிகமானவர்களின் பெயர்கள் அவர்கள் வசித்த சிற்றூர்ப் பெயருடன் இங்கு பதிவு செய்யப்படுகிறது. இவை எதிர்காலத்தில் மக்கட்பெயர் ஆய்வில் (Anthroponymy) ஆர்வம் செலுத்தும் நபர்களுக்கு உதவியாக இருக்கும் என்பதோடு தம்பலகாமம் இடப்பெயர் ஆய்வில் கவனம் செலுத்தும் ஆய்வாளர்களுக்கும் ஒரு முதல்நிலை ஆவணமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

| | | |
|---|---|---|
| 1. | வே.முருகப்பன் | நடுப்பிரப்பந்திடல் |
| 2. | சிவ--------- | கரச்சைதிடல் |

| | | |
|---|---|---|
| 3. | சு. பத்தினியன் | கரச்சைதிடல் |
| 4. | க.மயில்வாகன் | கரச்சைதிடல் |
| 5. | வ.சின்னையா | கரச்சைத்திடல் |
| 6. | க.மாணிக்கன் | கரச்சைத்திடல் |
| 7. | மு.கந்தையா | பட்டிமேடு |
| 8. | வ.காளியப்பு | குஞ்சிஅடப்பந்திடல் |
| 9. | கா.சின்னையா | குஞ்சிஅடப்பந்திடல் |
| 10. | பே.கோபாலு | குஞ்சிஅடப்பந்திடல் |
| 11. | வ.பொன்னையா | கரச்சைத்திடல் |
| 12. | க.சின்னத்தம்பி | கரச்சைத்திடல் |
| 13. | இ.சின்னத்தம்பி | கரச்சைத்திடல் |
| 14. | கோ.-------பிள்ளை | கரச்சைத்திடல் |
| 15. | க.குமரேசு | கரச்சைத்திடல் |
| 16. | வே.கனகசபை | குஞ்சிஅடப்பந்திடல் |
| 17. | செ.நடராசா | பெரியதிடல் |
| 18. | மா.கதிர்காமத்தம்பி | கள்ளிமேடு |
| 19. | கோ.முத்துக்குமாரு | பட்டிமேடு |
| 20. | க.ஆறுமுகம் | வண்ணாமேட்டுதிடல் |
| 21. | ச.பூ. ஆறுமுகம் | கள்ளிமேடு |
| 22. | க.இராசையா | கள்ளிமேடு |
| 23. | ச.சுப்பிரமணியம் | கள்ளிமேடு |
| 24. | த.ஐயாத்துரை | கள்ளிமேடு |
| 25. | பெ.சின்னையா | கள்ளிமேடு |
| 26. | அ.இராசையா | கள்ளிமேடு |
| 27. | கா.வடிவேலு | கள்ளிமேடு |
| 28. | க.பொன்னம்பலம் | கள்ளிமேடு |
| 29. | பே.நவரத்தினம் | கள்ளிமேடு |
| 30. | அ.தியாகராசா | கள்ளிமேடு |
| 31. | கா.முத்தையா | கள்ளிமேடு |
| 32. | க.இராசையா | கள்ளிமேடு |
| 33. | க.சிற்றம்பலம் | கள்ளிமேடு |
| 34. | அ.சிற்றம்பலம் | கள்ளிமேடு |
| 35. | வே.கதிர்காமத்தம்பி | கள்ளிமேடு |
| 36. | வே.தாமோதரம்பிள்ளை | கள்ளிமேடு |
| 37. | கா.அம்பலவாணபி--- | கள்ளிமேடு |
| 38. | சா.பொன்னம்பலம் | கள்ளிமேடு |

| | | |
|---|---|---|
| 39. | கா.-----யப்பு | கள்ளிமேடு |
| 40. | வே.ஆறுமுகம் | கள்ளிமேடு |
| 41. | கா.முருகுப்பிள்ளை | கள்ளிமேடு |
| 42. | வி.பேச்சிமுத்து | கள்ளிமேடு |
| 43. | இ.வருணகுலசிங்கம் | கள்ளிமேடு |
| 44. | பொ.செல்லையா | கள்ளிமேடு |
| 45. | சு. -----------கேசு | கள்ளிமேடு |
| 46. | மூ.குழந்தைவேலு | கள்ளிமேடு |
| 47. | க. கனகசபை | கள்ளிமேடு |
| 48. | பொ. சுப்பிரமணியன் | கள்ளிமேடு |
| 49. | பொ.கந்தையா | கள்ளிமேடு |
| 50. | சி.வீரக்குட்டி | கள்ளிமேடு |
| 51. | ச. சுப்பிரமணியம் | கள்ளிமேடு |
| 52. | க.முத்துக்குமாரு | கள்ளிமேடு |
| 53. | பொ.கணபதிப்பிள்ளை | கள்ளிமேடு |
| 54. | சி.சபாபதி | கள்ளிமேடு |
| 55. | சோ.பொன்னுத்துரை | கள்ளிமேடு |
| 56. | --.செல்லத்தம்பி | கள்ளிமேடு |
| 57. | ச.கனகசபை | கள்ளிமேடு |
| 58. | மா.காளியப்பு | கள்ளிமேடு |
| 59. | வீ.,இளையதம்பி | கள்ளிமேடு |
| 60. | க. ----------------------- | சம்மாந்துறை |
| 61. | சு.கனகசபை | கரச்சைத்திடல் |
| 62 | வி.பொன்னுத்துரை | கரச்சைத்திடல் |
| 63 | ந.சின்னையா | குஞ்சிஅடப்பந்திடல் |
| 64 | செ.வீரகத்தி | நடுப்பிரப்பந்திடல் |
| 65 | க.முத்துக்குமாரு | நடுப்பிரப்பந்திடல் |
| 66 | சி. இராமலிங்கம் | நடுப்பிரப்பந்திடல் |
| 67 | க.சுப்பிரமணியம் | நடுப்பிரப்பந்திடல் |
| 68 | சி.வயிரவிப்பிள்ளை | நடுப்பிரப்பந்திடல் |
| 69 | வே.கணபதிப்பிள்ளை | அய்யனார்திடல் |
| 70 | க.மு--------- | நடுப்பிரப்பந்திடல் |
| 71 | த. தம்பிமுத்து | நடுப்பிரப்பந்திடல் |
| 72 | ப.வினாசித்தம்பி | நாயமார்திடல் |
| 73 | செ.கதிர்காமத்தம்பி | நாயமாதிடல் |
| 74 | இ.----------ன் | நாயமாதிடல் |

| | | |
|---|---|---|
| 75 | பி.பெரியதம்பி | நாயமார்திடல் |
| 76 | வ.சின்னத்தம்பி | நாயமார்திடல் |
| 77 | ஆ.சின்னத்தம்பி | நாயமாதிடல் |
| 78 | க.கயிலாயபிள்ளை | கள்ளிமேடு |
| 79 | ந.வேலுப்பிள்ளை | குஞ்சிஅடப்பந்திடல் |
| 80 | க.செல்லத்துரை | குஞ்சிஅடப்பந்திடல் |
| 81 | சீ.நடராசபிள்ளை | குஞ்சிஅடப்பந்திடல் |
| 82 | ப.வேலுப்பிள்ளை | நாயமாதிடல் |
| 83 | செ.தியாகராசா | நாயமார்திடல் |
| 84 | த.செல்லத்தம்பி | குஞ்சிஅடப்பந்திடல் |
| 85 | கா.ஆறுமுகம் | நாயமார்திடல் |
| 86 | K.Kurugulapoopalasingham | நாயமார்திடல் |
| 85 | க.சண்முகம் | நாயமார்திடல் |
| 86 | சி.கனகரெத்தினம் | நாயமார்திடல் |
| 87 | ஆ.ஏரம்பு | நாயமார்திடல் |
| 88 | வீ.கதிர்காமத்தம்பி | நாயமார்திடல் |
| 89 | செ.குழந்தைவேலு | நாயமார்திடல் |
| 90 | ந.சின்னையா | குஞ்சிஅடப்பந்திடல் |
| 91 | வ.சின்னத்தம்பி | பெரியதிடல் ?(மூ)ப்பன் |
| 92 | மு.காளிக்குட்டி | குஞ்சிஅடப்பந்திடல் |
| 93 | க.வேலாயுதம் | குஞ்சிஅடப்பந்திடல் |
| 94 | த.சின்னத்தம்பி | குஞ்சிஅடப்பந்திடல் |
| 95 | ஆ.கோணாமலை | குஞ்சிஅடப்பந்திடல் |
| 96 | க.நாகப்பிள்ளை | வண்ணாமேட்டுத்திடல் |
| 97 | க.கனகசபை | கரைச்சத்திடல் |
| 98 | கு.வேலாயுதம் | கோணரியாதிடல் |
| 99 | கு.சரவணை | கோணரியாதிடல் |
| 100 | க.இராசையா | கரைச்சித்திடல் |
| 101 | பொ.கோணாமலை | கரைச்சித்திடல் |
| 102 | குடும்பன் ஆறுமுகம் | சிப்பித்திடல் |
| 103 | சு.சோமசுந்தரக்குருக்கள் | பட்டிமேடு |
| 104 | வ.வயிரமுத்து | பட்டிமேடு |
| 105 | சி.சுப்பிரமணியம் | பட்டிமேடு |
| 106 | கா.இராசையா | கள்ளிமேடு |
| 107 | ஆ.சுப்ரமணியம் | பட்டிமேடு |
| 108 | __.நாகரெத்தினம் | பட்டிமேடு |

| | | |
|---|---|---|
| 109 | க.செல்வநயினார் | பட்டிமேடு |
| 110 | ___.சித்திரவேலு | பட்டிமேடு |
| 111 | து.கோபாலு | பட்டிமேடு |
| 112 | க.கோபாலுபிள்ளை | பட்டிமேடு |
| 113 | க.அம்பலவாணபிள்ளை | கள்ளிமேடு |
| 114 | கா.கனகசபை | பட்டிமேடு |

நாயன்மார்திடல் வேள்வி தொடர்பான ஆவணத்திற்கு அடுத்ததாக நமக்கு கிடைக்கும் ஆதாரம் "ஆதிகோணநாயகர் கோயில் நிர்வாகச் சீர்கேடும் செய்யவேண்டிய சீர்திருத்தங்களும்" என்று தலைப்பிடப்பட்டிருக்கும் ஒரு பத்திரம். இப்பத்திரம் 20.8.1949 இல் வெளியிடப்பட்டிருக்கிறது. இதனை வாசிப்பதற்கு முன்னால் இவ்வாறான பத்திரங்கள் உருவாவதற்கான பின்னணி பற்றி ஆராய்வது அவசியமாகிறது.

திருகோணமலையின் வரலாற்று மூலகங்களில் பிரதானமானவை திருக்கோணேச்சரத்துடன் தொடர்புடையவை. போர்த்துக்கீசரினால் திருக்கோணேச்சரம் முற்றாக இடிந்தழிக்கப்பட்ட பின்னர் அங்கிருந்த புராதன விக்கிரகங்களில் சில இக் கிராமத்திற்குக் கொண்டுவரப்பட்டு ஆதிகோணநாயகர் ஆலயம் உருவானது. இவ்வாலயம் உருவான பின்னர் திருகோணமலையில் இருந்த நான்கு பற்றுக்களுடன் தொடர்புடைய பல வரலாற்று ஆவணங்கள் ஆதிகோணநாயகர் ஆலயத்துடன் தொடர்புடையதாகவே காணப்படுகின்றன. எனவேதான் இந் நூலில் பதிவு செய்யப்பட்டுள்ள பல ஆவணங்கள் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலய நடைமுறைகள், தொழும்பு முறை, வரலாறு என்பனவற்றுடன் தொடர்புடையதாக காணப்படுகிறது.

திருக்கோணேச்சரம் எவ்வாறு திருகோணமலை முழுவதும் நிலமானிய முறையினை நடைமுறைப்படுத்தி செயற்பட்டு வந்ததோ அதே நடைமுறை திருக்கோணேச்சரம் அழிக்கப்பட்டதன் பின்னர் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயம் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டது. எனவே தம்பலகாமம் ஆதி கோணநாயகர் ஆலயம் மிகப்பெரும் வயல் நிலங்களும், குடியிருப்புக்காணிகளும், செல்வமும் கொண்ட ஆலயமாகத்

*திகழ்ந்தது என்பதனை நாம் இலகுவாகப் புரிந்துகொள்ள முடியும். எனவே அதிகளவான நிதி கையாளப்பட்ட இவ்வாலயத்தில் 20.8.1949 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிலரால் நிர்வாகச் சீர்திருத்தங்கள் செய்வதற்கு பொது-மக்களைத் தூண்டும் வகையிலே கீழ்வரும் பத்திரம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் முழுமையான வடிவம் கீழே தரப்படுகிறது.*

## திருதம்பலகமம் கோணைநாயகர் கோயில் நிர்வாகச் சீர்கேடும் செய்யவேண்டிய சீர்திருத்தமும்

சைவாபிமானிகளே

இக்கோயில் திருகோணமலைப்பற்று முழுவதற்கும் சேர்ந்தது. குளக்கோட்டன் செய்த தர்மத்தின் எஞ்சிய பாகம். இதை அழியவிட்டாற் சமயத்திற்கு அறிகுறியாக இருப்பது ஏது? இக்கோயிலுக்கு அவ்வரசன் வகுத்த நிர்வாகத் திட்டம் “கல்வெட்டு“ என்ற பெயரால் உண்டு. இக்கோயிலை நடாத்தும் எந்தச் சபையும் கூடியவரை அவர் திட்டத்தை அடக்கிய புதிய திட்டம் வகுத்து நடாத்துவதுதான் முறை இல்லையேல் அவ்வரசனின் புண்ணிய கைங்கரியத்துக்குக் கேடும் அவர் நம்பிக்கைக்குத் துரோகமும் செய்த பெரும் குற்றம் சைவசமயிகளைச் சாரும்.

கோயிலை நடாத்துஞ் சபையினர் கிரியைகள், வழக்கங்கள், கோயில் பத்ததி முறைகள் அறிந்தவராயும் சைவசமய அறிவு ஒழுக்கம் உடையவராயும் இருத்தல் வேண்டும். “கோட்டால்” (நீதிமன்றம்) தெரியப்பட்டு நான்கு வருட காலமாக நடத்திவரும் சபையினர் கோயில் நிர்வாகத்தை சரியான முறையில் நடாத்துகின்றார்களில்லை. அவர்கள் வகுத்த திட்டத்தின் குறைபாடுகளிலும், நிர்வாகச் சீர்கேடுகளிலும் பூசை ஒழுங்கீனங்களிலும், சனங்களிடையே ஏற்பட்ட வெறுப்பிலும் இருந்து இதனைத் தெரிந்துக் கொள்ளலாம். இந்த நிர்வாகத்தில் சமயம் வளருமா? தேயுமா? ஆகையால் ஒழுக்கமுள்ள சமயாபிமானிகள் இம்மாதம் 30ம்

திகதி தம்பலகமத்தில் நடக்கும் பொதுக் கூட்டத்திற்குச் சமூகந்தந்து பொதுநலத் தொண்டர்களையும், சமய அறிவு ஒழுக்கமுள்ளவர்களையும் கோயில் நிர்வாகச் சபைக்குத் தெரிவு செய்து எங்கள் சமயத்தை வளர்க்க உதவும்படி அன்புடன் கேட்கப்படுகின்றனர்.

பொதுஜனங்கள் அறியவேண்டிய பல சீர்கேடுகளிற் சில

1. நாலு ரூபாய் கொடுத்துத்தான் கோயில் விடயங்களைப் பேச உரிமைச் சீட்டுப் பெற வேண்டுமாம். தமிழ்நாட்டுக் கோயில்கள் எதிலும் இல்லாத ஒரு புதிய திட்டமிது. இது பக்தியைப் பணங்கொண்டளக்கும் புதிய சூழ்ச்சி முறையல்லவா? சமயத்திற்கும் சைவர்களுக்கும் அவமானந் தரும் சட்டமல்லவா இது ஒழிய வேண்டும். புதிய முறை வகுக்க வேண்டும்.

2. கோயில் விடயங்களில் ஈடுபடுவர்களுக்கு இங்கிலீசு தெரிய வேண்டுமாம். பணங்கட்டிச் சீட்டுப் பெற்றவர்களின் பெயர் வரிசை இங்கிலீசில்தான் போடப்படுமாம். தமிழில் இல்லையாம். நிர்வாகத்தில் உள்ளவர்கள் எல்லாம் இங்கிலீசில் பெரிய பட்டம் பெற்றவர்களாகையாற் போலும்.

3. சோமவாரம், பிரதோஷம் முதலிய புண்ணிய தினங்கள் கடவுளுக்கு விருப்பம் இல்லையாம். சனியும், புதனும் நிர்வாகிகளுக்குச் சிறந்த முழுக்கு நாட்கள் ஆகையால்

4. திருவிழாக்காலத்தில் சுவாமியைச் சுமக்கக் கூலியாட்களுக்குச் சம்பளமாம். இது முன் நடக்காத விடயமானாலும் நான்கு வருடமாகச் சமயப்பற்றை வளர்த்த திறம், செல்வாக்கு, நிர்வாக முறைமைக்கு ஓர் அறிகுறியாம்.

5. பொலிசார் இல்லாமல் திருவிழாக்கள் நடத்தக் கூடாதாம், சுவாமியையும் பொலிசைக் காட்டி “கணக்கக் கேட்காதே“ என்று பயமுறுத்தி வைத்துக் கொள்ளும் புதிய முறையாம்.

# [illegible]தம்பலகமம் கோணைநாயகர் கோயில்
## நிர்வாகச் சீர்கேடும்
# செய்யவேண்டிய சீர்திருத்தமும்

சைவாபிமானிகளே!

இக்கோயில் திருகோணமலைப்பற்று முழுவதுக்குஞ் சேர்ந்தது. குளக்கோட்டன் செய்த தர்மத்தின் எஞ்சிய பாகம். இதை அழியவிட்டாற் சமயத்துக்கு அறிகுறியாக இருப்பது எது? இக்கோயிலுக்கு அவ்வரசன் வகுத்த நிர்வாகத் திட்டம் 'கல்வெட்டு' என்ற பெயரால் உண்டு. இக்கோயிலை நடாத்தும் எந்தச் சபையும் கூடியவரை அவர் [illegible] அடக்கிய புதிய திட்டம் வகுத்து நடத்துவதுதான் முறை. இல்லையேல் அவ்வரசனின் புண்ணிய கைங்கரியத்துக்குக் கேடும், அவர் நம்பிக்கைக்குத் துரோகமுஞ் செய்த பெருங் குற்றம் சைவசமயிகளைச் சாரும். கோயிலை நடாத்துஞ் சபையினர், கிரியைகள், வழக்கங்கள், கோயில் பத்ததிமுறைகள் அறிந்தவராயும், சைவசமய அறிவு ஒழுக்[illegible] உடையவராயும் இருத்தல்வேண்டும். 'கோட்டால்' தெரியப்பட்டு, நான்குவருட[illegible] நடாத்திவருஞ் சபையினர் கோயில் நிர்வாகத்தைச் சரியானமுறையில் நடாத்துகின்றார்களில்லை. அவர்கள் வகுத்த திட்டத்தின் குறைபாடுகளிலும், நிர்வாகச் சீர்கேடுகளிலும் பூசை ஒழுங்கீனங்களிலும், சனங்களிடையே ஏற்பட்ட வெறுப்பிலும் [illegible] இதனைத் தெரிந்துகொள்ளலாம். இந்த நிர்வாகத்தில் சமயம் வளருமா? [illegible]? ஆகையால் ஒழுக்கமுள்ள சமயாபிமானிகள் **இம்மாதம் 30-ம் திகதி தம்பல[illegible]** [illegible] பொதுக்கூட்டத்துக்குச் சமுகந்தந்து, பொதுநலத் தொண்டர்களையும் சமய அறிவு ஒழுக்கமுள்ளவர்களையும் கோயில் நிர்வாகசபைக்குத் தெரிவுசெய்து எங்கள் [illegible] வளர்க்க உதவும்படி அன்புடன் கேட்கப்படுகின்றனர்.

பொதுஜனங்கள் அறியவேண்டிய பல சீர்கேடுகளிற் சில

1. [illegible] கோயில் விஷயங்களைப் பேச உரிமைச் சீட்டுப் பெற வேண்டுமாம். தமிழ்நாட்டுக் [illegible] இல்லாத ஒரு புதிய திட்டமிது. இது பக்தியைப் பணங்கொண்டளக்கும் புதிய சூழ்ச்சி முறையல்லவா? சமயத்துக்கும் சைவர்களுக்கும் அவமானந்தரும் சட்டமல்லவா? இது ஒழியவேண்டும்; புதிய முறை வகுக்கவேண்டும்.
2. கோயில் விஷயங்களில் ஈடுபடுபவர்களுக்கு இங்கிலீசு தெரியவேண்டுமாம். பணங்கட்டிச் சீட்டுப்பெற்றவர்களின் பெயர் வரிசை இங்கிலீசில்தான் போடப்படுமாம். தமிழில் இல்லையாம். நிர்வாகத்தில் உள்ளவர்கள் எல்லாம் இங்கிலீசில் பெரிய பட்டம் பெற்றவர்களாகையாற் போலும்!
3. சோமவாரம், பிரதோஷம் முதலிய புண்ணிய தினங்கள் கடவுளுக்கு விருப்பமில்லையாம். சனியும் புதனும் நிர்வாகிகளுக்குச் சிறந்த முழுக்குநாட்கள் ஆகையால்.
4. திருவிழாக்காலத்தில் சுவாமியைச் சுமக்கக் கூலியாட்களுக்குச் சம்பளமாம். இது முன் நடக்காத விஷயமாகும், நான்கு வருடமாகச் சமயப்பற்றை வளர்த்த திறம், செல்வாக்கு, நிர்வாகமுறைமைக்கு ஓர் அறிகுறியாம்.
5. பொலிசார் இல்லாமல் திருவிழாக்கள் நடத்தக் கூடாதாம். சுவாமியையும் பொலிஸைக் காட்டி "கனக்கக் கேட்காதே" என்று பயமுறுத்திவைத்துக்கொள்ளும் புதிய முறையாம்.
6. கோயிற் பணச் செலவில் ஒரு பூந்தோட்டமாம். அதில் கத்தரிப்பூ, கொய்ப்பூ, மிளகாய்ப்பூக்கள் தானும். பூக்களிலும் சுவாமியார் விருப்பத்தை மாற்றிக்கொண்டாராம் இந்தக் காலத்தில்.

செய்யவேண்டிய சீர்திருத்தங்களுட் சில

1. சமயப்பற்றும், கல்வியும், ஒழுக்கமும், பொதுத்தொண்டில் விருப்பமும் உள்ளவர்களை இம்முறை தெரிவுசெய்தல் வேண்டும்.
2. பணங்கட்டி உரிமைபெறவேண்டுமென்ற திட்டம் ஒழியவேண்டும். ஒரு புதியமுறை காணவேண்டும்.
3. வரவு செலவுக் கணக்குகள் மூன்றுமாதத்துக் கொருமுறையாகுதல் பொதுஜனங்களுக்கு அச்சடித்துக் கொடுக்கவேண்டும்.
4. மனேஜர், கணக்கப்பிள்ளை இவர்களைப் பத்திரிகையிற் பிரசுரம்பண்ணி, கல்வி சமய அறிவுள்ளவர்களையே பரீட்சித்து எடுக்கவேண்டும்.
5. பொதுக்கூட்டத்தில்தான் பெரிய செலவுவகைகள் தீர்மானிக்கவேண்டும்.
6. சமய தீட்சை பெறாத நிர்வாகிகள் சமயதீட்சை பெற்றேயாக வேண்டும்.
7. கிராமதேவதைகள் பூசை, பட்டெடுப்பு, குளத்து வேள்விகள் முதலியன — 'கல்வெட்டுக்கிணங்க' திட்டம் வகுத்து நடத்தவேண்டும்.
8. விசேஷ தினங்கள், பூசைகள், குருபூசைத் தினங்கள் எல்லாம் விளம்பரப்படுத்தி முறையாக நடத்தவேண்டும். இன்னும் செய்யவேண்டிய பல உள.

ஆகையால்

அன்பர்களே! அபிமானிகளே! சமயப்பற்றுள்ளவர்களே!! இம்மாதம் 30-ந் திகதி நடக்கும் கூட்டத்திற்குச் சமுகமளியுங்கள். உங்கள் ஆலோசனைகளையும் கூறுங்கள். சமயத்துக்குச் சிறிதளவேனும் [illegible] செய்யுங்கள்.

சுபம்

தம்பலகமம்
20-8-49

★

சமயாபிமானி

[illegible] அச்சகம், [illegible]—914-49

திருதம்பலகமம் கோணைநாயகர் கோயில் நிர்வாகச் சீர்கேடும் செய்யவேண்டிய சீர்திருத்தமும்

6. கோயில் பணச் செலவில் ஒரு பூந்தோட்டமாம். அதில் கத்தரிப்பூ, கீரைப்பூ, மிளகாய்ப்பூக்கள்தானாம் பூக்களிலும் சுவாமியார் விருப்பத்தை மாற்றிக் கொண்டாராம் இந்தக் காலத்தில்

செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள்

1. சமயப்பற்றும், கல்வியும், ஒழுக்கமும், பொதுத் தொண்டில் விருப்பமும் உள்ளவர்களை இம்முறை தெரிவு செய்தல் வேண்டும்.

2. பணங்கட்டி உரிமை பெறவேண்டுமென்ற திட்டம் ஒழிய வேண்டும். ஒரு புதிய முறை காணவேண்டும்.

3. வரவு செலவுக் கணக்குகள் மூன்று மாதத்துக்கொருமுறையாகுதல் பொது ஜனங்களுக்கு அச்சடித்துக் கொடுக்க வேண்டும்.

4. மனேஜர், கணக்குப்பிள்ளை இவர்களைப் பத்திரிகையில் பிரசுரம் பண்ணி கல்வி, சமய அறிவுள்ளவர்களையே பரிட்சித்து எடுக்க வேண்டும்.

5. பொதுக் கூட்டத்தில் தான் பெரிய செலவு வகைகள் தீர்மானிக்க வேண்டும்.

6. சமய தீட்சை பெறாத நிர்வாகிகள் சமய தீட்சை பெற்றேயாக வேண்டும்.

7. கிராமதேவதைகள் பூசை, பட்டெடுப்பு, குளத்து வேள்விகள் முதலியன கல்வெட்டுக்கிணங்க திட்டம் வகுத்து நடத்தவேண்டும்.

8. விசேட தினங்கள், பூசைகள், குருபூசைத் தினங்கள் எல்லாம் விளம்பரப்படுத்தி முறையாக நடத்த வேண்டும் இன்னும் செய்ய வேண்டி பல உள

ஆகையால்

அன்பர்களே அபிமானிகளே சமயப்பற்றுள்ளவர்களே இம்மாதம் 30ந் திகதி நடக்கும் கூட்டத்திற்குச் சமூகமளியுங்கள். உங்கள் ஆலோ-சனைகளையும் கூறுங்கள். சமயத்திற்கு சிறிதளவேனும் பணி செய்யுங்கள்.

சுபம்
தம்பலகமம்
சமயாபிமானி
20.8.1949

*இந்தப் பிரசுரம் இன்றைக்குச் சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டிருக்கிறது. இங்கு தம்பலகமம் என்று இவ்வூர்ப் பெயர் ஆவணப்படுத்தப்பட்டிருப்பதற்கு மேலதிகமாக ஆலய வரலாற்று அம்சங்கள் (குளக்கோட்டன், கோணேசர் கல்வெட்டு), ஆலய நடைமுறைகள், ஆலய நிர்வாக குறைபாடுகள், ஆங்கில மொழியின் மேலாதிக்கம், ஆலய நடை முறைகளில் செய்யவேண்டிய திருத்தங்கள் தொடர்பில் விரிவாகக் குறிப்பிடுகிறது. இப்பத்திரம் இங்குள்ள மக்களின் சமூகவியல் சார்ந்த ஆய்வுகளுக்கு மிக அவசியமானதொரு ஆவணமாகும். தனது சமகால சமூக அவலத்தினை கோபத் துடனும் அத்துடன் அக் கோபத்தினை விஞ்சிய நகைச்சுவை உணர்வுடனும் இப்பத்திரத்தினை எழுதியவர் தயாரித்திருப்பது கவனிக்கத்தக்கது.*

*1949 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி பிரசுரத்திற்கு அடுத்ததாக நமக்குக் கிடைக்கும் ஆவணம் 1953 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டிருக்கும் "திருத்தம்பலகமம் கோணைநாயகர் கோயில் வரலாறும் மகா கும்பாபிஷேக வைபவமும்" என்ற சிறு நூல். இந்நூல் இவ்வூரினை தம்பலகமம் என அடையாளப் படுத்துகிறது. ஆதிகோணநாயகர் கோயில் பரிபாலனசபை காரியதரிசியாகக் கடமையாற்றிய பண்டிதர் ஐ.சரவணமுத்து அவர்களால் 10.01.1953 எனத் திகதியிட்டு எழுதப்பட்டிருக்கும் கட்டுரை இவ்வூரினை திரு.தம்பலகமம் என குறிப்பிடுவதோடு இவ்வூர் தொடர்புடைய பல வரலாற்றுத் தகவல்களையும்*

கொண்டிருக்கிறது. அச்சிறு நூலில் குறிப்பிடப்பட்டிருக்கும் இவ்வூர் தொடர்புடைய முக்கிய விடயங்களை இங்கு பதிவிடுவது அவசியமானதொன்றாகிறது.

## திருத்தம்பலகமம் கோணைநாயகர் கோயில் வரலாறும், மகா கும்பாபிஷேக வைபவமும்

திருத்தம்பலகமத்திலுள்ள கோயில் ஏறக்குறைய 300 ஆண்டுகட்கு முன்பு புதுப்பிக்கப்பட்டது. இக்கோயிலிலே மிகப் பழைய விக்கிரகங்கள் இரண்டிருக்கின்றன. அவை திருக்கோணேசரும் மாதுமையம்மையும். இதில் முன்னையது 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததென்றும், பின்னையது 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர்காலத்தது என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

இக்கோயிலிலே நடக்கும் கிரியைகள் யாவும் ஒரு தனிப்பட்ட முறையைச் சார்ந்து அம்முறைப்படி கிரியைகள் செய்யப்பட்டுவரின் வேண்டிய நேரம் வெயிலும், வேண்டிய நேரம் மழையும் திருக்கோணநாயகர் தருவார் என்பது மக்கள் நம்பிக்கையும் அனுபவத் தேர்ச்சியும்.

இக்கோயிலிற் பொன்னும் மணியும் நிறைந்திருந்ததையறிந்த யாவகர் 1847 ஆம் ஆண்டு கோயிலை உடைத்துக் களவாடிச் சென்றனர். விலையுயர்ந்த நகைகள், தளபாடங்கள், விக்கிரகங்கள் யாவுங் கொண்டுபோகப்பட்டன. ஆனாற் கோணைநாயகர் விடப்பட்டார். அவர் இன்றும் எங்களுக்குக் காட்சியளிக்கிறார்.

இந்த ஆலயத்துக்குப் பெருந்தொகையான விளைநிலங்களும் குடிநிலங்களும் இருக்கின்றன. மேலே குறித்த கோயிற் தொழும்பாளருக்குக் கொடுக்கப்பட்ட வயல் நிலங்களை விட மேலான வயல் நிலங்களும் குடிநிலங்களும் அந்தந்தக் காலத்தில் இக்கோயிலைப் பராமரித்து வந்த பெரியோர்களால் விலைக்கு வாங்கிக் கோயிலுக்குச் சேர்க்கப்பட்டன. அதில் அதிகமான நிலங்களை வாங்கிச் சேர்த்தவர்கள் திருவாளர்கள்: சுப்பர் முருகப்பர், ஏரம்பு கதிரவேலு, கந்தப்பர் கணபதிப்பிள்ளை, ஏரம்பு கணபதிப்பிள்ளை முதலியோரே. இதற்குச் சான்றுகள் இவர்கள் பேரிலே கோயிற் காணி உறுதிகள் அனேகமிருப்பதை இன்றுங் காணலாம்.


நித்திய பூசை நடந்து வந்தாலும் கோயிற் திருப்பணி வேலை வேண்டிய அளவு நடைபெறவில்லை. எனினும் 1928 ஆம் ஆண்டு இக்கோயிற் பராமரிப்புக்காரர்களாகவிருந்த திருவாளர்கள் ஏரம்பு கணபதிபிள்ளை, முருகப்பர் கோணாமலை என்போர் புதிதாக விநாயகர் ஆலயம், சுப்பிரமணியர் ஆலயம், சண்டேசுரர் ஆலயங்களைக் கட்டியும் பிரதான விமானத்தைத் திருத்தியும் பெருஞ் செலவிற் கும்பாபிஷேகஞ் செய்வித்தனர். பின் சில அன்பர்கள் நீதிமன்றத்துக்கு விண்ணப்பஞ்செய்து இக்கோயிலை அறநிலையப்பாதுகாப்புக் குழுவினரிடம் ஒப்படைத்தனர். அதனாற் கோயில் வருமானம் முறையே சேமிக்கப்பட்டு வருகிறது.

கோயில் நிர்வாகத்தை நடத்த ஏழுபேர் கொண்ட ஒரு பரிபாலன சபை மூன்று வருடத்துக்கொருமுறை இக்கோயிலுக்கு தொடர்ச்சியாக மூன்று வருடமும், ஒரு ரூபாயும் அதற்கு மேலும்பூசை முதலியவற்றுக்கு கொடுத்து வழிபட்டு வந்தோரின் வாக்குரிமையைக் கொண்டு தெரிவு செய்யப்பட்டு வருகின்றது. 1945 ஆம் ஆண்டு முதற் பரிபாலன சபை நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டது. பின் 1949 ஆம் ஆண்டு இரண்டாவது சபை தெரிவு செய்யப்பட்டது.

இச்சபை திரு.சு.சிவபாலன் (முன்னாள் பாராளுமன்றப் பிரதிநிதி) அவர்களைத் தலைமையாகக் கொண்டு நிர்வாகத்தை ஏற்றது. ஏற்றபின் நிர்வாகத்தைப் பழைய விதி முறைப்படி நடத்தவும், திருப்பணி வேலைகள் செய்யவும் திட்டங்கள் போட்டது. கோயிற் கிரியைகள் முறையே நடந்தால் நாட்டில் வறுமையும் பிணியும் அணுகாவென்பது விதிமுறை. இதை உணர்ந்த இச்சபை கீழ்வரும் முயற்சிகளில் ஈடுபட்டது.

கந்தளாய்க் குளத்தில் முன்பு முறையே செய்யப்பட்டுப் பின் ஏறக்குறையப் பதினைந்து ஆண்டுகளாகக் கவனிப்பாரற்று விடப்பட்ட திருக்குளத்து வேள்வியைச் செய்விக்க ஊக்கமூட்டி நடப்பித்தது. இந்தக் கிரியைகளுக்குப் பிரதான தொழும்பாளர்களாகிய “பிடிகாரர்” என்பவர்களுக்குக் கோயிலால் மானியமாகக் கொடுக்கப்பட்டு வந்த வயல்நிலங்களைக் கொடுத்தும் இக்கிரியை நிறைவேற்றியது. மாகாமத்தில் நடக்கும் வேள்வியும் நடப்பித்தது.

கோயிலின் நகை முதலியவற்றை வைத்து பாதுகாக்க இரும்புப் பெட்டி ஒன்றும், கோயிலில் மின்சார விளக்கேற்ற மின்சார இயந்திரமொன்றும் நவக்கிரக ஸ்தாபனமும் செய்து முடித்த பின் பெரிய திருப்பணி வேலையில் கவனம் செலுத்தியது.



உ

சிவமயம்

திருத்தம்பலகமம்

# கோணைநாயகர் கோயில் வரலாறும் மகா கும்பாபிஷேக வைபவமும்

★

தம்பலகமம்,

கோணைநாயகர் கோயிற் பரிபாலனசபை

1953

திருத்தம்பலகமம் கோணைநாயகர் கோயில்
வரலாறும், மகா கும்பாபிஷேக வைபவமும்

இராஜ கோபுரத் திருப்பணி வேலை, திருநாடராஜர் கோயில், இலிங்க ஸ்தாபனத் திருப்பணி முதலிய வேலைகளைத் தொடங்கி ஆண்டவன் அருளாலும், தலைவர் திரு. சு. சிவபாலன் அவர்களின் அயரா உழைப்பினாலும் நிறைவேற்றப்பட்டுவிட்டன. இந்த இராஜ கோபுரம் இலங்கையிலே ஒரு தனிச்சிறப்புள்ள தென்பதை நாம் கூறவேண்டியதில்லை.

ஐ. சரவணமுத்து
கௌரவ காரியதரிசி
கோ.கோ.ப.சபை
தம்பலகமம்
10-1-53

பண்டிதர் ஐ. சரவணமுத்து அவர்களால் எழுதப்பட்டுள்ள இக்கட்டுரையில் இவ்வூரின் பெயர் தம்பலகமம் என அடையாளப்படுத்தப்பட்டிருப்பதோடு ஆதிகோணநாயகர் ஆலயம் ஏறக்குறைய முன்னூறு (300) ஆண்டுகளுக்கு முன் புதுப்பிக்கப்பட்டதாக 1953 ஆம் ஆண்டில் கட்டுரையாளர் பதிவு செய்திருக்கிறார். இவரது கூற்றுப்படி 1653 ஆம் ஆண்டுக்கு அண்மித்த காலமாக ஆலய புனர்நிர்மாணம் அமைகிறது. ஆனால் இங்கு அவர் ஆலயம் கட்டப்பட்டது என்ற பதத்திற்கு பதிலாக புதுப்பிக்கப்பட்டது என்று பயன்படுத்தி இருக்கிறார். இது இக்கிராம மக்களிடையே இன்றும் நிலவும் வாய்மொழி மூலமான தகவல்களுடன் தொடர்புபட்டது. ஆதியில் இங்குள்ள கோவிற்குடியிருப்பில் ஒரு வைரவர் ஆலயம் இருந்தது என்றும் போர்த்துக்கீசர் திருக்கோணேஸ்வரத்தினை முற்றாக அழித்ததன் பிற்பாடு கண்டி மன்னனின் உதவியினால் கோவிற்குடியிருப்பில் இருந்த அவ்வாலயமே புதுபிக்கப்பட்டு தற்போதுள்ள ஆதிகோணநாயகர் ஆலயமாக தோற்றம் பெற்றது என்றும் வாய்மொழி வழக்குகள் மூலமாக இன்றும் அறியக்கிடைக்கிறது.

இவை தவிர ஆதிகோணநாயகர் ஆலயத்தில் உள்ள புராதன விக்கிரகங்கள் சோழர்காலத்துக்குரியவை என்ற விடயமும், ஆலய கிரிகை முறைகள், ஆலயத்தில் 1847ல் ஏற்பட்ட களவு மற்றும் சேத விபரங்கள், ஆலயத்திற்கு அதிகளவில்

நிலங்களை வாங்கிச் சேர்த்தவர் விபரம், ஆலய பராமரிப்பு நடைமுறை, ஆலயம் அரச அறநிலையத்திடம் ஒப்படைக்கப்பட்ட விபரம், ஆலய பரிபாலன சபை வரலாறு, கோயிற்திருப்பணி விபரம் என்பன இக்கட்டுரையில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. இவை இவ்வூர் தொடர்பான வரலாற்று எழுத்தியலில் அதிகமுக்கியத்துவம் வாய்ந்தவை என்பது கவனிக்கத்தக்கது.

1953 இல் பண்டிதர் ஐ.சரவணமுத்து அவர்களால் எழுதப்பட்ட இக்கட்டுரையைத் தொடர்ந்து தம்பலகமம் எனும் ஊர்ப்பெயர் தொடர்பில் நமக்கு கிடைக்கும் ஆவணம் 1973 ஆம் ஆண்டுக்கு உரியது. அது ஒரு சிபார்சுக் கடிதம்.

### தம்பலகமம் கிராமசபை கடிதம்

இக்கடிதம் 12.01.1973 இல் எழுதப்பட்டுள்ளது. இது தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலய தொழும்பாளர்களுள் ஒருவராக (தானத்தார்) கடைமையாற்றும் திரு. கோ. யோகானந்தம் அவர்கள் ஆலயம் சம்பந்தமான சாசனங்களை அறிய உரித்துடைவர் என்பதனை ஆதாரப்படுத்தும் ஆவணமாகும். 12.01.1973 இல் கிராமசபை அக்கிராசனர் அவர்களால் இக்கடிதம் வழங்கப்பட்டுள்ளது. இக்கடிதத்தில் இக்கிராமத்தின் பெயர் தம்பலகமம் எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இங்கு அக்கிராசனர் என்பது சபைத்தலைவர், அவைத்தலைவரைக் குறிக்கப் பயன்படும் சொல்லாகும்.

மேலே நாம் பார்த்து வந்த ஆவணங்களுக்கு மேலதிகமாக இக்காலப்பகுதிகளில் எழுதப்பட்ட பல காணி, வயல் உறுதிகள் இவ்வூரின் பெயரினை தம்பலகமம் என்றே குறிப்பிடுகின்றன. இன்றும் இவ்வூரினைச் சேர்ந்த பல தனிநபர்களுக்குச் சொந்தமான காணி, வயல் உறுதிகள் இவ்வூரினை திரு.தம்பலகமப்பற்றைச் சேர்ந்த தம்பலகமம் என்றே அடையாளப்படுத்துகின்றன.

தம்பலகமம் கிராம சபை
THAMPALAKAMAM VILLAGE COUNCIL

எனது இல,
கிராமசபை அலுவலகம்,
தம்பலகமம்.

12.1.1973

தம்பலகமம் கோவில்குடியிருப்பில் பிரதான குடியிருப்பாளரான கோபாலுபிள்ளை யோகானந்தம் என்பவரை எனக்கு பிறப்புத் தொடக்கம் நன்கு தெரியும். இவர் ஓர் நற்குடும்பத்தைச் சேரந்தவரும், நல்லொழுக்கமும் பற்பண்பும் உடையவர்,

இவர் தம்பலகமம் ஆதி கோணநாதேஸ்வர சுவாமி கோவில் (தானத்தார்) காரியஸ்தர் தொழும்பை பரம்பரையாக கடமையாற்றி வருகின்றார்.

ஆகவே இக் கோவில் சம்பந்தப்பட்ட சாசனங்களை அறிய இவர் உரிமையுடையவரானவார் என்பதை உறிதிப்படுத்துகின்றேன்.

அக்கிராசனர், கிராமசபை,
தம்பலகமம.
Chairman, V. C. Thampalakamam.

V. C. OFFICE,
THAMPALAKAMAM,
12 — 1 — 1973

தம்பலகமம் கிராமசபை கடிதம்

சுமார் எண்ணூறு (800) வருடங்கள் பழமை வாய்ந்த தம்பலகாமம் என்னும் ஊர்ப்பெயர் 17 ஆம் நூற்றாண்டு முதல் தம்பலகமம் என்று பதிவு செய்யப்பட்டிருப்பதை கால வரிசைப்படி மேலே பார்த்தோம். ஊர்ப்பெயர்கள் அவ்வூரின் மீது ஆட்சி செலுத்தும் அரசர்களால், அதிகாரிகளால் பெயர் மாற்றம் பெறுவதுண்டு. அதுபோலவே புலவர்கள், ஊரில் அதிகாரமிக்கவர்கள், சாதாரண மக்கள் மூலமாகவும் ஊர்ப்பெயர்கள் பெயர் மாற்றம் பெறுவதுண்டு. இதில் தம்பலகாமம் தம்பலகமம் ஆனது இரண்டாவது வகைப் பெயர் மாற்றத்தைச் சேர்ந்தது என ஊகிக்கலாம்.

தம்பலகமம் என்ற ஊர்ப்பெயருக்கு ஆதாரமாக மேலே காட்டப்பட்ட ஆவணங்கள் இவ்வூரின் வரலாற்றுடனும், ஆதிகோணநாயகர் ஆலய நடைமுறைகளுடனும், இவ்வூரில் வாழ்ந்த பொதுமக்களின் வாழ்வியலோடும் மிக நெருங்கிய தொடர்புகளைக் கொண்டது. இவை எதிர்காலத்தில் பல்வேறு கோணங்களில் முழுமையாக ஆராயப்படவேண்டும் என்பதே எனது அவா. அத்துடன் இவை போன்ற மேலும் பல ஆவணங்கள் எமது கிராமத்தில் ஆவணப்படுத்தப்படாமல் பொதுமக்களின் பார்வைக்கு கிடைக்காதபடி மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன என்ற கசப்பான உண்மையையும் இங்கு நினைவுகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். இத்தகைய ஆவணங்கள் எமது வருங்காலச் சந்ததியினரின் நன்மை கருதி முறையாகப் பதிவு செய்யப்பட வேண்டும் என்பது இம் மண்ணை நேசிக்கும் பலரது வேண்டுதலாக இருக்கிறது.

அடிக்குறிப்புகள்

## தம்பலகாமப் பதியின் தொண்டு

தோம்புப் பதிவுகள் வெளிப்படுத்தும் கோயிற் சொத்துடமை வடகிழக்கிலங்கை கோயில் குடியிருப்புக்களின் பிரதான தளமாக ஆதிகோணநாதேஸ்வரம் என்ற தலைப்பிலான கட்டுரையில் பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா அவர்களால் யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆய்விதழில் பதிவு செய்யப்பட்டுள்ள தோம்பு பதிவிலுள்ள விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது. தேவையான இடங்களில் அவற்றுக்கான விளக்கங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. (தொகுதி xvi இதழ் 2016)

1. தோம்பு – அ

குறித்த கோவிலுக்குத் தொழும்பாளராகிய கனகசுந்தரப் பெருமாள் கோயிற் பராபரிப்புக்காரர், கங்காணம், அடப்பன், தானத்தார், வரிப்பத்தார், சங்கமம், குருநாடு, சிந்துநாடு. கட்டுக்குளப்பகுதி முதலிய பரிசாரர்களாகிய இவர்கள் குறித்த கோண நாதேஸ்வர சுவாமி கோயிலுக்கும், இருபாகை முதன்மையாகிய .......... பின் சந்ததியாருக்கும் குறித்த வேதம், ஆகமம், புராணப் பிரகாரமும் கோயிலின் கல்வெட்டுப் பிரகாரமும், வழமைப் பிரகாரமும் அவர்கள் செய்ய வேண்டிய கடமைகளை அவர்களைக் கொண்டு விதிப்படியும் முறைப்படியும் செய்விக்க.

2. தோம்பு – ஆ

குறித்த கோணநாதேஸ்வர சுவாமி கோவிலினதும், கங்குவேலிச் சிவன் கோவிலினதும், வெருகல் சித்திர வேலாயுத சுவாமி கோயிலினதும், கந்தளாய்ப் பிள்ளையார் கோவிலினதும் பாவிப்புக்காகவுள்ள சகல அசைவற்ற ஆதனங்களையும் .... குத்தகை கொடுக்கவும். குத்தகைப் பணங்களை அறவிடவும். பற்றுச் சீட்டுக் கொடுக்கவும். அந்தந்தக் கோவில்களின் வருமானங்களிலிருந்து அந்த(ந்த்)க் கோவில்களின் பூசைகள், ஆடி அமாவாசைத் தீர்த்தங்கள், கிராம சாந்திகள், வேள்விகள் இன்னும் அநேக வேதாகாரச் சடங்குகளையும் குறித்த கோவிலின் திருப்பணிகளையும் வேதம் -ஆகமம் - புராணம் - கல்வெட்டு வழமையாகிய இவைகளுக்கு அமையச் செய்விக்கவும்......

மேற்குறித்த குறிப்புகள் தோம்பு – அ , ஆ என்பனவற்றின் அடிப்படையில் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயம், கங்குவேலி சிவன் ஆலயம், வெருகல் சித்திரவேலாயுத சுவாமி கோயில், கந்தளாய் பிள்ளையார் கோவில் என்பனவற்றில் தொழும்பாளர்கள் கடமை புரிந்தனர் என்பதனையும் அவர்களை அதிகாரம் செய்யும் உரிமையை இவ்வாவணம் எழுதப்பட்ட காலத்தில் இருபாகை முதன்மை எனும் பூசகர் கொண்டிருந்தார் என்பதனையும் புரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

முன்னம் குளக்கோட்டு மன்னன் வகுந்த திட்டங்களுக்கு இணங்க ஆலய பரிபாலனம் தொழும்பாளர் மேலாண்மை என்பன சிற்றரசர்களாக இருந்த வன்னிபங்களின் கீழ் இருந்தது. அவர்களது அதிகாரம் வழக்கொழிந்து போன பிற்பாடு நிலமை தலமை எனும் பதவிப்பெயரில் செயற்பட்டவரால் மேற்கூறிய கடமைகள் ஆற்றப்பட்டு வந்திருக்கிறது. இத்தோம்பு ஆவணம் எழுதப்பட்ட காலத்தில் நிலமை தலமையாக இருபாகை முதன்மை (பூசகர்) அவர்களும், 1945 ஆம் ஆண்டுக்குரிய ஆவணமொன்றில் கங்காணம் அவர்களும் செயற்பட்டதை அறியமுடிகிறது.

3. தோம்பு – இ

குறித்த கோவில்களின் தொழுப்பாளர்கள் தங்கள் தங்கள் கடமைகளைச் செய்யத் தவறினால் அவர்களை … நட்டம் அல்லது நட்டங்களை அறவிடவும், அவர்களைக் கொண்டு குறித்த கருமங்களை விதிப்படி செய்விக்கவும் மன இணக்கமாய் செப்பம் பண்ணி வைக்கவும், அப்படிக் குற்றம் செய்தவர்களை நீக்கி அவர் அல்லது அவர்களின் இடத்துக்குப் பதிலாக அக்குடும்பத்திலே பதிலாளிகளைத் தெரிவு செய்து நியமிக்கவும். அவ்வண்ணம் நீக்கப்பட்டவருக்குக் கோவிலால் விடப்பட்டிருக்கும் காணிகளை அல்லது வருமானங்களை அவர்களிலிருந்து எடுத்துப் பதிலாக வைக்கப்பட்டவர்களுக்கு ஒப்புக்கொடுக்கவும்.

4. தோம்பு – ஈ

இருபாகை முதன்மையாகிய…… பின் சந்ததி அல்லது சந்தானங்களுக்கு உதவி தேவை என விரும்பிய காலங்களில் உதவிக்காக வந்திருக்கும் பூசகர், குருமார்கள், சாதகாசாரியார், அலங்கிரு தாசாரியார்,

போதகாசிரியார் முதலிய இவர்கள் இருபாகை முதன்மைக்குத் தேவையான உதவிகளைச் செப்பமாய்ச் செய்ய வேண்டும். அவ்வண்ணம் செய்யாமலிருந்தால் அல்லது குறித்த கோவிலினுடைய பத்திலெட்டுப் பங்கால் அவர்கள் பொறுப்பில் விடப்பட்ட வருமானங்கள் அல்லது பத்திலிரண்டு பங்கு ஆதனத்திலிருந்து கொடுபட்டால் இருபாகை முதன்மையாகிய ஆதனங்களைக் குறித்த தத்துவக்காரர் அவர்களிருந்தெடுத்து செய்யத் தவறினால் இருபாகை முதன்மையாகிய அவர்களுடைய மூன்றில் இரண்டு பங்கால் அல்லது ........................ பின் எனது பிற்சந்ததி அல்லது சந்தானத்துக்கும் பத்திலெட்டுப் பங்கு ஆதனத்திலிருந்து கொடுக்கப்பட்டால் குறித்த கோவிலுக்கும் சேரும்படி செய்ய வேண்டும்.

5. தோம்பு - உ

குறித்த கோயில்களுக்குரிய ஆதனங்களைப் பற்றிய நீர்ப்பாய்ச்சல் வட்ட விதானையிடம் இருக்குமிடாப்பில் சொந்தக்காரன் என்ற பந்தியில் முதன்மையாகிய நானே குறித்த கோயில்களின் வகைக்காக கையொப்பமிட வேண்டியிருப்பதனால் குறித்த பந்தியில் மேற்சொல்லிய அவர்களில் எவராவது ஒருவர் அல்லது இருவர் குறித்த முதன்மையின் வகைக்காக கையொப்பமிடுவதாக...

6. தோம்பு -ஊ

'மன இணக்கமாகக் குறித்த கருமங்களை நடப்பிக்கத் தவறினால் அல்லது அவர்களுக்கிடையில் ஏதும் வாக்குவாதம் வந்தால் எவராவது இறக்கச் சம்பவித்தால் அல்லது வேறெவ்வகையாகவேனும் ஒருமித்து அல்லது அவர்களிலாதிருக்கத்திலிருப்போர்.... 'அவர்களுக்குள் நான்கு பேருக்கு அல்லது மூன்று பேருக்கு அதிகாரம் கொடுத்து குறித்த கருமங்களை அல்லது அவைகளின் எப்பகுதியையேனும் செய்விக்க...... இவர்களுக்கு அதிகாரமுண்டு.....

*பகுதி ஊ வின் பல சொற்கள் விடுபட்டுள்ளன. இக்காரணத்தால் இப்பகுதியினைப் பூரணமாகப் புரிந்துகொள்வது கடினம் எனினும் இதுபோன்றதொரு ஆலயக்கடமைகள் பற்றிய கட்டளைகள் அடங்கிய வன்னிபத்தின் உயிலினை வாசித்த அனுபவத்தில் இப்பகுதி தொழும்பாளர்கள் தொடர்பில் பேசுகிறது எனப்புரிந்துகொள்ள முடிகிறது.*

திருக்கோணேச்சரத்தில் ஆலயக் கடமைகளைச் செய்வதற்காக குளக்கோட்டு மன்னனால் நியமிக்கப்பட்ட பணியாளர்கள் தொழும்பாளர் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் சந்ததி சந்ததியாக அவ்வாலயக் கடமைகளைச் செய்து வந்தனர். இதற்காக அவர்களுக்கு வயல் நிலங்கள் மானியமாக வழங்கப்பட்டிருந்தன. திருக்கோணேச்சம் போர்த்துக்கீசரினால் அழிக்கப்பட்டு தம்பலகாமத்தில் ஆலயம் உருவானபின் இந்த வழமைகள் அனைத்தும் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயத்தில் பின்பற்றப்பட்டு வந்தன. இத்தொழும்பு பற்றிய முக்கிய விடையங்கள் அனைத்தும் கோணேசர் கல்வெட்டில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

இத்தோம்பு எழுதப்பட்ட காலப்பகுதியில் தொழும்பாளர்களிடையே பிணக்கு ஏற்பட்டாலோ, இறப்புச் சம்பவித்தாலோ அல்லது ஏதாவது ஒருவகையில் அத்தொழும்பினைச் செய்யமுடியாது போனாலோ தொழும்பாளர்களுக்குள் நான்கு பேருக்கு அல்லது மூன்று பேருக்கு அதிகாரம் கொடுத்து விடுபட்ட ஆலயத் தொழும்பினை செய்விக்கும் வழமை இருந்திருப்பதை இப்பகுதி ஊகிக்கவைக்கிறது.

திருக்கோணேச்சரத்தில் குளக்கோட்டு மன்னன் உருவாக்கிய தொழும்பு முறைகளில் சில காலத்தால் மறைந்தும் பின்வந்த காலங்களில் புதிய தொழும்பு முறைகள் உருவாகிக் கலந்தும் இன்றைய நாட்களில் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயத்தில் பின்பற்றப்பட்டு வருகிறது. வரலாற்று நூல்களில் இருந்தும் வாய்மொழி வழக்காறுகளில் இருந்தும் ஆலயத் தொழும்புகளைப் பட்டியலிட்டுள்ளேன். இவை தொடர்பான மேலதிக ஆய்வுகளுக்கான தேவை அவசியமானதொன்றாகவே காணப்படுகிறது.

1. காப்புக்கட்டியார் தொழும்பு (கனகசுந்தரப் பெருமாள்)
2. வைராவியார் தொழும்பு (வரிப்பத்தார்)
3. தானத்தார் தொழும்பு (காரியப்பர்)
4. அடப்பன் தொழும்பு (ஏவி-அடப்பன்,பொன்னாலை அடப்பன், சிந்து நாட்டு அடப்பன்)

5. புலவன் தொழும்பு (சித்திர வித்தாரப் புலவன்)
6. கங்காணம் தொழும்பு
7. மறிகாரர் தொழும்பு
8. மாலைகட்டித் தொழும்பு
9. இராசமேளம் அடிக்கும் தொழும்பு
10. பண்டாரியார் தொழும்பு
11. பண்டார வண்ணான் தொழும்பு
12. மண்ணுடையான் தொழும்பு (குயவன்தொழும்பு)
13. நாவிதன் தொழும்பு
14. மூப்பன் தொழும்பு
15. ஆசாரியார் தொழும்பு
16. குடும்பன் தொழும்பு
17. ஆசாரி தொழும்பு
18. திருக்குளத்துக் கட்டாடியார் தொழும்பு
19. சுற்றுப்பலி தொழும்பு
20. பாட்டுவாழியார் தொழும்பு
21. தேவஸ்தானக் காவலர் தொழும்பு
22. மாணிக்கம் தொழும்பு (தேவரடியார்)

7. தோம்பு— எ

குறித்த கோவில்களினூடாக இருப்பு வீடுகள் கட்டி, அந்தந்தக் கோவில்களின் சகல வருமானங்களையும் நோட்டு, சீட்டு மற்றும் அந்தக் கோவில்களுக்குரிய சாதனங்கள், உறுதிகளையும் அந்தந்தக் கோவில் இருப்பு வீட்டினிடமாக வைக்க வேண்டியது. குறித்த இருப்பு வீடுகளுக்குள்ள இரண்டு துறப்புக்களில் ஒன்று இருபாகை முதன் மையாகிய என்னிடமும் மற்றது.... ஒருமித்து நியமிக்குமொருவரிடமும் இருக்க வேண்டியது. குறித்த கோவில்களில் நேர்த்திக்கடனுக்காக வரும் ஆடு,மாடு,கோழி முதலியவைகளை இன்னும் வேறு சாமான்களையும் ஒருங்கு சேர்த்து அவைகளில் கோவிலுக்குத் தேவையானவற்றை வைத்துக் கொண்டு மிகுதியை விற்றுக் கோவிலுக்கு வேண்டியவற்றைச் செலவு செய்து மிகுதியை இருப்பு வீட்டில் பத்திரப்படுத்தி வைத்தல் வேண்டும்.

8. தோம்பு – ஏ

குறித்த கோவில்களுக்குரிய நகைகள், பட்டு வக்ஷ்திரங்கள், திருவாசி முதலிய சகலமும் மற்றும் தட்டுமுட்டுச் சாமான்கள் சகலமும் கோவிலின் இருப்பு வீட்டில் இருக்கும் படி செய்ய வேண்டும்.

தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலய ஆவணங்கள், உறுதிகள், நகைகள், பட்டு வஸ்திரங்கள், கோயில் பொருட்கள், நேர்த்திக் கடன் பொருட்கள் என்பவற்றைச் சேகரித்து பாதுகாத்து வைக்கும் இருப்பு வீடு ஒன்று இருந்தது பற்றி வாய்மொழித் தகவல்களை அண்மையில் திரட்டக்கூடியதாக இருந்தது.

ஆலயத்துக்குச் சொந்தமான இருப்பு வீடு தற்போது தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலை அமைந்திருக்கும் பகுதியின் மேற்குப்பக்கமாக வயலுக்குள் நீண்டிருக்கும் சிறிய நிலப்பரப்பில் முன்னம் அமைந்திருக்கிறது. பின்னர் சிலரால் அவ்வீடும் அங்கிருந்த ஆவணங்களும் ஏதோவொரு காரணங்களுக்காக அழிக்கப்படதாக வாய்மொழியான தகவல்கள் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது. பிற்பட்ட காலங்களில் இருப்பு வீடு இருந்த பகுதி சூட்டுக்களமாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

தோம்புப் பதிவு எழுதப்பட்ட காலத்தில் ஏறத்தாழ 6600 ஏக்கர் நெல்வயல் நிலமும் 181 தர 215 பாகம் பரப்புடைய தென்னந்தோட்டமும் ஆலயத்துக்குச் சொந்தமாக இருந்தது ஆனால் தற்போதைய நிலையில் சுமார் ஏறத்தாழ 300 ஏக்கர் நெல்வயல் நிலமும் மிக குறைந்தளவிலான தென்னந்தோட்ட காணிகளுமே இவ்வாலயத்திற்குச் சொந்தமாக எஞ்சி இருக்கிறது. ஆலயத்தின் சொத்துக்களின் ஆவணக்-களஞ்சியமாக இருந்த இருப்பு வீடு எரிக்கப்பட்டது எமது மூத்த தலைமுறை எமக்கிழைத்த மிகப்பெரிய கொடுஞ்செயலாகும்.

௯. தோம்பு— ஐ

குறித்த கோவில்களின் வருமானங்களைப் பற்றிய வரவு, செலவுக் கணக்குகளை வெளிப்படுத்தும்படி கேட்கும் காலம் இவர்கள் அக்கணக்குகளை வெளிப்படுத்தவும் கணக்குக் கொடுக்கவும் இருபாகை முதன்மையாகிய ………………… சந்ததி அல்லது சந்தானத்துக்கும் பாத்திரவாளிகளாயிருத்தல் வேண்டும்.

ஊசாத்துணை:

(1) வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல், பக்கம் *38*, இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், *2000*

(2) திருக்கோணாசல வைபவம், பக்கம்*57*, திருகோணமலை ஸ்ரீமான் வே.அகிலேசபிள்ளை,*1999*

(3) மேலது பக்கம் *51*

(4) மேலது பக்கம் *59*

(5) பொன்னார் வன்னிச்சியார் என்பவர் பனங்காமம் வன்னிபத்தின் பரம்பரையைச் சேர்ந்தவர். இவருடைய பேரக்குழந்தைகள் முல்லைத்தீவு தண்ணீர் ஊற்று கணுக்கேணியில் தற்போதும் வசித்து வருகிறார்கள். இங்கு வன்னிச்சியார் தெரு என்ற பெயரில் வீதி ஒன்று இருக்கிறது. அடங்காப்பற்று (வன்னி) வரலாறு பாகம் *3* – அருணா செல்லத்துரை, பக்கம் *35*

(6) திருக்கோனாசல வைபவம், பக்கம் *41*, ஸ்ரீமான் வே. அகிலோசப்பிள்ளை, *1999*

# தாயூர் தம்பலகாமம்
# (இறப்புத் தொடர்பான கள்ளிமேட்டுக் கல்வெட்டு)

சில செய்திகள் என்றும் அழியாமல் இருக்கவேண்டும் என பண்டைய மக்கள் விரும்பினார்கள். அதனால், அவற்றைப் பல பொருட்கள் மீது எழுதி வைத்தார்கள். அவற்றில் கல்லும் ஒன்று. அவ்வாறு நீண்ட காலம் அழியாதிருக்க வேண்டும் என கல்லில் பொறிக்கப்பட்ட செய்தியே கல்வெட்டு எனப்படுகின்றது. கல்வெட்டுக்கள் பல ஆயிரம் ஆண்டுகள் நிலைத்திருக்கக் கூடியவை என்பதனால், மிகப் பழங்கால வரலாற்றுச் செய்திகள் மற்றும் நிகழ்வுகளுக்கான நம்பகரமான சான்றாதாரங்களாக அவை திகழ்கின்றன.

கல்வெட்டுச் செய்திகள் முதலில் ஓலையில் எழுதப்பட்டிருக்கும் பின்னர் அதனை எழுதவேண்டிய கல்லின் மீது ஓவியம்போல் வரைவார்கள். இதனைத்தொடர்ந்து அதன்மீது கூர்மையான உளி போன்ற கருவியால் வெட்டுவார்கள். வெட்டிய எழுத்துகள் கல்லில் சிறிது பள்ளமாகத் தோன்றும். இவை கல்லில் வெட்டப்பட்ட எழுத்துக்கள் என்பதனால் கல்வெட்டுகள் என்றழைக்கப்படுகின்றன. கல்வெட்டைச் சிலாசனம் (சிலை + சாசனம் = சிலாசனம்) எனவும் கூறுவர். இங்கு சிலை என்ற சொல்

கல்லைக் குறிப்பதாயும், சாசனம் என்ற சொல் அறிவிக்கும் செய்தி அல்லது உத்தரவு எனப்பொருள்படுவதாயும் அமைந்திருக்கும்.

கல்வெட்டுக்கள் பெரும்பாலும் பொதுமக்கள் பார்ப்பதற்காக வெட்டப்படுவதால் கோயில்கள், பொது மண்டபங்கள் போன்ற இடங்களில் வெற்றித்தூண்கள், நடுகற்கள், தானசாசனங் களாகக் காணப்படுகின்றன. குகைகளில் தங்கியிருந்த துறவி களுக்கு அரசர்களும், வணிகர்களும் அளித்த தானம் பற்றிய செய்திகளைத் தெரிவிக்கும் குகைக்கல்வெட்டுக்களும் உண்டு.

உலகில் இன்றுவரை கிடைக்கப்பெற்ற கல்வெட்டுகளில் அதிகமான கல்வெட்டுகளைக் கொண்ட மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையில் திருகோணமலையில் பெரும்தொகையான தமிழ்ச் சாசனங்கள் இதுவரை கிடைத்துள்ளன. இதுவரை கிடைத்தவை போல் பலமடங்குச் சாசனங்கள் இன்னும் கண்டறியப்படாமல் இருப்பது பற்றிய தகவல்கள் அண்மைக்கால ஆய்வுகள் மூலம் தெரியவருகிறது.


பண்டைய காலத்தினைப்போலவே 20 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நவீன யுக மக்களும் சில முக்கிய செய்திகளைப் பதிவு செய்ய கல்வெட்டுக்களைப் பயன்படுத்தி இருக்கிறார்கள் என்பதனை ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் சில அண்மையில் திருகோணமலையில் காணக்கிடைத்தன. அவற்றில் ஒன்று மூதூரில் உள்ள பட்டித்திடல் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தியத்தின் வாசலில் உள்ள கற்தூண். அது 21.09.1976 ஆம் ஆண்டு இடம்பெற்ற அவ்வாலய கும்பாவிஷேக நிகழ்வினைப் பதிவு செய்திருக்கிறது. கடுமையான யுத்தம், பலமுறை இடம்பெற்ற இடப்பெயர்வுகள் என்பனவற்றை யெல்லாம் கடந்து 1976 ஆம் ஆண்டு கும்பாவிஷேகச் செய்தி இக்கல்வெட்டு மூலம் இன்றும் நமக்குக் அறியக்கிடைக்கிறது.

இக்கல்வெட்டினைப் பார்வையிட்ட பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் 1976 காலப்பகுதியில் வாழ்ந்த மூதூர் பட்டித்திடல் மக்கள் தங்கள் ஆலய நிகழ்வுகளைப் பண்டைய நாட்களைப்

போல கல்வெட்டுக்களாகப் பொறிக்கும் ஆர்வம் கொண்டிருந்தார்கள் என்பதனை இதன் மூலம் அறியக்-கூடியதாக உள்ளது என்றார். நவீனயுகக் கல்வெட்டுக்கள் தொடர்பான ஆர்வம் மிகுந்திருந்த காலப்பகுதியிலேயே கள்ளிமேட்டுக் கல்வெட்டு தொடர்பான தகவல் கிடைத்தது. “தம்பலகாமம் கள்ளிமேட்டில் ஒரு கல்வெட்டு இருப்பதாக தகவல் கிடைத்தது உடனே வா” என்ற அப்பாவின் பரபரப்பான அழைப்பு திருகோணமலை நகரில் இருந்து என்னை அவசரமாக பயணிக்க வைத்தது.

எனது தந்தை கலாபூசணம்.வே.தங்கராசா, அவருக்கு கல்வெட்டுப் பற்றிய தகவல் தந்திருந்த வயலூர்ப் புலவன் எனும் புனைப்பெயருடைய கவிஞர் திரு.மா.புவேந்திரராசா ஆகியோருடன் கள்ளிமேடு நோக்கிப் பயணித்தேன். கள்ளிமேடு ஒரு சிற்றூர். தம்பலகாமத்தின் புகழ்பூத்த பல கலைஞர்களும், அண்ணாவிமார்களும், சுதேச வைத்திர்களும் கள்ளிமேட்டினைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். பண்டைய நாட்களில் கள்ளிமேட்டிலுள்ள வேள்வி வளாகத்தில் வருடந்தோறும் கண்ணகியம்மன் விழா மிகச்சிறப்பாக நடைபெற்றிருக்கிறது. கண்ணகி கோவலன் விழாவாக நடைபெறும் இவ்வேள்வி தம்பலகாமம் ஆதிகோணநாயகர் வெளிச்சுற்று வழிபாடுகளில் முக்கியம் பெற்ற ஒன்றாகவும் இருந்தது.

நாங்கள் தேடிச் சென்ற கல்வெட்டு கள்ளிமேட்டு வேள்வி வளாகத்திலிருந்து சிறிது தூரத்திலுள்ள வீட்டின் வளவொன்றில் காணக்கிடைத்தது. வீட்டின் தற்போதைய உரிமையாளரான பெண்மணி அதனை “ஐய்யனார் சுவாமி கல்” என அடையாளப்படுத்தினார். அவர் கூறியது போல் கல்லின் அடிப்பாகத்தில் சில எழுத்துக்கள் தென்பட்டாலும் கல்லின் ஏனைய பகுதிகளனைத்தும் சேற்றுமண் நிறைந்து காணப்பட்டது. கல்லினை நன்றாக நீரூற்றி தென்னந்தும்பினால் தேய்த்துக் கழுவியபோது எழுத்துக்கள் துல்லியமாகத் தெரியத் தொடங்கின. அருகில் இருந்த கடையில் கோதுமைமா வாங்கி கல்லின் மேல் பூசிய பின்னர் எளிதில் யாவரும் வாசிக்கும் மக்கள் தங்கள் ஆலய நிகழ்வுகளைப் பண்டைய



கந்தப்பர் கணபதிப்பிள்ளை அவர்களின் இறப்புத்
தொடர்பான கல்வெட்டு - கள்ளிமேடு, தம்பலகாமம்




இறப்புத் தொடர்பான கள்ளிமேட்டுக் கல்வெட்டு



வண்ணம் எழுத்துக்கள் வெளிப்பட்டன. கல்லின் மேற்பகுதி பரவளைவானது. கல் 50Cm உயரமும், 40Cm அகலமும் உடையது. கல்லின் நிலத்தில் நிறுத்தப்பட்ட அடிப்பகுதி நிலத்திற்கு மேல் 20Cm உயரமுடையது. அது ஒரு இறப்புத் தொடர்பான கல்வெட்டு. அதில் எழுதப்பட்டிருந்த வாசகங்கள் வருமாறு:

1. நள வருடம் தை.மீ.உ.(ங) - (பரவளைவாக எழுதப்பட்டது)
2. காராள குல
3. கந்தப்பர் மகன்
4. கணபதிப்பி(ள்ளை)
5. தேகவியோகம்
6. தம். கள்ளிமேடு
7. மகன்
8. க.ஐயாத்துரை

இக்கல்வெட்டு கந்தப்பர் கணபதிப்பிள்ளை அவர்களின் இறப்பினைப் பதிவு செய்கிறது. குறித்த நபர் பற்றிய தகவல்கள் தற்போதைய குடியிருப்பாளருக்கு தெரியாத போதும் இக்கல்லினை வீட்டின் முன்னைய உரிமையாளரான திரு.கந்தையா கிருபானந்தன் அவர்கள் வணங்கிச் செல்வதாக ஒரு முக்கிய தகவலினைத் தந்தார் அவர். திருகோணமலையில் தற்போது வசித்துவரும் இளைப்பாறிய கிராமசேவையாளரும், சிற்பக்கலைஞரும், நாடக நடிகருமான திரு.க. கிருபானந்தன் அவர்களைத் தொடர்பு கொண்டு இந்த நடுகல் அவரது பரம்பரைக்குச் சொந்தமானது என்பதனை உறுதிசெய்ய முடிந்தது. எனினும் மேலும் விபரங்களைத் தெரிந்து கொள்ள வைராவியார் குடும்பத்தைச் சேர்ந்த திரு.தெய்வேந்திரம் துரைநாயகம் அவர்களை எனது தந்தையின் உதவியுடன் அணுகினேன்.

அவர் தந்த தகவல்களின் அடிப்படையில் திரு.க. கிருபானந்தன் அவர்களின் தந்தையின் பெயர் கந்தையா விதானையார். கந்தையா விதானையாரின் தந்தை ஐயாத்துரை. ஐயாத்துரை அவர்களின் தந்தை கணபதிப்பிள்ளை. கணபதிப்பிள்ளை அவர்களின் தந்தை கந்தப்பர். இவ்வாறாக நடுகல்லில்

குறிக்கப்பட்ட அமரர் கந்தப்பர் கணபதிப்பிள்ளை அவர்களை இனங்காண முடிந்தது.

கந்தப்பர் கணபதிப்பிள்ளை அவர்களின் காலம் கி.பி 1860 முதல் 1920 வரை இருக்கலாமென பலரது வாய்மொழித் தரவுகள் மூலம் அனுமானிக்க முடிந்தது. அதாவது இற்றைக்கு சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னர் கள்ளிமேட்டில் கணபதிப்பிள்ளை அவர்கள் வாழ்ந்திருக்கின்றார். விதானையாளராகக் கடமையாற்றிய அவர் கல்வியறிவில் சிறந்து விளங்கியவராக இருந்ததை அறியமுடிகின்றது. அவரிடம் நிகண்டு முதலான பல அரிய ஓலைச்சுவடிகள் இருந்ததாகச் சொல்கின்றார்கள். அவரது மரணம் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அண்ணளவாக 1910 அல்லது 1920 காலப்பகுதியில் நிகழ்ந்திருக்கிறது. எனவே இறப்புத் தொடர்பான இக்கல்வெட்டு இன்றைக்குச் சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் நிறுவப்பட்டிருக்க வேண்டும் என்பதனை உறுதிப்படுத்த முடிகிறது.

கணபதிப்பிள்ளை அமரத்துவம் அடைந்தபோது அவரது நினைவாக ஐயாத்துரை அவர்களால் உருவாக்கப்பட்ட இக்கல்வெட்டு ஊருக்கு வெளியே இருக்கும் ஐயனார் தீவில் அவர்களுக்குச் சொந்தமான காணியில் நிறுவப் பட்டிருக்கின்றது. பின்னர் திரு.கிருபானந்தன் அவர்களின் தந்தையாரினால் மாட்டுவண்டியின் உதவியுடன் இக்கல்வெட்டு கள்ளிமேட்டிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இறப்புத் தொடர்பான இக்கல்வெட்டு அமரர் கணபதிப்பிள்ளை தொடர்பான விபரங்களைத் தருவதோடு சில வரலாற்றுச் செய்திகளையும் நமக்கு அறியத்தருவதாக இருக்கிறது. இந்த அடிப்படைகளின் கீழ் தம்பலகாமம் கள்ளிமேட்டு கல்வெட்டுச் சொல்லும் வரலாற்றினை சற்று விரிவாகப் பார்ப்பது அவசியமாகிறது.

கல்வெட்டின் மேற்பகுதிக்கு ஏற்றவாறு முதல்வரி பரவளைவாக எழுதப்பட்டுள்ளது. அது கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் நபர் இறந்த தினத்தினைப் பதிவு செய்கின்றது. நளவருடம். தை.மீ.உ(ங) என்ற முதல்வரி குறிப்பில், நள வருடம் ஆண்டைக்

குறிக்கின்றது. இந்துக்களின் ஆண்டுமுறையில் 60 வருடங்கள் ஒரு வட்டமாகக் கருதப்படுகின்றது. அதில் வரும் 50வது வருடம் நள வருடமாகும். சித்திரை முதல் நாளை புதிய ஆண்டின் தொடக்கமாகக் கொண்ட இந்த ஆண்டுமுறைப்படி நள வருடம் 60 ஆண்டுகளுக்கு ஒரு முறை வரும்.

ஆங்கில வருட முறைப்படி இனி நளவருடம் (2036 - 2037) ஆம் ஆண்டில் வரும். எனவே நளவருடம் இதற்கு முன்பாக 1976-1977, 1916-1917, 1856-1857 என்ற ஒழுங்கில் வந்திருக்கும். ஏலவே நாம் பார்த்திருந்தபடி இறந்தவரின் குடும்ப வரலாற்றினை அடிப்படையாகக் கொண்டு இக்கல்வெட்டு இன்றைக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் எழுதப்பட்டிருக்கலாம் எனக் கணித்திருந்தோம். அந்த அடிப்படையில் இங்கு குறிப்பி டப்படும் நளவருடம் 1916 - 1917 ஆண்டுக்குரியது என்பதனை உறுதி செய்யலாம். அடுத்துவரும் சொற்களான தை.மீ.உ(ங) என்பது இந்துக்களின் ஆண்டு முறைப்படி எழுதப்பட்டிருந்தால் நள வருடம் தை மாதம் 23 ஆம் திகதியாக ( உ- 2, ங - 3 தமிழ் எண் முறைப்படி) இருக்கும்.

நடுகல்லின் இரண்டாவது வரி இறந்தவரின் குலத்தினைச் சாதிரீதியாகக் குறிப்பிடுகிறது. “காராளர் குல” என்ற சொற்றொடரில் காராளர் எனக்குறிக்கப்படுவது சாதீய அமைப்பில் வேளாண்மைத் தொழில் செய்து வந்தவர்களைக் குறிக்கும் பெயராகும். காராளர் என்பதன் நேர்ப்பொருள் மேகத்தை அல்லது மழையை ஆள்பவர் என்பதே. காராளர் என்பது வேளாளர்களைக் குறிக்கும் பொதுப்பெயராகப் பயன்படுத்தப்பட்டாலும் தம்மைக் கார்காத்த வேளாளர் எனக் குறிப்பிட்டுக் கொள்ளும் பகுதியினரைக் குறிப்பதற்கு சிறப்-பாகப் பயன்படுத்தப்படுகின்றது.

அடுத்துவரும் மூன்றாவது, நான்காவது வாசகங்கள் இறந்தவரின் விபரத்தினைத் தருகின்றது. கந்தப்பர், மகன். கணபதிப்பி(ள்ளை) என்ற சொற்றொடர் இறந்தவர் கந்தப்பர் கணபதிப்பிள்ளை என்பதனைக் குறிக்கின்றது. இங்கு இறந்தவரான கணபதிப்பிள்ளையின் பெயரில் “கணபதிப்பி” என்ற பகுதி தெளிவாகத் தெரிகிறது. இலங்கையில்

கிடைக்கப்பெற்ற இறப்புத் தொடர்பான கல்வெட்டுக்களில் பிள்ளை என்ற சொல் இறுதிப்பெயராக வருமிடத்து அதனைச் சுருக்கி பி என்ற எழுத்தினை மட்டும் எழுதும் வழமை காணப்படுகிறது. யாழ்ப்பாணம் சங்கிலித் தோப்பிலே காணப்படும் மரணம் தொடர்பிலான கல்வெட்டுக்களை இதற்குதாரணமாகக் கொள்ளலாம். இங்கு பொறிக்கப் பட்டிருக்கும் தம்பையா பி(ள்ளை), சின்னாச்சிப் பி(ள்ளை), சிவப்பிரகாச பி(ள்ளை) ஆகியோரின் பெயர்கள் மேற்கண்டவாறே குறிக்கப்பட்டிருப்பதைக் கருத்தில் கொள்ள-லாம்.[1]

இக்கல்வெட்டில் எழுதப்பட்டுள்ள ஐந்தாவது வாசகம் "தேகவியோகம்" என்பதாகும். இது அவரது இறப்புச் செய்தி யினைச் சொல்கிறது. "உடலில் இருந்து உயிர் நீங்கிச் செல்லுதல்" என்பதற்குரிய வடமொழிச்சொல் இதுவாகும். அந்நாட்களில் இப்பிரதேச எழுத்து வழக்கில் வடமொழி கொண் டிருந்த செல்வாக்கினை இது உணர்த்துவதாக இருக்கிறது. பரமபதம் அடைதல், தெய்வீகமடைதல், மரணமடைதல், தேகாந்தம் என்பன இந்நடுகல் எழுதப்பட்ட சமகாலத்தில் இலங்கைச் சாசன வழக்கில் இறப்பைக் குறிக்கப் பயன்படு-த்தப்பட்ட செற்களாகும்.

அதனைத் தொடர்ந்து வரும் ஆறாவது வாசகமான ''தம்.கள்ளிமேடு'' இறப்பு இடம்பெற்ற இடத்தினைக் குறிக்கின்றது. தம்பலகாமத்தைச் சேர்ந்த கள்ளிமேடு என்பதனையே இது சுருக்கமாகச் சொல்கின்றது. இதன் மூலம் தம்பலகாமத்தில் இருந்த சிற்றூர்களை அடையாளப்படுத்தும் போது "தம்" என்று அவற்றின் தாயூரான தம்பலகாமத்தை குறிக்கும் வழமை அக்காலத்தில் இருந்ததை இது உறுதிப்படுத்துகிறது.

இக்கல்வெட்டு பொறிக்கப்பட்ட காலப்பகுதியில் எழுதப்பட்ட வீடு, வயல், காணி உறுதிகளிலும், நீதிமன்ற வழக்குகள் தொடர்பான தமிழ் ஆவணங்களிலும் "திரு.தம்.கந்தளாய், திரு.தம்.கிண்ணியா, திரு.தம்.ஆலங்கேணி'' போன்ற சொற்றொடர்களைக் காணலாம். அத்துடன் இன்று

வழக்கொழிந்து போய்விட்ட "புறோநோட்டு" என்றழைக்கப் பட்ட கடன் பத்திரங்களிலும் இவ்வகையிலேயே தம்பலகாமப்பற்றின் கீழிருந்த சிற்றூர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டன.

இங்கு திரு.தம்.ஆலங்கேணி என்பது திருகோணமலையைச் சேர்ந்த தம்பலகாமத்திலுள்ள ஆலங்கேணி எனும் ஊர் எனப் பொருள்படும். "தம் கள்ளிமேடு" என்ற பதம் இன்னொரு முக்கிய விடயத்தையும் சுட்டி நிற்கிறது. அதாவது இன்றைய நாட்களில் கல்வி மேடு என்று சிலர் குறிக்க முற்படும் இப்பிரதேசம் சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் "கள்ளி" மேடு என்றே வழங்கப்பட்டிருக்கிறது என்பதனை இக்கல்வெட்டு ஆவணப்படுத்துகிறது.

இறுதியாக இக்கல்வெட்டினைப் பொறிக்கச் செய்தவர் பற்றிய தகவல் ஏழாம், எட்டாம் வரிகளில் இடம்பெற்றுள்ளது. அவர் இறந்தவரின் மகன். அவரது பெயர் க.ஐயாத்துரை என்பதாகும். தமிழ் இலக்கியத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டவராக அறியப்படும் ஐயாத்துரை அவர்களுக்குச் சொந்தமான திருமுருகாற்றுப்படை முதலான ஓலைச்சுவடிகளை இன்றும் காணக்கூடியதாக இருக்கிறது. ஐயாத்துரை அவர்களுக்கு தன் தந்தையின் இறப்புத் தொடர்பான கல்வெட்டு நாட்ட வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுவதற்கு அவரது பரந்த இலக்கிய அறிவு காரணமாக இருந்தது என ஊகிக்கலாம். அவர் தன் தந்தைக்கு எடுத்த இக்கல்வெட்டு மூலம் சுமார் நூறுவருடங்களுக்கு முந்திய சில வரலாற்றுப் பதிவுகளை நமக்காக விட்டுச்சென்றுள்ளார்.

அடிக்குறிப்பு

(1) இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் 2 தொகுப்பாசிரியர்
பேராசிரியர் சி. பத்மநாதன்,
கட்டுரை - சங்கிலித் தோப்புக் கல்வெட்டுக்கள் - பக்கம் 543
கலாநிதி சி.செல்வரஞ்சிதம்
சிரேஷ்ட விரிவுரையாளர்
தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## தம்பலகமுவ (Thambalagamuwa )

சில தசாப்தங்களுக்கு முன்னர் இருந்து தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவு தம்பலகமுவ என நிர்வாகரீதியாக அழைக்கப்பட்டு வருகிறது. அரச நடைமுறைகளில், ஆவணங்களில் தம்பலகமுவ என்ற பதமே இப்பிரதேச செயலாளர் பிரிவினைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது என்பது கவனத்திற்கொள்ளத்தக்கது.

கிராமம் என்பதற்கு சமமான சிங்கள மொழிச் சொற்கள் கம, கமுவ என்பனவாகும். எனவே தம்பலகாமம் என்ற ஊர்ப்பெயரினை சிங்களத்தில் தம்பலகம, தம்பலகமுவ என இரு முறைகளில் அழைக்கலாம். இலங்கையில் உள்ள சப்பிரகமுவ, அம்பகமுவ, கெசல்கமுவ, கொடிகமுவ, வஸ்கமுவ போன்ற இடப்பெயர்களைப்போல (Thambalagamuwa) தம்பலகமுவ அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் காணப்பட்ட கத்தோலிக்க திருச்சபை பற்றிய வருடாந்த அறிக்கைகள் அடங்கிய நூல்களில் தம்பலகாமம்




Tamalagama, Tamballagama[1] எனப் பதிவு செய்யப்பட்டிருப்பதை காணக் கூடியதாக இருக்கிறது. இக்காலப்பகுதியில் தம்பலகாமம் பிரதேசம் கண்டி அரசின் செல்வாக்குக்கு உட்பட்ட பிரதேசமாக இருந்தமை கவனத்தில் கொள்ளத்தக்கது.

*1921ஆம் ஆண்டு காலப்பகுதியில் தம்பலகாமம் பிரதேச மொத்த சனத்தொகையில் 0.3 வீதமாக சிங்கள மக்கள் வாழ்ந்தார்கள் என்பதனையும் அச்சனத்தொகையானது 1981 ஆம் ஆண்டில் 31.5 வீதமாக அதிகரித்துள்ளது என்பதனையும் அக்காலப்பகுதியில் தம்பலகம என்ற பெயரே பயன்பாட்டில் இருந்தது என்பதனையும்* Trincomalee an integrated development perspective *என்ற ஆவணம் உறுதிப்படுத்துகிறது.*[2]

*இதன்பின்னர் இப்பெயர் பயன்பாட்டில் இருந்து மறைந்து தம்பலகமுவ என்ற இடப்பெயர் வடிவம் தோற்றம் பெற்றிருக்கின்றது. இம்மாற்றத்திற்கு இலங்கையில் தம்(ba)பலகம (*Tambalagama*) என்றொரு பிறிதொரு பிரதேசம் இருப்பது காரணமாக இருக்கலாம்.*

இலங்கையில் தம்(ba)பலகம (Tambalagama) என்று அழைக்கப்படும் இடம் அம்பாந்தோட்டைக்கு அருகில் இருக்கிறது. சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் எனது தந்தைக்குச் சேரவேண்டிய அலுவலக கடிதம் ஒன்று

தவறுதலாக தென்னிலங்கைக்கு அனுப்பப்பட்டு மீண்டும் திரும்பி வந்திருந்தது. இதன்போதே இந்த ஊரைப்பற்றி அறியக்கிடைத்தது.

வரலாற்றுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டது இந்த ஊர். இலங்கையில் சோழர் ஆட்சியினை முடிவுக்கு கொண்டுவந்த முதலாம் விஜயபாகு (கி.பி 1055 - 1110) சோழருக்கு எதிராக செயற்பட்ட காலங்களில் கதிர்காமத்தில் இருந்த தனது நடவடிக்கைகளை தம்(ba)பலகம (Tambalagama) மாற்றியிருந்தான் என்பது குறிப்பிடத்தக்கது. தம்பலகாமம் தம்(ba)பலகம (Tambalagama) என்பனவற்றுக்கிடையிலான பெயரொற்றுமை காரணமாக தம்பலகாமத்தின் புராதன பெயர் தம்(ba)பலகம (Tambalagama) என்று சில வரலாற்று நூல்களில் தவறாகக் குறிப்பிடப்பட்டிருப்பதையும் நாம் காணலாம்.

தம்பலகமுவ (Thambalagamuwa)[3] என்ற பெயர் மாற்றம் உத்தியோகபூர்வமானதா? அப்படியாயின் எப்போது இம்மாற்றம் இடம்பெற்றது என்பது தொடர்பில் தகவல்களை திரட்டுவது கடினமான பணியாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கையில் நடந்த, நடக்கிற போர்களும், அரசியல் பிரச்சனைகளும் இயற்கை வளம் நிறைந்த இந்தத் தீவு யாருக்குச் சொந்தமானது என்ற கேள்விக்கு இருவேறு வழிகளில் விடைகான முயலும் முயற்சி என்றே கொள்ளலாம்[4] எனவே இவ்விடப்பெயர் மாற்றத்துக்கான காரணமும் அந்த அடிப்படையிலானதே எனக்கொள்ளலாம்.

இலங்கையில் வாழும் பல்வேறு சமூகங்களுக்கு இடையிலான நல்லிணக்கம், இனங்களுக்கு இடையிலான சகவாழ்வு, புரிந்துணர்வு என்பன தொடர்பில் முறையான நீண்டகால நோக்கிலான திட்டங்கள் இதய சுத்தியுடன் முன்னெடுக்கப்படாதவரை இந்நாட்டில் வன்முறையும், குழப்பங்களும் தொடர்ந்த வண்ணமே இருக்கும். அவ்வாறான நாடொன்றில் இடப்பெயர்களும் அரசியல் மயப்பட்டதே என்பதற்கு இந்த பிரதேசத்தின் பெயர் நல்லதொரு உதாரணமாகிறது.

அடிக்குறிப்பு:

*(1)* The Catholic Church in Sri Lanka
The Dutch period Volume 1 (1658 - 1711 ) V.PERNIOLA page 297

The Catholic Church in Sri Lanka
The Dutch period Volume 2 (1712 - 1746 ) V.PERNIOLA page 306

*(2)* TRINCOMALEE an integrated development perspective (A report compiled by the NATIONAL AQUATIC RESOURCES AGENCY ) June 1986 Page 19

*(3)* Mahavamsa converts Thampalakamam into Thambalagamuwa - Story since independence : A model for the North?
University Teachers Human Rights (Jaffna)
Information Bulletin No. 16
Date of Release : 5th February 1998

*(4)* "போர் என்பது வேறுவழிகளில் முன்னெடுக்கப்படும் அரசியல்" ("War is an extension of politics by other means")

**இயல் 6 ஊர்ப்பெயர் ஆய்வு**

## தம்பலகாமம் ஊர்ப்பெயர் ஆய்வு

ஊரின் பெயர் தம்பலகாமமா? தம்பலகமமா? என்ற கேள்வி எழுந்த நாளில் இருந்து இடப்பெயர்கள் மேல் அதீத ஈர்ப்பு ஏற்பட்டிருந்தது. நாள்தோறும் காணக்கிடைக்கும் இடப்பெயர்களின் பின்னால் எல்லாம் மனம் ஓடிக்கொண்டிருந்தது. சந்திக்கும் ஒவ்வொரு இடப்பெயரும் அதற்கே உரித்தான தனித்துவமான ஒரு நீண்ட சுவாரிசமான வரலாற்றைக் கொண்டிருந்தது. இடப்பெயர்கள் பற்றிய தொடர்ச்சியான தேடல் வரலாற்று எழுத்தியலில் அது கொண்டிருக்கும் முக்கியத்துவத்தினை உணர்த்துவதாக இருந்தது.

புதைபொருட்களும், கல்வெட்டுக்களும், செப்பேடுகளும், நாணயங்களும், மட்பாண்டங்களும், முதுமக்கள் தாழிகளும், இலக்கியங்களும் ஒரு நாட்டின் வரலாற்றையும், பண்பாட்டுச் செய்திகளையும் எவ்வாறு எடுத்துச் சொல்கின்றனவோ அதுபோலவே இடப்பெயர்களும் அவ்விடத்தின் வரலாற்று ஆய்வுகளுக்கு உறுதுணை செய்கின்றவையாக அமைந்திருக்கின்றன என்பதனைப் புரிந்துகொள்ள இத்தேடல் முயற்சி உதவி புரிந்தது.

மேற்குறிப்பிட்ட தொல்பொருட்கள் எல்லாம் பண்டைய நாட்களில் அறிவுசார்ந்த நிபுணர்களால் உருவாக்கப்பட்டவையாக இன்று அகழ்வாராச்சிகள் மூலம் எமக்குக் கிடைக்கின்றது. ஆனால் புராதான காலம் முதல் வழங்கப்பட்டுவரும் இடப்பெயர்கள் நுணுக்கமான அறிவின்றி சாதாரண பொதுமக்களால் படைக்கப்பட்டவையாக இருக்கின்றன. எனவேதான் மனித வாழ்வின் பொதுவான அம்சங்களை தொல்பொருட்களைவிட இடப்பெயர்கள் மிகச் சிறப்பாக உணர்த்தும் வல்லமை கொண்டவையாக இருக்கின்றன.

## இடப்பெயர்

மனித வரலாற்றின் ஆரம்ப காலப்பகுதிகளில் உருவான இடப்பெயர்களில் பல இன்றுவரை எந்தவித மாற்றமும் இல்லாமல் நிலைத்திருக்கின்றன. இவை இன்று நாமறியும் உலக நாகரிகங்கள் அனைத்தையும் விடத்தொன்மையானவை. உலகில் மிகச் சிறப்பாக விளங்கிய நாகரிகங்கள் பல இன்று அழிந்துவிட்டன ஆனால் அவை நிலவிய ஊர்ப்பெயர்கள் இன்றும் அழியாது அதே பிரதேசங்களில் இருப்பது ஆச்சரியமான உண்மை.

நாடோடிக் குழுக்களாக வாழ்ந்த ஆதிகால மக்கள் ஒரு குறித்த இடத்தில் தங்களை நிலைநிறுத்தி வாழ முற்பட்டபோது இடப்பெயர்கள் தோற்றம் பெறத் தொடங்கியது எனலாம். இடப்பெயர்கள் அடையாளப்படுத்தலின் தேவையுடன் உருவானவை. ஒரு இடத்தில் வாழ்ந்த குழுவினர் தங்களது வாழ்விடத்தினை பிறகுழுக்களுக்கு அடையாளப்படுத்தவும், இடங்களைப் பிரித்தறியும் நோக்கத்தோடும் பெயர்களைச் சூட்டினார்கள். இவ்வாறு ஆரம்ப நாட்களில் சூட்டப்பட்ட இடப்பெயர்கள் வெறும் பெயர்ச் சொல்லாக மட்டும் அமையாமல் அக்குறித்த பகுதியில் வாழ்ந்த மக்கள் கூட்டத்தினரின் பண்பாட்டிற்கு அமைவாகவும், அவ்விடத்தின் இயற்கை அமைப்பினை குறிப்பதாகவும் அமைந்திருந்தது. மானிட சமுதாய வளர்ச்சியோடு இடப்பெயர்களும் இணைந்தே வளர்ச் சியடைந்து வந்திருப்பது வரலாற்றில் நாம் காணும் சிறப்பம் சமாகும்.

நிலையாக ஓரிடத்தில் தங்கி வாழாமல் தொடர்ந்து இடம் விட்டு இடம் பெயர்ந்து நாடோடிகளாக வாழ்ந்த ஆதி மனிதர் கூட்டம் முறையான தாவர வளர்ப்பிலும், விலங்கு வளர்ப்பிலும் ஈடுபடத் தொடங்கிய போது நிரந்தரக் குடியிருப்புக்களை உருவாக்கி சிற்றூர்களை தோற்றுவித்தார்கள். இம்மக்களின் கடின உழைப்பினால் வேளாண்மையில் விருத்தி ஏற்பட்டு சிற்றூர்களை வளம்மிக்கதாக்கியது. வேளாண்மையில் கிடைத்த மேலதிக உற்பத்தி கைத்தொழில், வணிகம் என்பனவற்றை வளர்த்தெடுத்தது. இந்த வேளாண்மைப் புரட்சி பல சிற்றூர்களை இணைத்து பேரூர்கள் உருவாக வழியமைத்தது. பேரூர்களில் ஏற்பட்ட வணிகப்புரட்சி சிறுநகரங்களை தோற்றுவித்தது. சிறுநகரங்களுக்கு இடையிலான வர்த்தக, சமூகத் தொடர்புகள் மேன்பட்டதால் பல சிறுநகரங்கள் இணைந்து மாநகரங்களை உருவாக்கின.

நகர உருவாக்கத்தின் பின்னர் அங்கு வாழ்ந்த பல்லின குழுக்களிடையே சொத்துடமை வர்க்கம் முன்னிலைக்கு வந்தது. அந்தச் சொத்துடமை வர்க்கம் தன்னையும், தனது சொத்துக்களையும் பாதுகாக்கும் நோக்குடன் சிறிய நிரந்தர இராணுவத்தையும், நிர்வாக அமைப்பையும் உருவாக்கியது. இதுவே பின்னாட்களில் நகர் மைய அரசு உருவாவதற்கு வழியமைத்தது. இந்த நகர் மைய அரசின் வளர்ச்சியின் பெறுபேறாக சிற்றரசுகளும், பேரரசுகளும் தோற்றம் பெற்றன.

சிற்றூர்கள், பேரூர்கள், சிறுநகரங்கள், மாநகரங்கள், நாடுகள், இராட்சியங்கள் என்று மனிதக் குடியிருப்புகள் விரிவுபட்டு வந்த போது அந்த இடங்களைக் குறிக்க பெயர்களும் புதிது புதிதாக உருவாகி வந்தன. மக்கள் குடியிருப்புகளுக்கு மட்டுமல்லாமல் அங்கிருந்த வீதிகள், ஆறுகள், மலைகள், நதிகள், வயல் நிலங்கள், கடல், குளம், காடு என்று எல்லாவற்றிற்கும் மனிதர் களால் பெயர் சூட்டப்பட்டது.

புராதனமான இடப்யெர்கள் பெரும்பாலும் ஆதிமனிதன் இயற்கையுடன் கொண்டிருந்த மிக நெருங்கிய தொடர்புகளை வலியுறுத்துவதாக அமைந்திருந்தன. அதனால் அவை நீர்நிலை, நிலப்பண்பு, தாவரம், விலங்கு, பறவை என்பவற்றால் அடையாளப்படுத்தப்பட்டது. காலப் போக்கில் ஏற்பட்ட நாகரிக வளர்ச்சியைத் தொடர்ந்து புராண, இதிகாச, இலக்கிய, கதாபாத்திரப் பெயர்களும், கடவுளர்களின் பெயர்களும், சாதி, தொழில்முறைப் பெயர்களும், அரசர், தலைவர்கள், அதிகாரிகள் என்போர்களின் பெயர்களும் இடப்பெயரில் இணைந்து கொண்டது. இவற்றோடு வரலாற்று நிகழ்வுகள், பிறநாட்டு அரசியல் தொடர்புகள், சமய நடவடிக்கைகள், அபிவிருத்தி வேலைகள் என்பனவும் இடப்பெயர் ஆக்கத்தில் முக்கிய பங்கு வகித்தன.

போர், பஞ்சம், இயற்கையழிவு, வணிகம் போன்ற பல்வேறு காரணங்களுக்காக வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்த மக்கள் புதிய இடங்களுக்கு தமது பழைய ஊர்களின் பெயர்களை சூட்டி மகிழ்ந்தனர். இது அவர்களுக்கு உளவியல் ரீதியில் ஒரு பாதுகாப்பு உணர்வினைத் தந்ததோடு அவர்களது அடுத்த சந்ததியினருக்கு வரலாற்றை விளங்கிக் கொள்வதற்கும் உதவியது. இவ்வாறு பல்வேறு காரணங்களால் உருவான இடப்பெயர்களில் எல்லாம் மனித இனத்தின் அனுபவம் பொதிந்துள்ளது. எனவே இடப்பெயர்களும், இடப்பெயர் தொடர்பான ஆய்வுகளும் வரலாற்று எழுத்தியலில் தவிர்க்க முடியாத கூறுகளாக அமைந்துவிடுகிறது.

வரலாறு என்பது எப்பொழுதுமே அதன் தேவை உணரப்படும் பொழுதுதான் தோன்றுகின்றது. அந்த அடிப்படையில் தம்பலகமமா ? இல்லை தம்பலகாமமா? என்ற தேடலுக்காக ஆரம்பித்த இந்தப் பயணம் எனது பிரதேசத்தின் பெயர் தம்பலகமுவ என்று மாற்றப்பட்டு விட்டது என்றறிந்ததில் இருந்து புதிய உத்வேகம் பெற்றது.

உலகின் ஒவ்வொரு நிலப்பரப்பின் வரலாறும் அங்கு வலிமையுடன் நிலைபெறும் மக்கள் கூட்டத்தினரால் எழுதப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் பழமையில் வலிமையுடன் இருந்த மக்கள் கூட்டம் காலப்போக்கில் வலிமை குன்றிப்போவதும், சிலவேளைகளில் முற்றாக மறைந்து போவதும் உண்டு. அதுபோலவே புதிதாகக் குடியேறிய மக்கள் கூட்டம் வலிமை பெற்று நிலைபெறுவதோடு புதிய ஒழுங்குகளை அங்கு உருவாக்கி விடுவதும் உண்டு. இந்த மாற்றங்களை வரலாற்றுப்பக்கங்கள் நெடுகிலும் நாம் காணக்கூடியதாய் இருக்கும்.

“எங்கே வரலாறு மௌனம் சாதிக்கத்தொடங்குகிறதோ? அங்கே இடப்பெயர்கள் தம் வாய் திறந்து பேசத் தொடங்கும்” என்பது ஆய்வாளர்களின் கருத்து. இலங்கைத் தமிழர்கள் தங்களது வரலாற்றாதாரங்களையும், கலாசாரச் சின்னங்களையும், பண்பாட்டு அம்சங்களையும் பேணிக்காப்பதில் சிக்கல்களை எதிர்நோக்கியிருக்கும் இக்காலகட்டத்தில் இடப்பெயர்களை முறையாக ஆவணப்படுத்தப்பட வேண்டிய தேவை இன்று பலமாக உணரப்பட்டுவருகிறது. இன முரண்பாடுகளை ஒரு நீண்ட வரலாறாகக் கொண்ட தேசமொன்றில் இயலாமையுடன் ஏற்றுக்கொள்ள வைக்கப்பட்ட ஒரு இடப்பெயர் மாற்றத்தின் ஆவணப்படுத்தலாக அமைகிறது இத்தேடல் முயற்சி.

## இடப்பெயர் ஆய்வு

இடப்பெயர்களின் பொருள், பயன்பாடு, தோற்ற வரலாறு, வகைப்பாடு என்பன பற்றி ஆய்வு செய்யும் துறை இடப்பெயர் ஆய்வு (Toponymy) எனப்படுகிறது. இடப்பெயர் ஆய்வானது வரலாறு, மொழியியல், தொல்லியல் போன்ற துறைகளுடன் மிக நெருங்கிய தொடர்புகளைக் கொண்டதாக அமைந்திருக்கிறது. இவ்வாய்வு பல காலங்களுக்கு முன்னால் அந்நிலப்பரப்பில் வாழ்ந்த மனிதர்களின் இருப்பைப் பறைசாற்றுவதோடு அவர்கள் தொடர்பிலான பல்வேறு விடையங்களை அறிந்துகொள்ளவும் நமக்கு உதவுகிறது.

இடப்பெயர் ஆய்வுகளின் முன்னோடிகளாக புலவர்கள், கதைசொல்லிகள் என்பவர்களைக் குறிப்பிடலாம். ஏனெனில் பண்டைய காலம் முதல் இடப்பெயர்களுக்கு கதைகளுடன் தொடர்புபடுத்தி விளக்கம் கொடுத்துவருபவர்கள் இவர்களே. இன்று கூட ஏதாவது ஒரு கிராமத்திற்குச் சென்று அங்குள்ள வயது முதிர்ந்த ஒருவரிடம் ஊரின் பெயரினைக் குறிப்பிட்டு "இந்தப் பெயர் எப்படி வந்தது?"எனக் கேட்டால், நாம் குறிப்பிட்டுக் கேட்ட ஊர்ப்பேர் பற்றிய விளக்கத்துடன் அந்த ஊர் பற்றிய பல சுவாரிசமான தகவல்களும் அவரிடம் இருந்து நமக்குக் கிடைக்கும். எண்பதுகளின் இறுதிப்பகுதியில் எங்களது ஊர் கதைசொல்லிகளால் நிறைந்திருந்தது. கொடிய யுத்தமும், இடப்பெயர்வும் அவர்களில் பலரை இல்லாமல் செய்துவிட்டது. இன்று எஞ்சி இருக்கும் சில கதைசொல்லிகள் இலத்திரனியல் ஊடகங்களின் அபரித வளர்ச்சியால் சமூகத்தில் தேடுவாரற்று இருக்கிறார்கள்.

இது ஒருபுறமிருக்க இடப்பெயர்களுக்கான விளக்கத்தை அறிவார்ந்த நிலையில் விவாதிக்கும் முறை பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பாவில் தோற்றம் பெற்றது. அறிவியல் சார்ந்த இடப்பெயர் ஆய்வு உலகளாவியரீதியில் பலரதும் கவனத்தையும் ஈர்த்தது. அது வரலாறு மற்றும் மொழியியல் துறைகளில் பெரும் அசைவுகளை ஏற்படுத்தி தொடர்ந்தும் வளர்ச்சி அடைந்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக தமிழ் மொழியிலும் இடப்பெயர் தொடர்பான அறிவியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழ்மொழி இடப்பெயர் ஆய்வின் ஆரம்பக்காலப்பகுதியைச் சேர்ந்தவர்களாக வள்ளலார், ரா.பி.சேதுப்பிள்ளை, மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை ஆகியோரைக் குறிப்பிடலாம். இவர்களது இடப்பெயர் ஆய்வில் புராணங்கள், புனைவுகள் சார்ந்து ஊர் பெயர்களுக்கு விளக்கமளிக்கும் பண்பு காணப்பட்டது. எனினும் தமிழ் மொழியியலின் வளர்ச்சியினால் இடப்பெயர் ஆய்வுகளை ஒரு அறிவார்ந்த தளத்தில் முன்னெடுக்கும் வழக்கம் பின்னர் உருவானது.

பேராசிரியர் திரு. கி. நாச்சிமுத்து, திரு. ஞானமுத்து, கலாநிதி ஆர்.விஸ்வநாதரெட்டி ஆகியோர் அறிவியல் தளத்தில் இயங்கி இடப்பெயர் ஆய்வில் புதிய தடத்தினைப் பதித்தனர்.

இலங்கைத் தமிழர் இடப்பெயர் ஆய்வு தொடர்பான தேடலில் சுவாமி ஞானப்பிரகாசர், குமாரசுவாமி, ஹோர்ஸ்பரோ முதலியோர் ஆரம்பக்காலத்தில் குறிப்பிடத்தக்க பங்கினை வகித்த போதிலும் அவர்களது சில முடிவுகள் சர்ச்சைக்குரியதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து இத்துறையில் ஆர்வம் காட்டியவர்களுள் கலாநிதி இ. பாலசுந்தரம் (ஈழத்து இடப்பெயர் ஆய்வு), முனைவர் கு. பகவதி (தமிழகம் இலங்கை ஊர்ப்பெயர்கள் - ஓர் ஒப்பாய்வு), பேராசிரியர் ப. புஸ்பரட்ணம் (Tamil place names as gleaned from the brahmi inscriptions of srilanka), திரு. கதிர். தணிகாசலம் (தமிழர் வரலாறும், இலங்கை இடப்பெயர் ஆய்வும்), ஸ்ரீ. இ. நமசிவாயம்பிள்ளை (ஊர்ப் பெயர் உட்பொருள் விளக்கம்) போன்ற பலரைக்குறிப்பிடலாம். இணையவெளியில் நீண்டகாலமாக இடப்பெயர் தொடர்பில் விரிவாக ஆய்வு செய்துவரும் பேராசிரியர் பொ.ரகுபதி அவர்களுடைய பதிவுகள் இலங்கைத் தமிழர் இடப்பெயர் ஆய்வில் முக்கிய கவனம் பெறுபவை. இவற்றோடு தனித்தனியாக வெளியிடப்பட்ட பல்வேறு ஊர்ப்பெயர் ஆய்வுகள் தொடர்பான ஆவணப்படுத்தல்களும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவைகளாக இருக்கின்றன.

தமிழர்கள் இடங்களுக்குப் பெயர் சூட்டுவதில் சில ஒழுங்கு முறைகளைக் கொண்டிருந்தனர். அவர்களால் சூட்டப்பட்ட இடப்பெயர்கள் "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்னும் தொல்காப்பியர் கூற்றுக்கமைய அங்கு வாழ்ந்த மக்களுடன் தொடர்புடைய வரலாற்றையும் பண்பாட்டையும் விளக்குகின்ற தன்மை வாய்ந்தவையாக அமைந்திருந்தன. அவ்வாறு அவர்களால் சூட்டப்பட்ட பெயர்களை அவற்றின் பொதுவான தன்மையின் அடிப்படையில் பல வகைகளாகப் பிரிக்கலாம். அந்த வகைகளுக்கு இங்கு உதாரணமாக காட்டப்பட்டிருக்கும் இடப்பெயர்கள் முன்னர் தம்பலகாமப் பற்று (இன்றைய தம்பலகாமம், கிண்ணியா, கந்தளாய்)

பிரதேசத்திற்குள் அடங்கியிருந்த சில ஊர்கள், குளம், ஆறு, வயல் நிலங்கள் என்பவற்றிற்குச் சொந்தமானவை என்பதைக் கருத்தில் கொள்க.

இங்கு காண்பிக்கப்படும் உதாரணங்களில் உள்ள இடப்பெயர்களில் (த) என்பது தம்பலகாமத்தையும், (கி) என்பது கிண்ணியாவையும், (க) என்பது கந்தளாயையும் குறிக்கிறது.

(1) நீர்நிலைப்பெயர்கள். "நீரகம் பொருந்திய ஊரகத்திரு" என்பது ஔவையார் வாக்கு. இதற்கமைய பண்டைய நாகரிகத்தின் தொடக்க காலத்திலே நீர் நிலைப்பெயர்களே பெரிதும் தோன்றியிருக்க வேண்டும். தமிழ் நிகண்டுகள் நீர்நிலைப் பெயர்களையே அதிகமாக கொண்டிருக்கின்றன.

தம்பலகாமப் பற்று பிரதேசத்தினுள் உள்ளடங்கி இருக்கும் நீர்நிலை இடப்பெயர்கள். குடமுருட்டி ஆறு (த) காட்டாறு (கி) உப்பாறு(கி) பெரியாத்துமுனை (கி) நடுவூத்து (கி) பரவிபாஞ்சான்(த) பொற்கேணி(த) பேராறு(த) வட்வனாறு(த) கரிக்கட்டைமலையாறு (த) பாலம்போட்டாறு (த) ஊற்றடி(கி) நெடுங்கேணி (கி) தீனேரி (கி) சாவாறு (கி)

(2) நிலப்பெயர்கள். - பண்டைய கால மக்கள் நிலையாக ஓரிடத்திற் குடியிருக்க முற்பட்டபோது காடழித்து, வீடமைத்து வாழத் தொடங்கினர். இதன்போது நிலப் பயன்பாட்டு நோக்கில் வயல்களும் தோட்ட நிலங்களும் முதன்மைபெற்றன. இவற்றின் நிலவியல்பு - நிலத்தோற்றம் - நில அமைப்பு என்ற அடிப்படைகளில் இடப்பெயர்கள் தோற்றம் பெற்றன. உதாரணமாக

பட்டிமேடு (த) கள்ளிமேடு (த) பெரியவர்ணமேடு (த) சின்னவர்ணமேடு (த) கரைச்சைத் திடல் (த) மாகாமம் (கி) நெடுந்தீவு (கி) குட்டிக்கரச்சை (கி) முனைச்சேனை (கி) பாரதிபுரம் (த) சிப்பித்திடல் (த) குஞ்சடப்பன்திடல் (த) சம்மாந்துறை (த) வில்லுவெளி (கி)

(3) தாவரப்பெயர்கள். - நிலத்தோற்றம், நீர்நிலைகள் என்பன வற்றின் அடிப்படையில் இடப்பெயர்களைச் சூட்டிய மக்கள் வளர்ச்சியடைந்த போது அச்சூழலில் நிலையாக அல்லது சிறப்பாக காணப்பட்ட தாவரங்கள் , பறவைகள், விலங்குகள் என்பனவற்றை அடையாளமாகக் கொண்டு இடப்பெயர்களை உருவாக்கும் மரபை ஏற்படுத்திக் கொண்டனர். அந்த வகையில் உருவான சில இடப் பெயர்களுக்கான உதாரணங்கள்.

ஈச்சந்தீவு (கி) ஆலங்கேணி (கி) மாஞ்சோலை (கி) மாஞ்சோலைச் சேனை (கி) ஈச்சங்குளம் (த) பூவரசந்தீவு (கி) குறிஞ்சாக்கேணி (கி) நடுப்பிரப்பந்திடல் (த) நீர்நாவற்குளம் (த) தாமரைவில் (கி) கண்டல்காடு (கி)

(4) பறவைப்பெயர்கள். - மயில் தீவு (த),காக்காச்சிப்பித்திடல் (த)

(5) விலங்குப் பெயர் -குரங்கு பாஞ்சான் (கி) புலியூத்துக்குளம் (த)

(6) கடவுட் பெயர்கள் .- மனித நாகரீக வளர்ச்சியில் கடவுள் வழிபாடு முக்கியத்துவம் பெறத்தொடங்கிய காலப்பகுதியில் இருந்து இடப்பெயரிலும் கடவுட் பெயர்கள் இடம் பிடிக்கத் தொடங்கின. இவை அவ் விடத்தில் இருந்த ஆலயங்களுடனோ, சமய வரலாற்று டனோ தொடர்புடையனவாக இருப்பதனைக் காணக் கூடியதாக இருக்கிறது. உதாரணமாக. நாயன்மார்திடல் (த) ஐயனார்திடல் (த) பத்தினிபுரம் (த) சிவசக்திபுரம் (த) சுவாமிமலை (த)

(7) அரசர் , அதிகாரிகள் பெயர்கள். - குறித்த பிரதேசங்களில் அதிகாரம் மிக்கவர்களாக இருந்த அரசர், அதிகாரிகளின் பெயர்கள் இடப்பெயராக பரிணமித்துக்கொண்டன. உதாரணமாக. வெண்டரசன் குளம் (க) மணியரசன் குளம் (கி) குஞ்சடப்பன் திடல் (த) பாண்டியன் ஊற்று (கி)

(8) புராண , இதிகாச, இலக்கியப்பெயர்கள் - கடவுள், அரசர், அதிகாரிகள் பெயர்கள் போலவே அந்த இடத்துடன் தொடர்புடைய புராண , இதிகாச, இலக்கியப் பெயர்கள் இடப்பெயரில் இடம்பிடித்தன. உதாரணமாக சூரன்கல் (கி)

(9) தொழில்முறை, சாதிப் பெயர்கள் - தொழில்முறை, சாதிப் பெயர்களால் ஒரு குறிப்பிட்ட பிரிவு மக்கள் வாழ்ந்த இடங்களும், அவர்கள் பயன்படுத்திய வயல், தோட்டம் , சேனை முதலான இடங்களும் பெயரிடப்பட்டன. உதாரணமாக. வண்ணாத்திடல் (த) கரையான் வயல் (த) பிராமணர் கீத்து (த) தம்பட்டக்காரன் கீத்து (த) பிராமணமேடு (த) குருக்கள் மேடு (த) முதலியார் வயல் (த) சின்னக் கரையான் வயல் (த) வண்ணான் வயல் (த) குயவனாறு (த) கொல்லன் மடு (த) பூசாரிவேட்டை (கி)

(10) அரசியல், சமய, சமூக நடவடிக்கைகள் தொடர்புடைய பெயர்கள் - கோவில்குடியிருப்பு (த) தெலுங்கு நகர் (த) பறங்கிக் கீத்து (த) புதுக்குடியிருப்பு (த)

(11) நபர்களைக் குறிக்கும் பெயர்கள் - பெரிய ஆண்டி வெட்டுவன் வயல் (த), சின்ன ஆண்டி வெட்டுவன் வயல் (த),குடும்பியன் வயல்(த), மூத்தார் வயல்(த), மாதோட்டியான் வயல் (த), அழகி வயல் (த), நைனாண்டகிரான் (நைனார் ஆண்ட கிரான்) (த)

(12) சம்பவங்களைக் குறிக்கும் பெயர்கள் - பிள்ளை கொல்லி மணல் (கி), தங்கையைக் கொல்லி வளவு (த), பிட்டவிச்ச குடா (த), சமாவைத்த தீவு (கி)

மேற்கூறிய சிற்றூர் பெயர்களும் ஆறு, குளம், வயல் நிலங்களின் பெயர்களும் விரிவாக ஆராயப்பட வேண்டியவையாகும். இவ்வாறான ஆய்வுகள் இங்கு வாழ்ந்த மக்களின் இருப்பையும் உறுதிப்படுத்துவதோடு அவர்களது தொன்மையான வரலாற்றுப் பதிவுகளையும் வெளியுலகிற்கு கொண்டு வருவதற்கான சிறந்த வழிமுறையாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஒரு ஊர்ப்பெயருக்கு அளிக்கப்படும் விளக்கம் முதலில் அப்பகுதியின் வரலாற்றாராய்ச்சியில் இருந்தே தொடங்க வேண்டும். அவ்வூரின் பெயர் ஆகப் பழைய ஆவணத்தில் எவ்வாறு இருக்கிறது என்பதைத்தான் முதலில் தேடவேண்டும் என்று கேரள நாட்டுப்புறவியல் ஆய்வாளர் பேராசிரியர் திரிவிக்ரமன் தம்பி அவர்கள் பதிவு செய்திருக்கிறார். அத்துடன் ஒரு போதும் ஓர் புராதன இடத்தின் பெயர் "வைக்கப்பட்டது" என்ற கோணத்தில் ஆராயக்கூடாது என்றும் "உருவாகிவந்தது" என்ற கோணத்திலேயே ஆராயப்படவேண்டும் என்றும் சொல்கிறார் பேராசிரியர் திரிவிக்ரமன் தம்பி(3). பெரும்பாலும் இடப்பெயர்கள் மக்கள் வழக்கிலிருந்து உருவானவையாகவே இருக்குமேயன்றி அறிஞர்கள் உருவாக்கியதாக இருக்காது என்பதுதான் அவர் கூற்றின் பொருள்.

தம்பலகமுவ என்ற பெயர் அரச ஆவணங்களிலும், பொது நிறுவனங்களிலும் வலுவாக காலூன்றிவரும் காலகட்டத்தில், புதிது புதிதாகத் தோன்றி வரும் புத்தர் சிலைகள் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலய வாசல் வரை வந்துவிட்ட சூழ்நிலையில் எண்ணூறு வருடப் பழமை வாய்ந்த தம்பலகாமம் கல்வெட்டு என்னும் சாசன ஆதாரத்தினை தம்பலகாமம் என்னும் வரலாற்றுப் புகழ் கொண்ட ஊரின் பெயர் ஆய்வின் ஆதாரமாகக் கொள்கிறது இக்கட்டுரை.

தம்பலகாமம் என்னும் ஊரின் பெயரினைக் குறிப்பிடும் முதலாவது தமிழ் ஆவணமான இக்கல்வெட்டு இன்றைக்கு சுமார் எண்ணூறு (800) வருடங்களுக்கு முற்பட்டது. இச்சாசனம் 13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியினைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது. தம்பலகாமம் கல்வெட்டு எல்லாமாகப் இருபத்தி மூன்று வரிகளைக்கொண்டது.

*1 ----*
*2 ----------மாதி*
*3 ------*
*4 யிரண் ----தி*
*5 ருக்கோணமலை*
*6 உடையான்நிச்ச*
*7 யித்தஜகதப்ப*
*8 கண்டன்சந்தி*
*9 க்குநிலையாக (தர)*
*10 தம்பலகாமஊ*
*11 ரைநான்கெல்*
*12 லைக்குஉள்எல்லா*
-----------------
*13 வினியோ*
*14 கங்கொள்*
*15 ளூம்படிக்கு*
*16 ம்இதுக்கு*
*17 மேற்பன்னி*
*18 நான்ஒரு –*
*19 ---------------*
*20 –மாகில்நா*
*21 -- காகத்து*
*22 க்கும்பிறந்*
*23 தாராவர்கள்*

என்று பலவரிகள் முழுமையாகச் சிதைந்தும் சில எழுத்துக்கள் விடுபட்டும் காணப்படும் தம்பலகாமம் கல்வெட்டின் வாசித்தறியக்கூடிய பகுதி மேல்வருமாறு அமைந்திருக்கிறது.

இந்த சாசனம் தம்பலகாமம் என்ற இடப்பெயரின் தொன்மையைப் பதிவு செய்வதோடு அது அக்காலப்பகுதியில் கொண்டிருந்த அரசியல், சமுதாய முக்கியத்துவத்தினையும் விபரிக்கிறது. இச்சாசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் உடையார் (6. உடையான் நிச்ச) என்ற சொல் சாசனவழக்கில் அரசர்களை அல்லது அரச பிரதானிகளைக் குறிக்கப்

பயன்படுத்தப்படும் சொல்லாகும். இங்கு குறிப்பிடப்படும் உடையார் திருகோணமலையைச் சேர்ந்தவர் என்பது சாசனத்தின் ஐந்தாவது வரிமூலம் அறியமுடிகிறது.

அடுத்து வரும் "ஜகதப்ப கண்டன்" என்பது "ஜகதப்ப கண்டன்" என்ற விருதுப் பெயரால் வழங்கிய படையொன்று இங்கு இருந்துள்ளது என்பதனை உறுதிப்படுத்துகிறது. இச்சாசன செய்தி மூலம் தம்பலகாமம் அக்காலப்பகுதியில் ஆட்சியாளரின் ஏற்பாட்டின் பிரகாரம் "ஜகதப்ப கண்டன்" என்ற போர்வீரர் படையொன்றின் பொறுப்பில் விடப்பட்ட ஒரு பட்டினமாக இருந்திருக்க வேண்டுமென்பதை உணர்த்துவதாய் இருக்கிறது. கல்வெட்டின் பத்தாவது வரி ஊர்ப்பெயரினை ஆதாரப்படுத்தி இருப்பதன் மூலம் இடப்பெயர் ஆய்வின் மூல ஆவணமாகிறது.

திருகோணமலை உடையாரின் கட்டளைக்கிணங்க தம்பலகாமம் ஊரின் அனைத்து வரிகளும் தானமாக வழங்கப்பட்ட செய்தியை இந்த கல்வெட்டு சொல்கிறது. கல்வெட்டின் சில வரிகள் முற்றாக அழிந்து விட்டதால் அத்தானங்கள் எந்த நிறுவனத்திற்குச் செய்யப்பட்டது என்பதை நேரடியாக வாசித்தறிய முடியவில்லை. இக்கல்வெட்டு 234 ஆண்டுகளுக்கு முன்னர் ஒல்லாந்து ஆளுநரால் படியெடுக்கப்பட்டிருந்தால் சிலவேளை சாசனத்தின் பெரும்பாலன வாசகங்கள் நமக்கு கிடைத்திருக்கக்கூடும்.

சுமார் ஒரு தசாப்த காலங்களுக்கு மேலாக தேடியலைந்து முற்றாக நம்பிக்கை இழந்து போயிருந்த காலத்தில் கண்டுபிடித்த கல்வெட்டு இது. எமது ஊரினைப் பொறுத்தவரை இதிலுள்ள ஒவ்வொரு வரிகளும் பொன் வரிகள். அவற்றை முழுமையாக ஆய்வு செய்வதும், அதனோடு தொடர்புபட்ட இற்றைவரை கண்டுபிடிக்கப்படாத வரலாற்று ஆதாரங்களை தேடிச் செல்வதும் தம்பலகாமம் ஊரவர் முன் இருக்கின்ற முக்கிய பணிகளாகும்.

இக் கல்வெட்டு வாசகங்கள் சொல்கின்ற வரலாற்றுச் செய்திகளை விரிவாக அலசி ஆராய வேண்டியது முக்கிய பணி என்ற போதும் இந்நூலின் குறிக்கோள் கருதி ஊர்ப்பெயர் ஆவணப்படுத்தல் ஆதாரமாக மட்டும் தம்பலகாமம் கல்வெட்டு இங்கு எடுத்தாளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# “காமம்” என்னும் ஈற்றுப்பெயர் கொண்டமைந்த இடப்பெயர்கள்

இன்றுள்ள பலர் காமம் என்பதனை இடத்தின் ஈற்றுப்பெயராக ஏற்றுக்கொள்ள சிரமப்படுகிறார்கள். காமம் என்ற இந்த ஈற்றுப்பெயர் மூல வடிவத்திலேயே மக்கள் செறிந்து வாழும் ஊர்களைக் குறிக்கும் வழக்கம் இன்று தமிழ்நாட்டில் இல்லை. ஆனால் இலங்கையில் உள்ள பல சிற்றூர்களின் பெயர்களில் அது இன்றும் நிலைத்திருக்கிறது.

பெரும்பாலான இலங்கைத் தமிழர் இடப்பெயர்கள் தமிழகத்து இடப்பெயர்க் கூறுகளுடன் ஒப்பிடக் கூடியதாகவும், அதே வேளை சில இடப்பெயர்கள் இலங்கைத் தமிழர் தனித்துவத்தை அடையாளப்படுத்துவதாகவும் அமைந்திருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது. இவ்வாறான தனித்துவ அடையாளம் கொண்ட இடப்பெயர்கள் பல இலங்கைத் தமிழர் வரலாற்றின் தொன்மையை நிலைநாட்டும் உறுதியான சான்றுகளைத் தன்னகத்தே கொண்டவையாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது. அவ்வாறு தனித்துவ அடையாளம் கொண்ட இலங்கைத் தமிழர் இடப் பெயர்களில் ‘‘காமம்’’ என்னும் ஈற்றுப்பெயர் கொண்டமைந்த இடப் பெயர்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

**இலங்கையின் மாவட்ட ரீதியில் அவ்விடப்பெயர்கள் வருமாறு.**

யாழ்ப்பாண மாவட்டம்-கொடிகாமம், வலிகாமம், வீமன்காமம்,தேகாமம்(வயாவளான்)
முல்லைத்தீவு மாவட்டம் - பனங்காமம், அம்பகாமம்
கிளிநொச்சி மாவட்டம் - தம்பகாமம்
அம்பாறை மாவட்டம் - இறக்காமம், சாகாமம் (திருக்கோவில்)
மட்டக்களப்பு மாவட்டம் - பழுகாமம், உறுகாமம், பொறுகாமம் (வெல்லாவெளி), ஊர்காமம் (ஊற்றுச்சேனை)
மொனராகலை மாவட்டம் - கதிர்காமம்
பொலநறுவை மாவட்டம் - சந்தணகாமம் (இன்றைய கல்லோயா)
திருகோணமலை மாவட்டம் - தம்பலகாமம்,கிரிகாமம், கிரிகண்டகாமம், மேன்காமம், வெல்காமம், மாகாமம்

மன்னார் மாவட்டம் - வலிக்காமம், முதலியான்காமம்
கண்டி -வத்துகாமம்
மகாவம்சம் - கும்பகாமம், நந்திகாமம், காணுகாமம் (மகாவம்சம் குறிப்பிடும் இவ்விடங்கள் எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவை என்று தெரியவில்லை)
அனுராதபுரம் மாவட்டம் - அனுராதகாமம் (பழைய பெயர்)

வரலாற்று ஆய்வாளர் திரு.என்.கே.எஸ்.திருச்செல்வம் அவர்கள் அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள புதையுண்டு போன புராதன இந்துக் கோயில்கள் என்ற நூலில் அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள தமிழ் கிராமங்களை அடையாளப்படுத்தி பதிவு செய்திருக்கிறார். இவர் அடையாளங்கண்ட நானூற்று நாற்பத்தியாறு (446) தமிழ் கிராமங்களின் விபரங்களை அவை அடங்கியுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவின் விபரத்தோடு ஆவணப்படுத்தி இருக்கிறார். இவற்றில் 35 கிராமங்களின் பெயர்கள் “காமம்” என்ற ஈற்றுப்பெயர் கொண்டு அமைந்திருக்கிறது. இந்த கிராமங்களின் பெயர் விபரங்களை இன்றைய நிலையில் நாம் பார்க்கும்போது ஆச்சரியமாக இருக்கும். தற்போது தொண்ணூறு வீதம் சிங்கள மக்கள் வாழ்கின்ற பிரதேசமாக அனுராதபுரம் இருக்கின்ற நிலையில் இங்கு தமிழ் இடப்பெயர்கள் இருப்பதற்கான வரலாற்றுக் காரணங்களை ஆராயவேண்டி இருக்கிறது.

கி.மு 3 ஆம் நூற்றாண்டிற்கும் (கி.மு 247) கி.மு 1 ஆம் நூற்றாண்டிற்கும் (கி.மு 29) இடைப்பட்ட இருநூற்றியிருபது (220) ஆண்டுகால அனுராதபுரம் அரசின் வரலாற்றில் ஆட்சி புரிந்த 19 மன்னர்களுள் 8 தமிழ் மன்னர்கள் 81 வருடங்களுக்கு மேல் ஆட்சி புரிந்துள்ளனர். இதில் 44 வருடங்கள் எல்லாளனுக்கும் 22 வருடங்கள் அவனது தந்தை ஈழசேனனுக்கும் உரியவை. அத்துடன் இலங்கையை சூரதிச்சன் எனும் சிங்கள மன்னனிடமிருந்து கைப்பற்றி ஆண்டவர்கள் சேனனும், குத்திகனும் என்னும் இரு தமிழ் அரசர்கள். இவர்கள் கி.மு 177 ஆம் ஆண்டு முதல் கி.மு 155 ஆம் ஆண்டு வரை இருபத்திரண்டு ஆண்டு காலம் இலங்கையை ஆட்சி செய்திருந்தனர்.

இவ்வாறு நீண்டகால ஆட்சியினை மேற்கொண்ட ஈழசேனன், எல்லாளன், சேனன், குத்திகன் என்னும் தமிழ் அரசர்களை மகாவம்சம் சோழ மரபினர், ஆக்கிரமிப்பாளர்கள், அக்கரையைச் சேர்ந்தவர்கள், தமிழகத்தில் இருந்து படையெடுத்து வந்தவர்கள் என்று சொல்கிறது. எனினும் இவர்கள் இலங்கையின் இன்னொரு பகுதியைச் சேர்ந்த சிற்றரசர்களாக இருந்து பின்னர் அனுராதபுரம் மீது படையெடுத்தவர்களா? என்ற ஐயப்பாடுகளை அண்மைய ஆய்வுகள் உருவாக்கி இருக்கின்றன. சமகால வரலாற்றுப் பதிவுகளில் இவர்கள் தமிழகத்தில் இருந்து படை-யெடுப்புக்களை மேற்கொண்டதிற்கான ஆதாரங்கள் இல்லாதிருப்பதும், இவ்வரசர்கள் தமிழகத்தில் நடத்திய ஆட்சி பற்றிய குறிப்புகள் ஏதும் கிடைக்காததாலும் இந்த சந்தேகம் வலுக்கிறது.

மேலே நாம் பார்த்த வரலாற்று அடிப்படைகள் புராதான அனுராதபுரம் பிரதேசத்தில் தமிழர்களின் இருப்புக்களின் விபரங்களை விரிவாக ஆவணப்படுத்தவேண்டியதன் அவசியத்தினை நமக்கு உணர்த்தி நிற்கிறது. அனுராதபுரம் பிரதேசத்தில் திரு.என்.கே.எஸ். திருச்செல்வம்[1] அவர்களால் அடையாளப்படுத்தப்பட்ட “காமம் என்ற ஈற்றுப்பெயர்கொண்ட இடப்பெயர்கள் கீழே தொகுக்கப்பட்டுள்ளது.

1) கல்னேவ உதவி அரசாங்க அதிபர் பிரிவு
   கட்டருகாமம்,நாககாமம், பத்தினி காமம்
2) இபலோகம உதவி அரசாங்க அதிபர் பிரிவு
   களஞ்சிகாமம், கப்பல்காமம், குசலன்காமம், மச்சகாமம்
3) கஹட்டகஸ்திகிலிய உதவி அரசாங்க அதிபர் பிரிவு
   அக்கரையான் காமம்
4) கெக்கிராவ உதவி அரசாங்க அதிபர் பிரிவு
   நெல்லிகாமம், கதிர்காமம், கொல்லன் குட்டிகாமம், கங்காணிகாமம்
5) மாகாவிலாச்சிய உதவி அரசாங்க அதிபர் பிரிவு
   மான்காமம்
6) மதவாச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு
   பட்டிகாமம், பாடிகாமம், அக்கரைகாமம்

7) மிகுந்தலை உதவி அரசாங்க அதிபர் பிரிவு
கட்டம்புகாமம், வேள்ளாளர்காமம்
8) நொச்சியாகம உதவி அரசாங்க அதிபர் பிரிவு
நொச்சிகாமம், சிரம்பகாமம், ஆசாரிகாமம்,
சிங்காரகாமம், கட்டப்புகாமம்
9) பலகல / கலகம் பலாத்த உதவி அரசாங்க அதிபர் பிரிவு
பிராமணகாமம், செட்டிகாமம், பம்மக்கரையான் காமம்
10) பலுகஸ்வெவ உதவி அரசாங்க அதிபர் பிரிவு
மாரித்தரையன்காமம்
11) தலாவ / நுவரகம் பலாத-உதவி அரசாங்க அதிபர் பிரிவு
அதிராணி காமம், வத்தியகாமம், ஆசாரிகாமம்
12) தம்புத்தேகம உதவி அரசாங்க அதிபர் பிரிவு
பொதியகாமம்
13) திரப்பனே / ஹுருழுபலாத்த உதவி அரசாங்க அதிபர் பிரிவு
மன்னம்பிட்டிகாமம், சந்தனக்குட்டிகாமம், பமுணுகாமம்
14) நுவரகம் பலாத்த கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு
காளிவில்காமம்

மேற்கூறிய அனுராதபுரம் பிரதேசத்தில் காணப்படும் "காமம்" என்னும் ஈற்றுப்பெயர் கொண்ட இடப்பெயர்களை தற்போதைய நிலையில் ஒரு தகவல் திரட்டாகவே நாம் கொள்ளலாம். இவ்வூர்ப் பெயர்கள் சாசன அல்லது தொல்பொருள் ஆதாரங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படும் போதே அவை வரலாற்று முக்கியத்துவம் பெறும் என்பது கவனத்திற் கொள்ளத்தக்கது. இவ்வாறு இலங்கையின் பல மாவட்டங்களில் காணப்படும் "காமம்" என்னும் ஈற்றுப்பெயர் கொண்டமைந்த இடப்பெயர்கள் இலங்கையில் தமிழர் வாழ்ந்த பிரதேசங்கள் முழுவதும் பரவி இருந்ததை ஆதாரப்படுத்துவதாக அமைந்திருப்பதைக் காணக்ககூடியதாக இருக்கிறது.

தம்பலகாமம் ஊர்ப்பெயர் ஆய்வுக்குச் செல்லும் முன்னால் எனது மனதைக் குடைந்த மூன்று கேள்விகளுக்கு விடை தேட வேண்டிய தேவை எழுந்தது.

1. காமம் என்பதனை இடப்பெயராக பொருள் கொள்ளலாமா?
2. காமம் என்பது இழிவான சொல்லா?
3. காமம் என்ற இடப்பெயர் கூறு சமஸ்கிருத “(g)கிராம” என்ற சொல்லிலிருந்து உருவானதா?

மீள மீள மனதில் எழுந்த இந்தக் கேள்விகளின் விடைகள் எனது தம்பலகாமம் ஊர்ப்பெயர் ஆய்வுக்கு உறுதுணை புரிவதாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

### காமம் என்பதனை இடப்பெயராகக் கொள்ளலாமா?

பொதுவாக ஊர்ப்பெயர்களின் அமைப்பு ஒரு ஒழுங்கு முறையில் இருப்பதை அவதானிக்கலாம். பெரும்பாலான ஊர்களின் பெயர்கள் இரண்டு பகுதிகளைக் (காரணப்பெயர்) கொண்டு அமைந்துள்ளன. ஒற்றைச் சொல்லிலான (இடுகுறிப்பெயர்) ஊர்ப்பெயர்களும் உள்ளன.தமிழ் இடப்பெயர்களில் பொதுக்கூறுகள், சிறப்புக் கூறுகள் கொண்ட இடப்பெயர்களே அதிகம் காணப்படுகின்றன. உதாரணமாக

| இடப்பெயர் | சிறப்புக் கூறு | பொதுக்கூறு |
|---|---|---|
| பட்டிமேடு | பட்டி | மேடு |
| கள்ளிமேடு | கள்ளி | மேடு |
| பிராமணமேடு | பிராமணர் | மேடு |
| குருக்கள் மேடு | குருக்கள் | மேடு |
| நாயன்மார்திடல் | நாயன்மார் | திடல் |
| ஐயனார்திடல் | ஐயனார் | திடல் |
| சிப்பித்திடல் | சிப்பி | திடல் |

இங்கு காட்டப்பட்டுள்ள உதாரணங்களில் மேடு, திடல் என்பன இடப்பெயரின் பொதுக்கூறுகள் இவற்றை இடப்பெயரின் ஈற்றுப் பெயர்கள் என்று வழங்குவதும் உண்டு. பெரும்பாலும் இடப் பெயர் உருவாக்கத்தின்போது பொதுக்கூறுகளே முதலில் தோன்றும். பின்னர் ஒரே பிரதேசத்தில் மூன்று இடங்கள் திடல் என்று அழைக்கப்படும் போது ஏற்படும் குழப்ப நிலையினைத் தவிர்ப்பதற்காகச் சிறப்புக் கூறுகள் இடப்பெயரில் தோற்றம் பெறுகிறது எனலாம்.

முனைவர் கு. பகவதி அவர்கள் 1991 இல் வெளியிட்ட "தமிழகம் இலங்கை ஊர்ப்பெயர்கள் - ஓர் ஒப்பாய்வு" எனும் நூலில் தமிழக ஊர்ப் பெயர்களில் இருநூற்று எண்பத்தி நான்கு (284) பொதுக்கூறுகளையும் இலங்கை ஊர்ப் பெயர்களில் நூற்று இருபத்தியொரு (121) பொதுக்கூறுகளையும் பட்டியலிட்டு இருக்கிறார். மேற்குறித்த ஆய்வில் பட்டியல் இடப்பட்டுள்ள இலங்கை ஊர்ப்பெயர்களில் காணப்படும் பொதுக்கூறுகளின் தொகுப்பு கீழ்வருமாறு அமைந்திருக்கிறது.

இலங்கை ஊர்ப்பெயர்களில் இருந்து தெரியவரும் பொதுக்கூறுகளாக, 1. அகம் 2. அடி 3. அணை 4. அம்பலம் 5.அளை 6. ஆராட்சி 7. ஆரை 8. ஆலி 9. ஆலை 10. ஆவி 11.ஆறு 12. ஆனை 13. இறவு 14. ஈட்டி 15. ஊர் 16. ஏரி 17.ஓடை 18. ஓட்டு 19. கட்டை 20. கடவு 21. கடலை 22. கடை 23. கண்டி 24. கரச்சை 25. கரை 26. கல் 27. கலட்டி 28. களப்பு 29. களி(ழி) 30. காடு 31. காணி 32. காமம் 33. கிணறு 34. கால் 35. கிரி 36. குடா 37. குடியிருப்பு 38. குண்டு 39. குழி 40. குளம் 41. கூடல் 42. கேணி 43. கொட்டு 44. கொல்லை 45.கோட்டை 46. கோவில் 47. சாவடி 48. சீமா 49. சேரி 50. சேனை 51. சோலை 52. தரிப்பு 53. தரை 54. தலை 55. தளவாய் 56. தளை 57. தாழை 58. திசை 59. திட்டி 60. திடல் 61. தீவு 62. துறை 63. தெரு 64. தேசம் 65. தொடுவாய் 66. தோட்டம் 67. தோணா 68. நகர் 69. நாடு 70. நேரி 71. நொச்சி 72. படை 73. பண்ணை 74. பத்தை 75. பந்தி 76. பரவை 77. பள்ளம் 78. பள்ளி 79. பள்ளை 80. பளை 81. பற்று 82. பற்றை 83. பனை 84. பாடு 85. பாய் 86. பாலை 87. பாறை 88. பிட்டி 89. புரம் 90. புலம் 91. புலவு 92. புலை 93. பூவல் 94. பை 95. பொத்தனை 96. மடம் 97. மடு 98. மடுவு 99. மனல் 100. மருது 101. மலை 102.முகம் 103. முல்லை 104 முன்மாரி 105 முனை 106. மூலை 107.மேடு 108. மோட்டை 109. வட்டுவான் 110 வட்டை 111. வத்தை 112. வயல் 113. வளவு 114. வளை 115. வாய் 116.வாயில் 117.வில் 118..வெட்டி 119.வெட்டை 120.வெளி 121..வேலி என அமைவதாக பட்டியலிட்டுள்ளார்.(2)

மேலே காட்டப்பட்டுள்ள பொதுக்கூறுகளில் 32 ஆவதாக காமம் அமைந்திருப்பதனைக் காணலாம். எனவே இடப்பெயர் விதிகளுக்கு அமைய இலங்கையிலுள்ள “காமம்” என்னும் ஈற்றுப்பெயர் கொண்டமைந்த இடப்பெயர்கள் கீழ்வருமாறு அமைந்திருக்கும்.

| இடப்பெயர் | சிறப்புக் கூறு | பொதுக்கூறு |
|---|---|---|
| கொடிகாமம் | கொடி | காமம் |
| வலிகாமம் | வலி (மணல்) | காமம் |
| வீமன்காமம் | வீமன் | காமம் |
| பழுகாமம் | பழு | காமம் |
| வெல்காமம் | வெல் (வேள்) | காமம் |
| இறக்காமம் | இறை (நிலவரி) | காமம் |

இத்தகைய இடப்பெயர்களை தமிழக இடப்பெயர்களில் நாம் காணமுடியாது. இவை இலங்கைத் தமிழ் இடப்பெயர்களில் உள்ள தனித்துவமான இடப்பெயர்கள். இந்த இடப்பெயர்களில் காணப்படும் சிறப்புக்கூறுகள் அந்தந்தப் பிரதேசங்களுக்கே உரிய சிறப்பியல்பைச் சொல்பவை. உதாரணமாக வலிகாமம் எனும் இடப்பெயரினை எடுத்துகொள்ளலாம். இலங்கையின் வட முனையில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில் வடமேற்குப் பகுதியில் உள்ள பரந்த பகுதி இதுவாகும். இன்று ஐந்து நிர்வாகப் பிரிவுகளைக் கொண்ட பிரதேசமாக உள்ள வலிகாமம் என்பது ஒரு கிராமத்தின் பெயராக இருந்து பின்னர் பிரதேசத்தைக் குறிக்கும் சொல்லாக மாறியது என்பர்.

யாழ்ப்பாண வைபவமாலை, வையா பாடல்கள் மூலம் யாழ்ப்பாணத்திற்கு மணற்றி, மணற்றிடர் என்ற தூய தமிழ்ப் பெயர்கள் பண்டைய நாட்களில் வழங்கியமை அறியப்படுகின்றது. சங்கத் தமிழில் வால் எக்கர் என்பது வெள்ளை மணல் திட்டுகள் அல்லது வெள்ளை மணல் தொடர்களை அழைக்கப்பயன்படுத்தப்பட்ட சொல்லாகும். அதேபோல் சிலப்பதிகாரத்தில் வரும் வாலுகம் வெள்ளை மணலைக் குறிக்கும். எனவே வலிகாமம் (வலி + காமம் = மணல் + கிராமம்) மணல் கிராமம் என்ற பொருளில் இடப்பெயராக உருவாவதற்கு அப்பிரதேச நில அமைப்பே முதற்காரணியாக அமைந்திருக்கிறது எனலாம்.

வலிகாமம் போலவே ஏனைய “காமம்” என்னும் ஈற்றுப்பெயர் கொண்டமைந்த இடப்பெயர்களின் சிறப்புக்கூறுகளும் அப்பிரதேசங்களுக்கே உரித்தான சிறப்பியல்புகளைக் குறிப்பவையாக அமைந்திருக்கின்றன. அத்துடன் வெல்காமம் (வேள்காமம்) என்ற ஊர்ப்பெயர் முதலாம் நூற்றாண்டுக்குரிய பிராமிக் கல்வெட்டிலும், இன்றைய வெல்கம் விகாரையில் உள்ள 11 ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டிலும் (Indrapala, K., 2006, plate 27), வல்லிகாமம் எனும் பெயர் 12 ஆம் நூற்றாண்டுக்குரிய சோழர் காலக் கல்வெட்டிலும் (Thiruvaalangkaadu inscription of the Chola king, Rajadhiraja II - Sadasiva Pandaraththar, History of Cholas Vol II),கிரிகாமம், கிரிகண்டகிரிகாமம் எனும் இரு இடப்பெயர்கள் கி.பி 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திருகோணமலையில் உள்ள சோழர்கால நிலாவெளி தான சாசனத்திலும் (இலங்கைத் தமிழ் சாசனங்கள், பேராசிரியர். சி. பத்மநாதன், 406 ம் பக்கம்) ஆவணப்படுத்தப்பட்டிருப்பதனைக் காணலாம்.

இவ்விடப் பெயர்களில் வரும் பொதுக்கூறான காமம் எவ்வாறு இடப்பெயர் பண்பினைக் குறித்து நிற்கிறது என்பதனை விரிவாக நாம் பார்க்கவேண்டி இருக்கிறது.

“கமம் நிறைந்து இயலும்” என்றார் தொல்காப்பியர் (தொல். சொல். உரி. 355) கமம் என்ற சொல்லுக்கு பொருள் நிறைவு என்பதாகும். சங்கத் தொடரில் வரும் “கமஞ் சூல் மாமழை” என்பதற்கு சூல் நிறைந்த முகில் என்பதே பொருள்.

மேகம் யானையின் தும்பிக்கைபோல கீழ் இறங்கி கடல் நீரைக்குடிக்கும் அதிசய நிகழ்வின் பெயர் நீர்த்தாரை (Waterspout tornado). இது பருவநிலை மாற்றங்கள் ஏற்படும் போது நிகழும். கடலின் மேல் வீசும் காற்றுமண்டலத்தில் உருவாகும் வெப்பநிலை மாற்றங்காரணமாக இது உருவாகிறது. பெரிய இராட்சதன் போன்ற மேகம் வான்வெளியிலிருந்து கடல்நீரை நோக்கி யானையின் துதிக்கை போன்ற பாகத்தினூடாக கடல்நீரை உறுஞ்சிக்கொள்ளும். இது ஒருவகை சுழற்காற்றினால் உருவாகிறது. இவ்வாறு அதிகளவான நீரை அள்ளிக்குடித்த மேகத்தையே சங்கத்தொடர்கள் “கமஞ்சூழ் மாமழை” என்கிறது.

இதற்கு நல்ல உதாரணம் திருமுருகாற்றுப்படையில் இடம் பெறுகின்றது. சங்க இலக்கியங்களில் சிறப்பிடம் பெறும் “பத்துப்பாட்டு” என வழங்கப்படும் நூல்களுள் இந்நூல் முதலில் வைத்து எண்ணப்படுகின்றது. பன்னிரு திருமுறைப் பகுப்பில் இந்நூல் பதினோராவது திருமுறையில் சேர்க்கப்பட் டுள்ளது. கடைச்சங்க நூலாகக் கருதப்படும் இதனை சங்ககாலத்து மதுரைக் கணக்காயனாரின் மகனாகிய புலவர் பெருமான் நக்கீரர் இயற்றியிருக்கிறார். கலை நயம்மிக்க நக்கீரர் கடலில் நீரினை உறுஞ்சிக் குடித்த மேகம் நிறைமாதக் கற்பிணிபோல் காட்சி தந்ததை (நீர்த்தாரை) இவ்வாறு விபரிக்கிறார்.

உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓவற இமைக்கும் சேண்விளங்கு அவிரொளி
உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்
செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாணுதற் கணவன்
கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை
வாள்போழ் விசும்பில் வள்ளுறை சிதறித்
தலைப்பெயல் தலை இய தண்ணறுங் கானத்து
இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து .
(திருப்பரங்குன்றம்)

கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை என்பது கடல் நீரை முகர்ந்த காரணத்தால் நிறைவான கருவுற்ற “கார்” எனப்படும் கரிய நிற மேகமானது என்ற பொருளில் அமைந்திருக்கிறது. இந்தப்பாடல் கமத்திற்கு நிறைவு என்ற பொருளினை அழகாக உணர்த்தி நிற்கிறது.

சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்குவகையான வழிபாட்டு முறைகள் பற்றிக் கூறுகின்ற ஆகமங்களில் வரும் கமம் என்ற சொல் நிறைவு என்றே பொருள்கொள்ளப்படுகிறது. “ஆகமமாகி நின்று அண்ணிப்பான்” என்று மாணிக்கவாசகர் மனமுருகிப்பாடுவது “ஆகம வழி நிற்பார்க்கு இறைவன் அணுகி வந்து அருள் புரிவான்” என்பதைக் குறிக்கிறது. இங்கு குறிப்பிடும் “ஆகமம்” என்பது தற்சமம் வகையைச் சார்ந்தது.

அதாவது வடமொழிக்கும் தமிழுக்கும் பொதுவான எழுத்துக்களால் அமைந்து ஒலி மாறுபாடின்றி (விகாரம்) தமிழில் வழங்கும் வடசொல்லாகும். இது வடமொழியில் "வந்தது" என்ற பொருளிலமைகிறது. ஆனால் தமிழில் இச்சொல் ஆ + கமம் என்ற இரு தமிழ்ச் சொற்களின் புணர்நிலைத் தொடராக அமைந்து அழகாகப் பொருளுணர்த்துகிறது. இங்கு 'ஆ' என்பது ஆன்மாவைக் குறிக்கும். கமம் என்பது நிறைவினைக் குறிக்கும். எனவே ஆகமம் என்ற சொல் தமிழில் 'ஆன்மாக்களுக்கு நிலைத்த நிறைவான பேரின்பத்தினை அடையச்செய்யும் நூல்' என்று பொருள்பட அமைந்திருக்கிறது. எனவே ஆகமம் என்ற சொல்லிலும் கமம் என்பது நிறைவு என்ற பொருள்படவே அமைந்திருப்பதைக் காணலாம். இவ்வாறு நிறைவு என்ற பொருள் கொண்ட கமம் முதல் நீண்டு காமம் ஆன போது அது அன்பின் நிறைவைக் குறித்தது. இதனையே பழந்தமிழர்களின் தூது இலக்கியம் "காமம் மிக்க கழிபடர் கிழவி" என்றழைக்கிறது. காமம் மிக்க கழிபடர் கிளவியை வெள்ளிவீதியாரின் "சிறு வெள்ளாங்குருகே சிறு வெள்ளாங்குருகே" என்ற நற்றிணைப் பாடல் மிக அழகாக விளக்குகிறது. பெண் புலவரான இவர் பாடிய இப்பாடல் திருமண வேட்கை கொண்ட தலைவி நாரையை நோக்கி தன்நிலை கூறி அதனைத் தலைவனிடம் கூறுமாறு வேண்டுவதாக அமைந்துள்ளது. அன்பின் நிறைவால் அல்லது மிகுதியால் பாடப்பட்ட இந்த "காமம் மிக்க கழிபடர் கிளவி" இன்றைய தூது இலக்கியங்களுக்கெல்லாம் முன்மாதிரியாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

திருவிளையாடல் திரைப்படத்திற்குப் பின்னர் நமக்கு மிகப்பரிச்சயமான குறுந்தொகைப் பாடல் இறையனார் என்னும் சங்ககாலப் புலவரால் இயற்றப்பட்டது. அப்பாடல்

> கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
> காமம் செப்பாது கண்டது மொழிமோ
> பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
> செறிஎயிற்று அரிவை கூந்தலின்
> நறியவும் உளவோநீ யறியும் பூவே
> - ( குறுந்தொகை - 2, இறையனார் ) -

என்று அமைந்திருக்கிறது.

“அழகிய சிறகுகளை உடைய வண்டிடம் தலைவன் தன் தலைவியின் கூந்தலைப்போல நறுமணமுடைய பூக்களைக் கண்டதுண்டோ?’’என்று வினவுவதாக அமைந்துள்ளது இப்பாடல். இதில் எனக்காக நான் விரும்பியதைக் கூறாமல் நீ மலர்களில் ஆராய்ந்து கண்டதைச் சொல் என்பதனைக் குறிக்க காமம் செப்பாது கண்டது மொழியுமோ?’’ என்ற அழகிய தொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கு காமம் விருப்பம் என்ற அதன் இன்னொரு பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதுவரை நாம் பார்த்து வந்த உதாரணங்கள் காமம் என்பது அழகிய தமிழ்ச் சொல் என்பதையும் அதற்கு நிறைவு, விருப்பம் என பல பொருட்கள் இருந்ததையும் உறுதிபட நமக்கு உணர்த்தி நிற்கிறது.

நிறைவு என்ற பொருள் கொண்ட “கமம்’’ மக்கள் அன்பாகக் கூடி மனநிறைவுடன் வாழும் இடத்தினைக் குறிக்க முதல் நீண்டு வழங்கிய பெயர்ச்சொல்லாகவே “காமம்’’ காணப்படுகிறது எனலாம். எனவே இன்று இலங்கைத் தமிழ் இடப்பெயர்களில் வரும் காமம் என்ற சொல் சிற்றூரைக் குறிக்கப் பயன்படுத்தப்படுவதே அன்றி காதல் அல்லது பாலியல் சம்பந்தமானது அல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம்.

### காமம் என்பது இழிவான சொல்லா?

பாடசாலைக் காலங்களில் குறிப்பாக தம்பலகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து திருகோணமலை நகரத்தில் கல்வி கற்ற காலத்தில் எனது ஊர்ப்பெயரினைக் கேட்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் மிகக் கவனமாக தம்பலகமம் எனப் பதிலளித்-திருக்கிறேன். காமம் என்ற பெயரினை உச்சரிப்பதில் இருந்த தயக்கமே இதற்கு காரணமாக இருந்தது. சங்ககாலத்தில் மிக உன்னத நிலையில் பயன்படுத்தப்பட்ட காமம் என்ற சொல்லினை இன்று நாம் தரந்தாழ்ந்த சொல்லாகக் கருதும் நிலையில் இருப்பதே இந்த தயக்கங்களுக்கெல்லாம் காரணமாக அமைகிறது எனலாம்.

‘நாற்றம்’ என்ற தமிழ்ச் சொல் பண்டைய நாட்களில் நல்ல மணத்தினை குறிக்கப் பயன்பட்டது. இதனை புறநானூறு, திருக்குறள் ஆகியவற்றில் ‘நாற்றம்’ என்ற சொல் கையாளப்பட்ட பாங்கினை வைத்துப் புரிந்துகொள்ளலாம்.

புறநானூறு 70 - ஆசிரியர் கோவூர்கிழார்
சோழன் - குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்

கிள்ளி வளவ னல்லிசை யுள்ளி
நாற்ற நாட்டத் தறுகாற் பறவை
சிறுவெள் ளாம்பன் ஞாங்க ரூதும்
கைவள் ளீகைப் பண்ணன் சிறுகுடிப்
பாதிரி கமழு மோதி யொண்ணுதல்

(நாற்ற நாட்டத் தறுகாற் பறவை - மணத்தை ஆராயும் ஆராய்ச்சியையுடைய வண்டு)

திருக்குறள் - அறத்துப்பால் - அதிகாரம்: நீத்தார் பெருமை
. குறள் 27:

சுவைஒளி ஊறுஓசை நாற்றமென ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு.

(சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று கூறப்படும் ஐந்து புலன்களின் வழிப் பிறக்கும் ஆசைகளை அறுத்து எறிபவனின் வசப்பட்டதே இவ்வுலகம்.)

நாற்றத்தின் நேரியாய்! சேயாய்! நணியானே! என்று மாணிக்கவாசகப் பெருமான் தாம் அருளிய திருவாசகத்திலே, கடவுளை நறுமணத்திற்கு ஒப்பிட்டு இருப்பதைக் காணலாம். இவ்வாறு உயர்வாக பயன்பட்டுத்தப்பட்ட நாற்றம் என்ற தமிழ்ச் சொல் வாசம் என்ற வடசொல் தமிழ் மொழியில் பயன்பாட்டில் வந்தபோது எதிர்மறைப் பொருளுக்கு தள்ளப்பட்டது. தற்காலத்தில் நாற்றம் அடிக்கிறது என்றால் கெட்ட மணம் வீசுகிறது என்றே பொருள் கொள்ளப்படுகிறது. இவ்வாறு உயர்ந்த பொருளில் வழங்கப்பட்ட ஒரு சொல் பின்னர் இழிந்த பொருளைக் குறிக்கப்பயன்பட்டால் அது இழிபொருட் பேறு எனப்படும்.

நாற்றம் என்பது பழந்தமிழில் குறிக்கப்பட்டதற்கு மாறாக இன்று அதற்கு எதிர்மாறான பொருளைக் குறிக்க வழங்கப்படுவது இழிபொருட் பேறுக்கு சிறந்த உதாரணமாகும். நாற்றம் என்ற சொல் போலவே காமம் என்ற சொல்லும் தமிழ்மொழியில் இழிபொருட் பேறுக்கு இன்னொரு உதாரணமாகிறது.

பத்துப் பாட்டும், எட்டுத்தொகையும் பாடிய சங்ககாலப் புலவர்கள் சிலரின் பெயரில் "காமம்" என்ற சொல்லாடலை நாம் காணலாம். குறுந்தொகையில் பாடிய காமஞ்சேர் குளத்தார், அகநானூறில் பாடிய மாதுரைக் காமக்கணி நப்பாலந்தனார் மற்றும் மாறோக்கத்து காமக்கணி நப்பாலந்தனார், வெறியாட்டு விழாவினைத் தனது பாடல்களில் பதிவு செய்த வெறியாடிய காமக்கண்ணியார் ஆகிய நான்கு சங்ககாலப் புலவர்களின் பெயர்களில் காமம் என்ற சொல் இணைந்திருப்பதைக் காணலாம்.அத்துடன் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரின் பெயர் கலிகாம நாயனார் என இருக்கிறது. சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணத்தில் (பெரியபுராணம்) பன்னிரெண்டாந் திருமுறையில் ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்

*(அதிகாரம்: கல்வி குறள் எண்:399)*

மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார்.

*(அதிகாரம்: புணர்ச்சிவிதும்பல் குறள் எண்: 1289)*

என்று காமத்தினை உயர்ச்சியாய்க் கையாண்டுள்ளார் திருவள்ளுவர். திருக்குறளில் காமம் என்ற சொல் அறத்துப்பாலில் தனிநிலைச் சொல்லாக ஓரிடத்திலும், பொருட்பாலில் தொடருக்கு நிலை மொழியாக ஒரு இடத்திலும், சொல்லுக்கு முதல் நிலையாக நான்கு இடத்திலும், காமத்துப்

பாலில் தனிநிலைச் சொல்லாகவோ, சொல்லுக்கு முதல் நிலையாகவோ முப்பத்தெட்டு இடங்களிலும் கையாளப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. அத்துடன் திருக்குறளுக்கு முன்னரே சங்க இலக்கியங்களில் காமம் என்ற சொல் தொண்ணுற்றொரு (91) இடங்களில் பயன்படுத்தப் பட்டிருப்பதையும் இங்கே குறிப்பிடுதல் அவசியமாகிறது. இவ்வாறு உயர்வாகப் பயன்படுத்தப்பட்டு வந்த காமம் என்ற தமிழ்ச் சொல் உடலின்பத்தை, சரசலீலையை உணர்த்தும் வகையில் இன்று புரிந்து கொள்ளப்படுகிறது.

காமம் என்றதும் வாத்சாயனாரின் வடமொழி நூலான காம சூத்திரம் நினைவுக்கு வந்து பலருக்கு மருட்சி அடைய வைக்கிறது. காமத்துப்பால் என்பது வள்ளுவர் இட்ட பெயர்-தானா என்று தமிழ் அறிஞர்கள் சிலர் ஐயம் கொள்வதற்கும், குறளில் நன்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் கூட காமத்துப்பால் என்பதைத் தவிர்த்து இன்பத்துப்பால் என்று பயன்படுத்தி வருவதற்கும் இதுவே காரணமாகிறது.

காமம் என்ற பழந்தமிழ்ச் சொல் அன்பின் நிறைவு, விருப்பம் போன்ற உயர்வான பொருளில் வழங்கப்பட்டுவந்த சொல் என்ற உண்மையைப் புரிந்துகொண்டால் இந்த ஐயங்கள், தயக்கங்கள் எல்லாம் தானாக விலகிவிடும்.

### காமம் என்ற இடப்பெயர் கூறு சமஸ்கிருத “(G)கிராம” என்ற சொல்லிலிருந்து உருவானதா?

காமம், கிராமம் என்ற இலங்கைத் தமிழர் இடப்பெயர்ச் சொல் சமஸ்கிருத “(G)கிராம[3] என்ற சொல்லிலிருந்து உருவானது என்ற வாதம் பன்னெடுங்காலமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. சமஸ்கிருத ‘காமா’ என்பதே சிங்களத்திலும் (கம, கமுவ), பாளி போன்ற பரகத மொழிகளிலும் பொதுவான வேர் கொண்ட சொல்லாகத் திகழ்கின்றது என்பது இதற்கு வலுச்சேர்க்கும் கருத்தாகக் கொள்ளப்படுகிறது.

சங்க இலக்கியங்களில் காமம் நிறைவான இன்பம், விருப்பம் ஆகிய பொருள்களில் பயன்படுத்தப்பட்டுள்ளதே தவிர இடப்பெயராக குறிக்கப்படவில்லை என்பதும் சங்க கால ஊர்ப் பெயர்களிலோ அல்லது இற்றைவரையான தமிழக இடப் பெயரிலேயோ “காமம்” என்னும் ஈற்றுப்பெயர் கொண்டமைந்த இடப் பெயர்கள் வழங்கிவரவில்லை என காமம் என்பதை சமஸ்கிருத “(G)கிராம” என்பதன் தமிழ் வடிவமென்று வாதிடுவோர் கூறுகின்றனர்.

தமிழறிஞரும், சொல்லாராய்ச்சி வல்லுநருமான தேவநேயப் பாவாணர் அவர்கள்.

* “ஒரு சொல்லை ஒரு மொழிக்குரியதென்று அறிதற்கு அதன் பகுதி (stem) அல்லது மூலம் (root) எம்மொழியிலுள்ள தென்று அறிதல் வேண்டும்.”
* ‘‘ஒரு சொல்லின் பகுதி அல்லது மூலம் பலமொழியிலிருப்பின், எம்மொழியில், பகுதி இயற்கையானதென்றும், பொருள் சிறந்ததென்றும் அறிதல் வேண்டும்”

என்று கூறுகிறார்.

தமிழ்மொழியில் உள்ள ஒரு சொல், சமஸ்கிருத மொழியிலும் இருந்தால் அது சமஸ்கிருத மொழிச் சொல், தமிழ்மொழிச் சொல்லல்ல என்றொரு தவறான கண்ணோட்டம் இருக்கிறது. சமஸ்கிருதச் சொற்கள் என ஒதுக்கப்பட்ட பல சொற்கள் தமிழ் மொழியிலிருந்து ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் சமஸ்கிருத மொழிக்குச் சென்றவை. அப்படிச் சென்ற சொற்கள் பல காலப்போக்கில் பேச்சுவழக்கில் பல்வேறு திரிபுகளுடன் பிறமொழிகளில் வழங்கப்படுகின்றன. இந்த அடிப்படையில் காமம் என்பது சொல்லின் முதலெழுத்துக்கு இடையில் ர் சேர்த்து ஒலித்து க்ரமம் (க் + ர் + ஆமம்) எனத் திரிந்து (கிராமம்) க்ராமம் எனும் சமஸ்கிருதச் சொல்லாக மாறி மக்கள் ஒற்றுமையாக சேர்ந்து நிறைவுடன் வாழுமிடங்களைக் குறிக்க பயன்பட்டிருக்க வேண்டும் என்று தனித்தமிழ் இயக்க மொழியில் ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

இந்த இரண்டு தர்க்கவாதங்களும் இலங்கைத் தமிழர் இடப்பெயர் ஆய்வில் ஆர்வங்கொண்டோரை “காமம்” என்னும் ஈற்றுப்பெயர் கொண்டமைந்த இடப்பெயர்கள் மீது அதீத ஆர்வங்கொள்ளச் செய்கின்றன எனலாம். அத்துடன் இலங்கையில் கிடைத்திருக்கின்ற கல்வெட்டு ஆதாரங்களில் இவ்வகை ஊர்ப்பெயர்கள் ஆயிரம் ஆண்டு பழமை வாய்ந்தவை என்பதும் இவற்றின் மீதான ஆர்வத்தினைத் தூண்டுகின்ற இன்னொரு அம்சமாகும். உதாரணமாக கிரிகண்டகிரிகாமம், கிரிகாமம் (கி.பி *11* ஆம் நூற்றாண்டு), வெல்காமம் (வேள்காமம்) (*11* ஆம் நூற்றாண்டு), தம்பலகாமம் ( *13* ஆம் நூற்றாண்டு), வல்லிகாமம் (*12* ஆம் நூற்றாண்டு) போன்ற இடப்பெயர்களைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

தம்பல + காமம் = தம்பலகாமம்

இந்த அடிப்படையில் சேற்று வயல் நிறைந்த விவசாயக் கிராமமான தம்பலகாமம் என்னும் ஊரின் இடப் பெயரினை நோக்கினால். அவ்விடப்பெயரின் பொதுக்கூறான காமம் (காமம் kāmam (அக. நி.) - 1. Village - ஊர். *2.* Inhabitant- குடி.) ஊரினைக் குறிக்கப் பயன்படுகிறது என்பதனை மேலே விரிவாகப் பார்த்திருந்தோம். இனி அவ்விடப்பெயரின் சிறப்புக் கூறான தம்பல் தொடர்பில் ஆராயலாம்.

இங்குள்ள சிறப்புக் கூறான ‘தம்பல்’ என்பது இருவேறு பொருள் கொண்ட ஒரு சொல். தம்பலம், தம்பல் என்பன வெற்றிலையுடன் தொடர்புடையது. தம்பல், தம்பலடித்தல், தம்பலாடல் என்பன சேற்றுடன் தொடர்புடையது. தம்பலகாமத்திற்கு இந்த இரு அர்த்தத்திலும் பலரால் விளக்கம் கொடுக்கப்பட்டிருப்பதனைக் காணமுடிகிறது. எனவே தம்பல் என்பதற்கான வெற்றிலை, சேறு எனும் இரு விளக்கங்களை ஊரின் சிறப்பியல்புடன் பொருத்தி ஆராய்வது அவசியமாகிறது.

## தம்பல் - வெற்றிலை

தம்பல், தம்பலம் என்னும் பெயர்கள் வெற்றிலையைக் குறிக்க பயன்பட்டதை இலக்கியங்கள் மூலம் அறியலாம்.

பூ அணை பலவும் கண்டார்
பொன்னரிமாலை கண்டார்.
மே வரும் கோபம் அன்ன
வெள்ளிலைத் தம்பல் கண்டார்
ஆவியின் இனிய கொண்கர்ப்
பிரிந்து. அறிவு அழிந்த விஞ்சைப்
பாவையர் வைக. தீய்ந்த
பல்லவ சயனம் கண்டார்
*(கம்பரா. வரைக்கா. 49)*

என்ற கம்பராமாயணம்-பாலகாண்டம்-வரைக்காட்சிப் படலத்தில் உள்ள பாடலில் (வெள்ளிலைத் தம்பல்) வெற்றிலைத் தம்பலங்களைக் கண்டார் எனக் குறிப்பிடுகிறது. அத்துடன் கம்பராமாயணத்தின் கிட்கிந்தா காண்டத்திலுள்ள கார் காலப் படலத்திலும் ஒரு பாடலில் தம்பலம் என்ற சொல் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

எள் இட இடமும் இன்றி
எழுந்தன இலங்கு கோபம்,
தள்ளுற, தலைவர்தம்மைப்
பிரிந்தவர் தழீஇய தூமக்
கள்ளுடை ஓதியார் தம்
கலவியில், பலகால் கான்ற
வெள்ளடைத் தம்பல் குப்பை
சிதர்ந்தென, விரிந்த மாதோ.

இங்கு தம்பலம் என்பதன் கடைக்குறையான தம்பல் என்பதனை வெற்றிலை தின்று சிவந்த எச்சில் என்றே பொருள் கொள்ளவேண்டும். இவற்றோடு கலித்தொகையில் உள்ள “தையால் தம்பலம் தின்றியோ”(65) என்னும் பகுதியும்

பாரா, குறழா, பணியா, பொழுது அன்றி,
யார், இவண் நின்றீர்? எனக் கூறி, பையென,
வை காண் முது பகட்டின், பக்கத்தின் போகாது,
தையால்! தம்பலம் தின்றியோ? என்று, தன்
பக்கு அழித்து, கொண்டீ எனத் தரலும் யாது ஒன்றும்

திருக்கோவையாரிலுள்ள "பொதுத் தம்பலம் கொணர்ந்தோ புதல்வா எம்மைப் பூசிப்பதே" *(396)* என்னும் பகுதியும்

கதிர்த்த நகைமன்னுஞ் சிற்றவ்வை
மார்களைக் கண்பிழைப்பித்
தெதிர்த்தெங்கு நின்றெப் பரிசளித்
தானிமை யோரிறைஞ்சும்
மதுத்தங் கியகொன்றை வார்சடை
யீசர்வண் தில்லைநல்லார்
பொதுத்தம்ப லங்கொணர்ந் தோபுதல்வா
எம்மைப் பூசிப்பதே

தம்பலம் என்னும் சொல் வெற்றிலையைக் குறிக்க இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டதனை உறுதிப்படுத்துகின்றது. தம்பலம் என்பது 'தாம்பூலம்' என்னும் சம்ஸ்கிருதச் சொல்லாக மாறியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இந்த அடிப்படையில் சிலர் "தம்பலகாமம்" எனும் ஊர்ப்பெயருக்கான விளக்கத்தினை வெற்றிலைச் செடி அதிகமாக உள்ள கிராமம் அல்லது வெற்றிலை மெல்லும் பழக்கமுடையவர்களை அதிகமாகக் கொண்ட கிராமம் எனக் கருதினர். இதுவே 19 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் வாழ்ந்த, புகழ் பெற்ற தமிழர்களில் ஒருவரான திரு.சைமன் காசிச்செட்டி அவர்கள் 1834 ஆம் ஆண்டில் வெளியிட்ட The Ceylon Gazetteer (Author - Simon Casie Chitty) இல் "தம்பலகாமம்" Tambalagam - The village of betel leaf எனக் குறிப்பிட காரணமாக அமைந்தது.

"தம்பலகாமம்" என்ற ஊர்ப்பெயரினை வெற்றிலையுடன் தொடர்புபடுத்துவது இன்றைய நிலையில் பலருக்கு

குழப்பத்தினை ஏற்படுத்தலாம். அறியக்கிடைக்கும் வரலாற்றுத் தகவல்கள் எதிலும் "தம்பலகாமம்" வெற்றிலைக்குப் பெயர்பெற்ற ஊராக ஒருபோதும் இருந்ததில்லை. ஒரு ஊர்ப்பெயர் வைக்கப்பட்டது என்று புலமைசார் நோக்கில் அவ்வூர்ப்பெயருக்கான காரணம் கற்பிக்கப்படும்போதே இவ்வாறான குழப்பங்கள் ஏற்படுகின்றன. ஊர்ப்பெயர்கள் பாமரமக்களின் அன்றாட வாழ்வுடன் இணைந்ததாக, அந்த இடத்தின் இயற்கை அமைப்புடன் பொருந்தியதாக உருவாகி வந்தது என்ற நோக்கில் இவ்விடப்பெயரினை ஆராய்வதே பொருத்தமானதாக இருக்கும்.

## தம்பல் - சேறு

"தம்பல்" என்ற சொல்லுக்கு சேறு என்று இன்னொரு பொருள் இருக்கிறது. தம்பலடித்தல் என்பது பயிரிடுதல், உழவு செய்தல் என்பனவற்றைக் குறிப்பதாகவும், தம்பலாடல் என்பது சேறடித்தல், சேறாடால் போன்றவற்றைக் குறிப்பதாகவும் பொருள் கொள்ளப்படுகிறது. சேற்று வயல்கள் நிறைந்த கிராமமான தம்பலகாமத்துடன் இப்பொருள் மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளது.

"தம்பலகாமம்" கழனி மலையில் கண்டெடுக்கப்பட்ட இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய பிராமிக் கல்வெட்டு ஒன்றில் நுகம் எனக் குறிக்கப்பட்டுள்ளது.[(4)] நுகம் ஏரிலும், வண்டியிலும் காளைகளைப் பூட்டப் பயன்படும் மரத்தினைக் குறிக்கப் பயன்படும் சொல். எனவே இக்காலப்பகுதியில் விவசாயம் இக் கிராமத்தின் பிராதன தொழிலாக இருந்திருக்கும் என்பதனை இக் கல்வெட்டு ஊகிக்கச் செய்கிறது.

பதினேழாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் உருவான இலக்கியமான திரிகோணாசலப் புராணம் "கன்னல் வேலி வரம்பு உடுத்த கழனி சூழும் தம்பை நகர்" என இவ்வூரினை வர்ணிக்கிறது. அத்துடன் "நீர் நிறை வளம் சேர் தம்பைமா நகர்" எனவும் புகழ்கிறது. இவ்வாறு கழனி (வயல்) சூழும் ஊராக

குறிப்பிடப்படும் இவ்வூர் நீண்டகாலமாக சேற்றுவயல் நிறைந்த கிராமமாக இருந்ததை ஒல்லாந்து ஆவணமொன்று விரிவாகப் பதிவு செய்திருக்கிறது.

1786 ஆம் ஆண்டில் திருகோணமலை மாவட்ட ஒல்லாந்து ஆளுநராக கடமையாற்றியவர் Jacques Fabrice van Senden அவர்கள். அவரது திருகோணமலை மாவட்ட சுற்றுப்பயண அறிக்கையில் (15.05.1786 - 21.06.1786) இவ்வூரின் இயற் கையான வனப்பினை டச்சு மொழியில் பதிவு செய்திருந்தார். அதனை காலனித்துவ திருகோணமலை (பக்கம் 105) என்ற நூலுக்காக கலாநிதி கனகசபாபதி சரவணபவன் அவர்கள் கீழ்க்கண்டவாறு தமிழாக்கம் செய்திருக்கிறார்.

"தாழ்ந்த நிலப்பகுதியில் குறுந்தூர இடைவெளிகளில் தீவுத் திடல்களாகக் காட்சிளிக்கும் கிராமங்களைச் சூழ்ந்து பரந்து அழகாகக் காட்சியளிக்கும் நெல் வயல்கள், காற்றில் அலை அலையாக ஆடும் நெற்கதிர்கள், இந்த அழகிற்கு மகுடமளிப்பது போன்று ஒவ்வோரு மேட்டிலும் காணப்படும் தென்னைமரம், அது இன்னும் அறுவடை செய்யப்படாத இளம் பச்சை நிற வயல்களுக்கு நிழலூட்டுகின்றது. அறுவடை முடிந்த வைக்கோல் குவியலும்,கரும்பச்சை மரங்களும் இணைந்து எங்கும் அழகாக காட்சியளிக்கின்றது...."

இந்த வர்ணிப்பு எழுதப்பட்டு இன்றைக்கு இறுநூற்று முப்பது (230) வருடங்கள் கழிந்து விட்டன. இருந்தும் இந்த விவசாயக் கிராமம் அதே இயற்கை அழகோடு இன்றும் நமக்கு காட்சி தருகிறது. காலனித்துவ ஆட்சி, தொடர்ந்து வந்த கொடிய யுத்தம், இனவன்முறை, இடப்பெயர்வுகள், இயற்கை அனர்த்தங்கள் தாண்டி இன்றும் இதே காட்சிகளைக் காண்பதற்கு தம்பலகாமத்தின் வற்றாத இயற்கை வளமே காரணமெனலாம். எனவே வரலாற்றுக் காலம் முதல் இக் கிராமம் சேற்று வயல், விவசாயம் என்பனவற்றுடன் கொண்டிருந்த தொடர்புகளைக் கருத்தில் கொண்டு "தம்பல்" என்ற சொல்லுக்கு சேற்றுவயல் நிறைந்த பிரதேசம் என பொருள் கொள்வதே பொருத்தமானதாக இருக்கும். இந்த அடிப்படையில் "தம்பலகாமம்" என்பது தம்பல் (சேறு) + காமம் (ஊர்) என்ற இரு சொற்களின் புணர்நிலைத் தொடராக அமைந்து அழகாகப் பொருளுணர்த்துவதை அறியலாம்.

இவ்வூரின் வரலாற்றாதாரம் கொண்ட பிற்பட்ட காலப் பெயர்களான “தம்பலகாமப் பற்று”, தம்பலகாமதேசம், தமனதோட்ட Tamanatota, Tamblegam, Tampalagam “தம்பை நகர்”, “தம்பலகமம்”, தம்பலகமுவ என்பனவற்றில் “தம்பலகாமம்” என்பதே அதிகூடிய வரலாற்று நீட்சியைக் கொண்ட பெயராக விளங்குவதனை முன்னம் விரிவாகப் பார்த்திருந்தோம். தற்போதுவரை கிடைக்கப் பெற்றிருக்கும் வரலாற்று ஆவணங்களின் அடிப்படையில் இவ்வூரின் பெயரை வரலாற்றாதாரம் கொண்ட புராதனமான பெயரான தம்பலகாமம் என அழைப்பதே பொருத்தமானது என்பதே இவ்வாய்வின் முடிவாகும்.

உசாத்துணை

*1.* புதையுண்டுபோன புராதன இந்துக் கோயில்கள் (அனுராதபுரம் மாவட்டம்), என்.கே.எஸ்.திருச்செல்வம், *2017*, பக்கம் *285* தொடக்கம் *291*

*2.* இலங்கை ஊர்ப்பெயர்கள் -ஓர் ஒப்பாய்வு முனைவர் கு. பகவதி, *(1991)*, பக்கம் *104*

3. (அ) New Graamam is from the sanskrit Graama, from which the Sinhalese word gama is derived. So that from both Kaamam and gama came from antreir common stock...... I am however of opinion that where Kaamam is found in place name of the Jaffna peninsula- it is a Tamilized form of gama-,because the Tamil word Kaamam is not used by the Tamils of the peninsula.' (Horsburgh-1916 : pp. 54-55.)

(ஆ) காமம் என்பது நகரம் அல்லது கிராமம் என்கிறார் வின்ஸ்லோ, வடமொழி “க்ராம” என்ற சொல்லிலிருந்தே காமம் என்ற சொல் தோன்றியுள்ளது, சிங்களமொழியில் “கம”, “கமுவ” என்ற ஈறுபெறும் இடப்பெயர்களுள. அப்பெயர்களும் வடமொழிக் “க்ராம” என்பதிலிருந்தே ஆக்கம் பெற்றுள்ளன. எனவே தமிழில் வரும் காமம், சிங்களத்தில் வரும் “கம”, “கமுவ” -ஆகிய மூன்று

சொற்களும் ஒரே வடமொழிச் சொல்லிலிருந்து தோற்றம் பெற்றன என்பது தெளிவு. இலங்கை இடப்பெயர் ஆய்வு *2 (1989 ) - கலாநிதி இ. பாலசுந்தரம் பக்கம் 74,75*

(இ)சிங்கள மொழி இடப்பெயர்களில் கணிசமானவை கம, கமுவ, நகர, புர போன்ற பின்னொட்டுச் சொற்களோடு வருகின்றன. இவை தமிழ் இடப்பெயர்களில் கமம், காமம், நகர், புரம் என வருகின்றன. ஆனால் தமிழர்கள் பிற்காலத்தில் வந்து இலங்கையில் குடியேறியவர்கள் என்ற கருத்துடையோர் முன்பு சிங்கள மக்கள் வாழ்ந்த இடங்களே பின்னர் தமிழ் மயப்படுத்தப்பட்டதென்பதற்கு இப் பெயர்களையும் சான்று காட்டி வாதிடுகின்றனர் (Kannangara 1984). *-இலங்கைத் தமிழரின் பண்டைய கால நாணயங்கள், கலாநிதி பரமு. புஷ்பரட்ணம் 2001 -பக்கம் 42*

(ஈ) Kam, Kamam

These two are very common place name suffixes down to the contemporary period. An inscription of the 1st century A.D. in the Tirukonamalai district makes a note of *vel-kama.* In this record several Prakrit words are found Tamilised which leads Paranavithana ( 1983: 112- 13) to conclude that the scribe of the record must have been a Tamilian. vel was a name connected with a minor chief in ancient Tamil Nadu (e.g. *Vel-nätu, Vel-ur)* and so such a name in Sri Lanka might denote the influential person or leader of a community after whom the village or city was named. The kama of the record corrupted into kamam and continued to denote place names as revealed by Cola inscriptions and Portuguese documents.

*பேராசிரியர் ப. புஷ்பரட்ணம் (*Tamil place names as gleaned from the brahmi inscriptions of srilanka)

*4.கழனிமலைக் கல்வெட்டுக்கள்* Dr. *த.ஜீவராஜ் கலைக்கேசரி, பக்கம் 38*, July *2018*

இயல் 7

# கல்வெட்டுக்கள், செப்பேடுகளில் காமம் எனும் ஈற்றுப்பெயர் கொண்ட இடப்பெயர்கள்

இதுவரை தம்பலகாமம் ஊர்ப்பெயரினை கல்வெட்டுக்கள், ஆவணங்கள், இலக்கியங்கள் போன்ற சான்றாதாரங்களோடு விரிவாகப் பார்த்திருந்தோம். இலங்கையின் பல்வேறு மாவட்டங்களில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களில், செப்பேடுகளில் காணப்படும் காமம் எனும் ஈற்றுப்பெயர் கொண்ட இடப்பெயர்கள் தொடர்பான விபரங்கள் சிலவற்றை இப்பகுதியில் பார்ப்பது அவசியமாகிறது. இல்லையெனில் தம்பலகாமம் ஊர்ப்பெயர் தொடர்பான புலமைசார் நோக்கிலான ஒரு உணர்ச்சிபூர்வமான ஆய்வுநூலாக இது மாறிவிடும்.

ஒரு இடத்தின் பெயர் அமைந்த அதே முறைமை அப்பகுதியில் உள்ள வேறுபல ஊர்களுக்கும் செல்லுபடியாகக்கூடியதாக இருக்கவேண்டும். இது கேரள இடப்பெயர் வரலாற்றாய்வின் முன்னோடியான பேராசிரியர் திரிவிக்ரமன் தம்பி(1) அவர்கள் பின்பற்றிய இடப்பெயர் ஆய்வு விதிகளில் ஒன்று. அவ்விதிக்கமைய தம்பலகாமம் எனும் ஊர்ப்பெயரினைப் போன்று அமையப்பெற்ற கிரிகண்ட கிரிகாமம், வல்லிகாமம், மாசேனகாமம், கதிர்காமம், பழுகாமம், பனங்காமம், பனாவாசத்துளாகாமம், வெல்காமம் போன்ற இடப்பெயர்களின் வரலாற்று ஆதாரங்கள் கீழே சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளது.

## கிரிகண்ட கிரிகாமம்

திருகோணமலை மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட நிலாவெளித் தான சாசனத்தில் கிரிகாமம், கிரிகண்ட கிரிகாமம் எனும் இடப்பெயர்கள் இடம்பெற்றுள்ளன. கிரிகண்டபர்வதம் என்று அழைக்கப்படும் திருகோணமலை திரியாயிலுள்ள கந்தசாமி மலையினை உள்ளடக்கிய நிலப்பிரிவே கிரிகண்டகாமம் எனப் புரிந்துகொள்ள முடிகிறது.

ஸ் (வஸ்தி ஸ்ரீ)
சா ஸநம் சாஸ்வத ம் சம்பு ஸ்ரீ கோணபர்வத ம் திருகோண
மலை மத்ஸ்யகேஸ்வரமுடைய மஹா தே வற்கு நிச்சலழிவு
க்கு நிவந்தமாக சந்த்ராதித்தவற் செய்த உராகிரிகாம கி(ரி)
கண்ட கிரிகாமம் நீர் நிலமும் புன்செய்யும் இடமும்
ஊர்ரிருக்கையும் தே வாலயமும் மே நோக்கிய ம
ரமும் கீழ் னொக்கிந கிணறும் உட்பட்ட இந்நிலத்து
க் கெல்லை கிழக்குக் கழி எல்லை தெற்கெல்லை க
ல்லு குடக்கு எத்தகம்பே எல்லை வடக்கெல்
லை சூலக்கல்லாகும் சுடர் கோணமா மலை தனி
ல் நீலகண்டர் (க்)கு நிலம் இவ்விசைத்த பெருநான்
கெல்லையிலகப்பட்ட நிலம் இருநூற்று
ஐம்பத்திற்று வேலி இது பந்மா யே
ஸ்வரரக்ஷை[2]

நிலாவெளிப் பிள்ளையார் ஆலயத்தின் தீர்த்தக் கிணற்றின் படிக்கல்லாக அமைக்கப்பட்டிருக்கும் இச்சாசனம் சோழர் ஆட்சிக்காலத்தின் ஆரம்ப கட்டத்துக்குரியதாகும். திருக்-கோணேச்சரத்திற்கு தானம் வழங்கப்பட்டதை விரிவாகப் பதிவுசெய்யும் இச்சாசனம் அவ்வாலய நாள் வழிபாட்டுக்கு வேண்டிய செலவுகளுக்காக 250 வேலி நிலம் வழங்கப் பட்டமையை வர்ணிக்கிறது. அத்துடன் திருகோணமலை, கோணமாமலை எனும் இடப்பெயர் வடிவங்கள் இச்சாசனத்தில் இடம்பெற்றுள்ளமை சிறப்பம்சமாகும்.

## வல்லிகாமம்

இரண்டாம் இராசாதிராச சோழனுடைய ஆட்சிக்காலத்தில் இலங்கையை ஆட்சிசெய்த பராக்கிரமபாகு மன்னன் சோழ நாட்டின் மீது படையெடுக்க முயற்சிகளை மேற்கொண்டான். இதன் ஒரு பகுதியாக இலங்கையில் ஊராத்துறை, புலைச்சேரி, மாதோட்டம், வல்லிகாமம், மட்டி வாழ் எனும் இடங்களில் தன் படைகளைத் திரட்டியதோடு படகுகளையும் தயார் செய்தான். இதனை திருவாலங்காட்டு கல்வெட்டு கீழ்வருமாறு பதிவு செய்கிறது.

இவன் தன் படைநிலையான ஊராத்துறை, புலைச்சேரி, மாதோட்டம், வல்லிகாமம் , மட்டிவாழ் உள்ளிட்ட ஊர்களிலே படைகளும் புகுதவிட்டு படவுகளுஞ் செய்விக்கிறபடி கேட்டு இதுக்குப் பரிகாரமாக ஈழத்தான் மருமகனராய் ஈழ ராச்சியத்துக்குங் கடவராய் முன்பே போந்திருந்த சீவல்லவரை அழைப்பித்து இவர்க்கு வேண்டுவனஞ் செய்து இவரையும் இவருடனே வேண்டும் படைகளும் ஊராத்துறை, வல்லிகாமம், மட்டிவாழ் உள்ளிட்ட ஊர்களிலே புகலிட்டுப் புலைச்சேரி , மாதோட்டம் உள்ளிட்ட ஊர்களும் அழித்து ஈழத்தானினவாய் இவ்வூர்களில் நின்ற ஆனைகளுங் கொண்டு ஈழமண்டலத்தில் கீழ்மேல் இருபதின் காதமேற்படவுந் தென் வடல் முப்பதின்காதமேற்படவும் அழித்து இத்துறையில் இவன் மனிசராயிருந்தாரில் கொல்வாரையுங் கொன்று பிடிப்பாரையும் பிடித்து இவர்களையுஞ் சரக்காய்க் கைக்கொண்டனவும் பிடித்த ஆனைகளும் அழைப்பித்து இவன் தமக்குக் காட்டி ஈழமண்டலத்துக் காரியம் எல்லாப் படியாலும் இவன் (சோழத்தளபதியாகிய பழையனுருடையான வேதவன் முடையான் அம்மையப்பனான அண்ணன் பல்லவராயன்) அழியச் செய்வித்த படிக்கும் (சதாசிவபண்டாரத்தார் பிற்காலச் சோழர் சரித்திரம்: 1967)

இங்கு குறிப்பிடப்படும் வல்லிகாமம் என்பது இந்நாட்களில் வலிக்காமம்[(3)] என்ற பெயருடன் மன்னாருக்குத் தென்கிழக்கில் ஐந்து மைல் தொலைவில் இருக்கிறது.

## மாசேனகாமம் - மாத்தளை மாவட்டம்

மத்திய மாகாணத்தைச் சேர்ந்த மாத்தளை மாவட்டத்தின் கலேவெல என்னும் ஊரில் உள்ள விஹாரேஹின்ன எனும் இடத்தில் எறிவீரர் எனும் படைப்பிரிவின் கல்வெட்டு உள்ளது. இச்சாசனம் 12 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் அங்கிருந்த பட்டணத்து பெருமக்களுக்கும் எறிவீரர் என்னும் படைப் பிரிவினருக்கும் இடையில் ஏற்பட்டிருந்த உடன்பாடு ஒன்றினைப் பதிவுசெய்திருக்கிறது.

14. மெலியப் புகள் (பெருகத்) திசையனைத்துஞ் செவிடு படாமற் செங்கோலே

15. முன்னாக ஸமய தர்மம் இநிது நடாத்துகின்ற பதிநெண்பூமி நான்கு

16. திசை நானாதேசித் திசை விளங்கு திசையாயிரத்தஞ்ஞூற்றுவர் கண்டிய மு

17. (த்தர்) உள்ளிட்ட பதிநெண்பூமி வீரரோம் மாசேனகாமமான தந்மசாகரப்பட்டன

18. (த்துப்) பெருமக்கள் (எங்களை) நோக்கிச் செய்த சிறப்பாவது நம் உடப்பிறந்த

19. மு(கூத) வளன் முத்தநான நானாதேசி யாண்டானை வேணாடுடையார் பிடித்துச் சி-

20. றை செய்து ஒண்பாதுகைத் தளை யிழுப்பின் போது ஆடாங்காசு குடுத்து வீடு கொண்-

21. டமையாலும் வெள்ளித்தாலி செய்வித்துப் பதிநெண்பூமி எறிவீரந் தானமெ-

22. ன்று நாமஞ்சாத்திக் குலத்தின் பேரிட்டுப் பெருஞ் சிறப்பு செய்தமையில் நாங்[(4)]

இக்கல்வெட்டில் அப்பட்டணம் மகாசேனகாமமாகிய நன்மசாகரப்பட்டனம் என்று சொல்லப்படுகிறது. இப்பட்டணத்தின் பழைய பெயரும் புதிய பெயரும் சேர்த்துச் சொல்லப்படுவது கவனிக்கத்தக்கது. மகாசேனகாமம் என்னும் ஊர் ஒரு காலப்பகுதியில் வணிக நகராகிய பின்பு அதன் பெயர் நன்மசாகரப்பட்டனம் என்று மாற்றப்பட்டிருக்கிறது என்பதையே இச்சாசனம் உணர்த்துகிறது.

## கதிர்காமம்

சம்மாந்துறைச் செப்பேடுகள் ராமநாதர் என்னும் பிராமணருக்கு மானியம் கொடுத்தமை பற்றிப் பதிவு செய்கிறது. கண்டி அரசனாகிய இரண்டாம் இராஜசிங்கனின் கட்டளைப்படி அவன் இறந்து சில ஆண்டுகளின் பின்னர் சம்மாந்துறை வன்னியனாரின் நிர்வாகத்தில் உள்ளவர்களால் இவை எழுதப்பட்டிருக்கும் என்று பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் கருதுகிறார். இந்த அடிப்படையில் இச்செப்பேடுகள் கி.பி 1693 (1615 சகவருடம்) இல் எழுதப்பட்டிருக்கும்.

முதலாம் செப்பேடு

1. 1615 ஆண்டு
2. சித்திரை மா(தம்) 29 திய
3. தி புதன் கிழமை வி
4. சாக நட்செத்திரமும் ப
5. வுறணமையும் கிரக
6. ண புண்ணிய கா
7. லத்தில் பரராச்சேசு
8. வர கனகமண்டல
9. சோழேந்திர ரணசூ
10. ர விக்குரம பிறதாபர
11. ரகிய ராசிங்கமகாராசா
12. ஆண்டவர் திருக்கருணை
13. புரிந்து மட்டக்களப்பு
14. தேசத்தில் சம்பாந்து
15. றைக் கடுத்த பண்டித்தீ
16. வுவெளிப்பத்துக்குச் சேர்

17. ந்த கோணவட்டவா
18. ன் வெளியும் கோட்ட
19. ரன் பத்தும் இதுகளுக்க
20. டுத்த யிலவிசங்களும் உ
21. ள்பட ராமநாத பிராமண
22. னாருக்கு பிள்ளை பிள்
23. ளை தலமுறைக்கு தா
24. ராத்தமாக கிடைத்தது.

இரண்டாம் செப்பேடு

25. இதில் யாதாமொருந்
26. தர் தடை பண்ணினால்
27. காசிலே ராமேசுரத்
28. திலே கதிர்காமத்தில் மா
29. ணிக்க கெங்கையிலே
30. தீயிட்ட பாவத்தில் போ
31. வாராகவும் யிப்படிக்கு
32. செப்பு பட்டையங்
33. கிடைத்த பணிவி
34. டைப்படியாகவும்[5]

சாசனத்தின் ஓம்படைக்கிழவி அமைந்துள்ள இரண்டாவது செப்பேட்டில் மேற்படி தானத்துக்கு தீங்கு விளைவிப்போர் அடையும் கதியினைக் குறிப்பிடும் பகுதியில் கதிர்காமம் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு முதலாவது செப்பேட்டில் மட்டக்களப்பு தேசம் என்று பொறிக்கப்பட்டிருப்பது ஒரு சிறப்பம்சமாகும்.

## பழுகாமம்

பழுகாமத்தில் களுவாஞ்சிக்குடியில் இருந்து பழுகாமம் நோக்கிச் செல்லும் வீதியின் இரு பக்கத்திலும் காணப்படும் இறப்புத் தொடர்பான கல்வெட்டுக்களில் கற்பகநாச்சியாரின் இறப்பைப் பதிவுசெய்யும் கல்வெட்டும் ஒன்று. 1920 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் பழுகாமம் கற்பகநாச்சியார் தெய்வீகமடைந்தார் என்பதினை இக்கல்வெட்டு அறியத்தருகிறது.

1. 1920ம் ஆ
2. கார்த்திகை மீ
3. 24 பழுகாமம்
4. மி.ஆசிரி
5. பிள்ளை வி கணப
6. திப்பிள்ளை கற்பகநா
7. ச்சியார் தெய்வீக
8. மடைந்தார்.[6]

### பனங்காமம்

*வட இலங்கையின் அடங்காப்பற்றினை ஆட்சிசெய்த வன்னிபங்கள் ஒன்றிணைந்து 1722 ஆம் ஆண்டில்* தமிழ்நாட்டிலுள்ள சிதம்பரத்தில் மடம் ஒன்றிற்கு வழங்கப்பட்ட தானத்தை கயிலை வன்னியனார் மட தர்மசாதனப் பட்டயம் பதிவு செய்திருக்கிறது.

7. த்தில் பறுவமும் சுவாதி நட்சத்திரமும் குருவாரமுங் கூடி
8. ன சுப தினத்திலே சிதம்பரம் பரராசசேகர மகாராசாவின்
9. கட்டளை நடத்தும் சூரியமூர்த்தித் தம்பிரானவர்களுக்குப்
10. பனங்காமம் பத்து வன்னிபம் நிச்சய சேனாதிராய
11. முதலியா ரவர்களும் குலசேகர முதலியா ரவர்களும்
12. கரிக்கட்டு மூலைப் பத்துத் தென்ன மரவடிப் பத்து
13. வன்னிபம் புவி நல்ல மாப்பாண வன்னியனாரவர்க
14. ளும் புண்ணியபிள்ளை வன்னியனாரவர்களும் மேல்ப
15. த்து வன்னிபமான சூராண தீரரான வன்னியராய
16. முதலியா ரவர்களும் கந்தையினா வன்னியனா ரவர்க
17. ளும் மேல்பத்து முள்ளியவளை வன்னிபம் இலங்கை நா
18. ராயண முதலியாரவர்களும் மயிலாத்தை உ
19. டையா ரவர்களும் பச்சிலைப் பள்ளி இறைசுவ
20. தோர் இலங்கை நாராயண முதலியாரவர்
21. களும் நீலயினா வன்னியனாரவர்களும்
22. மூத்தர் வன்னியனாரவர்களும் இவ
23. வர்களைச் சேர்ந்த ஊர்களிற் குடியானவர்
24. களும் தங்கள் கயிலைப்பிள்ளை வன்னியனார
25. வர்கள் மட தர்மத்துக்குத் தர்ம சாதனப்
26. பட்டயம் கொடுத்த படி கமத்துக்கு மூன்று மர

27. க்கால் நெல்லு மட தர்மத்துக்குச் சந்திராதித்திய
28. வரைக்கும் புத்திர பவுத்திர பாரம்பரியமும் கொடுத்து வ
29. ரக் கடவோமாகவும். இப்படிச் சம்மதித்துச் சூரிய மூர்த்தித்
30. தம்பிரானவர்களுக்கு நாங்களெல்லாருந் தர்ம சாத
31. னப் பட்டயம் கொடுத்தோம். தாங்களென்றென்[7]

கமம், காமம் எனும் இரு சொற்பதங்கள் வெவ்வேறு பொருளில் பயன்படுத்தப்பட்டிருப்பதை இப்பட்டயம் ஆவணப்படுத்தி இருக்கிறது. இங்கு பனங்காமம் என்பது இடப்பெயராகவும், கமம் என்பது விவசாயத்தைக் குறிப்பதாகவும் அமைந்திருப்பது கவனிக்கத்தக்கது. ''கமத்துக்கு மூன்று மரக்கால் நெல்லு'' நன்கொடை வழங்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருப்பதன் மூலம் இதனை உறுதிசெய்து கொள்ளலாம். அடங்காப்பற்று என வழங்கிய வன்னிப்பற்றுக்களில் ஆட்சிபுரிந்த வன்னியனார்களின் பெயர் விபரங்களை விரிவாகக் குறிப்பிடும் ஒரேயொரு சாசனம் இதுவென்பது கவனத்தில் கொள்ளத்தக்க விடயமாகும்.

### பனாவாசத்துளாகாமம் , வெல்காமம்

திருகோணமலைக்கு அண்மையில் உள்ளதும் இந்நாட்களில் நாதனார் கோவில் என வழங்குவதுமான புராதனமான வெல்கம் விகாரையின் பிரதானமான அமைப்புகளில் ஒன்று அங்கிருந்த படிமாகரமாகும் (பௌத்தஆலயம்). அது மிக வளர்ச்சி பொருந்திய நிலையில் 56 அடி நீளமும் 28 அடி 7 அங்குல அகலமுங் கொண்ட கட்டிடமாக விளங்கியது. அதன் அதிஸ்டானப் படைகள் திராவிட கலைப்பாணியில் அமைந்தவை. இடிந்துள்ள நிலையிலும் இதுவரை கிடைத்துள்ள ஒரேயொரு தமிழ்ப் பௌத்தப் பள்ளியின் வடிவமைப்பினைப் பற்றியவை என்ற காரணத்தால் அங்குள்ள தொல்பொருள் சின்னங்கள் அனைவரினதும் கவனத்துக் குரியவை. மேற்கூறிய வாசங்கள் பேராசிரியர் ஸேனரத் பரணவிதான அவர்களால் திருகோணமலையில் இருக்கும் வெல்கம் விகாரை என்ற பௌத்த ஆலயம் தொடர்பாக முன்வைக்கப்பட்ட கருத்துக்களாகும்.

இங்கு பதினாறு தமிழ் சாசனங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. சோழர் ஆட்சிக் காலத்தில் இப்பௌத்தப் பள்ளி முதலாம் இராஜராஜனது பெயரால் இராஜராஜப் பெரும்பள்ளி என்று அழைக்கப்பட்டது. இக்கல்வெட்டுக்கள் இராஜராஜப் பெரும்பள்ளிக்கு வழங்கப்பட்ட தானங்களை குறிப்பிடுகின்றன.

### கல்வெட்டு - வெல்காமம்

1. (பூர்வதேசமும் கங்கையும்
2. கடாரமுங் கொண்ட) கோப்பரகேசரிபந்
3. மரான உடையார் இராஜேந்த்ர
4. சோழ தேவற்கு யாண்டு
5. 25 ஆவது இராஜேந்த் ரசி
6. ங்க வளநாட்டு அப யாஸ்ரய வ
7. ளநாட்டு வெல்காமப் பள்ளி
8. வெல்கம் வேரமாந ராஜராஜ
9. ப் பெரும்பள்ளி புத்தர்க்கு
10. பணிமகன் காயாங்குடைய
11. ரந் அமுதன் சாத்தந் சந்த்ராதி
12. த்தவல் நின்றெரிய வை
13. த்த திரு நொந்தா விளக் ெ
14. காந்றி(னு) க்கு நிசதம் மூந்று
15. உழக்குக்கு நிவந்த ம(ரக)
16. வைத்த எருமை பத்து[8]

### கல்வெட்டு - பனாவாசத்துளாகாமம்

1. (ஸ்வஸ்தி உடையார்)
2. ஶ்ரீ ராஜேந்த்ர (சோழ) தே
3. வற்கு யாண்டு 5 சாவது
4. மும்முடி சோழ மண்டல
5. த்து மேலா (ந) ஙங னாட்டு
6. வீரபரகேசரி வளநாட்டு
7. பனாவாசத்துளாகாமத்து
8. பாத்தரவிதராமந் வெல்கம்
9. வேரமான ராஜராஜ பெரும்
10. பள்ளி புத்தர்க்குப் புண்ணி
11. யத்துக்கு வைத்த பசு
12. 35 எருமை 5[9]

தானகாரர்களின் பெயர்கள் (ஆதித்தப்பேராயன், தறியணன் பூவண தேவன், அமுதன் சாத்தன், கண்டன் யக்கன், ஐவரின், பாத்திரவித ராமன்) அவர்களது பதவிப்பெயர், விருதுப்பெயர், அவர்கள் வழங்கிய நன்கொடை, பெரும்பள்ளியின் பெயர், அது அமைந்திருந்த ஊர் (வெல்காமம்), தானம் வழங்கியவரின் ஊர்ப்பெயர் (பனாவாசத்துளாகாமம்), வளநாடு என்பவற்றின் விபரங்கள் வெல்கம் விகாரை தமிழ் கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டுள்மை சிறப்பம்சமாகும்.

இவ்வாறாக தம்பலகாமம் எனும் ஊர்ப்பெயர் அமைந்திருக்கும் அமைப்பிலேயே உள்ள பல ஊர்ப்பெயர்கள் இலங்கை முழுவதும் பரந்து காணப்படுவதினை சாசன ஆதாரங்களோடு நாம் மேலே பார்த்தோம். இவை தம்பலகாமம் எனும் ஊர்ப்பெயர் அமைப்புக்கு வலுச்சேர்க்கும் வரலாற்றாதாரங்கள் என்ற அடிப்படையில் முக்கியத்துவம் பெறுபவை. தம்பலகாமம் ஊர்ப்பெயர் அறிமுகம், ஊர்ப்பெயர் திரிபுகளின் வரலாறு, ஊர்ப்பெயர் ஆய்வு, தம்பலகாமம் எனும் ஊர்ப்பெயரை ஒத்த இடப்பெயர்களின் வரலாறு என்பவற்றை இதுவரை விரிவாகப் பார்த்து வந்தோம். நூலின் சம்பிரதாயம் கருதி ஊர்ப்பெயரின் பின்னாலான இந்தப் பயணம் இத்துடன் நிறைவு பெறுகிறது. ஆனால் ஊர்ப்பெயர் ஆய்வுகள் முடிவுறுதில்லை. காலத்துக்கு காலம் புதிதுபுதிதாக கண்டுபிடிக்கப்படும் புதையுண்டு போயிருந்த வரலாறுகளும், புதிய தகவல்களும், புதிய கோணங்களிலான ஆய்வுச் சிந்தனைகளும் ஊர்ப்பெயர் ஆய்வை தொய்வடைய விடாமல் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்க வழிவகுக்கும்.

இன்றிலிருந்து இருபது ஆண்டுகளுக்குப் பிறகு காலமும், வாழ்வும் சம்மதித்தால் மீண்டும் இவ்வூர்ப்பெயர் ஆய்வை விட்ட இடத்திலிருந்து தொடர வேண்டுமென்று எனக்குக் ஒரு பேராசை இருக்கிறது. குறிப்பிட்ட கால இடைவெளிக்குப் பிறகு ஏலவே செய்யப்பட்ட ஆய்வினை விட்ட இடத்திலிருந்து மீளாய்வு செய்யும் முறை மேலை நாடுகளில் பிரபல்யமானது.

உசாத்துணை


(1) இடப்பெயர்கள் - எழுத்தாளர் ஜெயமோகன் www.jeyamohan.in

(2) இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் 2006, பக்கம் 406, பேராசிரியர் சி.பத்மநாதன், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

(3) பிற்காலச் சோழர் சரித்திரம் பாகம் 2, 2008, பக்கம் 130, தி.வை.சதாசிவம் பண்டாரத்தார், அமிழ்தம் பதிப்பகம்.

(4) இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள், 2006, பக்கம் 425, பேராசிரியர் சி.பத்மநாதன், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

(5) இலங்கைத் தமிழ் சாசனங்கள் 2, 2013 , பக்கம் 475,476 பேராசிரியர் சி.பத்மநாதன், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

(6) பழுகாமத்தில் காணப்படும் இறப்புத் தொடர்பான கல்வெட்டுக்கள், க. இரகுபரன், சிரேஷ்ட விரிவுரையாளர் தென்கிழக்குப் பல்கழைக்கழகம், இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் 2, 2013, பக்கம் 484

(7) கயிலை வன்னியனார் மட தர்மசாதனப் பட்டயம் சிதம்பரம் வன்னியர், 1970, பக்கம் 89, பேராசிரியர் சி.பத்மநாதன், சைவபிரகாச அச்சியந்திரசாலை.

(8) இலங்கை தமிழ்ச் சாசனங்கள் பேராசிரியர் சி.பத்மநாதன், 2006, பக்கம் 414, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

(9) மேலது 413

# நூற்பயன்

முடிவாகத் துண்டமான தம்பலகாமத்துத் தமிழ்ச் சாசனமும் அதனைப் பற்றிய ஆய்வுகளும் இலங்கை வரலாற்றிலும், தேசிய பாரம்பரிய நோக்கிலும் புதிய பரிமாணங்களை ஏற்படுத்துகின்றது என்பது அழுத்திக்கூற வேண்டியதாகும். அது தம்பலகாம ஊரின் பெயரைக் குறிப்பிடும் முதலாவது தமிழாவணம் என்னும் சிறப்பினைப் பெறுகின்றது. எனவே இதனைத் தேடிக் கண்டுபிடிப்பது எல்லோரின் கடமையாகும். சிறப்பாக அந்தப் பொறுப்பு தம்பலகாம வாசிகளுக்குரியதாகும்.

இந்த வாசகங்கள் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களால் எழுதப்பட்டிருந்த "தம்பலகாமத்தில் ஒரு கல்வெட்டு"என்ற தலைப்பிலான கட்டுரையின் இறுதி வாசகங்களாகும்.

ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக என்னை எனது இயல்பு நிலையில் வாழவிடாமல் தம்பலகாமம் ஊர்ப் பெயரின் பின்னாலும், மறைந்து போன தம்பலகாமம் கல்வெட்டின் பின்னாலும் சலிப்பில்லாமல் தேடியலை வதற்குக் காரணமாக அமைந்த வாசகங்கள் அவை.

அந்தத் தேடல்களின் சிறு தொகுப்பாகவே இந்நூல் உருவாகியுள்ளது. இவ்வாய்வு மூலம் எமது ஊர்ப்பெயரின் ஈற்றுப்பெயர் கமமா அல்லது காமமா என்ற பிரச்சனை இத்துடன் முற்றுமுழுதாக முடிவடைந்துவிடும் என்ற அதீதமான ஆசையெல்லாம் எனக்கில்லை. என்றாலும் ஆர்வத்துடன் வாசிக்கும் ஒரு சிலருக்காவது இவ்வூர்ப்பெயர் தொடர்பிலான தெளிவினை இந்நூல் தரும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அத்தோடு இங்கு பதிவு செய்யப்பட்டிருக்கும் ஏதாவதொரு விடயம் யாரேனும் ஒருவரைப் புதிய வரலாற்றுத் தேடலுக்குள் அழைத்துச்செல்லவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். இவையிரண்டுமே இந்நூலினால் கிடைக்கும் அளப்பெரிய பயன்களாகும்.

நூலினை வாசிப்பதோடு நின்றுவிடாமல் முடியுமானவரை உங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள். உங்களின் ஆரோக்கியமான கருத்தாடல்கள் எனது எண்ணங்களையும், எழுத்துக்களையும் மென்மேலும் பண்படச் செய்யும்.

நன்றி
நட்புடன் ஜீவன்.

https://twitter.com/drjeevaraj
https://www.linkedin.com/in/geevanathy/
https://www.facebook.com/jeevaraj

மின்னஞ்சல்:
tjeevaraj78@gmail.com

வலைப்பதிவு:
www.geevanathy.com


**இயல் 9**

## பின்னிணைப்பு

தம்பலகாமம் கல்வெட்டின் முக்கியத்துவம் கருதி அதனை இருவேறு காலப்பகுதியில் வாசித்து வெளிப்படுத்திய பேராசிரியர் சி.பத்மநாதன்(2005,2022), பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் (2019) ஆகியோரின் கட்டுரைகள் அவற்றின் அவசியம் கருதி பின்னிணைப்பாக இங்கு இணைக்கப் பட்டுள்ளது.

எமது ஊரின் பெயர் பொறித்த கல்வெட்டினை உலகிற்கு வெளிப்படுத்திய பேராசிரியர்கள் இருவருக்கும் தம்பலகாமம் ஊர்மக்கள் சார்பில் எனது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நூலாசிரியர்.



# தம்பலகாமத்தில் ஒரு கல்வெட்டு பொலநறுவைக் காலத்துப் படைப்பற்று (மறைந்து போன சிலாசனம் - 2005)

*பேராசிரியர் சி.பத்மநாதன்,*
*வேந்தர்,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

*முன்னாட்களில் தம்பலகாமத்தில் ஓர் அரிய வரலாற்று மூலமான தமிழ்ச்சாசனம் இருந்தது. அதனைப் பற்றி அறிந்ததும் தொல்பொருளியல் திணைக்களத்தினர் 1930 ஆம் ஆண்டிலே அதன் மைப்படியை எடுத்தனர். இச் சாசனம் திருகோணமலை மாவட்டத்து தம்பலகாமத்தில் உள்ளதென்ற அதன் பிரதியிலே குறிப்பொன்று எழுதியுள்ளனர். சாசனம் பற்றி வேறொரு விவரமும் பதிவு செய்யப்படவில்லை. அதன் வாசகத்தையும் புகைப்படத்தையும் இதுவரை எவரும் வெளியிடவில்லை.*

*தம்பலகாமத்துச் சிலாசனத்தை இப்பொழுது காண முடியவில்லை. அதனைக் கண்டதும் திணைக்களத்தினர் சாசனத்தை எடுத்துக் கொண்டு, நன்றாகப் பேணக்கூடிய, பாதுகாப்பான இடத்தில் வைத்திருக்க வேண்டும். அவர்கள் அந்தக் கடமையைச் செய்யாத காரணத்தால் இந்த விபரீதம் ஏற்பட்டுள்ளது.*

தொல்பொருள் திணைக்களத்தில் எழுபத்து மூன்று (73) வருடங் களாகக் கவனிப்பாரற்றிருந்த மைப்படியான பிரதியொன்று சென்ற வருடம் எமக்குக் கிடைத்தது. அதனை அத்திணைக்களத்திலே சாசனவியல் துறைக்குப் பொறுப்பாளரும் உதவி ஆணையாளருமாகிய கலாநிதி மாலினி டயஸ் எம்மிடம் வாசிப்பதற்கென்று ஒப்படைத்தார். அதனை ஆராய்ந்த பொழுது சாசனம் துண்டமானது என்ற எண்ணம் ஏற்பட்டது. சாசனத்தின் முடிவிலே பயனிலை காணப்பட வில்லை. அதனால் சாசன வாசகத்தின் முடிவுப் பகுதி அமைந்துள்ள பாகம் உடைந்து அழிந்து விட்டதென்று கருதலாம். சாசனத்தின் ஆரம்பப் பகுதியும் இவ்விதமாக அழிந்திருத்தல் கூடும்.

சாசனம் கற்பலகையொன்றில் எழுதப்பட்டுள்ளது. எழுத்துகள் அமைந்துள்ள பகுதி ஒரு அடி ஏழு அங்குலம் நீளமானது. நேர்கோடுகளை அகலப் பாட்டில் வெட்டி, அவற்றிடையே சாசனத்தை எழுதியுள்ளனர். எழுத்துகள் அளவில் ஓரளவு பெரியவை: அவை சராசரியாக ஒன்று தசம் ஐந்து (1.5) அங்குலம் உயரமும் அகலமுங் கொண்டவை. இதிலுள்ள வரிவங்களின் வளர்ச்சி நிலை 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிக்குரிய தமிழ்ச் சாசனங்களில் உள்ளவற்றிலும் முன்னேற்றமானது. எனவே இதனைப் 13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதிக்குரிய ஆவணமாகக் கொள்ளலாம். அரசனின் பெயர் அடையாளங் காணப்படுமிடத்து ஒருவேளை இந்தக் கருத்தை மாற்றிக் கொள்ள நேரிடலாம்.

### சாசனத்திலுள்ள விவரங்கள்

துண்டமாகிவிட்ட தம்பலகாமத்துச் சாசனத்தில் எல்லாமாகப் பதினொரு (11) வரிகள் உள்ளன. முதல் நான்கு வரிகளுஞ் சொற்கள் அடையாளங் காணப்படுவதற் ஏற்றவாறு தெளிவாக எழுத்துகள் சிதைவாகி உள்ளன. இங்கும் அங்குமாகச் சில வரிவடிவங்கள் தெரிகின்றன. சாசனத்தின் மைப்படி செப்பமாகவும் எடுக்கப்படவில்லை. சாசனம் காணப்படுமிடத்து,

அதனைத் தெளிவாக வாசிக்க முடியுமென்று கருத இடமுண்டு. ஐந்தாவது வரி முதலான சாசனப் பகுதி மேல்வருமாறுள்ளது.

5. உடையார் நிச்ச
6. யித்த ஜகதப்ப
7. கண்டன் தாநத்(து)
8. க்கு நிலையாக்(கித்)
9. தம்பலகாம ஊ
10. ரை நான்கெல்
11. லைக்கு தள எல்லை

இச்சாசனப் பகுதியில் மூன்று முக்கியமான விடயங்கள் குறிப்பிடப்படுகின்றன. முதலாவது உடையார் என்பதாகும். உடையார் என்பது சாசன வழக்கில் அரசனைக் குறிக்கும். அது பெருநிலக்கிழாரான அரசப்பிரதானிகளையுங் குறிக்கும். சாசனத்தின் தெளிவற்றதான முதல் பகுதியில் உடையாரின் பெயர் சொல்லப்பட்டுள்ளது என்று கொள்ளலாம். நான்காவது வரியின் முடிவிலே “மாக” என்ற சொல்லின் அடையாளம் இருப்பது போலத் தெரிகின்றது. எமது கணிப்பு சரியானதெனிற் சாசனம் மாக உடையார் செய்த ஏற்பாடொன்றினைக் குறிக்கிறதென்றாகிவிடும். இந்த விளக்கம் தற்காலிகமானது. சாசனத்தை நேரிலே பார்த்து ஆராய்ந்தால் மட்டுமே இந்தக் கருத்தை உறுதி செய்ய முடியும். அது உறுதியாகுமிடத்து மாகனைப் பற்றிக் குறிப்பிடும் தனி ஒரு சாசனம் என்ற சிறப்பினை தம்பலகாமத்துச் சாசனம் பெற்றுவிடும். அவனுடைய நிர்வாக ஏற்பாடுகள், படைநிலைகள் ஆகியன பற்றி மகாவம்சம் , மட்டக்களப்பு பூர்வசரித்திரம் என்பவற்றிலே சொல்லப்படும் குறிப்புகள் உறுதியாகிவிடும். இதனைத் தீர்மானஞ் செய்வதற்கு சாசனம் எழுதப்பட்ட கல் கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் பொறுத்திருக்க வேண்டும்.

## தம்பலகாமம் என்னும் பெயர்

சாசனத்திலே குறிப்பிடப்படும் விடயங்களில் இரண்டாவது முக்கியமான அம்சம் தம்பலகாம ஊர் பற்றிய குறிப்பாகும். அது தம்பலகாமம் என்னும் ஊரினைக் குறிக்கின்றது. தம்பலகாமம் என்னும் பெயர் புராதனமானது, அது ஏறக்குறைய எண்ணூறு (800) வருடங்களாக இடையறாது வழங்கி வருகின்றது என்று கொள்வதற்கு இச்சாசனம் ஆதாரமாகின்றது. திருகோணமலை, கந்தளாய் என்னும் ஊர்களின் தமிழ்ப் பெயர்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வழங்கி வருகின்றமைக்கு சாசன வழக்கு ஆதாரமானது என்பதும் இங்கு கவனித்தற்குரியது.

## ஜகதப்ப கண்டன்

சாசனத்திலுள்ள மூன்றாவது பிரதானமான அம்சம் ஜகதப்ப கண்டன் தானம் என்பது பற்றிய குறிப்பாகும் அதனைச் சாசனம் எழுதப்பட்ட காலத்து அரசியல் வழக்கம், சமுதாய நிலைகள் என்பவற்றின் அடிப்படையிற் புரிந்துகொள்ளலாம். ஜகதப்ப கண்டன் தானம் என்பது ஜகதப்ப கண்டன், தானம் என்ற இருசொற்களின் கூட்டுமொழியாகும். கண்டன் என்னுஞ் சொல் தமிழ்மொழியிலும் கன்னடமொழியிலும் சாசன வழக்கிலும் மிகுதியாகக் காணப்படுவது. அது போர்வீரனைக் குறிக்குஞ் சொல்.

ஜகதப்ப என்பது ஜகதோர்ப்ப என்ற கன்னடச் சொல்லின் ஒரு தமிழ் வடிவமாகும். ஜகதப்ப கண்டன் என்பது பாண்டிய மன்னர்களின் விருதுப் பெயரான புவனேகவீரன் என்பதற்கு நிகரானது. அதனை ஒருவரின் இயற்பெயராகவன்றி விருதுப் பெயராகவே கொள்ளவேண்டும். அது கன்னட மொழிவழக்கிலுள்ள ஜகதோர்ப்ப கண்டன் என்ற பெயரின் தமிழ் வடிவமாகும். அது அரசன் ஒருவனின் சிறப்புப் பெயராக அல்லது படைப்பிரிவொன்றின் பெயராக அமைந்திருத்தல் வேண்டும்.



தம்பலகாமம் கல்வெட்டினைப் பார்வையிடும் பேராசிரியர். சி. பத்மநாதன், கலாநிதி. க. சரவணபவன், கிராம சேவகர் திரு. நா.சந்திரசேகரம் ஆகியோருடன் நூலாசிரியர்



ஆதியம்மன் கோவில் கல்வெட்டினைப் பார்வையிடும் பேராசிரியர். சி. பத்மநாதன், டொக்டர் அ. ஸதீஸ்குமார் ஆகியோருடன் நூலாசிரியர்

ஜகதப்ப கண்டன் என்பது 12 ஆம் நூற்றாண்டிலே இலங்கையில் வழங்கிய விக்கிரம சலாமேகன் என்ற விருதுப் பெயரைப் போன்றது. பதினோராம், பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் திருகோணமலைப் பிரதேசத்தில் விக்கிரம சலாமேகத் தெரிந்த வலங்கை வேளைக்காறர், விக்கிரம சலாமேகன் நாற்படை என வழங்கிய வேளைக்காறரப் படைகள் இருந்தன. இவற்றுள் முதலாவது படை கந்தளாய்ப் பிரம்மதேயத்திலே தங்கியிருந்தது. இரண்டாவது மயிலன் குளத்தில் அமைக்கப்பட்ட விக்கிரமசாலாமேகன் பள்ளி என்னும் பௌத்தப் பள்ளியின் பாதுகாப்பிற்குப் பொறுப்பேற்றிருந்தது. அதேபோல ஜகதப்ப கண்டன் என்னும் பெயரால் வழங்கிய படையொன்று தம்பலகாமத்தில் இருந்தது என்பது இச்சாசனத்தால் அறியப்படுகின்றது.

"உடையார் நிச்சயித்த ஜகதப்பகண்டன் தானத்துக்கு நிலையாக்கி தம்பலகாம ஊரை" எனச் சாசனத்திலே சொல்லப்படுவதால் அரசனின் அதிகாரங்களைப் பெற்றிருந்த ஒருவரால் ஜகதப்ப கண்டன் தானம் உருவாக்கப் பட்டது என்பது புலனாகின்றது. அத்தானம், தம்பலகாம ஊர் என்பதும் தெளிவாகத் தெரிகின்றது. எனவே தம்பலகாமம் ஒரு படைப் பிரிவின் பொறுப்பிலுள்ள ஊராக விடப்பட்ட தென்று கருதலாம். தோப்பவையைக் கைப்பற்றிய கலிங்கனாகிய மாகோன் அதன் பகுதிகளைப் படையாட்சி வன்னியருக்கு வழங்கினான் என்று மட்டக்களப்பு பூர்வசரித்திரம்கூறும். மாகன் தனது அதிகாரத்தினுள் அடங்கிய பகுதிகளிற் படை நிலைகளை அமைத்திருந்தான் என்று சிங்கள, பாளி நூல்களிற் கூறப்படுகின்றது. கோணம், கந்தளாய், கொட்டியாரம், கட்டுக்குளம், பதி (பதவியா), மன்னார், மாதோட்டம், புலச்சேரி, மானாமத்த, வேர்பட்டினம் முதலிய ஊர்களிற் படைநிலைகள் மாகனால் அமைக்கப்பட்டன என்று அந்நூல்கள் கூறுகின்றன. தம்பலகாமத்துச் சாசனம் குறிப்பிடும் ஜகதப்ப கண்டன் தானம் மொரு படைநிலையமாதல் கூடும். அவ்வாறாகிற் பிரதேச வன்னிமையின் வரலாறு தொடர்பான ஒரு வரலாற்று ஆவணம் என்ற பரிமாணத்தை இச்சாசனம் பெற்றுவிடும். திருகோணமலைப் பிரதேசத்து நான்கு வன்னிப்

பிரிவுகளில் ஒன்றாகத் தம்பலகாமம் அமைந்திருந்தது. தம்பலகாமத்தில் ஆட்சி புரிந்த வன்னியரைப் பற்றித் தமிழ் நூல்களிலும் ஒல்லாந்து, பிரித்தானிய நிர்வாக அதிகாரிகளின் அறிக்கைகளிலும் குறிப்புகள் காணப்படுகின்றன.

### ஜகதப்ப கண்டன் தானம் ஒரு வீரபட்டினமா?

மாசேனகாமமான தன்மசாசரப்பட்டினம் என்னும் வீரபட்டினம் பற்றிய சில விவரங்கள் விஹாரேஹீன்ன என்னும் இடத்திலுள்ள சாசனத்திற் பதிவாகி உள்ளன. அது மாத்தளை மாவட்டத்திலே தம்புல்லைக்குச் சமீபமான பகுதியொன்றில் உள்ளது. எறிவீரர் என்னும் படைப்பிரிவினர் அதன் காவலராய் விளங்கினர். ஒரு சமயத்தில் வீரபட்டினத்துப் பெருமக்கள் தங்கள் காவலராகிய எறிவீரரைச் சிறப்பிக்கச் செய்யும் வகையில் வீரபட்டினத்தை எறிவீரன் தானம் என்று பெயர் சூட்டினார்கள். ஜகதப்ப கண்டன் தானம் என்பது எறிவீரன் தானம் என்னும் பெயரை ஒத்திருக்கின்றது. எனவே அது ஒரு வீரபட்டினமாக அமைக்கப்பட்டதா? என்ற வினா எழுகின்றது. கல்வெட்டின் முடிவில் வரும் தள எல்லை என்ற தொடரும் இத்தகைய சிந்தனைக்கு மெருகூட்டுவதாய் உள்ளது. வீரபட்டினங்களை வீரதளம் என்றும் சொல்வது வழமை.

தம்பலகாம ஊர் ஜகதப்ப கண்டன் என வழங்கிய போர்வீரர் கணம் ஒன்றின் பொறுப்பில் விடப்பட்டது என்பதும் அது ஆட்சியாளர் செய்தவொரு ஏற்பாடு என்பதும் சாசனத்தின் மூலம் தெளிவாகின்றது. தம்பலகாமம் ஒரு வீரபட்டினமாக, வீரர்கணமொன்றின் காவலிலுள்ள வணிக நகரமாக அமைக்கப் பட்டிருத்தலுங்கூடும்.

### அநுராதபுரத்தில் ஜகதொப்ப கண்டன் பெரும்பள்ளி

தம்பலகாமத்துக் கல்வெட்டை ஆராயுமிடத்து அநுராதபுரத்து வான்வலிசாயவிலுள்ள தமிழ்ச் சாசனமொன்றைக் கருத்திற் கொள்ள வேண்டிய நிலை உள்ளது. "ஸ்ரீ ஜகதொப்ப கண்டன்

பெரும் பள்ளி" என்று அதிலே எழுதப்பட்டுள்ளது. எச். கிருஷ்ண சாஸ்திரி பதிப்பித்த தென்னிந்திய சாசனங்கள் என்பதன் நான்காம் தொகுதியில் 1402 எனும் இலக்கமுடைய சாசனமாக இதன் வாசகம் வெளிவந்துள்ளது. அதன் புகைப்படம் முன் எவராலும் வெளியிடப்படவில்லை. சாசனம் பற்றிய விளக்கக் குறிப்புகளும் வெளிவரவில்லை.

அநுராதபுரத்துச் சாசனத்திலுள்ள எழுத்துகள் மிகவும் தெளிவானவை. அவற்றில் இதுவரை எதுவிதமான சிதைவும் ஏற்படவில்லை. அது இப்பொழுது கலாசார முக்கோணத்து அபயகிரி சேதியப் புனராக்கத் திட்டத்திற்குரிய அருங்காட்சியகத்து வளாகத்தில் உள்ளது. 2001 ஆம் ஆண்டு திசெம்பர் மாதத்திலே அங்கு சென்ற பொழுது அதனை எம்மால் அவதானிக்க முடிந்தது. தமிழ்நாடு அரசின் தொல் பொருளியல் திணைக்களத்து முதுநிலைச் சாசனவியலாளரான நண்பர் எஸ். இராஜகோபால் சாசனத்தின் மைப்படியினையும் புகைப்படத்தையும் எடுத்தார்.

அவர் எம்மிடம் ஒப்படைத்த புகைப்படப் பிரதியே இங்கு சாசனத்தை விளக்கும் வண்ணமாக வெளியிடப்படுகின்றது. இச்சானத்தின் எழுத்து 13 ஆம் நூற்றாண்டுக்குரியவை என்பது தமிழ்ச்சாசனத்துறையில் மிகுந்த பயிற்சி பெற்றவர்களான பேராசிரியர்கள் எ. சுப்பிராயலு, ப. சண்முகம், முனைவர் எஸ். இராசகோபால் ஆகியோரின் கருத்தாகும். எனவே தம்பலகாமத்துக் கல்வெட்டும் அநுராதபுக் காலத்துக் கல்வெட்டும் ஏறக்குறைய ஒரே காலத்தனவென்று கொள்ளலாம். அவற்றுக்கிடையில் முப்பது வருடங்களுக்கு மேற்படாத கால இடைவெளி அமைந்திருத்தல் கூடும். அநுராதபுரத்துச் சாசனத்தில் எழுத்துகள் செம்மையாகவும் அழகாகவும் வெட்டப்பட்டுள்ளன. தம்பலகாமத்துக் கல்வெட்டிலே எழுத்துகள் வனப்பற்ற வகையிலே வெட்டப்பட்டுள்ளன.

இச்சாசனங்களில் ஒன்று ஜகதொப்ப கண்டன் பெரும்பள்ளி பற்றியது. பெரும்பள்ளி என்பது இலங்கைத் தமிழ்ச்

சாசனவழக்கிற் பௌத்த விகாரங்களையும் கோயில்களையும் குறிக்கும். ஜகதொப்ப கண்டன் பெரும்பள்ளி என்பது ஒரு பௌத்த நிறுவனத்தின் பெயராகும். அது ஜகதொப்ப கண்டன் என்னும் சிறப்புப் பெயர் கொண்ட மன்னன் ஒருவனின் பெயரால் அல்லது அப்பெயரைப் பெற்ற படைப்பிரிவின் பெயரால் வழங்கிய அமைப்பாதல் வேண்டும். அது விக்கிரமசலாமேகன் பெரும்பள்ளி விக்கிரம சலாமேகன் நாற்படையின் காவலில் விடப்பட்டிருந்தது. அதனை அப்படையின் நாயகனாகிய கணவதி தண்டநாதன் அமைத்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஜகதப்ப கண்டன் பெரும்பள்ளி றுவான்வலிசாயாவின் வளாகத்திலுள்ள விகாரம் ஒன்றைக் குறிப்பிடுகின்றதா அல்லது றுவான்வலிசாயா என்ற பிரமாணடமான சேதியத்தைக் குறிப்பிடுகின்றதா என்பதை இதுவரை கிடைத்துள்ள வரலாற்று விவரங்களின், அடிப்படையிலே நிச்சயிக்க முடியவில்லை. 12 ஆம் நூற்றாண்டிலே ஒருசமயத்திலே பொலநறுவையிலுள்ள தளதாப்பெரும்பள்ளி வளஞ்செயர் என்னும் வணிகரின் வணிக நகரொன்றின் காவலரான வேளைக்காரரின் பொறுப்பில் விடப்பட்டபோது, அது வேளைக்காரன் தளதாப் பெரும்பள்ளி என்று பெயரிடப் பெற்றது. அதே போல ஏதோ காரணத்தால் றுவான்வலி சேதியம் ஜகதொப்ப கண்டன் என்னும் பெயரால் வழங்கிய படைப்பிரிவொன்றின் பொறுப்பிலே விடப்பட்ட பொழுது அது புதிய சூழ்நிலைக்கேற்ப புனர்நாமம் பெற்றிருத்தல் கூடும். சாசனம் ஒரு பெயர்ப் பிரகடனமாகவும், பெயர்ப் பலகையாகவும் அமைக்கப்பட்டதென்று கருதலாம். பௌத்த நிறுவனங்களுக்கும் தமிழர் சமுதாயப் பிரிவுகளுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த நெருங்கிய பரஸ்பரத் தொடர்புகள் பற்றிய மேலதிகமான ஆதாரமாகவும் இச்சாசனத்தை அடையாளங் காணலாம்.

ஜகதப்ப கண்டன் தானம், ஜகதொப்ப கண்டன் பெரும்பள்ளி என்பவற்றுக்கிடையிலே ஒரு தொடர்பு உள்ளமையினை முன்னே இங்கு கூறியுள்ளவற்றால் உணர்ந்து கொள்ளலாம். அநுராதபுரத்திலுள்ள பௌத்த நிலையமொன்று ஜகதொப்ப

கண்டன் பெயரால் வழங்கியது. தம்பலகாமம் என்னும் ஊரிலே அமைக்கப்பட்ட படைநிலை ஜகதப்ப கண்டன் தானம் என்று பெயரிடப்பட்டது. விக்கிரமசலாமேகன் பெயரால் வழங்கிய அமைப்புகளும் இவ்வண்ணமானவை. விக்கிரமசலாமேகன் பெரும்பள்ளி, விக்கிரம சலாமேக - ஈஸ்வரம் என்னும் கோயில்களையும் விக்கிரமசலாமேகபுரம் என்னும் வணிகர் நகரமான வீரபட்டினத்தையும் தமிழ்ச் சாசனங்கள் குறிப்பிடுகின்றன.

முடிவாகத் துண்டமான தம்பலகாமத்துத் தமிழ்ச்சாசனமும் அதனைப் பற்றிய ஆய்வுகளும் இலங்கை வரலாற்றிலும், தேசிய பாரம்பரிய நோக்கிலும் புதிய பரிமாணங்களை ஏற்படுத்துகின்றது என்பது அழுத்திக் கூற வேண்டியதாகும். அது தம்பலகாம ஊரின் பெயரைக் குறிப்பிடும் முதலாவது தமிழாவணம் என்னும் சிறப்பினைப் பெறுகின்றது. அது அங்கு அமைக்கப்பட்ட ஜகதப்ப கண்டன் தானம் என்னும் படைநிலையைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. அது அரசன் ஒருவனின் ஏற்பாட்டினால் உருவானது என்று கருதமுடிகின்றது. தமிழ்மொழி வழக்கிலே ஏற்பட்டிருந்த கன்னடமொழிச் செல்வாக்கினையும் அது பிரதிபலிக்கின்றது. பிரதேச வன்னிபையின் உற்பத்தி பற்றிய ஆய்வுகளை முன்னெடுத்துச் செல்வதற்கான ஆவணமாகவும் அது அமைந்து விடுகின்றது. எனவே இதனைத் தேடிக் கண்டு பிடிப்பது எல்லோரின் கடமையாகும். சிறப்பாக அந்தப் பொறுப்பு தம்பலகாம வாசிகளுக்குரியதாகும்.

நன்றி -
தம்பலகாமத்தில் ஒரு கல்வெட்டு, பொலநறுவைக் காலத்துப் படைப்பற்று (மறைந்துபோன சிலாசனம்),
பேராசிரியர் சி.பத்மநாதன், பண்பாடு சஞ்சிகை(2005 புரட்டாதி)
இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம்.

## தம்பலகாமம் கல்வெட்டு தொடர்பான மீள்பார்வை
## பேராசிரியர் சி. பத்மநாதன் - 2022

மிக அண்மையில் திருகோணமலையில் உள்ள கோமரங்கடவலவில் கண்டுபிடிக்கப்பட்ட 13ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டுத் தொடர்பில் பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் கல்வெட்டொன்றின் மூலம் வெளிவரும் அதிசயமான வரலாற்று விபரங்கள் (காலிங்கராயனும், காலிங்க மாகனும்) எனும் தலைப்பில் நீண்ட கட்டுரை ஒன்றினை எழுதி இருக்கிறார். அக்கட்டுரை தொடர்பில் பேராசிரியருடன் கலந்துரையாடும் அரிய வாய்ப்பு கிடைத்திருந்தது. அதில் தம்பலகாமம் கல்வெட்டுப் பற்றிய மீள்பரிசோதனை என்ற பகுதியில் கீழ்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்.

இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட 13ஆம் நூற்றாண்டிற்குரிய சில தமிழ்க் கல்வெட்டுக்களைப் பற்றிக் குறிப்பிடுவது அவசியமாகின்றது. காலிங்கராயனின் கல்வெட்டின் மூலம் அவற்றைப் பற்றிய எங்கள் புரிந்துணர்வுகளிலே சில மாற்றங்கள் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் தென்படுகின்றன. வரிவடிவ அமைப்பில் அவை காலிங்கராயனது கல்வெட்டுக்கும் திருகோணமலையிலுள்ள வில்லூண்டிக் கந்தசுவாமி கோயில் வளாகத்திலுள்ள பாண்டியர் காலக் கல்வெட்டுக்கும் இடைப்பட்ட காலத்துக்குரியவை. அவை 13ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதிக்கு உரியன போலத் தெரிகின்றது. எனவே அவை மாகனது காலத்துக்கு (1215-1255) உரியனவாகக் கொள்ளத்தக்கவை. அவற்றை இங்கு மேல்வருமாறு நிரல் படுத்தலாம்.

1. ருவன்வலிசாயவிலிருந்து கிடைத்த தமிழ்க் கல்வெட்டு
2. பதவியாவிலுள்ள பேரிளமையாரின் இரு கல்வெட்டுகள்.
3. தம்பலகாமத்துக் கல்வெட்டு
4. பொலன்னறுவையிற் கிடைத்த வேளைக்காறன் சேதராயனின் கல்வெட்டு
5. பொலன்னறுவையிற் கிடைத்த வேளைக்காறன் மாதேவனின் கல்வெட்டு.

இவற்றுள் முதலாவது கல்வெட்டு காலத்தால் முற்பட்டது போலத் தெரிகின்றது. அதிலே ஜகதொப்பகண்டன் பெரும் பள்ளி என்ற பெயர் மட்டுமே எழுதப்பட்டுள்ளது. ஜகதொப்பகண்டன் என்பது ஜகதோர்ப்பகாண்டன் என்னும் கன்னடப் பெயரின் தமிழ் வடிவம் என்று முன்னாளில் மைசூரிலே சாசனச்சுவடிகள் நிலையத்திற் பொறுப் பதிகாரியாகக் கடமைபுரிந்த கலாநிதி ரமேஷ் எமக்குச் சொன்னார். அது உலகின் இணையிலா வீரன் என்பதைக் குறிக்கும். அது பொருளமைதியில் திரிபுவனவீரன், ஜதேகவீர எனச் சோழரின் கல்வெட்டுகளிற் காணப்படும் சொற்களுக்கு நிகரானது. வீரமன்னன் என்ற பாராட்டைப் பெற்ற ஒருவனுக்குரியதாக அது கொள்ளத்தக்கது. காலிங்க மாகன் வீராபிசேகம் பெற்றமையால் அது அவனுக்குரிய பட்டப்பெயர் போலத் தெரிகின்றது. ஜகதொப்பகண்டன் பெரும்பள்ளி என்பது ஜகதொப்பகண்டன் என்னும் சிறப்புப்பெயர் பெற்ற மன்னன் ஒருவனது அல்லது அந்தப் பெயரைப் பெற்ற படைப்பிரிவொன்றின் பெயரால் வழங்கிய அமைப்பாதல் வேண்டுமென்று முன்பு வெளியிட்ட நூலொன்றிலே கூறியிருந்தோம். அது மாகனுக்குரியது என்ற கருத்து தம்பலகாமம் கல்வெட்டின் மூலம் ஓரளவு தெளிவாகின்றது.

கலாநிதி சு.இராஜகோபாலின் திருத்திய வாசகப்படி தம்பலகாமம் கல்வெட்டிலே சொல்லப்படும் நிவந்தம் தொடர்பான விபரங்கள் ஜகதப்பகண்டன் சந்தி பற்றியவை. சந்தி என்பது மன்னனொருவனின் நலன் பொருட்டு அவனுடைய ஜன்ம நட்சத்திரத்திலே செய்யப்படும் ஆலயவழிபாடாகும். எனவே ஜகதப்பகண்டன் சந்தி என்பது ஜகதப்பகண்டன் என்னும் பெயரால் வழங்கிய மன்னனின் பொருட்டு நடைபெற வேண்டிய வழிபாடாகும் அதற்கெனத் தம்பலகாம ஊரிலே கிடைக்கக்கூடிய அரச வருமானங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டன. நிவந்தஞ் செய்தவன் திருகோணமலை அரசன். அவனைத் திருகோணமலை உடையானென்று கல்வெட்டிலே குறிப்பிட்டுள்ளனர். திருகோணமலை உடையான் ஜகதப்ப கண்டனின் மேலாதிக்கத்துக்குள் அடங்கியவன் என்று கொள்வது ஒரு பொருத்தமான முடிபாகும்.

அநுராதபுரியிலுள்ள றுவான்வலிசாய ஜகதப்பகண்டன் பள்ளி என்று அங்குள்ள கல்வெட்டிலே சொல்லப்படுவதால் திருகோணமலையும் அநுராதபுரியும் ஜகதப்பகண்டனின் ஆட்சி வலையத்திற்குள் அடங்கியவை என்று கொள்ளலாம். நிசங்கமல்லனுக்கு பின்பு பொலன்னறுவையில் ஆட்சி புரிந்த அரசரில் மாகனைத் தவிர்ந்த வேறெவரும் அவ்விரு நகரங்களும் அடங்கிய பகுதிகளில் ஆட்சியதிகாரமோ மேலாதிக்கமோ பெற்றிராமையால் ஜகதப்பகண்டன் என்பது காலிங்க மாகனுக்குரிய பட்டப்பெயர் என்பது தெளிவாகத் தெரிகின்றது. அது ஒரு வீரமன்னன் என்று கொள்ளப்பட்ட அரசனுக்குரியது. மாகனும் வீராபிசேகம் பெற்றவன் என்பதும் கவனித்தற்குரியது. இதுவரை குறிப்பிட்ட தமிழ்க் கல்வெட்டுகள் இரண்டும் அவனது காலத்துக்குரியவை என்பதும் புலனாகின்றது.

இயல் 9 பின்னிணைப்பு 2

# தம்பலகாமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட அரிய தமிழ்க் கல்வெட்டு

*பல ஆண்டுகளுக்குப் பின்னர் வரலாற்று வெளிச்சத்திற்கு வந்திருக்கும் அரிய தமிழ்க்கல்வெட்டு தம்பலகாமத்தில் மீளவும் கண்டுபிடிப்பு 2019*

*பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்,*
*தலைவர்,*
*வரலாற்றுத்துறை,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

*1786 காலப்பகுதில் திருகோணமலையின் ஆளுநராக இருந்த பன்-சென்டன் அவர்கள் திருகோணமலைக்கான தனது சுற்றுப்பயணத்தின் போது தம்பலகாமம் வயல்வெளியில் நாட்டப்பட்டிருந்த கல்வெட்டு ஒன்றைப் பார்வையிட்டதாகவும், அக்கல்வெட்டின் காலத்தையும், அதில் எழுதப்பட்ட வரலாற்று விடயங்களையும் அறிந்து கொள்வதற்கு அங்கு வாழ்ந்த மக்கள் உதவ முன்வரவில்லை என தனது பயணக்குறிப்பில் பதிவு செய்துள்ளார்.*

இக்கல்வெட்டை 1930 களில் பார்வையிட்ட பேராசிரியர் பரணவிதான அக்கல்வெட்டின் முன்பக்கத்திலுள்ள 11 வரிகளைப் படியெடுத்து அது பற்றிய செய்தியை முதன் முறையாக வெளிப்படுத்தியிருந்தார்.

தற்போது கொழும்பு அருங்காட்சியகத்தில் காணப்படும் தம்பலகாமம் கல்வெட்டின் மைப்பிரதி பேராசிரியர் பரணவிதானவினாலேயே எடுக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது. ஆயினும் இக்கல்வெட்டு மைப்பிரதியில் உள்ள 11 வரிகளில் தெளிவாக உள்ள ஐந்து வரிகள் மட்டுமே ஓரளவிற்கு வாசிக்கப்பட்டிருந்ததால் தம்பலகாமம் பற்றிய வரலாற்றாய்வில் இக்கல்வெட்டு முழுமை பெற்றிருக்கவில்லை.

பிற்காலத்தில் தமிழ் அறிஞர்கள் சிலர் இக்கல்வெட்டை நேரில் பார்வையிட்டுப் படியெடுக்க முயற்சித்த போதும் குறித்த கல்வெட்டு தம்பலகாமம் வயல்வெளியில் காணப்படவில்லை. இதனால் அவர்களது ஆய்வுகளில் இக்கல்வெட்டு மறைந்த அல்லது மறைக்கப்பட்ட கல்வெட்டாகவே பார்க்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் திருகோணமலை மாவட்டத்தின் வரலாற்றுச் சின்னங்களை ஆவணப்படுத்துவதில் அதிக அக்கறையுடன் செயற்பட்டுவரும் தம்பலகாமத்தைச் சேர்ந்த வைத்திய கலாநிதி தங்கராசா ஜீவராஜ் அவர்கள் தமது குழுவைச் சேர்ந்த திரு. விஜயானந்தன் விஜயகுமார்,திரு.வைரமுத்து பிரபாகர் ஆகியோரின் உதவியுடன் தம்பலகாமத்தில் இரு இடங்களில் அடையாளம் காணப்பட்டுள்ள கல்வெட்டுக்களை ஆய்வு செய்வதற்கு வருமாறு எம்மை அழைத்திருந்தார். அதன் பேரில் கடந்த வாரம் தொல்லியல் விரிவுரையாளர் திரு.கிரிகரன், தொல்லியல் இறுதி வருட மாணவர்களான திரு.கசிந்தன் மற்றும் திரு.சுதர்சன் ஆகியோருடன் தம்பலகாமம் சென்றிருந்தோம். இவ்விடங்களுக்கு நேரில் சென்று ஆய்வு செய்வதற்கான வசதிகளை வைத்திய கலாநிதி ஜீவராஜ் வரலாற்று ஆர்வலர் பிரபாகர் ஊடாகச் செய்திருந்ததால் ஒரே நாளில் இரு இடங்களிலும் உள்ள கல்வெட்டுக்களைப் பார்வையிட முடிந்தது.

அவற்றுள் சில கல்வெட்டுகள் கட்டிட அழிபாடுகளுடன் தம்பலகாமம் காட்டுப்பகுதியில் உள்ள ஆழமான ஆற்றில் புதைந்து காணப்படுகின்றன. இதனால் ஆற்றில் இறங்கி புதையுண்ட கல்வெட்டுக்களை வெளியே எடுத்துப் படிக்க முடியவில்லை. ஆயினும் இவ் ஆறு வற்றிய காலத்தில் அக்கல்வெட்டுக்களை வெளியே எடுத்துப் படியெடுத்துப் படிக்க முடியும் என்ற நம்பிக்கையுள்ளது.

### 1930 இல் மறைந்த அல்லது மறைக்கப்பட்ட அரிய தமிழ்க் கல்வெட்டு

இக்கல்வெட்டு தம்பலகாமம் நாயன்மார்திடல், மாவிலாங்கடி பிள்ளையார் ஆலயத்தின் காணப்படுகின்றது. இக்கல்வெட்டை இவ்வாலயத்தின் தலைவர் திரு.முத்துக்குமார் குணராசா அவர்கள் தம்பலகாமத்தில் தனியார் காணியில் இருந்து கண்டெடுத்து தனது ஆலயத்தில் வைத்துப் பாதுகாத்து வருகின்றார். இதன் எழுத்தமைதியைக் கொண்டு இக்கல்வெட்டு இற்றைக்கு 800 ஆண்டுகளுக்கு (கி.பி.12 - 13ஆம் நூற்றாண்டில்) முன்னர் பொறிக்கப்பட்டதென்பதை உறுதிப்படுத்த முடிகின்றது. இதில் பொறிக்கப்பட்ட தெளிவான தமிழ்ச் சொற்களை வாசித்த போது இக்கல்வெட்டையே இற்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முன்னர் திருகோணமலையில் ஆளுனர் தம்பலகாமம் வயல்வெளியில் பார்வையிட்டுள்ளார் என்பது தெரிய வந்தது.

1930 களில் இக்கல்வெட்டை படியெடுத்த பேராசிரியர் பரணவிதான கல்வெட்டின் முன் பக்கத்தில் மட்டும் 11 வரிகளில் சாசனம் பொறிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் நாம் கல்லின் பின் பக்கத்தை நன்கு துப்பரவு செய்து பார்த்த போது அதிலும் 12 வரிகளில் சாசனம் பொறிக்கப்பட்டுள்ளதை கண்டுபிடிக்க முடிந்துள்ளது. ஆயினும் இக்கல்வெட்டு 1000 ஆண்டுகளுக்கு மேல் வயல்வெளிகளிலும், தனியார் காணிகளிலும், வீடுகளிலும் சரியாகப் பாதுகாக்கப்படாத நிலையில் வைக்கப்பட்டிருந்ததால் பல வரிவடிவங்கள்

அழிவடைந்தும், தேய்வடைந்தும் காணப்படுகின்றன. இவற்றைக் கருத்தில் கொண்டு இக்கல்வெட்டை பல்வேறு முறைகளில் படியெடுத்து தென்னாசியாவின் தலைசிறந்த கல்வெட்டறிஞர் பேராசிரியர் சுப்பராயலு மற்றும் சிரேஷ்ட கல்வெட்டறிஞர் முனைவர் இராஜகோபால் ஆகியோருக்கு அனுப்பி அவர்களின் உதவியுடன் இக்கல்வெட்டை ஓரளவிற்கு வாசிக்க முடிந்துள்ளது. அதன் வாசகம்

*1* ----
*2* ----------மாதி
*3* ------
*4* யிரண் ----தி
*5* ருக்கோணமலை
*6* உடையான்நிச்ச
*7* யித்தஜகதப்ப
*8* கண்டன்சந்தி
*9* க்குநிலையாக (தர)
*10* தம்பலகாமஊ
*11* ரைநான்கெல்
*12* லைக்குஉள்எல்லா
-----------------
*13* வினியோ
*14* கங்கொள்
*15* ளும்படிக்கு
*16* ம்இதுக்கு
*17* மேற்பன்னி
*18* நான்ஒரு –
*19* ---------------
*20* –மாகில்நா
*21* -- காகத்து
*22* க்கும்பிறந்
*23* தாராவர்கள்

இக்கல்வெட்டில் இருந்து திருகோணமலை உடையாரின் வேண்டுதலுக்கு இணைங்க ஜகதப்ப கண்டன் (சந்தி) பெயரில் உருவாக்கப்பட்ட நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு (ஆலயப்பணிகளுக்கு) தம்பலகாமம் ஊரின் அனைத்து வரிகளும் (அனைத்து விநியோகமும்) வழங்கப்பட்ட செய்திகளையும், ஆணையையும் அறிந்து கொள்ளமுடிகின்றது.

திருகோணமலை உடையாரின் தீர்மானத்திற்கு அமைவாக இத்தானம் உருவாக்கப்பட்டதால் தம்பலகாம ஊரின் வரிகள் அந்த ஊரில் இருந்த ஆலயத்தின் நிர்வாகச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்டதா அல்லது திருகோணமலையில் இருந்த ஆலயத்திற்கு வழங்கப்பட்டதா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. இக்கல்வெட்டில் வாசிக்க முடியாதிருக்கும் சில வரிகள் எதிர்காலத்தில் வாசிக்கப்படும் போது இவ்வாலயம் எங்கிருந்ததென்ற உண்மை தெரியவரலாம்.

இக்கல்வெட்டு திருகோணமலை மாவட்டத்தின் அதிலும் சிறப்பாக தம்பலகாமத்தின் இடைக்கால வரலாற்றுக்கு நம்பகத் தன்மையுடைய புதிய சில ஆதாரங்களைத் தருவதாக உள்ளது. தம்பலகாமம் பிராந்தியத்திற்கு 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாறு உண்டு. அதை அப்பிராந்தியத்தில் பரவலாகக் காணப்படும் ஆதியிரும்புக்கால குடியிருப்புகளும், பெருங்கற்கால ஈமச் சின்னங்களும் உறுதி செய்கின்றன. இப் பிராந்தியம் பண்டுதொட்டு திருகோணமலைக் கோணேஸ்வரர் ஆலயத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததற்குப் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. அத்தொடர்பின் காரணமாகவே 16 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரால் திருக்கோ ணேஸ்வரர் ஆலயம் அழிக்கப்பட்ட போது அவ்வாலயத்தை நினைவுபடுத்தி தம்பலகாமத்தில் 17 ஆம் நூற்றாண்டில் ஆதிகோணநாயகர் ஆலயம் அமைக்கப்படக் காரணமாகும். தற்காலத்தில் தம்பலகாமம் என அழைக்கப்படும் இப் பிராந்தியம் கல்வெட்டில் தம்பலகாம ஊர் எனக் கூறப்பட்டி ருப்பதில் இருந்து இற்றைக்கு 800 ஆண்டுகளுக்கு முன்னரே இப்பிராந்தியம் தமிழரின் பூர்வீக இடமாக இருந்ததை இக் கல்வெட்டு உறுதி செய்கின்றது.

ஆதிகால, இடைக்கால வரலாற்று இலக்கியங்களில் திருகோணமலையும், அங்குள்ள துறைமுகமும் கோணா, கோகர்ணம், கோகர்ணபட்டினம், திரிகூடகிரி, கோணமாமலை என அழைக்கப்பட்டு வந்துள்ளன. ஆனால் இக்கல்வெட்டில் இப்பிராந்தியம் திருக்கோணமலை எனக் குறிப்பிடப் பட்டதிலிருந்து கி.பி. 13 ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே இப்பெயர் வழக்கில் இருந்ததற்கு இக்கல்வெட்டு மேலுமொரு சான்றாகக் காணப்படுகின்றது.

இக்கல்வெட்டு திருக்கோணமலை உடையார் பற்றிக் கூறுகின்றது. சாசன வழக்கில் உடையார் என்ற சொல் அரசனை அல்லது பெருநிலக்கிழாரான அரச பிரதிநிதியைக் குறிப்பதாகப் பேராசிரியர் பத்மநாதன் கூறுகின்றார். இவற்றிலிருந்து 12 ஆம் அல்லது 13 ஆம் நூற்றாண்டில் திருகோணமலைப் பிராந்தியம் அரசனின் அல்லது அரச பிரதிநிதியின் அதிகாரத்திற்கு உட்பட்ட இடமாக இருந்ததெனக் கூறலாம். இக் கல்வெட்டு திருகோணமலை உடையாரின் வேண்டுதலுக்கு இணங்க தம்பலகாம ஊரில் ஜகதப்ப கண்டன் பெயரில் தானம் உருவாக்கப்பட்டதாகக் கூறுகின்றது. ஜகதப்ப கண்டன் என்பது இரு வேறுபட்ட பொருளில் அமைந்த பெயராகும். ஜகதப்ப என்ற பெயர் அரசன் அல்லது போர்வீரனின் விருதுப் பெயரைக் குறிக்கின்றது. கண்டன் என்பது போர்வீரனைக் குறிக்கும் சொல்லாகும். இவற்றில் இருந்து ஜகதப்ப கண்டனை தம்பலகாமத்தில் இருந்த அரசனாக அல்லது படைத் தலைவனாகக் கருத இடமுண்டு.

இக் கல்வெட்டின் சமகால இலங்கை அரசியல் வரலாறு கூறும் பாளி, சிங்கள இலக்கியங்கள் கலிங்கமாகனது ஆட்சியில் சிங்கள, பௌத்த மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டதால் பொலநறுவை இராசதானியும், சிங்கள மக்களும் தெற்கு நோக்கி நகர்ந்தபோது வட இலங்கையில் கலிங்கமாகன் தலைமையிலான அரசு தோன்றியதாகக் கூறுகின்றன. இவனது அரசின் தலைநகர் எங்கிருந்த தென்பதை இவ்விலக்கியங்கள் கூறவில்லை. ஆயினும் அவனது படைகள் நிலை கொண்டிருந்த இடங்கள் நிர்வாக ஒழுங்குகள் பற்றிக் கூறுகின்றன. அவற்றுள்



பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் குழுவினரால் தம்பலகாமம் கல்வெட்டு படியெடுக்கப்படும்போது...



உமிரிக்காட்டு தொல்லியல் களத்தில் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம்,கிராம சேவகர் திரு.நாகஜோதி தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜே.ஸ்ரீபதி, ஆகியோருடன் நூலாசிரியர்

திருகோணமலைப் பிராந்தியத்தில் உள்ள கோகர்ணம், கந்தளாய், கட்டுக்குளம், கொட்டியாரம் ஆகிய இடங்களில் கலிங்கமாகன் படைகள் நிலை கொண்டிருந்ததாகக் கூறப்பட்டிருப்பது இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. மட்டக்களப்பு பூர்வீக சரித்திரம். கலிங்கமாகன் ஆட்சியோடு கிழக்கிலங்கையில் வன்னிமைகளின் ஆட்சி தோன்றியதாகக் கூறுகின்றது.

கோணேஸ்வரர் கல்வெட்டு முதலான தமிழ் இலக்கியங்களும், ஒல்லாந்தர் கால ஆவணங்களும் திருகோணமலைப்பற்று, கட்டுக்குளப்பற்று, கொட்டியாரப்பற்று மற்றும் தம்பலகாமப்பற்று முதலான வன்னிமைகளின் ஆட்சி பற்றிக் கூறுகின்றன. இங்கே கல்வெட்டில் கூறப்படும் தம்பலகாமத்து ஜகதப்ப கண்டனை அரசனாக அல்லது படைத்தலைவனாகக் கொள்ளுமிடத்து இக்கல்வெட்டு வடக்கில் கலிங்கமாகன் ஆதிக்கம் இருந்ததற்கான முதலாவது நம்பத்தகுந்த ஆதாரம் என்ற சிறப்பை பெறும். எதிர்காலத்தில் இக்கல்வெட்டுப் பற்றிய விரிவான ஆய்வுகள் இக்கருத்தை உறுதிசெய்யலாம்.

இலங்கைத் தமிழர் வரலாறு பற்றிய ஆய்வில் கல்வெட்டுக்கள் நம்பகத்தன்மை உடைய சான்றுகளாகும். இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டுக்களில் அதிக எண்ணிக்கையிலானவை திருகோணமலை மாவட்டத்தில் இருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. ஆயினும் அக் கல்வெட்டுக்களை ஒன்றுசேர ஆவணப்படுத்தி குறிப்பிட்ட ஒரு இடத்தில் பாதுகாக்கப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படவில்லை என்ற ஆதங்கம் தமிழ் ஆர்வலர்கள் மத்தியில் காணப்படுகின்றது. ஆயினும் திருகோணமலை மக்களிடையே தமது பிரதேசத்தின் வரலாற்றுச் சின்னங்களை கண்டறிந்து ஆவணப்படுத்த வேண்டும் என்ற விழிப்புணர்வு 1960 களில் இருந்து தோன்றிய வரலாறு காணப்படுகின்றது. அதனை சமகாலத்தில் முன்னெடுத்துச் செல்லும் துடிப்புள்ள இளைஞர்களில் ஒருவராக வைத்திய கலாநிதி ஜீவராஜ் அவர்களைப் பார்க்கின்றேன். இதற்கு இவரின் தந்தை

திரு.தங்கராசா, பேரன் அமரர் வேலாயுதம் ஆகியோர் ஆதிகோணநாயகர் கோயிலின் மரபுவழி அறங்காவலர்களாகும். இவர்கள் பத்திரிகை, கலை, இலக்கிய, வரலாறு ஆகிய பணிகளால் தமிழ் அறிஞர்களுக்கு நன்கு பரிச்சயமானவர்கள். இப்பின்புலத்தின் வழிவந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து உருவான வைத்திய கலாநிதி ஜீவராஜும், அவரின் சகோதரியான தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெயகௌரி ஸ்ரீபதியும் சமகாலத்தில் தமக்குரிய கடமைகளுக்கு அப்பால் தம்பலகாமத்தின் வரலாற்றுச் சின்னங்களைக் கண்டறித்து ஆவணப்படுத்தும் பணிகளில் கடுமையாக உழைத்து வருவது இலங்கைத் தமிழர் வரலாறு பற்றிய ஆய்வுக்குப் புதுவழி காட்டுவதாக உள்ளது.

நன்றி -

பல ஆண்டுகளுக்குப் பின்னர் வரலாற்று வெளிச்சத்திற்கு வந்திருக்கும் அரிய தமிழ்கல்வெட்டு தம்பலகாமத்தில் மீளவும் கண்டுபிடிப்பு


பேராசிரியர் ப.புஸ்பரட்ணம்,வலம்புரி, *29.09.2019*, பக்கம்*11*

# கொட்டியாரப்பற்று வன்னிபங்கள்

## கட்டுரைத் தொகுப்பு

கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினால் 2021 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட எனது முதலாவது நூல் கீழ்வரும் கட்டுரைகளை உள்ளடக்கியிருக்கிறது.

1. இருமரபுந்துய்ய எதிர்வீரசிங்க நல்லபூபால வன்னிபத்தின் உயில்
2. கொட்டியாரப்பற்று வன்னிபங்கள்
3. திருகோணமலையில் சோழர்
4. நங்கை சானியும், ஏழு தேவரடியார்களும்
5. தம்பலகாமத்து அண்ணாவிமார்கள் பற்றிய ஒரு ஞாபகமீட்டல்
6. கழனிமலைக் கல்வெட்டுக்கள்
7. மூதூர் பட்டித்திடலின் 'நவீனயுகக் கல்லாவணங்கள்'
8. துளைகொண்ட அபூர்வ பானை கந்தளாயில்
9. கி.பி 1600 ஆண்டுகளில் திருக்கோணேச்சர ஆலய தரிசனம்
10. திருஞானசம்பந்தரின் தமிழ் பக்தி இயக்கத்தில் திருக்கோணேச்சரம்





1991 முதல் வீரகேசரி, மித்திரன் வாரமலர், தினமுரசு, சங்குநாதம், இளவரசி, நாழி, மலைமுரசு, கலைக்கேசரி மற்றும் சிறப்பிதழ்களில் தனது ஆக்கங்களை கட்டுரை, கவிதை, சிறுகதை ஆகிய வடிவங்களில் எழுதிவரும் *Dr*.த.ஜீவராஜ் , 13.08.2008 முதல் *www.geevanathy.com* என்ற வலைப்பதிவினூடாக இணையவெளியில் செயற்பட்டு வருகிறார்.

கல்வெட்டுக்களைத் தேடி அலைவதிலும், ஆவணங்களைச் சேகரிப்பதிலும் அதிக ஆர்வம் கொண்டு இயங்கிவரும் அவரது இரண்டாவது நூல் இதுவாகும். தனது ஊர்ப்பெயரின் பின்னால் அதன் வரலாற்றைத் தேடி அவர் பயணித்த அனுபவங்களை இலக்கியம் , கல்வெட்டுக்கள், செப்பேடுகள், ஆவணங்கள் என்பனவற்றின் துணையோடு இவ் ஆய்வில் மிகச் சுவைபடப் பதிவு செய்திருக்கிறார். இந்நூலில் உள்ள பல அரிய ஆவணங்கள் முதன்முறையாக வரலாற்று ஆர்வலர்களின் பார்வைக்கு முன்வைக்கப்பட்டிருக்கிறது. நூலாசிரியர் கூறுவதுபோல் இடப்பெயர் ஆய்வுக்கு அப்பால் அவ்வாவணங்கள் பேசுகின்ற வரலாற்றினை பல்வேறு கோணங்களில் எதிர்காலத்தில் ஆராயவேண்டியது அவசியமாகும்.

கலாபூசணம் வே.தங்கராசா
சின்னவர்ணமேடு
தம்பலகாமம்.

தம்பலகாமம் ஊர்ப்பெயர் ஆய்வு த.ஜீவராஜ்

ISBN 9789554413221



# தம்பலகாமம்

## ஊர்ப்பெயர் ஆய்வு

த.ஜீவராஜ்